

பாண்டிய மண்டல வரலாறுகள்

பதிப்பாசிரியர் :

முனைவர். சு. சௌந்தரபாண்டியன், எம்.ஏ., எம்.ஏ., பி.எட்., டிப்.வ.மொ., பிஎச்.டி

பொதுப்பதிப்பாசிரியர் :

நடன. காசிநாதன், எம்.ஏ.

அ.கீ.சு.நூலக வெளியீடு எண் 410
தமிழ்நூல் வெளியீடு எண் 114

பாண்டிய மண்டல வரலாறுகள்

பதிப்பாசிரியர் :
முனைவர் சு. சௌந்தரபாண்டியன்
எம்.ஏ. (தமிழ்), எம்.ஏ. (ஆங்கிலம்), பி.எட்., டிப்.வ.மொ., பிஎச்.டி.,
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை - 5

பொதுப்பதிப்பாசிரியர் :
நடன. காசிநாதன்
இயக்குநர்
தொ.பொ.ஆ. துறை
சென்னை - 113.

© அ.கீ.சு.நூ.

விலை ரூ. 102/- 1997

G.O.M.L. Publication . No. 410
Tamil Publication . No. 114

Pandiya Mandala Varalarugal

Edited By :
DR. S. SOUNDARAPANDIAN
M.A.(Tamil), M.A. (English), B.Ed., Dip. Skt., Ph.D.,
Curator
Government Oriental Manuscripts Library, Chennai - 5

General Editor
Natana. Kasinathan
Director
Department of Archaeology
Chennai - 113.
© G.O.M.L.

Price Rs. 102/- **1997**

பாண்டிய மண்டல வரலாறுகள்

பொருளடக்கம்

			பக்கம்
1.	பாண்டியர் சரித்திரம்	...	44
2.	பசுமலை வரலாறு	...	161
3.	தாமிரபரணி மகத்துவம்	...	172
4.	கம்பம் என்கிற கிராமம் உண்டான வரலாறு	...	249
5.	கூத்தநாச்சித் தோப்பில் சந்தை கூடின விவரம்	...	253
6.	சுரபி நதி வரலாறு	...	255
7.	சின்னமனூர் அக்கிரகார வரலாறு	...	258
8.	பூலாவினேசுவர சுவாமி வரலாறு	...	260
9.	உத்தமபாளையம் உண்டான வரலாறு	...	265
10.	காளத்தீஸ்வர சுவாமி தலபுராண வரலாறு	...	274
11.	தேவாரம் பாளையப்பட்டு சோலை மலை அழகர் தலபுராண வரலாறு	...	283
12.	தேவாரம் பாளையப்பட்டு ரெங்க நாயகர் தலபுராண வரலாறு	...	287
13.	கோம்பை பாளையப்பட்டு திரு.மலைராயப் பெருமாள் தலபுராண வரலாறு	...	293
14.	கிழக்கிந்தியக் கம்பெனிக்கு முதுகுளத்தூர் தொடர்பான விண்ணப்பம்	...	304

பதிப்புரை

பாண்டிய மன்னர்கள் உலகப்புகழ்ப் பெற்ற பழந்தமிழ் அரசர்கள் ஆவர். நீதிக்கும் நேர்மைக்கும் நிலைக்களனாக இருந்து சிறப்பான இடத்தைத் தமிழக வரலாற்றில் தமக்கெனப் பொறித்துக் கொண்டவர்கள். இத்தகு பாண்டிய மன்னர்கள் ஆண்ட மண்டலமே பாண்டிய மண்டலம் என்று வரலாற்றில் பேசப்படும்.

தற்போதைய மாவட்டப் பிரிவுகளின்படி, மதுரை மாவட்டம், வைகை வீரன் அழகுமுத்து மாவட்டம், திண்டுக்கல், மன்னர் திருமலை மாவட்டத்தில், பழனி வட்டம், திண்டுக்கல் வட்டம் நீங்கலாக, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், காமராசர் மாவட்டம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சிரம்பரனார் மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளாற்றுக்குத் தெற்கே உள்ள பகுதிகள் என்ற இந்த நிலப்பரப்பே பாண்டிய மண்டலம் ஆகும்.

பாண்டிய மண்டலம், அந்நாளில் வளநாடுகளாகவும், கூற்றங்களாகவும் பிரிக்கப்பட்டு ஆளப்பட்டன.

பாண்டிய மண்டலம் மொத்தம் 18 நாடுகளைக் கொண்டது என்பர். அவற்றில் 14 நாடுகள் :-

1. திருவழுதி நாடு
2. திருவடி நாடு
3. மலவிவள நாடு
4. செம்பிவள நாடு
5. மானா நாடு
6. ராஞ்சி நாடு

7. வீசுங்கை நாடு 8. வெம்பர நாடு

9. பொதிய நாடு 10. அறந்தாங்கி நாடு

11. மறவ நாடு 12. தோதக நாடு

13. வைகை நாடு 14. குன்ற நாடு

பாண்டிய மண்டலத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட மக்கள் வாழ்ந்ததற்கான அரிய சான்றுகள் கிட்டியுள்ளன; வரலாற்றுக்கு முற்பட்ட மக்கள் (Prehistoric People) இம்மண்டலத்தில் வாழ்ந்து மறைந்ததற்கான புதை குழிச் சின்னங்கள் கல்வார்பட்டி, நாகலாபுரம், விராலிப் பட்டி, நிலக்கோட்டையை அடுத்த முள்ளிப் பள்ளம், மேலூரை அடுத்த கருங்காலக்குடி முதலிய பல பகுதிகளில், பாண்டிய மண்டலத்தே கிட்டியுள்ளன.

எனவே, பாண்டிய மண்டலமானது, வரலாற்றுக்கால ஆராய்ச்சிக்கு மட்டுமல்லாது, வரலாற்றுக்கு முற்பட்ட கால ஆராய்ச்சிக்கும் பெரிதும் இடனளிக்கக் கூடியதாக உள்ளது.

பாண்டிய மண்டலமே சங்கம் வைத்துத் தமிழை வளர்த்தது' கி.மு. 2-ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலகட்டத்தே தோன்றிய சங்கப்புலவர்களான கணியன் பூங்குன்றனார், ஒக்கூர் மாசாத்தியார், கருங்குளவாதனார், கோக்குள முற்றனார், கிள்ளிமங்கலக் கிழார், நக்கீரர், பேராலவாயர், மாங்குடி மருதன், பொதும்பில் கிழார், நற்சேந்தனார் ஆகியோர் பாண்டிய மண்டலத்தில் பிறந்தோரே. திருமங்கலம், சோழவந்தான் பகுதியில் கோக்குளம், கிள்ளி மங்கலம்

ஆகிய ஊர்கள் உள்ளன. (செந்தமிழ்ச் செல்வி, 1996, நவம்பர் ப. 87)

பாண்டிய மண்டலத்து, மதுரையில் வாழ்ந்த சங்கப் புலவர்கள் : -

1. மதுரை அறுவை வணிகன் இளவேட்டனார் (புறம்)
2. மதுரை ஆசிரியன் கோமடங்கொற்றன் (குறு 144)
3. மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார் (புறம்)
4. மதுரை இளம்பால் ஆசிரியன் சேந்தன் கூத்தனார் (அகம்)
5. மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதன் (குறு 60)
6. மதுரை ஓலைக்கடைக் கண்ணன் புகுந்தாராயத்தனார் (புறம்)
7. மதுரை ஓலைக்கடையத்தார் நல் வெள்ளையார் (நற் 250)
8. மதுரை கடையத்தார் மகன் வெண்ணாகன் (குறு 223)
9. மதுரைக் க்ணக்காயனார்
10. மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் (நெடுநல்வாடை)
11. மதுரைக் கண்டாகத்தன் (குறு 317)
12. மதுரைக் கண்ணனார் (குறு 107)

13. மதுரைக் கவுனியன் பூதத்தனார் (அகம் 74)

14. மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார் (புறம்)

15. மதுரைக் காடாத்தனார்

16. மதுரைக் காமக்கண்ணி நம்பாலத்தனார்

17. மதுரைக் காடுலவியங் கூத்தனார் (நற் 325)

18. மதுரைக் கூத்தனார் (அகம் 334)

19. மதுரைச் சீத்தலைச் சாத்தனார் (குறு 154)

20. மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்

21. மதுரை கோலம் புல்லன் (குறு 373)

22. மதுரைக் கௌணியர் முத்தனார்

23. மதுரைச் சுள்ளம் போதனார் (நற் 215)

24. மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர் கிழார்

25. மதுரைத் தமிழ்க் கூத்தனாகன் தேவன்

26. மதுரைத் தமிழ் நாயனார்

27. மதுரைத் ததகங்கண்ணானார் (அகம்)

28. மதுரைத் தற்கூத்தன்கவேன் மள்ளனார்

29. மதுரை நல்வெள்ளி (குறு 345)

30. மதுரைப் படைமங்கை மன்னியார்

31. மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவன்

32. மதுரைப் பள்ளி மருதங்கிழர் மகனார் சோகுத்தனார் (நற்)

33. மதுரைப் பாலாசிரியனார்

34. மதுரை எழுத்தாளன் குறுங்குடி மருதனார்

35. மதுரை ஆசிரியன் மாறனார்

36. மதுரை மருதனிள நாகனார் (புற 55)

37. மதுரை மருதங் கிழர் மகன் பெருங்கண்ணனார் (அகம்)

38. மதுரை மருதங்கிழர் மகன் இளம்போத்தன் (குறு 332)

39. மதுரைப் பொத்தனார் (அகம்)

40. மதுரைப் பேராலவாயர் (புறம்)

41. மதுரைப் பெருமருதிள நாகனார் (நற் 251)

42. மதுரைப் பெருமருதனார் (நற் 241)

43. மதுரைப் பெருங்கொல்லனார் (குறு)

44. மதுரைப் பூவண்டனாகன் வேட்டனார் (நற் 317)

45. மதுரைப் புலவங்கண்ணனார் (அகம்)

46. மதுரைப் பாலாசிரியன் நம்பாவன்

47. மதுரைப் பாலாசிரியன் சேறங்கூத்தன்

48. மதுரைப் பாலாசிரியனற்றாமனார் (அகம்)

மதுரை சங்கம் வளர்த்த ஊர் என்பதற்கு மேற் பட்டியலே சான்று !

மேற்பட்டியலை ஆய்ந்தால் பல உண்மைகள் கிடைக்கின்றன.

எடுத்துக்காட்டாக, பரம்பரை பரம்பரையாகச் சில குடும்பங்கள் புலவர் குடும்பங்களாகவே இருந்துள்ளன!

வி. கனகசபைப்பிள்ளை ஆய்வின்படி, கி.பி.1 முதல் 2 வரை பாண்டிய மண்டலத்தின் பல பகுதியில் ஆண்ட பாண்டிய மன்னர்களை வருமாறு குறிக்கலாம்:-

நெடுஞ்செழியன் I	-	கி.பி.56-75
வெற்றிவேற் செழியன்	-	கி.பி. 75-90
நெடுஞ்செழியன் II	-	கி.பி. 90-128
உக்கிரப்பெருவழுதி	-	கி.பி. 128-140
நன்மாறன்	-	கி.பி. 140 -150

கி.பி. 5ஆம் நூற்றாண்டினர் எனவும், 8-ஆம் நூற்றாண்டினர் எனவும் சிலவாறாகக் குறிக்கப்படும் மாணிக்கவாசகர் பாண்டிய மண்டலத்தில் பிறந்தவரே; இவர் பிறந்த திருவாதவூர், மேலூரிலிருந்து 6 கல் தொலைவில் உள்ளது.

பாண்டிய மண்டலத்திற்கு மகாபாரதப் பெருமையும் உண்டு! மகாபாரதக் காலத்தில், பாண்டிய நாட்டுக்கு மதுரை தலைநகராக இருக்கவில்லை என்றும், மதுரையை அடுத்த மணலூர் என்ற ஊரே தலைநகராக இருந்தது என்றும், மதுரை அப்போது கடம்பவனமாக இருந்தது என்றும் கூறப்படும்.

மகாபாரதக் காலத்தில் மேற்படி மணலூர் என்ற ஊரை ஆண்டுவந்த பாண்டியன் பெயர் சித்திர வாகனன்; இவனின் மகளே சித்திராங்கதை. இந்தச் சித்திராங்கதையை மணலூரில் கண்டு காதல் கொண்டவனே அர்ச்சுனன் என்று தமிழில் அச்சாகி யுள்ள சில கதைப் பாடல் நூற்கள் தெரிவிக்கின்றன. சித்திராங்கதைக்கும் அர்ச்சுனனுக்கும் பிறந்தவனே பப்ருவாகனன்.

தேவாரப் பாடல்கள் பெற்ற பாண்டியநாட்டுத் தலங்களாக மதுரை, திருப்பரங்குன்றம், திருப்பூவணம், பிரான்மலை, திருவேடகம், திருப்பத்தூர், திருவாடானை, இராமேசுவரம் ஆகியவை உள்ளன. எனவே, ஏறத்தாழ கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முன்பே இந்த ஊர்களெல்லாம் பாண்டிய மண்டலத்தில் குறிப்பிடத்தக்க சிவத்தலங்களாக இருந்துள்ளன என்பது அறிக்கிடக்கிறது.

திருஞானசம்பந்தர் காலத்தே, மதுரை அரசர்களின் ஆதரவு சமணத்தின்பால் இருந்ததாக அறிகிறோம்; சம்பந்தர் தங்கியிருந்த மடத்தையே சமணத் தீவிரவாதிகள் கொளுத்திவிட்ட வரலாற்றையும் தமிழகம் அறியும். பிறகு, திருஞான சம்பந்தரின்

திறத்தால், மதுரை அரசனாகிய கூன்பாண்டியன் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறினான் எனவும் படிக்கிறோம்.

கி.பி.12ஆம் நூற்றாண்டு முதல் 16ஆம் நூற்றாண்டு வரை ஆண்ட பாண்டிய மன்னர்களைக் கீல்ஹார்ன் (Kielhorn) வருமாறு குறிக்கிறார் :-

		கி.பி
ஜடாவர்மன் குலசேகர பாண்டியன்	-	1190 - 1214
மாறவர்மன் சுந்தரபாண்டியன்	-	1216 - 1235
மாறவர்மன் சுந்தரபாண்டியன்	-	1238 - 1251
ஜடாவர்மன் சுந்தரபாண்டியன்	-	1251 - 1261
வீரபாண்டியன்	-	1252 - 1267
மாறவர்மன் குலசேகர பாண்டியன் I	-	1268 - 1308
ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் II	-	1275 - 1290
மாறவர்மன் குலசேகர பாண்டியன் II	-	1314 - 1321
மாறவர்மன் பராக்கிரம பாண்டியன்	-	1334 - 1352
ஜடாவர்மன் பராக்கிரம பாண்டியன்	-	1357 - 1372
ஜடாவர்மன் பராக்கிரம பாண்டியன் அரிகேசரி தேவன்	-	1422 - 1461

ஜடிலவர்மன் பராக்கிரம பாண்டியன் குலசேகரன்	- 1479 - 1499
ஜடிலவர்மன் ஸ்ரீவல்லபன்	- 1534 - 1537
மாறவர்மன் சுந்தரபாண்டியன் III	- 1531 - 1555
ஜடிலவர்மன் ஸ்ரீவகாப அதிவீரராம பாண்டியன்	- 1562 - 1567

கி.பி. 1559 முதல் 1736 வரை மதுரையில் நாயக்கர் ஆட்சி நடந்தது.

கி.பி.1736இல் மதுரையில் இசுலாமியர் ஆட்சி ஏற்பட்டது.

மதுரை நாயக்கர்களின் காலங்களைப் பிரான்சிஸ் (W. Francis) வருமாறு ஆய்ந்துள்ளார் :-

விசுவநாத நாயக்கன்	- 1559
குமார கிருஷ்ணப்ப நாயக்கன்	- 1563
கிருஷ்ணப்ப எனும் பெரிய வீரப்பன் விஸ்வநாதா II	- 1573
லிங்கய்ய எனும் குமார கிருஷ்ணப்ப விஸ்வப்பா எனும் விஸ்வநாத நாயக்கன் III	- 1595
முத்துக்கிருஷ்ணப்பா	- 1602
முத்து வீரப்ப நாயக்கன்	- 1609
திருமலை நாயக்கன்	- 1623

முத்து அளகாத்திரி எனும் முத்துவீரப்ப நாயக்கன்	- 1659
சொக்கநாத நாயக்கன் எனும்	
சொக்கலிங்க நாயக்கன்	- 1662
ரங்ககிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கன்	- 1682
மங்கம்மாள்	- 1689
விஜயரங்க சொக்கநாத நாயக்கன்	- 1704
மீனாட்சி	- 1731 - 36

கிபி. 18ஆம் நூற்றாண்டில் மதுரை மீது படையெடுத்த சிலரை வருமாறு எழுதலாம்

	கி.பி.
ஹெரான் படையெடுப்பு	- 1755
கல்லியாட் (Calliand) படையெடுப்பு	- 1757
ஹைதர் அலி	- 1780
ஃபுல்லர்ட்டன் (Fullarton) படையெடுப்பு	- 1783

மேல் 1783இல் படையெடுத்த ஃபுல்லர்ட்டன் என்பானே மேலூர், சிவகங்கைப் பாளையக்காரர்களை வென்றவன். கி.பி. 1792இல் கம்பெனி அரசுக்கும் நவாபுகளுக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது; அதன்படி, மதுரை, திருநெல்வேலி, திண்டுக்கல் ஆகியன கம்பெனி வசம் ஆயின; பிற பகுதிகள் நவாப் வசம் ஆயின.

பாண்டிய மண்டலத்தில் சேதுநாடு குறிப்பிடத்தக்கது. இராமநாதபுர மாவட்டமே சேது நாடு எனப்படும்.

சேதுநாட்டைச் சேர்ந்த சங்கப் புலவர்கள் :-

1. நல்லந்தையார் (சிவகங்கையைச் சேர்ந்த கோட்டியூரைச் சேர்ந்தவர்)

2. நன்முல்லையார் (சிவகங்கை அருகே உள்ள அள்ளூரில் இருந்தவர்)

3. ஒட்டக்கூத்தர் (மலரி என்ற ஊரில் பிறந்தவர் என்ப)

மேலும் சேது நாடு தந்த புலவர்கள் :-

1. செவ்வைக்சூடுவார் (வேம்பத்தூரில் வாழ்ந்தவர்)

2. மாதவபட்டர் (பெரும்பற்றப் புலியூர்)

3. கவிராஜபண்டிதர்

4. கவிகுஞ்சரபாரதி

5. பிச்சுவையர்

என்று நூற்றுக்கணக்கானோர் உளர்.

சேது என்பது, கடலின் மேல் இராமபிரான் கட்டிய அணை என்று கூறப்படும்.

சங்கரசோழன் உலா என்ற நூலில் சேது குறிக்கப்படுகிறது.

சேதுநாட்டின் தலைவர்களே சேதுபதிகள் ஆவர்.

சேது நாடு வேறு, சேதி நாடு வேறு, சேதி நாடு என்பதே நடு நாடு எனப்படுகிறது.

திருக்கோவலூர் நடு நாட்டின் தலை நகர்.

"குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறை" என்பது மணிமேகலை (5 : 37)

எனவே, சேது நாடு என்பது, கன்னியாகுமரி முதல் தொடங்குகிறது என்பர் ஆய்வாளர்.

இத்தொகுப்பில் பின்னே நாம் காணவிருக்கும் தாமிரபரணி ஆறும் பாண்டிய மண்டலத்தில் குறிக்கத் தக்கதே.

தமிரபரணியில் சேரும் சிற்றாறுகள் :-

1. பேயாறு 2. உள்ளாறு

3. பாம்பாறு 4. காரியாறு

5. சேர்வையாறு 6. மணிமுத்தாறு

7. சித்ரா நதி

வால்மீகியின் இராமாயணத்தில் தாமிரபரணி ஆறு குறிக்கப்படுகிறது என்பது நோக்கற்பாற்று.

வியாசபாரதம், காளிதாசரின் இரகுவம்சம் ஆகிய வடமொழி நூற்களிலும் இவ்வாறு குறிக்கப்படுகிறது.

"பொன்றிணிந்த புனல்பெருகும் பொருநை" என்று கம்பர் பாடியுள்ளார்.

"பொருநல் வடகரை" என்று நம்மாழ்வார் பாடிக் காட்டினார்.

''காவிரியும் தான்பொருநையும்'' என்று நக்கினார்க்கினியர் உரையில் குறிப்பிட்டார்.

இவ்வாறு, சிறப்புடைய தாமிரபரணி ஆறு பாண்டிய மண்டலத்தையே சிறப்பிக்கிறது.

இத்தகைய பாண்டிய மண்டலத்தே, நாயக்கர் காலத்திலும் அதன் பின்னும், பாண்டிய மண்டலத்தில் இருந்த காவல் முறை பற்றி, சிறிது இவண் குறிக்கலாம், காவலி முறை (Kavali System) என்று அது அழைக்கப்பட்டது. காவல்காரர் தலைமையாளராகவும், அவரின் கீழே பல காவலர்களும் இருந்தனர். அவர்களுக்கு நிலங்கள் மானியமாகத் தரப்பட்டன. திருட்டு, கொள்ளை இவற்றைத் தடுத்தனர் இவர்கள். நாயக்கர்களின் வீழ்ச்சிக்குப் பின், இந்தக் காவல்காரர்கள் மக்களை அச்சுறுத்திப் பணம் பெற்றவர்களாக மாறிவிட்டனர் ! பிறகு, பிரிட்டிசார் காலத்தில், திருட்டைத் தடுக்கவும் ஊர்காவல் செய்யவும் தலையாரிகள் நியமிக்கப்பட்டனர். பிறகு 1859ஆம் ஆண்டுக்குரிய பிரிட்டிசார் சட்டப்படி, ஒரு சூப்பிரண்டு (Superitendent) தலைமையில் முதன் முதலாகத் தமிழகத்தில் 'போலீஸ்' உருவாக்கப்பட்டது.

இதுவரை பாண்டிய மண்டலத்தின் பொதுவான வரலாறுகளைக் கண்டோம். இனி பாண்டிய மண்டலம் குறித்த இத்தொகுப்பினைச் சிறிது காண்போம்.

இங்கு தொகுக்கப்பட்டுள்ள சுவடிகள் யாவும், காலின் மைக்கன்சி (1754 - 1821) என்ற ஸ்காட்லாந்து நாட்டவர் தொகுத்த சுவடிகளாம். இம் மெக்கன்சியின்

தொகுப்பில் உள்ள பாண்டிய மண்டலம் குறித்த எல்லாச் சுவடிகளும் இந்நூலில் உள்ளதாகக் கருத இயலாது. இத்தொகுப்பைச் சாராச் சுவடிகளும் உள்ளன.

பாண்டிய மண்டலம் தொடர்பான சில மெக்கன்சியின் சுவடிகள் இதற்கு முன்பே நூலகத்தால் வெளியிடப்பட்டுள்ளன. சேதுபதி வரலாறு (டி. 3081), மதுரைப் பாண்டிய மன்னர் சரித்திரம் (டி. 2739) ஆகியன நூலகப் பருவ இதழ்களில் (தொகுதி 19-2) முன்பே அச்சிடப்பட்டுள்ளன. ஆகவே, இவை மீண்டும் இங்கு சேர்க்கப்படவில்லை. இவை தவிர, பாளையப்பட்டுகளின் வம்சாவளிகள் என்ற தலைப்பில் நான்கு தொகுதிகள் வெளிவந்தள்ளன; இவை நான்கும் மெக்கன்சியின் சுவடிகளைக் கொண்டே பதிப்பிக்கப் பெற்றவை. இந்த நான்கு நூற்களிற் சேர்க்கப்பட்ட சுவடிகள் மீண்டும் பாண்டிய மண்டல வரலாறுகள் என்ற இந்நூலில் சேர்க்கப்படவில்லை.

மெக்கன்சியின் தொகுப்பில், வச்சிராங்கத பாண்டியன் வரலாறு (டி. 3838) என ஒரு தாட்சுவடி உள்ளது. இது பாண்டிய மண்டல வரலாறு அல்ல; திருவண்ணாமலை தொடர்பானது. இதில் வச்சிராங்கத பாண்டியன் அவனுடைய மகன் அர்த்தநாங்கத பாண்டியன் முதலியோர் குறிக்கப்படுகின்றனர்.

பாண்டிய மண்டல வரலாறுகள் எனும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள சில பாண்டியர் வரலாறுகள், பொதுவாக, திருவிளையாடற்புராணத்திற் கண்டவையே; எனினும், திருவிளையாடற் புராண நூலுக்கும் அடிப்படையான வழிவழிச் செய்திகளையும் இங்கு அச்சிடப்பட்டுள்ள சுவடிகள் கொண்டுள்ளன

எனலாம். மேலும் திருவிளையாடற்புராணச் செய்திகளாயினும், அவற்றைக் கூறிச் செல்லும்போது எத்தனையோ வரலாற்று, பண்பாட்டுக் கூறுகள் புதிதாக இணைக்கப்படுகின்றன என்பதையும் ஈண்டு நாம் அறிதல்வேண்டும்.

இனி, பாண்டிய மண்டல வரலாறுகள் எனும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள சுவடிகள் குறித்து எழுதிச் செல்லலாம்.

பசுமலை வரலாறு (டி 3866) எனும் சுவடி எரசக்க நாயக்கனூர் எனும் பாளையப்பட்டைச் சேர்ந்தது என்று தாட்சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ளது. எரசக்க நாயக்கனூர், திண்டுக்கல்லைச் சேர்ந்த 26 பாளையப்பட்டுகளுள் ஒன்று என்பதை முன்பே கண்டோம். உத்தமபாளையத்திலிருந்து கிழக்கே நான்கு மைலில் உள்ளது எரசக்க நாயக்கனூர். எரசக்க நாயக்கனூர் ஜமீன் எனவும் இவ்வூர் குறிக்கப்படும்.

பசுவின் மடுவைப்போல இம்மலை உள்ளதால், பசு மலை என்று பெயர் ஏற்பட்டதாகச் சுவடி எழுதுகிறது; ஆனால் பசுவுக்கும் மலைக்கும் எவ்வித உருவத் தொடர்பும் இல்லை என்று டபிள்யூ. பிரான்சிஸ் (W. Francis, Madura Gazetters, 1914) எழுதியுள்ளார்.

இந்தச் சுவடி முழுவதும் ஒரு கதை கூறப்படுகிறது. ஒரு பசு, புலி ஒன்றுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற, தன் உயிரினைத் தியாகம் செய்கிறது; இந்தத் தியாகத்தை மெச்சிச் சிவன், புலி, பசு, கன்று மூன்றுக்கும் 'மோட்சம்' கொடுத்து, பசுமடு உருவில் ஒரு மலையை உருவாக்கியதாகக் கூறப்பட்டுள்ளது.

இதே கதை, வேறு சில இலக்கியங்களிலும், புராணங்களிலும் காணக் கிடக்கிறது; கபிலை வாசகம் என்ற கதையும் ஏறத்தாழ இக்கதையை ஒத்ததே.

இவை தவிர, வேறு வரலாற்றுச் செய்தி எதனையும் இந்தச் சுவடி நமக்கு நல்கவில்லை.

ஆனால், இதில் உள்ள வாக்குத்தவறாமை என்ற தமிழர்கண்ட தத்துவம் நாம் உணரவேண்டியதாகும் ! வரலாற்றுக்கும் மேற்பட்ட பெருமை இத்தத்துவத்திற்கு உண்டே !

கூத்தநாச்சித் தோப்பில் சந்தை கூடின விவரம் எனும் சுவடியில், கூத்த நாச்சி என்ற கற்புக்கரசி ஒருத்தியின் வாழ்க்கைக் குறிப்பு உள்ளது ! கூத்த நாச்சித் தோப்பு, கம்பத்துக்குத் தென்கிழக்கே உள்ளதாகச் சுவடி பேசுகிறது. மெய்ச்சிலிர்ப்பினை ஏற்படுத்தும் வகையில் மேலைக் கற்புக் கரசியின் வரலாறு உள்ளது ! ஓர் அரசன் தன்னைக் காமத்தினால் ஆசைப்பட்டான் என்பதற்காக, அதற்குமேல் உயிரோடு இருக்கக்கூடாது என எண்ணி, உயிர் விட்டாள் கூத்தநாச்சி ! இதுபோன்ற கற்புக்கரசிகளின் வரலாறுகள் தனித்து ஆயத்தக்கன. ஏனெனில் இத்தகு வரலாறுகள் மேலைநாடுகளில் காண்பதற்கு அருமை !

அந்தக் காலங்களில், குக்கிராமங்கள், கிராமங்கள் இவற்றில் கடைகள் இரா. எனவே, அப்பகுதி மக்கள், வாரம் ஒரு முறை அல்லது பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை அப்பகுதியில் கூடும் சந்தையில்தான் பொருட்களை வாங்குவர். காய்கறி, பலசரக்குகள், துணிமணி முதலிய எல்லாவற்றையும் சந்தையில் விற்பர். இன்றும் பல ஊர்களில் சந்தைகள் கூடுகின்றன.

கம்பம் கிராமம் உண்டான வரலாறு (டி. 3864) எனும் சுவடி, பராக்கிரம பாண்டியன் காலத்தில் அந்தப் பேர் அவ்வூருக்கு வந்ததாக நூல் கூறுகிறது. இப்பராக்கிரம பாண்டியன், மாறவர்மன் பராக்கிரம பாண்டியனால், இச்சுவடி கூறும் கம்பம் வரலாறு கி.பி. 14ஆம் நூற்றாண்டு வரலாறு ஆகலாம்.

இச்சுவடியில், கோயில் ஒன்று புதிதாக எப்படி ஓரிடத்தில் ஏற்படுகிறது, அதில் விழாக்கள் எப்படி அமைகின்றன என்ற அடிப்படைக் கருத்துகள் பதிந்துள்ளன.

சுரபி நதி வரலாறு குறித்த சுவடி (டி. 3863) கூறும் சுரபி நதி என்பது சுருளி ஆறாகும்; எனவே, சுருளியாற்றுக்குச் சுரபிநதி என்றொரு பெயர் ஒருகாலத்தில் இருந்தமை இச்சுவடியால் புலனாகிறது. வைகை வீரன் அழகு முத்து மாவட்டத்தில், கம்பம், உத்தமபாளையம் முதலிய ஊர்களையொட்டிச் செல்லும் ஆறு சுருளியாறு.

இந்தச் சுவடியில் கோயில் வரலாறு தொடர்பான ஒரு செய்தி உள்ளது; அஃதாவது, கோயில் தோன்றிய இடம் ஒன்றாகவும், பிற்காலத்தே அதை எடுத்துக் கட்டிய இடம் வேறாகவும் அமைய வாய்ப்புண்டு. அவ்வாறு எடுத்துக்கட்டப்பட்ட இடம் வேறானால், வருடத்திற்கு ஒருமுறை அந்தப் பழைய தோன்றிய இடத்திற்குச் சாமியை எடுத்துச் சென்று 'தீர்த்தம்' கொடுத்துவிட்டு வருவது ஒரு வழக்கம் !

சின்னமனூர் அக்கிரகார வரலாறு (டி. 3862 பி) சுவையானது ! வைகை வீரன் அழகு முத்து மாவட்டத்தில், பெரிய குளத்திலிருந்து 22 கல்

தொலைவில் சின்னமனூர். இவ்வூரை ஒட்டி இராஜ சிம்மேஸ்வரர் ஆலயம் உள்ளது; இது இராஜசிம்ம பாண்டியன் என்பவரால் கட்டப்பட்டது. முகமதியர் படையெடுப்பிற்குப் பயந்து, அவன் ஆட்சியிடத்தை விட்டுத் தப்பிவந்து இங்கு சேர்ந்தான் இராஜ சிம்ம பாண்டியன் என்று வரலாற்றில் குறிப்பர். சின்னம நாயக்கன் என்பவனால் ஏற்படுத்தப்பட்டதால் சின்னமனூர் எனப் பெயர் வந்தது என்பர்; சின்னம நாயக்கன், மதுரை இராணி மங்கம்மாள் காலத்தில் சிறப்பான நிலையில் இருந்தவர். சின்னமநாயக்கனே இவ்வூருக்குப் பிராமணர்களைக் குறியேற்றினார் என்று அறிகிறோம்; அப்பணியைச் சாதிப்பற்றோடு செய்தது தளவாய் நரசப்பய்யர் என்பாரே ! இதற்கு ஆதாரம் இங்கு பதிப்பிக்கப்பட்டுள்ள இந்தச் சுவடியே !

சின்னமனூருக்கு, தளவாய் நரசப்ப பூபால சமுத்திரம் என மற்றொரு பெயர் இருப்பதையும் நம் சுவடி சுட்டுகிறது.

பூலாவினேஷ்வர சுவாமி (டி. 3862 அ) குறித்த தலபுராணச் சுவடியில், வீரபாண்டி (வைகை வீரன் அழகு முத்து மாவட்டத்தில், பெரிய குளத்திலிருந்து 13 கல் தொலைவில் உள்ளது) எனும் ஊரில் உள்ள சிவன் கோயிலில் வீரபாண்டியன் எனும் மதுரைப் பாண்டிய மன்னனுக்குக் கண்பார்வை கிடைத்ததாக உள்ளது.

ஆற்றில் வந்த பெட்டியில் அம்மன் இருந்ததாகவும், அது பிரதிட்டை செய்யப்பட்டு ஒரு கோயிலாக ஆனதாகவும் ஒரு செய்தி உள்ளது. இது உருவமர்வாக (Symbolic) நுவலப்பட்டதே. எதற்கெனில், இன்னவர் இன்ன இடத்திலிருந்து

அம்மனைக் கொண்டு வந்தார் என்று பலரறியக் கூறிவிட்டால், அதனால் சமுதாய அமைதியின்மை, பூசல் எல்லாம் ஏற்படும். எங்கிருந்ததாகக் கூறப்பட்டதோ அந்தப் பகுதி மக்கள் உரிமை கொண்டாடுவர் ! "ஆற்றில் வந்தது" என்று கூறிவிட்டால்? யார், யாரை உரிமை கொண்டாட முடியும்? எனவே தான், 'ஆற்றில் வந்தது' என்று கூறும் ஒரு பழக்கம் நம்மவர்களிடையே ஏற்பட்டது !

உத்தமபாளைய வரலாற்றில் (டி.3859) 'மகா உத்தமம்' என்று பஞ்ச பாண்டவர்கள் இந்த இடத்தைப் பார்த்துக் கூறி இங்கே தங்கினார்களாம் ! அதனால், 'உத்தம' என்ற அடைமொழி இவ்வூருக்கு ஏற்பட்டு, பிறகு, நாயக்கர் பாளையத்தால், 'பாளையம்' என்ற பின்னொட்டு இயைந்ததாக நுவலப்பட்டுள்ளது.

கல்லையதாச நாயக்கன் என்றொரு பாளையப்பட்டுச் சிற்றரசன் உத்தமபாளையத்தை ஆண்டதாகவும் ஒரு குறிப்பை மேற்படி சுவடி பேசுகிறது.

வடக்கேயிருந்து கன்னார்கள் உத்தம பாளையத்துக்கு வாணிகம் செய்ய வந்ததாகவும், அவர்களுடைய ஒரு குதிரை சிறப்பு வாய்ந்ததாகவும், அதன் மேல் ஏறிச் சென்றால் போகிற செயல் வெற்றியாகும் என்றும் ஒரு கருத்து இச்சுவடியில் எழுதப்பட்டுள்ளது. இந்தக் குதிரைக்காகவே, நாயக்க அரசர்களுக்கும் கல்லையதாசனுக்கும் இடையே போர்மூண்டு, கல்லையதாசன் தன்னைத்தானேயும் குதிரையையும் குத்திக் கொண்டு இறந்துவிட்டானாம்! இவ்வரலாறு நமது இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

காளத்தீஸ்வர சுவாமி புராண வரலாறு (டி. 3858) எனும் சுவடியில், பிச்சக் கணக்கன் எனும் கணக்குப்பிள்ளைக்காக, ஆந்திர மாநிலத்துக் காளத்தீஸ்வரர் உத்தமபாளையத்திற்கு வந்ததாக வரலாறு எழுதப்பட்டுள்ளது. உடன் பிரதிட்டை செய்ய, அம்மன் சிலை ஒன்றும் ஆற்றிலே அடித்து வரப்பட்டதாகவும் வரையப்பட்டுள்ளது ! அவ்வாறு புதிதாக அமைந்த காளத்தீஸ்வரர் கோயிலுக்கு அர்ச்சகராக ஒரு பிராமணரை நியமிக்க வேண்டும் என்று அக்கணக்கரே முயன்றதாகவும் எழுதப்பட்டுள்ளது. கோயில் அர்ச்சகர் பணி வரலாற்றில் இது குறிப்பிடத் தக்கதே. மேற்படி காளத்தி ஈசுரன் கோயிலுக்குத் திருப்பிணி வேலைக்கான பணத்தினைத் தந்தவர் செல்லப் பெருமாள் செட்டியார் என்பவர் என்றும் இங்கு வரலாறு வருகின்றது.

தேவாரம் பாளையப்பட்டு, சோலை மலை அழகர் தலபுராண வரலாறு எனும் சுவடியில், தேவாரம் (வைகை வீரன் அழகுமுத்து மாவட்டத்து, உத்தமபாளையத்தினை அடுத்துள்ள ஊர் தேவாரம்) என்ற ஊரில், ஒரு வேடனுக்குச் சாமி வந்து, "இதோ இந்த இடத்தில் மதுரை அழகர் மலைச்சாமியாகிய அழகர் எழுந்தருளியிருக்கிறார்" என்று கூற, பலரும் அங்கே போய்ப் பார்க்க, அழகர் உருவம் காணப்பட்டதாம் ! அங்கே ஒரு கோயிலும் எழுந்ததாம்! இது கோயில் வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் சிறந்த கோயில் ஒன்று பல கிளைக் கோயில்கள் தோன்றக் காரணமாக இருந்துள்ளது என்பதற்கு இஃது ஒரு சான்று.

தேவாரம் பாளையப்பட்டு ரெங்க நாயக்கர் தல வரலாறு (டி.3856) என்ற சுவடி, சீரங்கத்திலுள்ள அரங்க

நாயகரே, தேவாரம் பாளையத்தைச் சேர்ந்த வராககிரி மலைச் சாரலில் எழுந்தருளியதாகக் குறிக்கப்படுகிறது. அண்ணாவிக்கோன் என்ற யாதவரால் இந்த அரங்கர் எழுந்தருளியது கண்டறியப்படுகிறது. ஏழு வயதுக்கு குழந்தை ஒன்றின் மீது ஆவேசம் வந்து, எழுந்தருளிய கடவுள், சீரங்கம் அரங்கரே என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது ! அங்கே கட்டிய அரங்கர் கோயிலுக்குக் கும்பினி அரசு மானியம் விட்டதாகவும் மேற்படி சுவடி பகர்கிறது; இந்துக்களைத் திருப்திப்படுத்தும் ஓர் உள்நோக்கமும் வெள்ளையருக்கு இருந்துள்ளது இதன் மூலம் புலனாகிறது !

இச் சுவடியில் கூறப்பட்டுள்ள சாலி வாகன சகம், கலி அப்தம் இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர் பற்று உள; சாலிவாகனசகம் 1455க்கு நிகரான கிறித்தவ ஆண்டு 1533 ஆகும்; கலியுக சகாப்தம் 4396க்கு நிகரான கிறித்தவ ஆண்டோ கி.பி.1295 ஆகிறது ! எனவே இந்த இரு ஆண்டுகளிலும் நமக்கு ஐயுறவு ஏற்படுகிறது.

கோம்பைப் பாளையப்பட்டுத் திருமலைராயப் பெருமாள் தலபுராண வரலாறு (டி. 3855) என்ற சுவடி குறிக்கும் கோம்பை திண்டுக்கல்லைச் சேர்ந்த பழைய 26 பாளையப்பட்டுகளில் ஒன்றாகும். கோம்பைப் பாளையக்காரர்கள், கன்னட மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட காப்பிலியர் என்ற வகுப்பார் ஆவர். இவர்கள், காஞ்சிபுரம் வழியாக, மைசூரிலிருந்து ஒரு காலத்தே வந்தவர்கள் என்பர். கோம்பை நாய் என்ற ஒரு சிறப்பு வகை நாய் தமிழகத்தில் உண்டு; அந்த வகை இந்த

ஊருக்குரியதே. திண்டுக்கல் பகுதியைக் கிழக்கிந்தியக் கம்பெனி முழுவதுமாக மேற்கொண்டதும், கி.பி.1795ல், கோம்பைப் பாளையக்காரரான அப்பாஜி கவுண்டன் என்பான் அப்பகுதியில் 'கலகம்' விளைவித்ததாக ஆங்கிலேயர் எழுதியுள்ளனர்.

இந்தச் சுவடியில் சாலிவாகன சகம் 1440 என்றும், கலியுக சகாப்தம் 4381 என்றும் இரு ஆண்டுகள் எழுதப்பட்டுள; சாலிவாகன சகம் 1440க்கு நிகரான கிறித்தவ ஆண்டு கி.பி.1518 ஆகும்; கலி அப்தம் 4381க்கு நிகரான கிறித்தவ ஆண்டு கி.பி.1280 ஆகிறது! ஒன்றுக்கொன்று தொடர்பில்லை ! எனவே, இந்த இரு ஆண்டுகளுமே ஐயுறவுக்கு உரியனவாக உள்ளன.

இந்தத் தலத்தில் திருமலை ராயர் கோயில் எழக் காரணம் நாரத முனிவரின் தவம் என்கிறது சுவடி ! அவரே, தீர்த்த யாத்திரை செய்து வரும்போது, கோம்பைத் தலச்சிறப்பால் அங்கே ஒரு கடவுட்டலம் அமைக்க எண்ணி, தவசும் இருந்தாராம் ! அப்பாச்சிக் கவுண்டர் என்பவர் இந்தத் திருமலைராயருக்குக் கோயில் முதலியன கட்டி, விழாச் சிறப்புகள் செய்தார் என்றும் நுவலுகிறது இச்சுவடி.

இந்தத் தலத்தில், சோழதேசத்து வரதர் அய்யங்காருக்கு ஒரு கண் பார்வை கிட்டியதாம் ! சுந்தரமூர்த்தி நாயனாருக்கு (கி.பி. 9ஆம் நூ.ஆ.) திருவேகம்பத்தூரில் ஒரு கண்ணும் திருவாரூரில் மறு கண்ணும் கிடைத்தமை மேற்படி வரதய்யங்கார் கதையின்போது நினைவுக்கு வரலாம். இவ்வாறு அடியவர்கள் கதைகள் ஒரே மாதிரியாக இருப்பதும் இங்கு நோக்கற்பாற்று.

கிழக்கிந்தியக் கம்பெனிக்கு முதுகுளத்தூர்ப் பகுதி மக்கள் விண்ணப்பத்தில் (டி. 3851) அரிய நீர் நிர்வாகப் (Water Management) பொறியியல் நுட்பங்கள் உள்ளன. ஆறு, குளம் இவற்றுக்கு வருடாவருடம் மராமத்துச் செய்யவேண்டும் என்ற தொழில் நுட்பம் இச்சுவடி வாயிலாக உணர்த்தப்படுகிறது; தமிழர் கண்ட பொறியியல் அறிவு இது ! வரைபடம் (Map) தேவையில்லாமல், எப்படி அந்தக்காலத்தில் நீர் நிர்வாகம் நடந்தது என்பதற்கு விடை இந்தச் சுவடியில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது ! ஓர் ஆறு என்றால், எங்கே தொடங்கி, எப்படிக் கூடி, எங்கே பிரிந்து, எந்தக் குளத்தில் விழுகிறது ? எந்தக் கடலில் கலக்கிறது போன்ற அதிநுட்பச் செய்திகள் வியத்தகு நுட்பங்களுடன் நுவலப்பட்டுள்ளன.

இந்த பாண்டிய மண்டல வரலாறுகள் வெறும் கதைகள் என்று நம்மை எண்ணவிடாமல், சிறந்த சமுதாயக் கையேடாக மிளிரச் செய்ய நமக்கு உதவுவது மேற்கண்ட (டி. 3851) சுவடி ஆகும் !

இச் சுவடியில், ரெகுநாதக் காவேரி நீர் நிலை உடைப்பு எடுக்காமல் இருக்கவும், கமுதியில் கட்ட வேண்டிய அணை முதலியன பற்றியும் கிழக்கிந்தியக் கம்பெனியார்க்கு இப்பகுதி மக்கள் (முதுகுளத்தூர்ப் பகுதி மக்கள்) வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுவடியின் இறுதியில் இன்னின்னார் கையொப்பம் இட்டனர் என்று ஊர், பெயர் வாரியான பட்டியலும் உள்ளது.

பாண்டியர் சரித்திரம் (டி. 436) எனும் சுவடி, பாண்டியர்கள் அனைவரும் சந்திரவம்சச் சத்திரியர்கள்

என்கிறது; பிற்காலப் பாண்டிய மன்னர்கள் அனைவருக்கும் முன்னோன் குலசேகரபாண்டியன் என்கிறது சுவடி; மதுரை கடம்பவனமாக முன்பு இருந்தது; தனஞ்செயன் எனும் செட்டியார் ஒரு காட்டில் மாட்டிக் கொண்டார் ! அங்கிருந்து சிவகிருபையால் தப்பி, குலசேகர பாண்டியனிடத்திற் சொல்லவே, குலசேகர பாண்டியன், தன் கனவிலும் கடம்பவனத்தை வெட்டி மதுரையை உண்டாக்கச் சிவன் சொல்லியிருந்ததால், பல ஆண்டுகள் முயன்று, கடம்பவனனத்தை வெட்டி, மதுரைப் பட்டணம் உண்டாக்கினானாம் !

இந்தச் சுவடி விவரிக்கும் விதத்தால், கீழ்வரும் பாண்டிய வமிச பரம்பரையை நாம் குறிக்கலாம் :-

குலசேகர பாண்டியன்

↓ மகன்

மலயத்துவச பாண்டியன் (மனைவி காஞ்சனமாலா)

↓ மகள்

தடாதகா தேவி (கணவன் - சுந்தரபாண்டியன்)

↓ மகன்

உக்கிர பாண்டியன் (மனைவி - காந்திமதி)

↓ மகன்

வீரபாண்டியன்

↓ மகன்

அபிஷேக பாண்டியன்

↓ மகன்

விக்கிரம பாண்டியன்

↓ மகன்

ராஜசேகர பாண்யடின்

விக்கிரம பாண்டியன் காலத்தில், அவனுக்கு எதிராக ஒரு சோழ ராஜா, 8008 சமணர்களையும் சூனியம் வைத்துக் கொல்ல ஏவினாராம்; அவர்களும் யாகம் செய்து ஒரு யானையை உருவாக்கி, அதைப் பாண்டியன் மீது ஏவினர். ஆனால், பாண்டியன் கோரிக்கையால், சுந்தரேச்வரர், அந்த யானையை அம்பு எய்து கொன்றார்! இந்த வரலாறு இச்சுவடியில் உள்ளது.

இதனையடுத்து, இராசசேகர பாண்டியனின் வரலாறு கூறப்படுகிறது.

இராசசேகர பாண்டியன் 63 கலைகளில் தேர்ந்து, நடனக் கலையில் மட்டும் தேராதிருந்தான்; சோழ தேசத்திலிருந்து ஒரு புலவன் வந்து, பல கவிகளைக் கூறிப் பரிசுகள் பெற்றுச் செல்லும்போது, "சோழன் கரிகாலன் பல கலைகளிலும் தேர்ந்தவன்; உம்மிடம் 63 கலைகள்தாம் உள்ளன !" என்று கூறிவிட்டுச் சென்றான்.

உடனே, அந்த நடனக்கலையையும் கற்றான் பாண்டியன் இராஜசேகரன். கற்கும்போது, "ஒரு காலை ஊன்றி, மறுகாலைத் தூக்கி ஆடுவது எவ்வளவு துன்பம்? என்று உணர்ந்தான். சுந்தரேஸ்வரர் இடது காலை ஊன்றி, வலது காலைத் தூக்கியபடி நின்றாடி வருகிறாரே, அவருக்கு வலிக்காதோ?" என்று எண்ணி, "ஐயா சுந்தரேஸ்வரா, நீர் காலை மாற்றி, வலது காலை ஊன்றி, இடது காலை உயர்த்தி ஆடுக; அவ்வாறு செய்தால், எனது தலையைப் பலியாகத் தருவேன் ! என்று கூறியபடி தன் கழுத்தைத் தானே வெட்டப் போனான் இராஜசேகர பாண்டியன். உடனே தடுத்த சுந்தரேஸ்வரர், அப்படியே காலை மாற்றி ஆட

ஆரம்பித்தார் ! திருவிளையாடற்புராணத்தில் இஃது உள்ளது.

கரிகாலர் மூவர் என்ற தமது சிறந்த ஆராய்ச்சி நூலில், தமிழகத்தே மூன்று கரிகாலர்கள் இருந்துள்ளனர் என்று ஆய்ந்துள்ளார் வெ.சு. சுப்பிரமணி ஆச்சாரியார்.

அடுத்து, குலோத்துங்க பாண்டியன் கதை இடம் பெறுகிறது. ஒரு பிராமணன், மனைவி, குழந்தை மூவரும் நடந்து போகும்போது, ஓர் ஆல மரத்தடியில், அவளும் குழந்தையும் படுத்தனர். பிராமணன், நீர் கொண்டுவரப் போயிருந்தான். மரத்தில் சிக்கிக் கொண்டிருந்த அம்பு (பாணம்) கீழே விழுந்து, அவள் இறந்துவிட்டாள் ! பிராமணன் அங்கு தேடிவரும்போது, ஒரு வேடன் அகப்பட்டான். அவனை இழுத்துக் கொண்டு, குலோத்துங்க பாண்டியன் அரண்மனை சென்று குற்றச்சாட்டை விவரித்தான். வேடன் சிறைப்பட்டான் ! குலோத்துங்கனுக்கு, சுந்தரரேஸ்வரர் "பிராமணனுடன் இன்று இரவுக்கு காவலுக்குப்போ ! விவரம் அறிவாய் !" என்றார். இரவுக்காவலில் ஒரு செட்டி வீட்டில் திருமணம் நடந்தது. அங்கு எம தூதர்கள், "மணமகனை இன்றே கொண்டு போக இருக்கிறோம்" என்று கூறி, மரத்தில் இருந்த அம்பை நாங்களே அசைத்துவிட்டோம், பிராமணத்தி இறந்தாள் !" என்று பேசிக்கொண்டனர். குலோத்துங்க பாண்டியன் கிராதனை (வேடனை) விடுவித்து, பரிசுகள் வழங்கிச் சிறப்புச் செய்து அனுப்பினான் !

இந்நூலில் இடம்பெற்றுள்ள இதே சுவடியில் வரும் வேறொரு வரலாற்றை இவண் பேசுவோம். சிந்தாஸ்திரயன் என்ற ஒரு சீடன், மல்லக செட்டியிடத்

தில் பல வித்தைகளைக் கற்றான்; கத்தி, சிலம்பம், பாணா, சமுதாடு, முதலியவற்றில் தேர்ந்தான். பிறகு, அவன் தனக்கு வித்தை கற்றுத்தந்த குருவின் மனைவியையே கேலி செய்யத் தலைப்பட்டான்! சுந்தரேஸ்வரர், சிவப்பு குல்லா, சிவப்பு அங்கவஸ்திரம் பூண்டு, அவன் புருஷன் போலே வந்தார். பலவித ஆயுதங்களைக் கொண்டு சண்டை செய்த பிறகு, சுந்தரேஸ்வரர், அச்சீடனைக் கொன்றார். நங்கன் என்பது அந்த மல்லக செட்டியின் பெயர். இது குலோத்துங்க பாண்டியனுக்குத் தெரியவந்தது! மல்லக செட்டியை அழைத்து, அவனுக்கு பலவிதப் பரிசுப் பொருட்களை அளித்துச் சிறப்புச் செய்து அனுப்பினார் குலோத்துங்க பாண்டியன்.

ஒரு சுவடியில், மதுரையருகே பட்டமங்கலம் என்ற ஊரில் ஆறு இயக்கிப் பெண்கள் வந்து சுந்தரேஸ்வரர் 'கிருபையால்' சாபவிமோசனம் அடைந்து, இனிது இருந்தார்கள் என்ற வரலாறு உள்ளது. இது ஒரு குறிப்பிட்ட இனத்தார் இவ்வூரில் (பட்டமங்கலத்தில்) வந்து காலூன்றியதை உருவமர்வாகக் (Symbolic) குறிக்கலாம்.

குலபூஷண பாண்டியன் மதுரையில் ஆட்சி நடத்தியபோது, காஞ்சிபுரத்தில், காந்தாரச் சோழன் என்பவன் ஆண்டதாகவும், அச்சோழன் சிவபக்தனாக இருந்ததாகவும், மதுரை சுந்தரேசுவரரைக் காண விரும்பியதாகவும், சிவனார் கனவிலே தோன்றி, இன்று சூரிய உதயத்திற்குள் நீ மதுரை சென்று திரும்பச் சித்தி அளிக்கிறேன் என்றதாகவும் ஒரு சுவடியில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு, அவன் செல்லும்போது, வைகை நதியில் பெருக்கு ஏற்பட்டதால், மலைத்து

நின்றான் சோழன், சிவன், வைகைப் பெருக்கை வற்றச் செய்து, சோழன், மதுரை சுந்தரேசுவரரைக் கண்டுவர உதவி செய்தான். மறுநாள், சுந்தரேசுவரர் கோயில் பூட்டப்பட்டு, அப்பூட்டில் சோழனின் காளை முத்திரை (ரிஷப முத்திரை) இருந்ததால், குலபூஷணன் கோபமடைந்தான். ஆனால் அன்று இரவே, சிவன் கனவிலே தோன்றி, அவனுக்கு நடந்த உண்மையை விவரிக்க, குலபூஷணன் மகிழ்ந்தான் !

கதை - 3 என்ற சுவடியில், இராசேந்திர பாண்டியன் மற்றும் இராசசிம்ம பாண்டியன் வரலாறு கூறும்போது, தமிழர் போர் முறை (Martial Arts) வெகு நுணுக்கமாக உரைக்கப்படுதல் குறிப்பிடத் தக்கது. மண்டலம், படலம், அரைச் சந்திர வியூகம் முதலிய படை நிறுத்தங்கள் இப்பகுதியில் குறிக்கப்படுகின்றன. இராசேந்திர பாண்டியனுக்குப் பெண் தர, காஞ்சிபுரத்தில் ஆண்ட காந்தாரச் சேதச் சோழன் முன் வருகிறான்; ஆனால், நிச்சயம் செய்யப்போன தம்பி, இராசசிம்ம பாண்டியன், தனக்கு அந்தப் பெண்ணைக் கேட்டு, பெற்று, திருமணமும் செய்து கொண்டான்! இதனால், இராசசிம்ம பாண்டியனும் காந்தாரச் சோழனும் சேர்ந்து, இராசேந்திர பாண்டியன் மீது போர் தொடுத்தனர்; வெற்றி, இராசேந்திர பாண்டியனுக்கே !

இந்த இராசேந்திரபாண்டியனுக்கு இராசேகர பாண்டியன் என்ற மகன் பிறந்தான்; இந்த இராசேசுரபாண்டியனுக்கு, இராசகம்பீர பாண்டியன் என்ற மகன் பிறந்தான். இந்த இராசகம்பீர பாண்டியனே, கிராமங்கள் தோறும் சிவலிங்கத்தை வைத்துக் கோயில்களைக் கட்டினான். எனவே,

கிராமங்களில் சிவன்கோயில்கள் அந்நாளில் எவ்வாறு ஏற்பட்டன என்பதற்கு இச்சுவடி பெரும் சான்றாக விளங்குகிறது.

கதை - 4 என்ற சுவடியில் ஏமநாயகி என்ற தாசியின் கதை உள்ளது. இவள் தன்னை விற்றாகிலும், அதன் மூலம் சிவன் பக்தர்களுக்குச் செலவு செய்தாள்! ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் ஒரு நாள் இவள் வீட்டுக்குப் போனார். அங்கே, அத்தாசி, அவரைப் படுக்கை அறைக்கு அழைத்தாள்; அப்போது, உண்மையை உரைத்தார் சுந்தரேசுவரர்; உற்சவ விக்கிரகம் செய்ய அவள் எண்ணியிருந்தாள், இரசவாதம் மூலம் இரும்பைப் பொன்னாக்கித் தந்தார் சுவாமி, அதைக் கொண்டு, அவள் உற்சவ விக்கிரகம் செய்தாளென்றும், இன்றும் புஷ்பவனத்தில் உள்ள உற்சவ விக்கிரகத்தில், கன்னத்தில் அத்தாசி கிள்ளிய கிள்ளு இருக்கிறது என்றும் சுவடி உரைக்கிறது.

இச்சுவடியில், ஒன்பது இரசங்கள், இசைப் பாடலாகிய கீதம், இலயம், முதலியன பேசப்படுகின்றன. இரசவாதம் பற்றிய குறிப்பும் உள்ளது.

கதை - 5 என்ற சுவடியில், சுந்தரேசுவர பாத சேவக பாண்டியன் மீது, சோழ அரசன் ஒருவன் படையெடுத்த செய்தி கூறப்படுகிறது; சுந்தரேசுவர பாத சேவக பாண்டியன், மதுரை சுந்தரேசுவர் மீது நம்பிக்கை கொண்டிருந்தான். இருந்தாலும், மந்திரிகள் வேண்டுதலால், அப்பாண்டியன் படை திரட்டுமாறு கூறுகிறான்; எப்படிப்பட்ட படை?

இரதம்	10
யானைகள்	100
குதிரைகள்	1000
காலாட்படை	10000

இப்படிப்பட்டதே ஒரு படை என்பதையும் இச்சுவடி மூலம் நாம் அறிந்து கொள்கிறோம். இப்படிப்பட்ட படையுடன், இதைவிட அதிக எண்ணிக்கை கொண்ட சோழப்படையை, சுந்தரேசுவரர் 'கிருபை'யினால் சுந்தரேசுவர பாத சேவக பாண்டியன் வென்றான் !

இதுவரை கண்ட இந்த ஐந்து கதைகளும், திருவிளையாடற்புராணக் கதைகளை அடியொற்றி யவையே. ஆனாலும், பல்வேறு நுணுக்கங்கள் இச்சுவடியில் விளங்கக் கூறப் பட்டிருப்பதால், சுவடி வரலாறும் தேவையானதே.

சுவடி எண் ஆர் 343 இல் வரையப்பட்டுள்ள (பக் 74 முதல்) பாண்டியர் சரித்திரத் தொடர்பான மேலும் ஐந்து 'கதை'களும் திருவிளையாடற் புராணக் கதைகளாக இருப்பதால் இங்கு அவை பதிப்பிக்கப் படவில்லை.

தாமிரபரணி மகாத்மியம் எனும் சுவடி, (டி 2821), இம்மகத்துவத்தை விவரிப்பதாக வருகிறது.

தாம்பிர வள்ளி என்பது, பரமேசுவரிக்குச் சரிசமமான தோழி வேண்டும் என்பதால், பிரம்மா படைத்த தோழியாவாள் என்கிறது சுவடி.

அகஸ்தியரும், தாம்பிர வள்ளியும் இமய மலையிலிருந்து நல்லூர் வரை பல சிவத்தலங்களில் வணங்கி வந்தமை ஊர்ப்பட்டியலாகத் தரப்படுகிறது.

சிவத்துரோகம் என்று, சிவமதத்திற்கு எதிர்ப்புத் தோன்றிய ஒரு கால கட்டத்தைத் தாமிரபரணியின் தொடக்கக் காலம் காட்டுவதாகக் கொள்ள இடமுண்டு. சிவத்துரோகம் செய்து, தக்கனுக்கு உதவிய தேவர்களை உய்தி பெற்றது திரிகூட மலைப்பகுதி என்று சுவடி பேசுவதால் இதனைச் சிந்திக்க இடமுண்டு.

குற்றாலத்துச் செண்பக அடவியானது முற்பிறவியில் செய்த பாவத்தைத் தீர்க்கும் ஆற்றல் பெற்றது என்ற கூற்று இச்சுவடியில் எழுதப்பட்டுள்ளது; பழங்கால மக்களின் மருத்துவ அறிவோடு பட்டது இதுவாகும். சூழ்நிலை மனிதனின் ஆயுளை நீட்டிக்கும் என்பது அறிவியலாகும். இந்த அறிவியல் நுட்பத்தைப் பண்டே கண்டவன் தமிழன் !

பிராமணன் கள்ளைக் குடித்தால், அவன் வாயில் காய்ச்சிய நெய்யை ஊற்றவேண்டும் என்று அக்காலத்தில் ஒரு நீதியாகும்! இக்குறிப்பை இக்கதை நல்குகிறது.

இன்னொரு பிராமணன் அரசப் பிரதானியாக இருந்து, குடிகளுக்குக்கேடு செய்தானாம்; அவன் நரகத்தை அடைந்தானாம் ! அப்படிப்பட்டவன் பிள்ளை, குற்றாலத்தில் பிண்டம் கொடுத்ததால், நரகம் அடைந்த தந்தை மோட்சம் பெற்றானாம் ! இவ்வாறு குற்றாலத்தின் பெருமைகள் சுவடியில் பரக்க உரைக்கப்படுகின்றன.

பொதிகை மலையானது, மாலையில், கிழக்கே ஐந்து யோசனை தூரத்துக்குத் தன் நிழலைப் பரப்புமாம்; அந்த இடைப்பட்ட தூரம் சிறந்த வாழ்விடமாகும் என்று சுவடி ஒரு நுட்பத்தை உரைக்கிறது. அந்தக் காலத் தமிழர்கள் பூகோள அறிவில் ஓங்கியிருந்ததற்கு இது சான்று. எப்படி வாழ்விடங்களைத் (Settlements) தேர்ந்தெடுத்தார்கள் தமிழர்கள் என்பது இச்சுவடிக் கருத்தால் விளங்குகிறது.

இச்சுவடியில், ஓரிடத்தில், 'அம்பு நுழையும் நீளம்' என ஒரு நீட்டல் அளவு சொல்லப்படுகிறது ! புதர், மரங்களின் கூட்டம் போன்ற இடங்களில் உள்ள நீளத்தைத் துல்லியமாகக் கூறவேண்டிய தேவையில்லை ! ஆனால், அந்நீளத்தைக் குறிப்பிடவும் வேண்டும் ! இந்த நிலையில் தான் தமிழர்கள் இதுபோன்ற உத்தேசமான - ஆனால் சரியான நீளத்திட்டத்தை வகுத்து, 'அம்பு நுழையும் தூரம்' என்பது போலச் சொல்லியுள்ளனர் ! தமிழர்களின் வாழ்க்கைப் பார்வைக்கு இஃது ஒரு எடுத்துக்காட்டே ! இன்றும், வேளாண் விஞ்ஞானிகள் கூட "சைக்கிள் டயர் பரப்பில் இத்தனை குத்துகள் பயிர் நடவேண்டும்" என்று உத்தேசப் பரப்பை எளிதிற் கூறுகிறார்கள்; இதற்குப் பழந்தமிழர்கள் முன்னோடி என்பதற்கு மெக்கன்சியின் சுவடியே சான்று !

திரிகூடமலைப் பகுதியில், மொத்தம் 18 தீர்த்தங்களும், 9 சிவாலயங்களும் இருக்கின்றன என்றும், இவற்றின் பட்டியலும் இந்தச் சுவடியில் தரப்பட்டுள்ளன.

தீர்த்தங்களின் பெயர்கள் மட்டுமல்லாது, அவை எந்தத் திக்கில் உள்ளன என்பதும், ஒன்றை அடுத்து

மற்றது இது என்று கூறப்பட்டுள்ள முறையும் வியப்பைத் தருகின்றது.

சிவசன்மா, சாந்தன் என்ற இருவர் கதையும் இச்சுவடியில் விரிவாக வருகிறது; அகஸ்தியர் மேன்மையை இது விளக்குகிறது.

மணலூர் அரசன், யானையாக மாறிய கதையும் இச்சுவடியில் பேசப்படுகிறது. ஆதிமூலக் கடவுளின் பெருமையையும், அகத்தியரின் பெருமையையும் கூறுகிறது இது.

விருத்தாசுரன் கதையும் சுவடியில் உரைக்கப்படுகிறது.

பரமேசுவரன் தொடர்பான பல செய்திகள் இச்சுவடியில் கூறப்படுகின்றன; ஏற்கனவே அச்சில் வெளிவந்த புராணங்களின் கருத்துகளை ஒட்டியே இவை கூறப்பட்டாலும், உரைநடையில், கி.பி. 19ஆம் நூற்றாண்டு உரைநடையில், மன நம்பிக்கையோடு எழுதப்பட்ட இவ்விளக்கங்கள் வெறும் புராணங்கள் என்று ஒதுக்கத்தக்கன அல்ல ! பரமேசுவரன் தத்துவம் (Concept of Parameshwara) முதலில் தமிழகத்தில் தான் தோன்றியது என்பதை நிறுவ இச்சுவடி விளக்கங்கள் சான்றளிக்க உதவுவன என எடுத்துக் கொள்ளவேண்டும்.

அருச்சுனன் கதையும் உரைக்கப்படுகிறது இச்சுவடியில்; அருச்சுனன் அல்லியை மணலூரில் மணந்ததும் குறிக்கப்படுகிறது. இந்தக் குறிப்பைக் கொண்டே, பாண்டிய நாட்டுக்கு மதுரை பின்னாளில்தான் தலைநகர், முன்னாளில் மணலூரே தலைநகர் என்று கூறப்படலாயிற்று.

தாமிரபரணி மகத்துவங்கள், திருநெல்வேலித் தலபுராணம் என்ற நூலில் பாடப்பட்டுள்ளது. நெல்லையப்பக் கவிராயர் என்பார் செய்யுளில் திருநெல்வேலித் தலபுராணம் பாடியுள்ளார்; இதே நூலை உரை நடையில், திருநெல்வேலித் தலபுராண வசனம் என்ற தலைப்பில் எழுதியவர் ம. அழகர்சாமி பிள்ளை. இந்த வசன நூல் 1910இல் தஞ்சையில் பதிப்பிக்கப்பெற்றது. இவ்வசனநூலில், 'தாம்பிரபன்னிச் சருக்கம்' என்று ஒரு சருக்கம் உள்ளது; 'தாம்பிரவன்னி' என்று மெக்கன்சியின் சுவடியில் எழுதப்பட்டுள்ளது இங்கே ஒப்பிடத்தக்கது. ஏறத்தாழ, மெக்கன்சியின் சுவடி கூறும் விளக்கங்களெல்லாம், மேலே கண்ட திருநெல்வேலித் தலபுராணத்தில் உள்ளவைகளே. ஆயினும் பல்வேறு வழிகளில், சுவடிக் கருத்துகள் ஆய்வுக்கு உதவுவனவே.

பழங்கால மக்கள் தலபுராண நூற்களை முற்றிலும் வரலாற்று நூலாகவே கருதிப் போற்றி வந்தனர் என்பதற்கு இந்த தாமிரபரணி மகத்துவம் கூறும் சுவடியே சான்று.

நதிக்கதை நாகரிகம் தோன்றி வளர்ந்த பாங்கை ஆராய இச்சுவடி பெரிதும் பயன்படும் எனலாம்.

இவ்வாறு, பாண்டிய மண்டல வரலாறுகள் எனும் இந்நூலில் சுவடிகள் அமைந்து செல்கின்றன.

மேற்கண்ட வரலாற்றுச் செய்திகளுக்காக மட்டுமல்லாது, இன்னும் எத்தனையோ பண்பாட்டுக் கூறுகளுக்காகவும், இத்தொகுப்பில் உள்ள சுவடிகள் நமக்குத் தேவையாகின்றன; எத்தனையோ ஆராய்ச்சிகளுக்கு இவை அடிப்படையாக அமையும்.

எடுத்துக்காட்டாக, மொழியியல் நோக்கிலும் இந்நூலில் உள்ள சுவடிகள் அயத்தக்கனவாக உள்ளன, கீழ்வரும் புதுச்சொற்கள் பலவற்றை நாம் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள சுவடிகளிற் கண்ணுறுகிறோம் :-

1. நித்திரிச்சுக் கொண்டு
2. அதிகர்
3. ஆதரணை
4. தோயம்
5. சகோதரம்
6. அதனமாய்
7. கலாரம்
8. துலாம்பரம்
9. மிசிரமான

எனவே, பாண்டிய மண்டல வரலாறுகள் எனும் இந்நூல் பல்லாற்றானும் தமிழ் ஆய்வு உலகுக்குப் பெரிதும் பயனாகும் என்று நம்பலாம்.

அன்புடன்,

முனைவர் சு. சௌந்தரபாண்டியன்
எம்.ஏ. (தமிழ்), எம்.ஏ. (ஆங்கிலம்),
பி.எட்., டிப்.வ.மொ. பி.எச்.டி.,
பதிப்பாசிரியர்.

Upright of the Sceptre...

The pandya kings are world famous for their justice. Who can forget Pandian Nedunchezhian who gave up his life the moment he came to know about his fault?

Many Tamil words have been evolved around the pandyan dynasty in general.

Tamil Sangam was flourished only on the soil of pandyas. So, the history of the nook and corner of so called pandya mandalam can not be winked at. Hence this attempt.

I render my thanks to Thiru Natana Kasinathan, Director of Department of Archaeology, Chennai - 113 for his valuable guidance.

Dr. S. Soundarapandian
M.A., M.A., B.Ed., Dip. Skt , Ph.D.,
Curator
G.O.M.L.
Chennai - 5.

Riddle of Intertwined peepul and margosa trees in worships !

Dr. S.Soundarapandian,
M A., M A , B Ed , Dip. Skt., Ph D ,
Curator
Govt Oriental Manuscripts Library
University Library Building
Chennai - 5

We can see in many places of Tamilnadu, the peepul and margosa trees, stand very close or almost one over another, and being worshipped by people.

What is the truth behind this ?

In those days, if husband died for a noble cause, then her wife would also die jumping into fire. People in that area, to mark this significance, grow a peepul tree (ficus religiosa), for the remembrance of male, and a neem tree (azadirachta Indica), for the memory of female and began worshipping.

Later on, this custom was over and people forgot the tradition. But, without knowing this true reason, people are still engaged in growing the two trees side by side and worship.

Important Dates in the History of Govt. Oriental Manuscripts Library

Dr. S.Soundarapandian,
M.A., M.A., B.Ed., Dip. Skt., Ph.D.,
Curator
Govt. Oriental Manuscripts Library
University Library Building
Chennai - 5.

Govt. Oriental Manuscripts Library, Chennai - 5, is a rare and unique institution of its kind in that it is housing nearly 72,000 invaluable manuscripts both palm - leaf and paper put together in 14 oriental languages including Thai (Siamese), and Sinhalese, If we don't have time to go through all the pages of the history of Govt. Oriental Manuscripts Library, we can have a quick look at its important dates which will roar for the institution of unimaginable potential :

1783	- Colonel Colin Mackenzie came to India
1800	- Mackenzie collected Manuscripts in full swing
1800, 1804	- Mackenzie gathered Telugu Local Records
1803	- Dr. Leyden collected Manuscripts
1821	- Mackonzie died
1829	- Manuscripts were housed at Madras College Library
1828	- H.H. Wilson's Descriptive Catalogue of Mackenzie Manuscripts was published

1835	-	William Taylor prepared Catalogue for Manuscripts
1844	-	Manuscripts were under the custody of Madras Literary Society
1847 - 1869	-	Library was under the control of Director of Public Instruction, Chennai
1855	-	C.P. Brown's collection of Telugu and Sanskrit Manuscripts took place
1858	-	Again Manuscripts came from London and were deposited at College Library
1862	-	William Taylor's Oriental Historical Manuscripts' in three volumes were printed.
1869	-	Institution was organised in the proper structure under the name Government Oriental Manuscripts Library.
1870	-	Collections of Manuscripts of Mackenzie, Leydon and Brown were kept at Presidency College, Chennai.
1870 to 1896	-	Institution functioned at Presidency College, Chennai.
1878	-	Gustav Oppert's Catalogue for 32 Volumes of Local Records was printed.
1901	-	Descriptive catalogue of Sanskrit Manuscripts Vol. 1 was published.
1912	-	Descriptive Catalogue of Tamil

Manuscripts Vol 1 was printed

1914	-	Government Oriental Manuscripts Library worked at Egmore Museum Campus
1916	-	G O.Balgden's 'A Catalogue of Mackenzie Manuscripts' came out
1925	-	A detailed G.O running to six pages was issued for the institution by the state government
1938 - 1941	-	Government Oriental Manuscripts Library was brought to the premises of Madras University, Chennai - 5.
1942 - 1944	-	Government Oriental Manuscripts Library was shifted to Venkateswara Oriental Research Institute, Thirupati (A.P.)
1945	-	Again Government Oriental Manuscripts started functioning from the premises of Madras University

1. பாண்டியர் சரித்திரம்

(டி. 436)

1. பாண்டிய மண்டலத்தை ஆளப்பட்ட பாண்டிய ராசாக்களுடைய கதை.

பாண்டிய மண்டலம் அன்பத்தாறு காதம்; யிந்த பாண்டிய மண்டலத் தேசத்தை ஆளப்பட்ட பாண்டியராசாக்கள் ராச்சியாதிபதியாக இருக்கப்பட்ட ராசதானி பட்டணம் மதுரை சமஸ்தானம்! அந்த மதுரைப் பட்டணம் உண்டானது எப்போதென்றால், கொலசேகரபாண்டிய ராசா னாளையில் உண்டாகப்பட்டது ! அந்த கொலசேகர் பாண்டிய ராசாவினுடைய சமஸ்தானம் முன்பிருந்த பாண்டியராசாக்கள் கலியாணபுரம் சுரத்தில் ராசதானி பண்ணி ராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டு இருந்தார்கள்; அந்த பாண்டிய ராசாக்களுடைய வம்சோத்பத்தி சொல்லுகிறோம் ! :

1. காதம் - ஏறக்குறைய 10மைல் தூரம்; கொலசேகர - குலசேகர.

2. பராபரத்தில் பாட்டு தோண்டி, புறத்தில் சிவம்தோண்டி, சிவதத்துவத்தில் சத்திதத்துவம் தோண்டி, அதை சதாசிவதத்துவத்தில் மயேசுரபதத்வம் தோண்டி, அந்த மகேரபதத்தில் ருத்திரத்வம் தோண்டி, அந்த ருத்திரத்வத்தில் விஷ்ணுத்வம் தோண்டி, அந்த விஷ்ணுத்வத்தில் பிறம்மதேவர் பிறந்தார் ! விஷ்ணுவினுடைய நாபீகமலத்தில் பிரம்மதேவர் பிறந்து, இந்த ஜெகத்தை உண்டாக்குகிற நிமித்தியமாய் நவயிருசிகளை உண்டாக்கினார். அந்த நவயிருசிகளில் அத்ரிமகாரிஷி யென்று ஒரு மகாருஷி ! அவருடைய நித்திர கமலத்திலே நின்றும் சந்திரன் பிறந்தார் ! அந்த சந்திர நிடத்தில் பாண்டியராசாக்கள் வம்சம் பிறந்தது !

3. ஆகையினால், இந்த பாண்டிய ராசாக்கள், சந்திரவம்ச ஷத்திரியார் ! இவாள் பாண்டிய மண்டல தேசத்தையும், அனேக மண்டல தேசத்திலேயும் ஆண்டுக் கொண்டு, நாலு பக்கத்திலேயும் வெகு தேசாதிபதிகளாய் ராச்சிய பரிபாலனம் பண்ணிக் கொண்டு வந்தார்கள் ! அதில், இந்த கலியுலகத்திலே மதுரை யென்குற பட்டணத்திலே ராசதானி பண்ணிக்

2. *தோண்டி - தோன்றி.*

கொண்டு, பாண்டியமண்டல ராசாதிபத்தியம் பண்ணிக்கொண்டு வந்த கதைகளும், சரித்திரங்களும் இந்த மதுராபுரி பட்டணம் உண்டான விதமும் தெரியப்பட யெழுதுகிறோம் ! அந்த மதுரைக்குப் பேர் ஆலாக்ஷிய நகர யென்றுப் பேர்; அதுவன்றில், ஆயிரத்தியெட்டு சிவ க்ஷேத்திரங்களில் உத்தமக்ஷேத்திரமென்று பேர்; இதுலே யிருக்கப்பட்ட சுந்தரேச்வர மகாலிங்கத்துக்கு பேர் யென்னவென்றால், கற்பூர சுந்தரமென்றும், கலியாண சுந்தரமென்றும், சோமசுந்தரமென்றும், ஆனந்த சுந்தரமென்றும், அதிசுந்தரேச்வரரென்றும், அபயதான சுந்தரரென்றும், கதம்பவன சுந்தரரென்றும், பாண்டிய சுந்தரரென்றும், யமசுந்தரரென்றும், கஸ்தூரி சுந்தரரென்றும், கன்னிகபுர நாத சுந்தரரென்றும், வித்தியாபுரி பாதசுந்தரரென்றும், வீரபாண்டிய சுந்தரரென்றும், சதுஷ்கூடபுற சுந்தரரென்றும், சமஷ்டிநகர நாயக சுந்தரரென்றும் பேர். இன்னும் அனேக நாமதேயம் உண்டு !

4. அந்த ஆலாக்ஷயத்திய லிங்கத்தை, பிற்ம்மதேவன் முதல் சகல தேவதைகளாலும் பூசிக்கப்பட்ட அந்த மகாலிங்கம், தானாய்

4. கதம்பவனம் - கடம்பவனம்.

கதம்பவனத்திலே சகலரோக அறமாய், சகல சனங்களுக்கு இதமாய், சிவலிங்க சாரமாய் ஆவிற்பவிச்சார் ! ஆகையினாலே, இந்த க்ஷேத்திரம் சிவக்ஷேத்திரத்தில் உத்தமக்ஷேத்திரமான படியினாலே, பாண்டியராசாக்கள், சிவ பக்தாளான படியினாலே, சிவபக்தி பண்ணுகிற நிமித்தியமாய் பாண்டிய மண்டல தேசத்துக்கு இதே ராசதானியாய் இந்த மதுராபுரி பட்டணத்தை உண்டாக்கி, ராச்சியாதிபத்தியம் இதுலேயிருந்து பண்ணிக்கொண்டு வந்தார்கள் ! இந்த மதுராபுரி பட்டணம் பாண்டிய ராசாக்களுக்கு ராசதானியாய் உண்டாக்கின பாண்டியராசா ஆரென்றால், குலசேகரபாண்டிய ராசா அவர்கள்! அந்த கதை புராணத்தில் இருக்கிறபடி எழுதுகிறோம்! இதுக்கு முன் மதுராபுரி பட்டணம், கதம்பவனமா இருந்தது ! இந்த கதம்பவனத்திலே சுந்தரேச்வர லிங்கத்தை முப்பத்து முக்கோடி தேவர்கள் இராத்திரி காலத்தில், விசேஷ தினங்களிலே வந்து பூசை பண்ணிக் கொண்டு போகிறது ! இது காடாயிருந்ததை பட்டணமாய் உண்டாக்க வேணுமென்று, பார்வதி தேவி, பரமேச்சுவரனை பிறாத்திச்சாள் ! அதனாலே பரமேச்சுவரருக்கு இதை, பட்டணமாய் உண்டாக்க

வேணுமென்று அநுக்கிரகிச்சார்! அந்த ஈசுவரர் அநுக்கிரகத்தினாலே, கல்யாணபுறமென்கிற நகரத்தில் பிறசித்தமா இருக்கப்பட்ட வந்தகன் ஒருவன்; அவன் சருவ விருத்தனர் புண்ணிய மூர்த்தி; கிறயவிக்கிறய ஞாயமாய் தனாற்சனம் பண்ணுகிறத்திலே வெகு சமர்த்தன் ! சிவபக்தன் ! சிவ விருதங்களை அனுஷ்டிக்குறவன் ! கலியாண குண சாமீயிடம் முதல் கொண்டு, மோக்ஷார்த்தமாய் சோமவார விருதம் பண்ணியவன் ! அவற்பேர் தனஞ்செய செட்டி !

5. அவனொரு நாள், சிறிது வியாபாரார்த்தமாய், தனாற்சித நிமித்தமாய், தேசாந்திரங்களுக்கு மேற்கே போய், அனேக தனங்களை சம்பாதிச்சுக் கொண்டு மேற்கேயிருந்து வரச்சே, அஸ்தமன மாச்சுது ! அப்போ இந்த கதம்பவனமென்கிற காட்டில் வந்தான் ! உடனே சூர்ய அஸ்தமனமாச்சுது ! அதனாலே இருட்டானது ! அதனாலே வெழிதாய்ந்த கதம்பவன என்கிற காட்டில் அகப்பட்டுக் கொண்டான் ! இந்த காடு எப்படி இருக்கிறதென்றால், சிங்கங்களும், புலிகளும், கரடிகளும், யானைகளும் இப்படி அனேகமான

---

4. *கிரயவிக்கிரயம் - விலைக்கு வாங்கல், விலைக்கு விற்றல்; விருதம் - விரதம்.*

பசுபட்சி பன்னக மிருகாதிகளுடைய சப்தங்களைக் கேட்டு மகா பயத்துடனே, பரமேசுரரை பிறார்த்திச்சார்! யென்னவென்றால் "சிவமகாதேவா ! சங்கரா ! யென்னை இந்த பயத்தில் நின்றும் நிரபிரணம் பண்ணி, யென்னை ரட்சிக்க வேணும் ! நான் வழிதவறி இந்த கதம்பவமென்குற காட்டிலே அகப்பட்டுக் கொண்டு இராத்திரி முழுதும் மனுஷர் சஞ்சாரம் இல்லாதவிடம் இப்படிப்பட்ட சங்கடத்திலே நான் அகப்பட்டுக் கொண்ட படியினாலே, எனக்கு றட்சிக்குறவர் ஒருத்தரும்யில்லை; தவிர சிவமகாதேவா, ருஷீச்வர வென்று ஸ்தோத்திரம் பண்ண, உடனே தேவதைகலினாலே பூசிக்கப்பட்ட சகலேச்வரன், சுந்தரலிங்காகாரமாய் இவனைத் தரிசனம் பண்ணினான்; அனந்தரம் செய்ய வந்தவனுக்கு சுந்தரலிங்கம் தரிசனமான உடனே தாகம், பசி இல்லாமல் போச்சுது ! அந்த பக்தி பரவசத்தினாலே, தேகத்தை மறந்து சிவனே தியானம் பண்ணிக் கொண்டு யிருந்தான் !

---

5. தனாற்சித - வருவாய் நிமித்தமாக; சிவனேதியானம் பண்ணிக்கொண்டு - சிவனைத் தியானம் பண்ணிக் கொண்டு.

6. இப்படி யிருக்கச்சே அன்னிக்கு சோமவார நாள் இராத்திரி சுந்தரலிங்கத்தை பூசிக்குற நிமித்திமாய் தேவதைகள் அவ்விடத்திலே வந்து, அந்த கதம்பவன யீசுவரரான சுந்தரலிங்கத்தை சோடசோபசாரமாய் பூசை பண்ணினார்கள். அப்போதிருந்த தனம்செய்ய நென்குற வர்த்தகனுக்கு சுந்தரேச்வர ஸ்வாமி புதிஷ்டியைக் குடுத்தார்கள். அதனாலே அந்த தனம் செய்ய வர்த்தகனுக்கு சுந்தரேச்வர லிங்கத்தை தேவதைகள் பூசை பண்ணுகிறதும், கந்தர்வாள் கானம் பாடுவதும், இந்த சம்பிரதாயங்களெல்லாம் யிவனுடைய கண்ணினாலே பார்த்தான் ! அவனுக்கு சந்தோஷம் சொல்லி முடியாது ! அந்த க்ஷணமே தானும் சொற்ணபத்து தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி, பஸம ருத்திராக்ஷ தாரணம் செய்து, சிவாகம பிறகாரமாய் அனுஷ்டானம் பண்ணி, பஞ்சா க்ஷிரிசயம் பண்ணி, அதுக்கு மேல் சிவபூசை நாலுசாமமும் பூசை பண்ணினான் ! அதற்க்கு மேல் சிவனை ஸ்தோத்திரம் பண்ணினான். எப்படியென்றால் "சம்போ ! ருத்திரா ! தயாநிதி ! என்று கீர்த்தன் செய்தான் !

---

6. சோடசோபசாரம் = சோடச + உபசாரம்; சோடசம் பதினாறு.

இப்படி யிருக்கச்சே, சூரிய உதயமாகுற சமயம் ஆச்சுது ! தேவதைகள் அந்தர்த்தானமானார்கள். அப்போ, அந்தர்தானம் செய்ய வர்த்தகன் மனசிலே ஆச்சரியமடைந்தான். பிற்பாடு, அந்தர்த்தானம் அந்தர்த்தானம் செய்ய வர்த்தகன் கலியாணபுரம் என்கிற நகரத்துக்கு வந்து, அங்கே இருக்கப்பட்ட பந்து ஜனங்களுக்கு யிந்த சமாசாரத்தை சொன்னான் ! அந்த கலியாண புர நகராதிபதியான சந்திர கொலசேகரரான கொலசேகரபாண்டிய ராசா சமூகத்திற்கு வந்து, அனேக ரத்தினாபரணங்கள் காணிக்கை குடுத்து வினய பக்தி விசுவாசத்துடனே சாஷ்டாங்கமாக தண்டம் பண்ணி, யெழுந்திருந்து, கையைக் கட்டிக் கொண்டு நின்று வாய் புத்திக் கொண்டு நின்னு, தனம் செய்ய வர்த்தகன் கொலசேகர பாண்டிய மகாராசாவுக்கு விண்ணப்பம் செய்தார்.

7. யென்னவென்றால், மகாராசாவே ! நான் தங்களுடைய பட்டணத்திலிருக்கப்பட்ட வர்த்தகனான நான் வியாபார நிமித்தியமாய் மேற்கு தேசத்துக்கு போய், அங்கே சில நவரத்தினங்கள் கிரயவிக்கிரயம் செய்து, லாபம் சம்பாதிச்சுக் கொண்டு, மருபடியும் தங்களுடைய பட்டணத்திர்க் வரச்சே வழியிலே ஒரு

காட்டிலே கதம்பவன மென்கின்ற வனத்தண்டை வரச்சே, சூரிய அஸ்தமனமானது ! அப்போ அந்தக் காட்டிலே அனேகமான சிங்கங்கள், புலிகள், கரடிகள் அனேகமான மிருகங்களுடைய சப்தங்கள் கேட்டு, மெத்தவும் பயப்பட்டேன் ! அந்தப் பிறதேசம் நிர்மாநுஷ்யமாக யிருந்தது! அதனாலே யிந்த ராத்திரியிலே இந்த காட்டிலே அகப்பட்டுக் கொண்டோமே ! யினிமேல் எப்படி பிழைப்போமென்றும் வழி தவறிவிட்டோமென்றும், தாம் சம்பாதிச்ச திரவியம் சோறாள் வந்து நம்மை அடித்து, சகல திரவியத்தையும் கொண்டு போவார்களே ! யில்லை, யிங்கே யிருக்கப்பட்ட மிருகங்கள்தானே அடிச்சு போடுமோ? இல்லை யிங்கே யிருக்கப்பட்ட பாம்பு தாயின கடிச்சுபோடுமோ? நமக்கு ஆனால் மனிபோறத்துக்கு வழித் தெரியவில்லையே ! இப்படிப்பட்ட சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டேமே ! இருந்தாப்போல இருந்து இப்படி விபத்து சம்பவித்துவிச்சுதே ! நம்முடைய சர்வசுவ தனமும் போய் பிராணங்களும் போகத்ததாயும் நாலுபேரிலே நாம் பிழைக்க பிழைப்புக்குமான ஆனியாகும். நம்முடைய சகலதன

ஆனு, மான ஆனி பிராண ஆனி ஆகத்தக்கதாய் விபத்து வந்ததே, நாம் என்ன செய்வோம்? இந்த விபத்தை நிவாரணம் ஆகும்படியால் நம்மாலே செய்யத்தக்க காரியம் ஒன்னும் காணோமே ! ஆனால் இந்த சமயத்தில் சகல சனங்களையும் சகல பிராணிகளையும் ரட்சிக்கப்பட்ட ஈசுவரன், நம்மை ரட்சிக்கவேணுமே தவிர, வேறொருவராலேயும் ஆகாது ! அந்த யீச்வரமகா தயவு உள்ளவந் தன்னை ரட்சிக்க வேண்டுமென்று வேண்டுனவனை ரட்சிக்குறதற்கு சமர்த்தர் அவர் ஒருவரே தவிர, வேறே ஒருத்தறாலேயும் ஆகமாட்டாது ! ஆகையால் நான் அவரை சரணம் அடைகின்றேன் என்று யீசுவரனை பிராத்தனை செய்தேன் ! ஒய் சக்திருத்திரா ! மகாதேவா ! சிவாசம்போ மகேச்வரா ! அரிகர தயாநிதோ ! என்னை ரட்சியும் !" என்று சரணாகதி பண்ணிநேன்.

8. அப்போ, அந்த க்ஷணமே ஸ்ரீசுந்தரேச்வர லிங்கம் தர்சனமாச்சுது ! தரிசனமான உடனே யெனக்கு பிரக்கினை தப்பிப் போச்சுது ! இந்த பயங்களெல்லாம் இறந்து போச்சுது ! தேகத்தை மறந்தேன் ! மிகவும்

---

7. சோறாள் - சோராள் - சோரர்கள் - திருடர்கள்; சர்வசுவ - அனைத்து; ஆனி - (ஹானி) கேடு.

ஆனந்த சமுத்திரத்தில் என் சித்தம் முழுகிப் போய்விட்டது !

யிப்படி யிருக்கச்சே, சிவ கடாக்ஷத்தினாலே விழிச்சுப் பார்த்தது; ஸ்ரீ சுந்தரேச்வர ஸ்வாமி எனக்கு மகாதிவ்விய திஷ்டிக்குடுத்தார் ! அந்த திவ்வியதிஷ்டியினாலே யிருக்கச்சே, ஸ்ரீ சுந்தரேச்வர ஸ்வாமியை தேவதைகள் வந்து ஷோடச உபசாரப்பட்ட பூசை பண்ணுகிறதும், கந்தர்வாள் கானம் பாடுகிறதும், அப்ஸராதிகள் நாட்டியம் ஆடுகிறதும் நான் கண்டேன் ! இந்த பிரகாரமாய் விருத்தாந்தமெல்லாம் கொலசேகரபாண்டிய மகாராசாவுக்குச் சொல்லி பின்னையும் யென்ன விண்ணப்பம் செய்தாரென்றால், “ஓ பாண்டிய மகாராசாவே ! யிந்த கதம்பவனமென்கிற காட்டை அழிச்சு தங்களை முதல்க் கொண்டு பாண்டியகுல ராசாக்களுக்கு ராசதானியாய் யிதை மகாபட்டணமாய் உண்டாக்க வேணுமென்றார் !

இது ஆயிரத்தெட்டு சிவக்ஷேத்திரங்களில் உத்தம க்ஷேத்திர மானபடியினாலேயும், சிவக்ஷேத்திரங்களிலே ஆயிரத்தியெட்டுலே உத்தம க்ஷேத்திரங்கள்

அறுபத்தியெட்டு; அந்த அறுபத்தியெட்டிலும் உத்தம க்ஷேத்திரங்கள் பத்து; அந்த பத்து க்ஷேத்திரங்களிலும் உத்தம சிவக்ஷேத்திரங்கள் னாலே ! அது யெதுவென்றால், காசி க்ஷேத்திரம், காளாஸ்திரி க்ஷேத்திரம், சிரம்பர க்ஷேத்திரம், ஆலாக்ஷயபுருஷ க்ஷேத்திரம்; இந்த நான்கிலேயும் சிவன் முக்த பிராமண கதம்பவனக்ஷேத்திரம் உத்தமம் ! இந்த கதம்பவனத்துக்கே ஆலாட்க்ஷயபுற க்ஷேத்திரமென்று பெயர் ! யித்தை ஆதியில் பூலோகத்திலே சிவன் கன்னிகா புறமென்றும், யிதுக்கு பேர் உண்டாக்கி, பட்டணம் உண்டாக்கினார் ! அதுக்குமேல் பனிரெண்டு பிற பட்டணம் காயங்கள் ஆச்சுது !

அதுக்குமேல் யிந்திரன் இந்த பட்டணத்தை ஜீர்ணாத்தாரணம் பண்ணினார் ! யிப்போ சிருது காலத்துக் பிற்பாடு காடாய் போச்சுது ! ஆகையால், யிந்த காட்டை வெட்டித் தாங்கள் இருக்கிறதுக்கு ராசதானியாய் மதுராபுரி பட்டணம் நிர்மாணம் பண்ணவேண்டுமென்று கொலசேகர பாண்டிய மகா ராசாவினுடைய சமுகத்தில் தனஞ்செய வர்த்தகன் விண்ணப்பம் செய்தான் !

---

8. திவ்வியதிஷ்டி - திவ்விய திருஷ்டி - மேன்மையான பார்வை - ஞானப்பார்வை; காளாஸ்திரி (ஆந்திரா).

9. யிது சங்கதிகள் கேட்டு உடனே கொலசேகர பாண்டிய மகாராசாவுக்கு, தான் முன்னாள் கண்ட சொற்பனம் பலிதம் உண்டாச்சுது ! அந்த சொப்பன சமாசாரம் தன் சமீபத்திலே இருக்கப்பட்ட மந்திரிகளுக்கும் வயிஷ்சிய உத்தமரான தனஞ்செய செட்டிக்கும் சொன்னார்; என்னவென்றால் "ஓய் மகாராசாவே ! நான் யிருக்கப்பட்ட நகரம் சீர்ணமாய் காடாய் போச்சுது ! ஆகையால், அந்த காட்டை வெட்டி அழிச்சு பட்டணம் நிற்மாணம் செய்து சீர்ண உத்தாரணம் செய்யுமென்று சொன்னார்! ஆகையினால், அந்த சொற்பனத்திலே கண்ட சித்த புருஷரை சுந்தரேச்வரர் அவருடைய நகரமே கதம்பவனமான படியினாலே, நாம் அந்த கதம்பவனத்துக்குப் போவோ"மென்று மந்திரிகளுடனேயும், சதுரங்க பலத்தினுடனேயும் கூடிக் கொண்டு கதம்பவனத்துக்கு வந்து சுந்தரேச்வர மகாலிங்கத்துக்கு வினய பயபக்தி விசுவாசத்துடனே சாஷ்டாங்கம் தண்டம் பண்ணி, யெழுந்திருந்து நின்னு, அந்த சுந்தரேச்வர மகாலிங்கத்தை ஸ்தோத்திரம் பண்ணச்சே, முன்னாள் தன் சொப்பனத்திலே கண்ட சித்த புருஷரை பிரத்தியக்ஷமாய்க் கண்டான் !

---

9. சீர்ணமாய் - அழிந்து; சீர்ண உத்தாரணம் - புதுப்பித்தல்; அந்தர்கதானமானார் - மறைந்தார்.

அந்த சித்த புருஷர், அந்த குலசேகர பாண்டிய மகாராசாவைப் பார்த்து சொன்னது என்னவென்றால், "ஓயி மகாராசாவே ! நீர் மதுராபுரி பட்டணம் நிற்மாணம் பண்ணவேண்டுமென்று வந்தீரே ! அதர்க்கு கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு நான் காட்டுகிற யெல்லைப் பிரகாரம் நீர் பட்டண நிர்மாணம் பண்ணும் !" என்றும் சொல்லி, பட்டண நிர்மாணத்திற்கும் யெல்லையும் காட்டி, அந்தர்கதானமானார் !

10. பிற்பாடு, அந்த குலசேகர மகாராசாவானவர் தன்னுடைய தேசத்திலே ஆள்தள்ளி, கூலியாள்கள் தள்ளிக், காடு வெட்டிப் போட்டான் ! ஆயிரம் வருஷம் பிடிச்சுது, அந்தக் காடு வெட்டுவதற்கு ! அதுக்கு மேல் நல்ல முகூர்த்தம் பார்த்து, கோட்டை கட்டினார் ! கொத்தளங்களோடே கூடின கோட்டையும், கோட்டை வாசல்களும் னூல் போட்டு, தெரு வீதிகளும் வொழுங்காய் நிர்மாணம் பண்ணினார் ! சோபி தங்களாயிருக்கப்பட்ட சிவ விக்கிரகங்களுடனே கூடின கிரகங்களும் அனேக வஸ்துக்கள், யிருப்பதற்கு யோக்கியமான கடைகள் வீதிகளும் உண்டாக்கினார் ! தனக்கு யிருக்கிறத்துக்கு

யோக்கியமான பெரிய அரண்மனையும் கட்டி, அறண்மனைக்கு முன்னே பெரிய ... கட்டினார்; ஆனை சாலைகளும், குதிரை சாலைகளும் கட்டிவைத்தார் ! அந்த பட்டணத்திலே குலசேகர மகாராசா தன்னுடைய சக குடும்பத்தோடே கூடி வாசம் பண்ணினார்.

அந்தப் பட்டணத்திலே யிருக்குற பிராமணாள் நாலு வேதங்கள் ... கரிச்சாப்போலே இருந்தார்கள்; அந்த பட்டணத்திலே இருக்கப்பட்ட க்ஷத்திரியாள் மகா வீர சூராளாய் சஸ்திர சம்பன்னாளாய் ராமார்ச்சுன சமானாளாய் இருந்தார்கள்! அந்த பட்டணத்திலே யிருக்கப்பட்ட வைசியாள் குபேரனுக்கு சமானமான தனவந்தாளாய் இருந்தார்கள் !

அந்த பட்டணத்திலே யிருக்குற சூ...ள் சகல குண சம்பன்னாளாய் இருந்தார்கள், இப்படிப்பட்ட பட்டணத்திலே வாசம் பண்ணப்பட்ட குலசேகர மகாராசாவானவர் மனத்திலே யொரு விகல்பம் நினைச்சார்; அது யென்னவென்றால், இந்தப் பிரதேசம் சிங்கங்கள், காட்டுப் புலிகள் முதலான துஷ்ட மிருகங்கள் வாசம் பண்ணப்பட்ட

தேசமானபடியினாலே யிது அபரிசுத்தமான தேசமென்று மனசுலே நினைத்தார் !

11. அப்போது, அது ஆலாஸிபதிக்கு தெரிந்து, யிவருடைய மன ஆவிகள் வாசம் போய் சுவாசம் உண்டாகத் தக்கதாய் தன்னுடைய சிரசிலே யிருக்கப்பட்ட சந்திர கிரணங்களுடைய அமுத தாராவருஷம் வருஷிச்சார் ! அப்போ அந்த பட்டணம் நிர்மமாச்சுது ! யிது பார்த்த உடனே, அந்த பாண்டிய மகாராசாவுக்கு மகத்தான விசுவாசம் உண்டாய், ஆலாசியபதியைக் குறித்து பிராத்திச்சு அபராத க்ஷாபணம் பண்ணிக்கொண்டான். அது யெப்படியென்றால், "ஸ்வாமி ! ஹாலாசியபதியே ! சுந்தரேச்வர சிவமகாதேவா ! நான் மனுஷன் புத்தியினாலே தம்முடைய க்ஷேத்திர மாகாத்மியம் அறியாமல் நான் மனதிலே விகல்பம் கொண்டேன் ! யிந்த அபராதத்தை சகித்து என்னை ரக்ஷியுமய்யா ! வென்று பிறார்த்திச்சான் !

அப்போ, அந்த சுந்தரயீச்வரர் ஆகாசவாணி ரூபமாய் ஒரு வாக்கியம் சொன்னார் அது என்னவென்றால் ''ஒயி ராசாவே ! யிந்தப்

பட்டணத்துக்கு கிழக்கு திக்கில் அயனார் கோவில் கட்டுமென்றும், தக்ஷிண பாகத்தில் சப்தமாதர் கோவிலும் மேற்கு திக்கில் விஷ்ணுவினுடைய கோவிலும், உத்தர பாகத்தில் காளிகைனுடைய கோவிலும் இந்த நகர ரக்ஷணார்த்தமாய் சைவாகம பிறகாரமாய் விதியுடனே பிரதிஷ்டை பண்ணுமென்றும், இந்த சுந்தரேசுர மகாலிங்கத்துக்கு பூசை செய்யுறத்துக்கு கங்காதீர்த்தத்திலே சிவத்விஜாள் வாசம் பண்ணுகிறாள்.

அவர்க்குள்ளே யென்பது வீட்டு காரர்களை யிவ்விடத்திலே அழைப்பிவிச்சு, அக்கிரகாரம் கட்டிக் கொடுத்து, சருவமாணியம் குடுத்து, "இந்த சுந்தரேச்வர லிங்கத்தை பூசை பண்ணுகிறத்துக்கு திட்டம் பண்ணுமென்று ஆகாசவாணி சொல்லித்து !

அந்தப் பிரகாரமாய், குலசேகர பாண்டிய மகாராசவானவர் செய்தார். அந்த குலசேகர மகாராசாவானவர் ஆராயிரம் வருஷம் மகா நியாயமாய் ராச்சியபரிபாலனம் பண்ணிக் கொண்டு யிருந்தார் !

12. அந்த குலசேகர மகாராசவுக்கு நிர்மல ... மலயத்வஜ பாண்டியனென்குறவொரு புத்திரன் பிறந்தான் ! அந்த பிள்ளைக்கு சகல வித்தைகளும் அப்பியாசம் பண்ணிவைச்சு சாஸ்திராப்யாசம் பண்ணிவிச்சார் ! அவனுக்கு விவாகம் பண்ணிவைத்தார் !

அந்த மலயத்வஜ பாண்டியன் ராச்சியாதியத்தியம் பண்ணுகிறத்துக்கு யோக்கினான உடனே ஸ்ரீசுந்தரேச்வரருடைய அநுகிரையினாலே அவனுக்கு பட்டங்கட்டி ராச்சியாதி பத்தியத்தை அவனுக்கு குடுத்துவிட்டு, தான் பிரம்மஞான சிவஞான பரனாயிருந்து, அந்நியத்திலே சிவசாயுச்சியத்தை *குலசேகரமகாராசா* அடைந்தான் ! அந்த குலசேகர பாண்டிய மகாராசாவானவர் நிற்மானம் பண்ணப்பட்ட *மதுராபுரி பட்டணம்,* ஆதியில் அந்தப் பட்டணத்தில் பாண்டிய ராசாக்கள் அனேகமான ராசாக்கள் அந்த மதுராபுரி பட்டணத்தை ராசதாளி பண்ணிக்கொண்டு, ராச்சியம் *பாண்டிய மண்டலம்* ஆண்டார்கள்!

---

12. அந்தியத்திலே - வாழ்வின் கடைசியிலே; ராசதானி - தலைநகர்; சதுரோபாயங்கள் - சதுர + உபாயங்கள்; சதுர் - நான்கு.

குலசேகரமகாராசா புத்திரன் மலயத்துவஜ பாண்டியன், அந்த மலயத்துவஜ பாண்டிய பட்டமகிஷியான யினியை *காஞ்சனதேவி மாலிகை* என்றும் பேர், காஞ்சன மாலிகைக்கும் உண்டான புத்ரிகை *கடாத்காதேவி* என்று பேர், அவள் சாட்சாத் மீனாட்சி அம்மனுடைய அவதாரம் ! அந்த மலயத்துவஜ பாண்டியனுக்கு புத்திரசந்ததியில்லை; இந்த புத்திரிகையான *தடாதகாதேவியை* சுந்தரேச்வரரே *சுந்தர பாண்டிய ராசா*வென்று ரூபம் எடுத்து, அவதரித்து தடாதகாதேவியை விவாகம் பண்ணிக்கொண்டார் !

அந்த சுந்தர பாண்டியருக்கும் தடாதகாதேவிக்கும், *உக்கிரபாண்டிய மகாராசா*வென்று ஒரு குமாரன் பிறந்தான் ! அந்த உக்கிரபாண்டிய மகாராசாவுக்கு ஸ்திரீயான பட்டமகிஷியான பத்தினிக்கு *காந்திமதி* யென்று பேர்; இந்த காந்திமதிக்குப் பிறந்த புத்திரனுக்கு *வீரபாண்டியன்* என்றும் பேர், அந்த வீரபாண்டியனுக்கு *அபிஷேக பாண்டிய*னென்றும்

யஜன - யாகம்; தான - தானம் கொடுத்தல்; பிரதிக்ரஹாதி - தானம் வாங்குதல்; ஷட்-ஆறு.

ஒரு புத்திரன் பிறந்தான். அந்த அபிஷேக பாண்டியனுக்கும் *விக்கிரம பாண்டியன்* என்று ஒரு புத்திரன் பிறந்தான். அந்த விக்கிரம பாண்டியன் ராசாவானவர், மதுராபுரிப்பட்டணத்தில் ராச்சியபரிபாலனம் செய்தது கலியுகத்தில் அந்த விக்கிரம பாண்டிய மகாராசாவானவர் பூமிபாலனம் *சாம, தான, பேத, தண்ட* சதுரோபாயங்கள் நாலேயும், சந்தி விக்கிரசாதி விச நீதிகளாலேயும் அதிபராக்கிரம சாலியாய் தன்னுடைய சத்ருக்களுடைய கர்வங்களை அடைக்கி, இந்திரனுக்கு சமானமான போகபாக்கியங்களை உடைத்தானவனாய் ராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டு வரச்சே, அவர் ராச்சியத்திலே பிராமணாள் யஜன யாசனா அர்த்தேன அத்யாபக தான பிரதிக்ரஹாதி ஷட்கர்ம நிரதாளாய், யிருந்தார்கள்.

13. பின்னையும் தபசுகளும் சுஸ்திர பிரஸம்ஸைகளும் சைவபுராண கதாஸ்ரவணங்களும் யீசுபர விருத்திக்ஷாயாளா யிருந்தார்கள். பின்னையும், அது யெப்படி யென்றால் பிரஜைகள் விபூதி திரிபுண்டிர தாரியாய் துற்விசயவித்தாளாய் சிவபூச தும்மதிகளாயிருந்தார்கள்.

யிப்படியே ராசாவும் சனங்களும் தற்மவாளாய் யிருந்தாபடியினாலே மாசத்துக்கு மூணு மழை பேயும்; பயிர் பச்சைகள் விருத்தியாயிருக்கும், சனங்கள் மகா சந்தோஷபரிதாளாய் சுகமா யிருந்தார்கள்.

யிந்த பாண்டிய தேசம் சுபிஷ்டமாக யிருக்குற சமாசாரத்தை கேட்டு *சோழ மகாராசா*வானவர் சகிக்காமல், மனதிலே ஒரு துர்புத்தி யோசனை செய்தார். அது யென்னவென்றால், சைநாளை அழைப்பிக்க வேணுமென்று யோசனை செய்து, சக்கிய பருவதம், விந்திய பருவதம், கருவச்சபருவதம், திரிகூடசலம் ஆதியாயி யிந்த மலைகளுடையே சமீபங்களிலே யிருக்கப்பட்ட வேதபாகியாளான மயில் தோம்பையை பிடிச்சுக் கொண்டு யிருக்குற *சயிநர்*களையும் *பவுத்தர்*களையும் அழைப்புவிக்குற நிமித்தியமாய் அவர்களுக்கு விண்ணப்பப் பத்திரம் எழுதி அனுப்பி விச்சு பவுத்தாளையும், சயினாளையும் அழைப்பிவிச்சார். அவாள் யெண்ணாயிரத்துயெட்டு பேர் காஞ்சிபுரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இந்த சமாசாரம் கேட்ட உடனே சோழ மகாராசா எதிர்கொண்டு போய் அவாளைக் கண்டு சேவித்து, அவாளுக்கு சகல தனகனக வஸ்து வாகனாதிகளும்

குடுத்து, சகல வெகுமானங்களும் செய்து அவாள் மனசை சந்தோஷிக்கப் பண்ணிவிச்சு, யென்னவென்றால் "*யென்னுடைய பகையாளியான பாண்டியராசாவை மந்திரத்தாலே சூனியம் பண்ணி கொண்ணு போட்டீர்களானால், உங்களுக்கு பாதி ராச்சியம் கொடுக்கிறேன்*" என்று சொல்லி உடம்படிக்கை பேசினார்.

14. அதுக்கு அவர் சம்மதிக்க, *பாலாறுக்கரையிலே* காஞ்சிபுரம் சமீபத்திலே இருக்கிறது; வளிக்கு விசாலமான ஒரு சாலை கட்டி, அந்த சாலையில் தெற்கு வடக்கு ஒரு காதம், கிழக்கு மேற்கு ஒரு காதம் இப்படிக்கு சௌக்கியமாய் ஒரு குழி வெட்டி, அத்தை ஓமகுண்டமாய் வச்சுக்கொண்டு, அதில் தீநெருப்பு வளர்த்தி, அதில் வேப்ப எண்ணை, உப்பு, எள்ளு, ரெத்தம், யிதுநாலே ஓமம் பண்ணி அக்னி குண்டத்தில் இந்தப்பிறகாரம் *பவுத்தாள் சயினாள்* யெண்ணாயிரத்தி யெட்டு பேரும் *மாரண ஓமம்* செய்தார்கள்.

---

13. தோம்பை - தோகை.

இது நாலே அந்த மதத்திற் தேவதைகளானது மதவான ரூபமாய் இவாள் யெதர்க்கே வந்து நிண்ணது. அந்த மதமான யானையைப் பார்த்து *சைந மந்திரவாதிகள்* சொன்னது யென்னாவென்றால், "ஓ மத யானையே ! விக்கிரம பாண்டிய மகாராசனைக் கொண்ணுப் போட்டு வா" என்று மனத்திற் சொரூபமா யிருக்கப்பட்ட அந்த மதயானையானது, அதிசீக்கிறமாய் மதுராபுர மார்க்கத்தைப் பிடிச்சு புறப்பட்டது.

15. மதயானையின் பிறகே சோழபுராசாவினுடைய குதிரைகளும் கால்பலங்களும் சஸ்திர அஸ்திர சம்பன்னர்களான வீர சூராளானவர்களும், *எண்ணாயிரத் தெட்டுப் பேர்* சயினர்களும் நம்முடைய மனோரதங்கள் நேரவேணுமென்று அந்த ஆனையின் கூடவே நடந்தார்கள். யிந்த சமாசாரமெல்லாம் தூதாள் முகாந்திரமாய் *பாண்டிய மண்டலத்துக்கு* அதிபதிகளான விக்கிரம பாண்டிய மகாராசாவுக்கு தெரிஞ்சது. தெரிஞ்ச உடனே மதத்திலே மகா தைரியசாலியா யிருந்தாலும், மந்திரவாதத்தினாலே ஓமகுண்டத்திலே நின்றும், மனத்திற் தேவதையானது யானை ரூபமாய்

பிறத்தியக்ஷமாய் சகல சனங்களும் பார்க்க தன்னைக் கொல்லுகிற நிமித்தியமாய் பயமில்லாமல் வருகிறத்தைக் கேட்டவுடனே உலகத்திலே யில்லாத நடத்தையா யிருக்கிறதென்று மனதிலே மிகவும் பயத்துடனே இனிமேல் யிதுக்கு என்னசெய்ய வேணுமென்று மனசிலே யோசனை செய்தார்.

யிதுக்கு நம்மாலே ஆன சாமதான பேத தண்ட யிந்த சதுர்வித உபாயத்தினாலேயும் நம்மாலேயேதாயினும் செய்து, யிந்த யானையை கொன்னு போடுகிறதுக்கு மனசு யத்தினம் நம்மாலே எதுவும் ஆகாது என்று மனசிலே எண்ணிக்கொண்டு, யீச்வர யத்தினத்தினாலே அவருடைய கிருபையினாலேதான் நீங்கவேணும், யில்லாவிட்டால், நீங்காது என்று திடநிச்சயம் செய்து, ஆலாசியபதியான சுந்தரேச்வரனை நிதானத்துக்கு வந்து சாஷ்டாங்கமாய் தண்டம் செய்து எழுந்திருந்து நின்று, வினய பயபக்தியுடனே அஞ்சலிவந்தனம் பண்ணிக்கொண்டு, ஸ்ரீசுந்தரேச்சர ஸ்வாமியை ஸ்தோத்திரம் செய்தார், "ஓ சுவாமி ! யிந்த சோழவராசாவினாலே உண்டான ஆபத்து எங்கள் கடலில் மூழ்கியிருக்கிற என்னை கடத்தேறப் பண்ணிவைக்கிறத்துக்கு நீர் ஒருவர்

சமர்த்தரே தவிர, வேறே ஒருவர் கதிகாணேன் ! நான் உம்முடைய சரணகமலத்தை நம்பினவன் ! என்னுடைய பூர்வீகாள் பாண்டியராசாக்களை நாநாவிதமான விபத்திலே நின்றும் காப்பாத்தின மகா தாதா நீயே ! ஓய் சகலலோக ரட்சகரானவர் நீர் ! ஆகையில், யிந்த ஜயினாளுடைய பயத்திலேநின்றும் ரக்ஷித்து, யிந்த பயத்தை நிவாரணம் பண்ணவேணுமென்று, ஸ்ரீசுந்தரெச்வர சுவாமி, "செய் ராசாவே! பயப்படாதே !" என்று ஆகாசவாணி வாக்கிய ரூபமாய் அபயம் கொடுத்தார் !

16. பின்னையும், ஆகாசவாணி சொரூபமாய் சுந்தரேச்வரர் சொன்னது யென்னவென்றால், "ஓய் விக்கிரம பாண்டிய ராசாவே ! யென்னுடைய சிவாலயத்துக்கு பூர்வ பாகத்தில், பதினாரு கம்பத்தில் கூடின ஒரு மண்டபம் சீக்கிரத்தில் கட்டிவையும் ! அந்த மண்டபத்துக்கு அட்டால் மண்டபம் யென்று பேரை வையும் ! நான் அந்த மண்டபத்தில் திருபுரனை தகனம் பண்ணின ரூபமாய் நாமம் தரிச்சு, ஒரு பாணத்தினாலே அந்த சயின கசத்தைக் கொன்னுபோடுகிறேன் ! (என்று) ஆகாசவாணி சொல்லித்து !

---

16. கசத்தை - கஜத்தை - யானையை.

அத்தை விக்கிரமபாண்டிய மகாராசாவானவர் கேட்ட உடனே சந்தோஷத்துடனே கூடிக்கொண்டு, அந்த க்ஷணமே மண்டப நிர்மானம் செய்தார் ! அந்த மண்டப மத்தியே, வேதிகையில், சுந்தரேச்வர் சிரசிலே மயில் பிச்சம், வேஷ்டிகளும், கையில் பாம்பை கங்கணமாய் தரிச்சுக் கொண்டும், கையிலே வில்லும் தரிச்சுக்கொண்டும், பினனொரு கையில் பாணம் தரிச்சுக்கொண்டு, பிலித்தோலை வஸ்திரமாய் தரிச்சுகொண்டு, யிடையில் ஒரு சூரி கத்தி தரிச்சுகொண்டு, கஸ்தூரி வற்ணரூபமான சரீரத்தை உடைத்தானவராய், சவ்வாது உடம்பு நிறைய பூசிக்கொண்டு, கிறாதரூபமான வேடனுடைய ரூபமாய் அவதரிச்சார்; சண்டை போடுகிறதற்கு தத்தாயத்தமாய் நின்றார் !

17. அப்போது, அந்த ஜயினாள்னாலே சிருஷ்டிக்கப்பட்ட மதயானையை பத்துநாழி வழிக்கு முன் காணப்பட்டது. அந்த வேடரூபமா இருக்கப்பட்ட கிராதசிங்கம் நற்சிம்மாசரத்தை பாணத்திலே அனுசுதானம் பண்ணி, காதுவரைக்கும் யிழுத்து, அந்த யானையினுடைய கும்பஸ்தலத்தை குறியாய் வைத்து, பாணத்தை எய்தார் !.

அப்போது, அந்த பாணமானது போய், அந்த யானையினுடைய கும்பஸ்தலத்தை பேதிச்சு, அந்த யானையினுடைய வாலாக்கிரம் வரைக்கும் பேதிச்சு, அப்புறம் போச்சுது ! அப்புறம் அந்த யானையானது, செத்துப்போச்சுது! மலைபோலே இருக்கிற யானை சரீரம் பின்னமாய் விழுந்தது ! பிற்பாடு, அந்த சோழாராசாவினுடைய சேனையும், யெண்ணாயிரத்தெட்டு சயினர்களும் பயந்து ஓடிப்போனார்கள்! அவாளை பின்தொடர்ந்து தொரத்தினார்கள் !

18. பிற்பாடு, விக்கிரமபாண்டிய மகாராசாவானவர், அஷ்டாதச வாத்தியங்களுடனே கூடிக்கொண்டு அட்டால் மண்டபத்துக்கு வந்தார் ! தன்னுடைய சத்துருவான சயினர்கள் நாலே மனத்திவாதத்தினாலே நிற்மிக்கப்பட்ட யானையை க்ஷணத்திலே ஒரு பாணத்தினாலே சிவன் லீலையாய் கொண்ணு போட்டத்தையும் இந்த சுந்தரேஸ்வரருடைய பாராக்கிரமத்தைப் பார்த்து, பயபக்தி சமேதனாய் பூமியில் விழுந்து, சாஷ்டாங்கமாய் தெண்டபிரணாமம் செய்து எழுந்திருந்து நிண்ணுக்கொண்டு, கைய் கட்டிக்கொண்டு, வினய விஸ்வாசத்துடனே கூடக்

கொண்டு சுவாமியை ஸ்தோத்திரம் செய்தான் ! அது என்னவென்றால், "அட்டால சுந்திர உமக்கு வந்தனம்! *திரிவுர சம்ஹார* உமக்கு நம்ஸ்காரம் ! மேரு பருவத்தை தொம்சமாய் பண்ணினவரே, உமக்கு ஆலத்தி எடுக்கிறேன் ! விஷ்ணுவையே பாணம் செய்தாவரே கும்பிடுகிறேன் ! கனகசபாபதியே உம்மை சேவிக்கிறேன் ! அட்டால சுந்தரே உமக்கு தெண்டம் செய்குறேன் ! என்னுடைய குத்தங்கள் எல்லாம் பொறுத்துக் கொண்டு என்னை ரக்ஷியும் !" என்று சோஸ்திரம் செய்தான்.

இந்த பிரகாரம், சோஸ்திரம் செய்த உடனே, அந்த கிறாதவேஷ ரூபியான அட்டால சுந்திரனாதர் பிரசன்னானான். "விக்கிரம பாண்டிய ராசாவே ! உனக்கு என்ன வரம் வேணுமோ அந்த வரத்தை கேளும் !" என்று சொன்னார். அப்போ ராசா சொன்னது ! "ஒய் சுவாமி ! இந்த மண்டபத்தில் சுவாமியாய் சான்னித்தியமாய் இதில் இருக்க வேணுமென்று பிறார்திச்சார் ! அந்த பிரகாரமாகவே

18. *அன்னையே பிடிச்சு - அன்றிலிருந்து*

சுந்தரரேஸ்வரர் வரம் குடுத்தார். அன்னையே பிடிச்சு, இன்னைய வரையில், ஆனைமலை என்று ஏடு மலை மதுரையிலிருந்து, அதில் நரசிம்ம ரூபமாய் சிவன் இருக்கிறார், பிர்ப்பாடு, அந்த விக்கிரம பாண்டிய மகாராஜாவுக்கு ராஜசேகர பாண்டிய மஹாராஜா என்று ஒரு குமாரன் பிறந்தான்! அவனுடனே கூடிக்கொண்டு, ஞாயமார்க்கமாய் ராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டு, சுகமே இருந்தான் !

19. கலியுகம் பிறந்து ஆயிரம் வருஷத்துக்குள் நடந்த கதை :-

இது விக்கிரம பாண்டிய மஹாராஜா வினுடைய கதை !

இது விக்கிரமபாண்டிய மஹாராஜாவினுடைய குமாரன் ராசசேகர பாண்டிய மகாராஜாவினுடைய கதை எழுதுகிறோம். இராண்டாவது யிந்த கதை கலியுகத்திலே ஆயிர வருஷத்துக்குமேல் நடந்த கதை ராஜசேகர பாண்டியனது :-

ராசசேகரபாண்டிய மகாராஜாவானவர் மதுராபுரி பட்டணத்தில் ராஜதானி பண்ணிக்கொண்டிருந்த ராச்சிய பரிபாலனம் ஞாயமாற்கமாய் பண்ணிக் கொண்டும் ஸ்ரீசந்திரேஸ்புர சுவாமியை சேவிச்சுக் கொண்டு, அவருடைய பிரசாதத்தினாலே இந்த ராசசேகர பாண்டிய மகாராசாவுக்கு அறுவத்தினாலு கலையில் ஒரு கலை இந்த நிருத்த நாட்டிய வித்தையை தவிர, கொரை அரவத்திமூணு கலைக்கியானமும் உண்டாச்சுது. பரதவித்தை, நாட்டியவித்தை ஒண்ணு மாத்திரம் ஆகமாட்டாது ! ஏனென்றால், தான் ராசவானவரான படியினாலே தனக்கு இந்த பறதசாஸ்திரோக்தமான இந்த நாட்டிய வித்தை அப்பியாசம் பண்ணுகிறது யோக்கியம் அல்லவென்று அப்பியாசம் பண்ணாமல் விட்டுவிட்டான் இந்த சமாசாரம் கரிகால்சோழ மகாராசாவானவர் கேட்டு, தான் அரவத்தினாலு கலைக்கியானம் சம்பாதிச்சுக்க வேணும் என்றும், இதில் றாஜசேகர பாண்டிய மஹாராஜாவை காட்டிலும் சமர்த்தனாய் அந்த பாண்டியராஜா மோட்ணம்

பண்ணவேணுமென்றும், சோளமண்டல தேசத்துக்கு அதிபதியான கரிக்கால் சோழமஹாராஜாவானவர் புத்தியிலே நிச்சயம் பண்ணிக்கொண்டு இந்த அருவத்திநாலு கலைகியானவித்தை உபதேசம் பண்ணத்தக்க சற்குருவான ஆசாரியர் எங்கே அகப்படுவார் என்று விசாரிச்சவிடத்தில் இந்த தேசத்தில் கிடையாமல் போனார்கள்.

20. அப்புறம் கரிகால்சோள மகாராஜாவானவர் மனசிலே விசனமடைந்து இதுக்கு என்ன செய்வோம் என்று யோசனை இந்த வித்தை சிவபிரசாதத்தாலே வரவேணுமே தவிர, வேறான ஒரு உபாயமில்லை என்று எண்ணிக்கொண்டு, நிசாரணணிய க்ஷேத்திரத்திலே யிருக்கிற ஜெம்புநாத சுவாமியினிடத்தில் பத்தி பண்ணினால், இந்த அரவத்தினாலு கலைகியான வித்தை ஸ்ரீஅகிலாண்ட பதியான ஜெம்புகேசுவர சுவாமி பிரசாதத் தினாலே வரும் என்றும் ஜெம்புகேஸ்புரருக்கு வந்து, அங்கே ஆபொலிங்கமான சுவாதிஷ்டானாசக்கிரஸ்தானத்திலே கரிகால் சோழ மஹாராஜாவானவர் ஜெம்புனாத

சுவாமி சரணாவந்தத்திலே பக்திபண்ணினார். பிற்பாடு, ஸ்ரீ ஜெம்னனாத சுவாமி கரிகால் சோழ மஹா ராஜாவுக்கு அரவத்தினாலு கலைக்கியான வித்தை உபதேசம் பண்ணினார். அந்த கரிக்கால் சோழ மஹாராஜா ஆனவர் அரவத்தினாலு கலைக்கியான வித்தையிலே சமர்த்தரானார்.

அந்த ராஜசேகர பாண்டிய மஹாராஜாவுக்கு அறுவத்திமூணு கலைஞான வித்தை வரும், பரத சாஸ்திர புரோகிதமான நாட்டியவித்தை என்றும் வரமாட்டாது ! அந்த பாண்டிய மஹாராஜாவை மோடனம் பண்ணும் பொருட்டு கரிகால் சோழ மஹாராஜா ஆனவர் சோழ தேசத்திலே இருக்கப்பட்ட ஒரு கவீசரனே பறதசாஸ்திரமான நாட்டிய வித்தையில் சமர்த்தனாய் இருக்கப்பட்ட கவீஸ்வரனை அளைப்பிச்சு, அவனுக்கு தன, கனக வஸ்து வாகனாதி சகல வெகுமானங்களும் பண்ணி, நீர்போய் *மதுரை* சமஸ்தானத்துக்கு அதிபதியான ராசசேகரபாண்டிய மகாராசாவை, "இந்த வித்தையில் மோடனம் பண்ணி

---

20. மோடனம் - தோற்கடித்தல்; கவித்தம் - கவித்துவம்

வந்தீரானால் உமக்கு அநேக பூமிகள், கிராமங்கள் சர்வமான்னியம் விட்டு, அநேக பெருமானங்கள் பண்ணுகிறேன்" என்று சொல்லி, அந்த கவீஸ்வரனை மதுராபுரி பட்டணத்துக்கு கரிகால் சோழ மஹாராஜா அனுப்பிச்சார் ! அந்த கவீஸ்வரன் கரிகால் சோழ மஹாராஜாவினுடைய உத்தரவு வாங்கிக்கொண்டு, மதுராபுரி பட்டணத்துக்கு வந்து, ராஜசேகர பாண்டிய மஹாராஜவினுடைய சன்னிதிக்குப் போய் அவருடைய பேட்டி வாங்கிக்கொண்டு, அவர் பேரில் அநேக பிரபந்தம் கவிகள் பாடி, அதில் அருவத்திமூணு வித்தையில் நீர் சமர்த்தரென்றும், கரிகால் சோழ மஹாராஜா உம்மை காட்டிலும், அரவத்தினாலு வித்தையில் அவர் கெட்டிக்காரர் என்றும் ஒரு வித்தை அவர் அதிகர் என்றும், இந்த பிரகாரம் பிரபந்த கவித்தம் றாசசேகரபாண்டிய மஹாராசா பேரில் சோழ தேசத்திலிருக்கிற கவிஞ்ஞன் சொன்னவுடனே, அவன் பேரில் மெத்த சந்தோஷப்பட்டு, தன கனக வஸ்து வாகனாதி சகல வெகு மானங்களும் பண்ணி, அந்த கவிஞனை சோழ தேசத்துக்கு அனுப்பிவிட்டார்.

21. அப்புறம், ராஜசேகர மஹாராஜாவுக்கு மனசிலே வெட்கம் உண்டாய் விசனம் அதனாலே ஆச்சுது. நாம் பாண்டிய மண்டலாதீஸ்வரனா இருந்தும், சோழமண்டலாதிபதியான கரிகால் சோழ மஹா ராஜாவை காட்டிலும் வித்தையிலே கொரைச்சல் என்று பேர் வந்துதே, ஆகையினால் நாம் ஸ்ரீசந்தி ரேஸ்பிரசுவாமி பிரசாரத்தினாலே பூர்ணமாய் வித்தை சம்பாதிக்கவேணும் என்று யோசனை செய்து, தன்னுடைய பாண்டிய மண்டல தேசத்திலே இருக்கப் பட்ட பரத சாஸ்திரவான் யோக்கியாளான வித்துவாம் சர்களை அழைப்பித்து, சகல வெகுமதியும் செய்து, அவாளைக் கொண்டு நாட்டிய வித்தையை உபதேசம் செய்துக்கொண்டு, நாட்டிய அப்பியாசத்துக்கு ஆரம்பித்தார், இடது காலை மடக்கி, வலது காலிலே நின்று நடனம் செய்தார் ! தன் மனசுக்கு சந்தோஷமாகும்படிக்கு நிமிஷத்தில் ஒரு காலை மடக்கி, நிமிஷத்தில் ஒரு காலுநாலே நடனம் செய்தார். அந்த ராசசேகரபாண்டிய மஹாராசாவுக்கு சரீரம் ஒத்த ஆயாச மானது.

22. அப்போது, மனசிலே எண்ணமொன்று எண்ணினார், என்றால், இந்த நடன வித்தையானது மெத்த பிரயாசமான வித்தை; சரீரத்துக்கு மிகவும் சிரமத்தை குடுக்கப்பட்ட வித்தை யாச்சுதே ! யித்தை ஸ்ரீசுந்தரேசுவர சுவாமி நம்முடைய மதுறாபுரி பட்டணத்தில் கோவிலில் சபாமண்டபத்தில் வெகுகாலமாய் ஒரு காலை மேலே தூக்கிக்கொண்டு, ஒரு காலாலே நடனம் பண்ணுகிறாரே நம்முடைய நிமித்தியம் ! இத்தனை பிரயாசை உண்டானதே ! அவருக்கு நம்மாலே இந்த பாவம், நாம் எப்படி பரிகாரம் பண்ணிக்கொள்வோம் என்று மனதிலே மிகவும் விசாரத்துடனே கூடிக்கொண்டு, அந்த ராசசேகர பாண்டிய மஹாராஜாவானவர் மாகமாசத்திலே சிவறாத்திரி யண்ணிக்கி ரசித சபாநாயகரிடத்திலே போய் அவர் சன்னதியிலே இருந்துக் கொண்டு சிவறாத்திரி பண்ணி உபவாசம் பண்ணி றாத்திரி நாலுஜாமமும் சிவபூசை பண்ணி ஜெபம் பண்ணிக்கொண்டு இருந்து, மறாநாள் பாரணை பண்ணாமல், அந்த ரசிதசபாபதியினுடைய பாதார

விந்தத்தை பார்த்து "ஒரு பாதத்தினாலே அநேக காலம் நடனம் பண்ணுறாரே இவருக்கு எத்தனை பிரயாசம் சிரமம் வருத்தமாயிருக்குமே ! அநேக நாள் இந்த சங்கடத்தை நிவாரணம் பண்ணவேணுமென்று" மனசிலே விசாரத்துடனே யோசனை பண்ணிக்கொண்டு, சுவாமியை பார்த்து, *ராசசேகர பாண்டிய மஹாராஜாவானவர்* ஸ்தோத்திரம் செய்தார்.

23. அது எப்படி என்றால், "ஓய் ரசித சபாபதியே! சிவா, ஹரஹர மஹாதேவ ! கவுரிரமண, பக்தவச்சலா! சரணாகித ரக்ஷகா, ஜகத்காரணா, சச்சுதானந்த சொரூபா ! ஓய் ரசித சபாபதி சுவாமி ! நீர் வெகு காலமாய் இடது பாதத்தை பூமியில் வச்சுக் கொண்டு, வலது பாதத்தை மேலே எடுத்துக் கொண்டு நடனம் செய்யும் அய்யா, சுவாமி ! இப்படி நடனம் நீர் செய்யாமல், மின் போலே, வலது காலை பூமியில் வச்சு, இடது காலை மேலே எடுத்துக்கொண்டு நடனம் செய்தீரானால், நான் என்னுடைய சிரசை கண்டிச்சு உமக்குக் கொடுப்பேன் !" என்று சொல்லி, ராஜசேகர

23. மின்போலே - முன்போலே; கண்டிச்சு - வெட்டி.

மஹாராஜாவானவர் கத்தி கையிலே எடுத்துக் கொண்டு, தன்னுடைய கழுத்திலே வச்சு, கழுத்தறுத்துக் கொள்கிற சமயத்திலே, அந்த சுந்தரேஸ்வரசுவாமி அவனுடைய மனோரத பூரணார்த்தமாய் அந்த பிரகாரமாய் தாண்டவ நடனம் செய்தார் !

அந்தச் சமயத்திலே, நந்திகேஸ்வரர் மத்தளம் அடிச்சார் ! விஷ்ணுவானவர் பாட்டுப் பாடினார் ! பிரம்மா ஆனவர் தாளம் அடிச்சார் ! தேவதைகள் துந்துமி வாத்தியங்கள் செய்தார்கள் ! முனிகள் ஸ்தோத்திரம் செய்தார்கள்; ரசித சபாபதி தன்னுடைய கால் செலம்பு 'கலகல' என்று ஓசைப்பட சித்திர விசித்திரமாய் ஜகத்தை எல்லாம் மோஹிக்கும்படியாய் நடனம் செய்தார் ! இத்தைப் பார்த்து ராஜசேகர பாண்டிய மகாராஜா வானவர் கழுத்திலே இருக்கிற கத்தியை எடுத்துப் போட்டு சந்தோஷத்துடனே மனசிலே ஆனந்த பரிதனாய் ரசித சபாபதியை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பிச்சான். எப்படி என்றால், "ஓய் வேத பூஷணரே ! இந்த சம்சார சாகரத்திலே

நின்றும் கடைத்தேறுகிறதற்கு உம்முடைய பாதார விந்தத்தைச் சேவிக்கிறேன் ! பாண்டிய வம்ச பூசித நாட்டியம் வரதான சரணா உம்முடைய தாண்டவ நாட்டியத்தை விடுக்கிறேன் ! கதம்பனே சுரனே என்று அநேக விதங்களாய் ஸ்தோத்திரம் செய்து, சுவாமி லோகயிதார்த்தமாய் இப்படியே நடனம் செய்துகொண்டு, இந்த ரசிதசபா மண்டபத்தில் இருக்கவேண்டுமென்று பிராத்தனை செய்தார் !

24. நடேசுவரர், "அப்படியே ஆகட்டும்" என்று வரம் கொடுத்தார். அது முதல் மதுரையில் வேத்தியஷ்ச தாண்டவ லீலாவிதாயரென்று பிரசித்தி யடைஞ்சார். இந்தப் பிரகாரமாய், ராசசேகர பாண்டிய மகாராஜா சிவராத்திரி விரதம் செய்து, தன் அரண்மனைக்கு வந்து சிவபக்தாளிலே பூச்சியனாய் ராச்சிய பரிபாலனம் பண்ணிக் கொண்டிருந்தான். அவருக்குக் குலோத்துங்க பாண்டிய மகாராஜாவென்று ஒரு குமாரன் பிறந்து, சுகமேயிருந்தான். இது ராச சேகர பாண்டிய மகாராஜாவின் கதை !

முடிஞ்சது

குலோத்துங்க பாண்டிய மஹாராஜா கதை

25. பிற்பாடு, குலோத்துங்க பாண்டிய மஹாராஜாவானவர், பாகுபலத்தினாலே பாண்டிய மண்டலத்தை நியாயமாய் ராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டு இருக்கச்சே, நவபுரத்தில் ஒரு பிராமணன் தன்னுடைய பெண்ஜாதியையும் சின்னக் குழந்தையையும் கூட்டிக் கொண்டு, தன்னுடைய மாமனார் வீடு கனகாபுர மானபடியினாலே, அவ்விடத்திற்குப் போகுற நிமித்தியம் பயணம் புறப்பட்டு வழி நடந்து, அந்தக் கன்னிகாபுரத்தின் சமீபத்திலே இந்திரவனத்தில் ஒரு ஆலவிருக்ஷம் இருந்துது. அந்த நிழலிலே இந்தப் பிராமணனும் அவனுடைய பாரியையும், அவனுடைய சின்னக் குழந்தையும் வழிநடந்த சிரமத்தினாலே அந்தச் சிரமம் பரிகார நிமித்தியமாய் அவ்விருக்ஷத்துச் சாயலிலே நின்றார்கள் ! அப்புறம், அந்தப் பிராம்மணஸ்ரீயானவள் தன்னுடைய புருஷனைப் பார்த்து, "எனக்குத் தண்ணி தாகம் இருக்கிறது; ஆகையினால் நீர் செலமிருக்கும்

---

25. சாயல் - நிழல்; பாரியை - மனைவி; செலம் - நீர்.

இடம்போய எனக்குச் செலம் கொண்டுவந்து குடும்" என்று சொன்னாள். அதுகேட்ட அந்தப் பிராமணன், ஜெலம் கொண்டு வரதுக்குப் போய்விட்டான். அதன் பிறகு, அந்தப் பிராமணன் ஸ்ரீயானவள், அந்த ஆலவிருக்ஷத்து நிழலின் கீழே மல்லாக்கப்படுத்துக் கொண்டாள்.

26. இப்படி இருக்கச்சே, சிறிது நாளைக்கு முன்னே ஒரு கிராதனான வேடன், அந்த ஆலவிருக்ஷத்தின் கீழிருந்த பக்ஷியைப் பார்த்து, ஒரு பாணம் போட்டான் ! அந்தப் பாணம், அந்தப் பக்ஷிக்கு லெக்ஷியமாய்ப் படாமல் அந்தக் கொம்பிலே பட்டு, அந்தப் பாணமானது கொம்பிலேதானே தொத்திக் கொண்டிருந்தது. அந்தப் பக்ஷியானது பறந்து போய்விட்டது ! இந்தப் பிராமண ஸ்ரீயானவள் ஆலவிருக்ஷத்தின் கீழே படுத்திருக்கச்சே, காத்தினாலே அசஞ்சு அந்தப் பாணமானது, இந்தப் பிராமணஸ்ரீ மாரிலே விழுந்து, முதுகு பரியந்தம் உருவிப்போகியது. அதனால் அந்தப் பிராமணஸ்ரீ செத்துப் போய்விட்டாள் !

---

26. பிராது பண்ணுதல் - வழக்குரைத்தல்.

அதன் பிறகு, அந்தப் பிராமணன் வந்து, செலம்கொண்டு வந்து பார்த்தான்; அதன் பிறகு, இவள் செத்துக் கிடக்கிறாள், அதைப் பார்த்து வெகுவிதமாய் விசனப்பட்டு அழுதான். அந்தஸ்ரீ மாரிலே இருக்கிற பாணத்தைப் பார்த்து, "இது யார் போட்ட பாணம்? இதுக்கு நிமித்தமானால் ஏண்ணு காண இல்லியே? இந்தப் பாணம் போட்டவன் கண்ணுக்கு ஒண்ணும் தென்பட இல்லை. இந்தப் பாணம்போட்டு, எத்தனை நேரமாச்சுதோ? அவன் எங்கே போய்விட்டானோ? அவன் இந்த வனத்திலிருப்பவனோ? தேடிப் பார்ப்போம் !" என்று பிராமணனானவன், அந்த வனத்திலே மறைப்பிலே தேடுகின்றபோது, சிறிது தூரத்துக்குப் பிற்பாடு, கிராதன் பக்ஷிகள் மேலே பாணம்போட்டு, கொன்று இருக்கிறவனை அந்தப் பிராமணன் பார்த்தான். "இவன்தான் நம்முடைய பெண்ஜாதியைக் கொன்னவன்" என, அவன்கிட்டே போய், அவனுடைய குடுமியைப் பிடிச்சுக் கொண்டு, உதைச்சு, அடிச்சு, "அடே பாவி ! என்னுடைய பாரியை ஏன் கொன்னாய்? நிர் நிமித்தியமாய்க் கொன்னதுக்கு

நான் ஒன்னை விடுகிறேனா? நீ பிராமணஶ்ரீயைக் கொன்ன பாவியானபடியினாலே, உன்னை, மஹா நீதியுடனே ராச்சிய பரிபாலனம் பண்ணுகிற குலோத்துங்க பாண்டிய மஹாராஜாவினிடத்தில் கொண்டுபோய் விட்டு, அதுக்குத் தக்கதாக உன்னைத் தண்டனை பண்ணிவைக்கிறேன்" என்று இழுத்துக் கொண்டுபோய், பிரேதத்தையும் எடுத்துக் கொண்டு அந்தக் கொழந்தையையும் எடுத்துக் கொண்டு, அந்தக் குலோத்துங்க பாண்டிய மகாராஜாவினுடைய வாசலிலே போய், இந்தப் பிராம்மணஶ்ரீயினுடைய பிரேத்தையும் எடுத்துக் கொண்டு, அந்த ராஜாவினிடத்திலே பிராது பண்ணிக் கொண்டான்.

27. அப்புறம், அந்த மகாராஜாவும் அவனுடைய மந்திரிகளும் வந்து, இந்த விர்த்தாந்தத்தைப் பார்த்தாள், அப்போது, இந்த பிராமணன், மஹா விசனப்பட்டுக் கொண்டு இருக்கிறதைப் பார்த்து, மஹாராஜாவானவர், "நீர் விசனப்பட வேண்டா மெ"ன்று ரொம்பவும் சமாதானப் படுத்தினார். அதன்

(27. பொகு - வெகு; கோதானம் - பசுத்தானம்)

பிறகு, அந்தக் கிராதனைப் பார்த்து, "நீ நிர் நிமித்தியமாய் இந்தப் பிராமணஸ்ரீயை பக்ஷிகளைக் கொல்லுகிறாப்போல பாணம்போட்டு கொல்ல வேண்டிய நிமித்தியம் என்ன" என்று பெருங் கோபத் துடனே கேட்டார் ! அதுக்கு அந்தக் கிராதன் வெகு பயத்துடனே 'கிடுகிடு" என்று நடுங்கிக் கொண்டு, ஒன்றிக்கொண்டு குலோத்துங்க மகாராஜாவைப் பார்த்துச் சொன்னது என்னவென்றால்,

"ஓய் சுவாமி மஹாராஜாவே ! நான் இந்த பாபத்தை ஒன்றும் அறியேன் ! என்னிடத்தில் இந்த குத்தம் விசாரணை பண்ணினால் ஒன்றும் இருக்கமாட்டாது ! நான் இந்தப் பிராமணஸ்ரீயைப் பார்த்ததுமில்லை; இவள் பேரில் பாணம் போட்டதுமில்லை ! னான் என் பாட்டிலே வனத்துலே வந்து என் காரியம் நான் பார்த்துக் கொண்டு இருந்ததே யல்லாமல், இந்த பிராம்மணஸ்ரீ வதை செய்தது இல்லவேஇல்லை ! இதை நீர் சர்வஞ்ஞரான படியினாலேயும் சிவபக்தரான படியினாலேயும், சகல தர்ம சாஸ்திரத்தை யறிஞ்சபடி யினாலேயும், நீர்

நன்றாய் விசாரிச்சு என்னால், இந்தப் பாபம் செய்யப்பட்டுதா இல்லையா என்று விசாரணை செய்து, என்னைத் தண்டிக்க வேணுமே தவிர, சும்மாய் இந்தப் பிராமணனுடைய வார்த்தையைக் கேட்டு, என்னை நிர் நிமித்தியமானான நிரபராதியைத் தெண்டிச்சீர்களானால் என்னைக் கொன்ற பாபம் தங்களுக்கு வந்து சேரும் !" என்று சொன்ன உடனே, குலோத்துங்க பாண்டிய மஹாராராஜாவுக்கு மனசிலே மெத்த சமுசயம் வந்து, தோன்றி, "இது என்ன? மெத்த சங்கடமா இருக்கிறது ! பிராமணனானாலோ இவன் கொன்னான் என்று சொல்கிறான் ! இதற்கு சாக்ஷிகளில்லையே!" என்று மனதிலே மெத்த சம்சயப்பட்டு, "நல்லது எதுக்குமாகட்டும்" என்று, கிராதனைக் கொண்டு போய் வெலங்கு போடச் சொல்லி, வெலங்கில் போட்டு வச்சு, பிற்பாடு இந்த அநியாயம் கண்ணினாலே பார்த்தோமே, காதினாலே கேட்டோமே என்று இந்தப் பாப நிவர்த்திக்குத் தானம் பண்ணினார்; அநேக கோதானங்கள் செய்தார் !

28 அதன்பிறகு, அந்தக் குலோத்துங்க மகாராஜாவானவர் ஸ்ரீசுந்தரேஸ்வர சுவாமி சன்னதிக்கு வந்து கோவிலிலே இருக்கப்பட்ட நிசிதசாமர்த்திகா நமஸ்காரம் செய்து அவர் சன்னிதானத்தில் உட்கார்ந்து கொண்டு பஞ்சாக்ஷர ஜெபம் பண்ணி ஸ்ரீசந்திரேச்வர சுவாமியை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பிச்சார்.

"சுவாமின் தேவதேவ ஸ்ரீ சந்திரஸ்வரா, சர்விக்ஞா, பக்தவத்சலா, நான், மஹா பாவி ! என்னை ரக்ஷிக்கவேணும் !" என்று இந்த பிராமணனானால், 'இந்த ஸ்ரீயை கிராதன் கொன்றுபோட்டான்' என்று சொல்கிறான். கிராதனானால், 'கொலை செய்யவில்லை' என்று சொல்கிறான் ! இதுக் காரானாலும் சாக்ஷி இருக்கிவில்லை. இந்த பிராமணன் வார்த்தை கேட்டு, கிராதனை கொன்னால் எப்படியோ, கிராதன் வார்த்தையைக் கேட்டுவிட்டால் எப்படியோ இது இரண்டும் எனக்குத் தெரியவில்லை ! ஆகையால் நீர் சர்வஞ்ஞரான படியினாலேயும், எனக்கு எஜமானரானபடியாலேயும், உம்முடைய கிருபா

28. *கிராதன் - வேடன்.*

பலத்தினாலே, னான் ராச்சிய பரிபாலனம் பண்ணுகிறபடியாலும் எனக்கு இந்த பாவம் வராமல் நிஜமறிந்து நடக்கும்படியினாலே, என்னிடத்தில் தயவுசெய்து, அதர்மம் வராமல் என்னை பரிபாலனம் செய்யவேணுமென்று ஸ்ரீசுந்திரேஸ்வர சுவாமியைப் பிரார்த்தனை செய்தான்.

29. அப்போ, இந்த சுந்தரேஸ்வர சுவாமி கருணாமூர்த்தியான படியினாலே, சகல ஜீவ தயாபரர் ஆனபடியினாலேயும், பக்தவத்சலரானபடியினாலேயும், ஒரு தரம் சகிந்து சரணமடைஞ்சவனை அபயம் கொடுத்து ரக்ஷிக்கிறதே அவருக்கு விரதமானபடி யினாலேயும், தன்னுடைய பக்தனான சரணாகதனான குலோத்துங்க மஹாராஜாவினிடத்தில் தயவுசெய்து ஆகாசவாணி ரூபமாய் அசரீரி வாக்கு சொல்லிகிறது: "ஓ குலோத்துங்க பாண்டியமஹாராஜாவே ! நீ இன்னய தினத்தில் பிராமணனைக் கூட்டிக் கொண்டு நகர் சோதனார்த்தமாய்ப் புறப்பட்டு, நகர்சோதனை பண்ணையானால் உனக்கு எல்லாம் அவனுடைய சித்தத்துக்கும் அந்த பிராமணனுக்கும் இந்த

இருவருக்கும் அந்த ஸ்ரீ செத்துபோன விவரம் தெரியவரும். அப்போ உனக்கு மனச்சமுசயம் நிவர்த்தியாய்ப்போம் !" என்று சொன்னவுடனே, ராஜா மிகவும் சந்தோஷித்துடனே கூடிக்கொண்டு சுவாமியை பூஜையை செய்து, தன்'னுடைய அரண்மனைக்கி வந்து, பிற்பாடு அந்த ராத்திரியிலே நீலவஸ்திரதாரியாய், கட்க பாணியாய், பஞ்சாக்ஷர செபம் பண்ணிக் கொண்டு, அந்த பிராமண சகிதனாய் நகர்சோதனை பண்ணிக் கொண்டு வரச்சே, செட்டிகளுடைய வீதிக்கி வரச்சே, அங்கே ஒரு வீட்டில் கல்லியாண முகூர்த்தம் நடக்கிறது; அதை பார்த்துக் கொண்டு வாசலிலே நின்னார் ! அந்த க்ஷணத்திலே ஸ்ரீசுந்தரேஸ்வரர் அனுக்கிரகத்தினாலே கோரரூபமாயிருக்கப் பட்ட யெம தூதாளை இரண்டு பெயரைக் கண்டார். அவாள் ஒருவர்க்கொருவர் பேசப்போனார்கள்; என்ன வென்றால், "இன்னை தின மத்தியானத்தில் பிராம்மண

குல + உத்துங்க = குலோத்துங்க; குலத்தை மேம்படுத்துபவன் என்பது பொருள்; சோழனுக்கும் பாண்டியனுக்கும் பொதுவான பெயராக இருந்துளது. சமுசயம் - சந்தேகம்; கட்கம் - வாள்; பாணம் - அம்பு; திருணம் - புல்.

ஸ்ரீயினுடைய பிராணனை நாம் அபகரிச்சாப்போலே, இந்த ராத்திரியில் இந்த மாப்பிள்ளையினுடைய உயிரும் கொண்டுபோக வேணுமென்று" பேசின வார்த்தைகளை குலோத்துங்க பாண்டிய மஹாராஜா கேட்டு, அந்த பிராமணனும் கேட்டு, அந்த எம தூதாளண்டைபோய், "அந்த பிராமணஸ்ரீ வதை எப்படி நடந்தது? அதை நமக்கு ஸவிஸ்தாரமாய் அறிவிக்க வேணுமென்று கேட்டவிடத்தில், அந்த எமதூதாள் சொன்னது என்னவென்றால், "ஓ குலோத்துங்க பாண்டிய மஹாராஜாவே ! யின்னிக்கு பகலிலே யொரு ஆலவிருக்ஷத்து கீழே, ஒரு பிராமணஸ்ரீ படுத்துக் கொண்டு நித்திரிச்சிக் கொண்டு இருந்தாள்! முன்னே ஒரு வேட்டகாரன், ஒரு பாணத்தை அந்த ஆலவிருக்ஷத்தின் மேலிருக்கிற பக்ஷியைப் பார்த்து கொல்லவேணுமென்று ஒரு பாணம் போட்டான் ! அது அந்த பக்ஷிக்கி படாமல், அந்த மரத்தில் தொத்திக் கொண்டது. அதை னாங்கள் போய் அசைச்சோம் ! அந்த பாணமானது அதிலேயிருந்து விடுபட்டு, அந்த பிராம்மணஸ்ரீயினுடைய மாரிலே விழுந்து, முதுகு

மட்டும் உருவிப் போய், அந்த பிராம்மண ஸ்ரீயானவள் செத்துப் போய்விட்டாள் ! அப்படி அந்த பிராமண ஸ்ரீயினுடைய பிராணனை அபகரிச்சோம் ! பின்னையும் ஒரு யானையினுடைய பிராணத்தையும், சிங்கத்தினுடைய பிராணத்தையும், ராஜாவினுடைய பிராணத்தையும் இப்படி அநேக பிராணத்தை பொகு விதமாய் அபகரிச்சோம் ! இப்போ இந்த வயிசிய மாப்பிள்ளையை, பசுவுனாலே அவனை முட்டச் சொல்லி இவனுடைய பிராணத்தையும் அபகரிக் கிறோம் ! இது ஆச்சரியம் அன்று ! காலம் வரச்சே திருமணமானது, வச்சிராயுத மாகும்; அமிர்தமானது விஷமாகும் ! திரும்பியும் இந்த பூலோகத்திலே அநேக சிவக்ஷேத்திரங்களிலே உத்தமமான சிவக்ஷேத்திரம் 4; அது எது என்றால் காசிக்ஷேத்திரம் 1, காளாஸ்திரி க்ஷேத்திரம் 1, கடம்பவனமான மதுரை க்ஷேத்திரம் 1, சிதம்பர க்ஷேத்திரம் 1, இப்படி நாலு க்ஷேத்திரங்களிலே எம தூதாளான பெயர்களுக்கு பிரவேசிக்கிறதற்கு அசாத்தியம் ! சிவலிங்க பூசை எந்த வீட்டில் நடக்கிறதோ அந்த வீட்டிலேயும் எங்களுக்கு

பிரவேசிக்கிறதற்கு அசாத்தியம் !" என்று சொல்லி, அந்த வைசிய மாப்பிள்ளைக்கி மரணகாலமானது வருகிற வரைக்கும் யெம தூதாள் இருவரும் இஷ்டா லாபமாய் வார்த்தை சொல்லிக் கொண்டு இருக்கச்சே, அப்போ,

30. அந்த குலோத்துங்க பாண்டிய மஹாராஜாவும், அந்த பிராமணனும் இருவரும் கைகோர்த்துக் கொண்டு, செட்டிக்கு மறவாய் இருந்துகொண்டு, முகூர்த்தம் வருகிற பரியந்தரமும் வழிபார்த்துக் கொண்டு இருந்தார்கள் ! அப்போது, அந்த செட்டி மாப்பிள்ளையினுடைய புரோகித பிராமணன் கல்லியாண முகூர்த்த சமயம் வந்துது என்று சொன்னான் ! அந்த க்ஷணமே பேரி, மிருதங்கம், னாகசர வாத்தியங்கள் செய்தார்கள், அங்கே ஜனங்கள் கோலாகலமாய் முகூர்த்த சமயம் வந்தது என்றும் கோஷங்கள் பண்ணினார்கள் ! இந்தக் காலத்தில் வாத்திய கோஷங்களும் மந்திர கோஷங்களும் கேட்டு அவன் வாசலிலே கட்டியிருக்கிற பசுமாடு பயந்து, மெரண்டு, தும்பை அறுத்துக் கொண்டு, அதிவேகமாய்

வந்து, அந்த மாப்பிள்ளையைக் கொம்பினாலே முட்டி குடல் முறியப்பட கீழே முட்டி, தள்ளிப் போட்டுது ! அப்போ, அந்த செட்டி மாப்பிள்ளையினுடைய பிராணன் போச்சுது ! சகலபேர்களும் ஆக்கரம் பண்ணி அழத்தொடங்கினார்கள் !

அப்போ, அந்த எமதூதாளிருவரும் மறஞ்சுபோய் விட்டார்கள், அப்போ, அந்த குலோத்துங்க பாண்டிய மஹாராஜாவும், அந்த பிராம்மணனும் இதைப் பார்த்து, பொகு ஆச்சரியப்பட்டார்கள். அவாளுடைய மனசிலே யிருந்த சமுசயம் நிவர்த்தியாய் போச்சுது, கிராதகன் நிரபராதி என்று தோணப்பட்டது ! அப்புறம் இந்த குலோத்துங்க மஹாராஜாவும், பிராம்மணனும் தன்னுடைய அரண்மனைக்கிப் போய் சேர்ந்தார்கள்.

மறாநாள், எழுந்திருந்து நித்திய கர்மானுஷ்டானம் பண்ணிக் கொண்டு, சகல மன்திரி புரோகிதர்களையும் அழைப்பித்து சபையிலே இருந்துகொண்டு, சகலபேருக்கும் தெரியப்படச் சொன்னார்.

அதன்மேல் அந்த பிராமணனுக்கு அபரிமிதமாய் தன கனக வஸ்துவாகன சகல பொகுமானங்களும் செய்து, கிரமமாய் பிராமணனை அனுப்பிவிட்டார். அந்தக் கிராதனை அழைப்பிச்சு மிகவும் ஆதரணை செய்து, நாம் விசாரிக்காமல் உன்னை தண்டிச்சோமே அதை நீ பொறுத்துக் கொள் என்று சொல்லி, பொகு சாந்தமாய்ச் சொல்லி, தன கனக வஸ்து ஆபரணங்களும் குடுத்து, அந்த கிராதாளை அனுப்பிவிட்டார்.

பிற்பாடு, ஸ்ரீசுந்தரேஸ்வர சுவாமியினுடைய அனுக்கிர ஹத்தினாலேயும் இந்த பாபம் நமக்கு வராமல் போச்சுதே என்று நிசித சபாபதியை ஸ்தோத்திரம் செய்து நிசித சபாபதிக்கி அநேகம் ஆபரணங்கள் செய்து கொடுத்து, சிவ கைங்கரியம் பண்ணிக் கொடுத்து மதுராபுரி பட்டணத்தில் புத்திரமித்திர பௌத்திர சமேதராய் பொகு வருடங்கள் ராஜ்ஜிய பரிபாலனம் பண்ணிக் கொண்டிருந்தார் !

இது குலோத்துங்க மஹாராஜா கதை.

முடிஞ்சுது.

31. பின்னையும் சிவன் முக்திபுரமான ஆலாசிய நாதருக்கு றாசதானியான கதம்பவனமான மதுராபுரி பட்டணத்தில் சத்திய சீலனான ஒரு செட்டி ஒருவன் நித்தியமும் ஸ்ரீசந்திரரேஸ்வர சுவாமி மீனாக்ஷியம்மன் தெரிசனம் நியமமாய் பண்ணுகிறதே மஹா விரதமாய் செய்துகொண்டு வருவான். அந்த மல்ல செட்டிக்கு பணத்தின் மேல் ஆசை இல்லை ! அந்த மதுராபுரி பட்டணத்தில் ஒரு கிறடிகூடம் கட்டி, அதில் பசங்களுக்கும் கிரகஸ்தாளுடைய பிள்ளைகளுக்கும் சிலம்பம் பழகி வைக்கிறதுக்கும் கத்தி வித்தையும், பட்டதிருப்புற வித்தையும் அந்தர பல்டி வித்தையும் இப்படிப்பட்ட வித்தைகள் எல்லாம் சிலம்பம் பழகி வைக்கிறதும் இந்த பிரகாரம் மதுராபுரி பட்டணத்தி லிருக்கிற வித்தியாப்பியாசிகளுக்கு மல்லசாலையில், இந்தப் பிரகாரமாக அந்த மல்லக செட்டி அப்பியாசம் பண்ணி வைத்தான். அவன் ஏதாகிலும் கொடுத்தா குரு தக்ஷிணை கொடுத்ததை வாங்கிக் கொண்டு,

---

31. கிறடி - கிரீடை - விளையாட்டு; புத்திர - மகன்; மகள்; மித்திர - நண்பர்; களத்திர - மனைவி; போஷணம் - ஆதரவு; சிமிதாடு - சமுதாடு.

புத்திர மித்திர களத்திராதிகளை போஷணம் பண்ணிக் கொண்டு வந்தான்.

32. இப்படி இருக்கச்சே, அந்த ஊரிலே இருக்கப்பட்ட துஷ்டன் ஒருவன் சிந்தாகிரியன் என்று ஒரு சிறுச்சிதபுருஷன், மகா கபடியானவன், துஷ்டனொருவன் இந்த மல்லக செட்டியினிடம் வந்து, மஹா சாஷ்டாங்கமாய் தெண்டம் செய்து, "ஓ வஸ்தாதே ! என்னை உம்முடைய சிஷ்யனா எண்ணிக் கொண்டு, என்னிடத்தில் தயவுசெய்து, இந்த மல்லக வித்தை, கிரடி சாதனைகள் எனக்கு தயவு செய்து வித்தியாப்பியாசம் செய்விக்க வேண்டும் என்று பிரார்த்திச்சான்.

அதற்கு, "நல்லது" என்று, அந்த மல்லக செட்டி சம்மதிச்சு அவனுக்குக் கத்தி, சிமிதாடு, பாங்கு, தாண்டு, பாணா, கழி, சின்ன சமிதாடு, பட்டா இப்படிப்பட்ட ஆயுதவித்தைகள் அவனுக்கு அப்பியாசம் பண்ணி வைச்சான். அந்த சிந்தாகிரயன் என்கிற சிஷ்யன் வித்தையிலே சமர்த்தனா யிருந்தான்.

அப்புறம், அந்த குருவான வஸ்தாத்தினிடத்தில் ஆஸ்ரயிச்சதினாலே அவரைக் காட்டிலும் தான் வித்தையில் அதிகனாய்க் கோரி பீஷ்டனாயி அவருடனே எதுத்து, அவருக்குப் போட்டியாய் ரம கிரடிக்கூடம் கட்டி, தான் அவருடைய பிருதுகள் எல்லாம் தான்போட்டுக் கொண்டு, தானும் சிறிது சிஷ்யவர்க்கங்களைச் சேர்த்துக் கொண்டு, "அந்த தேசிகனான வஸ்தாதைக் காட்டிலும் தான் அதிகம்" என்று கெர்வத்தை யடைந்தான். அந்த தேசிகனான வஸ்தாதைக் கண்டால், மீசைமேலே கைபோடுகிறதும், தலையாட்டுகிறதும் இந்தப் பிரகாரமாக அந்தத் தேசிகனான வஸ்தாத்தைக் கண்டால், எந்தப் படிக்குக் குருவை ஏளனம் பண்ணத் தலைப்பட்டான் ! இத்தை, அந்த ஆசாரியனான வஸ்தாது சகிச்சுக் கொண்டு போறதே யல்லாமல், அவனிடத்திலே வேசமானாலும் கோபம் பண்ணுகிறது இல்லை! அந்த வஸ்தாத்தினுனடைய சிஷ்ய வர்க்கங்கள் அவனுடைய துர்புத்தியையும் கெர்வத்தையும் பார்த்து அந்த சிந்தாகியனென்கிற துஷ்டனைத் தெண்டிக்க

வேணும் என்று எத்தினம் பண்ணினால், அதற்கு அந்த குருவான வஸ்தாது, அவர் அப்படி அந்த சிந்தகிரியனிடத்திலே கோபம் வேண்டாம் என்று சாந்தவாதனம் பண்ணி வச்சார்.

33. அப்படிப்பட்ட உபசார நீதியை யுடைத்தான அந்த பெரிய மல்லக செட்டி வஸ்தாதானவன் சிவதரிசனார்த்தமாய் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வர சுவாமி கோவிலுக்குப் போன சமயத்தில் அந்த சிந்தாஸ்சிரியன் என்கிற துஷ்ட சிஷ்யன் அந்த ஆசாரியர் வீட்டுக்கு வந்து, அவருடைய ஸ்ரீயை, குரு பத்னியைக் கண்ணு காட்டி சங்கியை பண்ணி, "என்னுடைய மனசுக்கு எப்போ சமயம்?" என்றும் கேட்டும் அவனிடத்தில் மெத்த ஆசையினாலே அந்தக் குரு இல்லாத சமயத்து, வீட்டுக்குப் போறதும், அந்தக் குரு பத்னியைக் காமாதுரனாய் அழைக்கிறதும், அடிக்கடி இந்தப் பிரகாரம் அந்தக் குருபத்னியிடத்தில் இப்படிச் சங்கியை பண்ணிய, தற்கு, அவள் சம்மதிக்காமல், அவனை துஸ்கரிச்சுக் கொண்டு வந்தாள்.

33. மாதுருபாவம் - தாய்பாவம் - தாய்போல நினைத்தல்.

இப்படி இருக்கச்சே, ஒருநாள் ஒருவரும் இல்லாத சமயம் பார்த்து இந்த சிந்தாஸ்கிரியன் என்கிற துஷ்டன் அந்தக் குருவினுடைய வீட்டில் போய், குரு பத்னியைப் பலாத்காரமாய், காமபரங்கனாய்க் கையைப் பிடித்தான். அவள் விடிப்பிச்சுக் கொண்டு, அந்த சிந்தாஸ்கிரியன் என்கிற துஷ்டனைப் பார்த்து, "அடே சண்டாள மஹாபாபி ! நீ குரு துரோகி ! நான் உனக்கு குருபத்னியின்னா, நீ எனக்குப் புத்திரன் அல்லவா? என்னிடத்தில் மாதுருபாவம் பண்ணாமல், இப்படிப்பட்ட துஷ்கிறித்தியத்துக்கு எத்தனம் பண்ணலாமா?" என்று அந்தப் பாபியைப் பார்க்காமல் அப்புறத்திலே போயிருந்துகொண்டு மனதிலே யோசனை பண்ணினாள். என்னவென்றால், "இந்தச் சமாசாரத்தை என்னுடைய புருஷனுக்குச் சொன்னோமேயானால், அவர் மனதுக்கு என்ன தோணுமோ, இந்த அவமானத்தை என்னவென்று அவரிடத்தில் சொல்லுகிறது? ஆகையினால் அவரோடே சொல்ல வேண்டியதில்லை !" என்றும், இதராளிடத்தில் சொல்கிறதற்கும் வெட்கப்பட்டுக்

கொண்டு, ஒருவரிடத்திலும் சொல்லாமல் சகிச்சுக் கொண்டு, ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வர சுவாமியை ஸ்தோத்திரம் செய்தாள் !

34. "ஓ அனாத நாதா ! பக்தவத்சலா ! சிவமகா தேவா ! என்று ஸ்தோத்திரம் பண்ணி, இந்தா சிந்தாசிரியனைத் தெண்டிக்க வேணும் என்று பிராத்த்திச்சாள் ! அதற்கு அந்த சுந்தரேஸ்வர சுவாமி, அவளுடைய புருஷ ரூபமாய் வந்து, அவனைத் தண்டிக்க வேணுமென்று வந்த ரூபம் எப்படி என்றால், செகப்பு மண்ணாயிருக்கப்பட்ட அங்கவஸ்திரமும், செகப்பு மண்ணிலே தோய்க்கப்பட்ட குல்லாயும், செகப்பு மண்ணுலே தோய்க்கப்பட்ட சிலடமும், கவசத்தையும் கையில் கத்தியும், ஒரு கையில் கிருதாவும் இந்த ரூபமாய் வந்து, அந்த சிந்தாஸ்கிரியனுடைய முகத்தைப் பார்த்து, சொன்னது என்னவென்றால், "அடே புழுகுப் பயலே ! குருத்துரோகி ! சண்டாளா ! பதிதா ! உன்னைத் துணுக்குத் துணுக்காய் வெட்டிப் போடுகிறேன் !

34. சிலடம் - சல்லடம் - சட்டை.

உன்னுடைய மாரையும் பிளந்து போடுகிறேன் ! உனக்கு யித்தனை காமதுர்த்தனை என்னா? குரு பத்னி கமனம் பஞ்சமா பாதகம் என்று அறியாமல் இப்படிப்பட்ட துஷ்கிரித்யம் பண்ணினையே, வா, எழுந்திரு, சண்டைக்கு வா !" என்று அழைச்சார் !

அப்போது, சிந்தாஸ்கிரியன் என்கிற துஷ்டன் கையிலே கத்தி, கேடயங்கள் தரிச்சுக் கொண்டு, ஆனையுடனே பூனை சண்டை போடப் புறப்பட்டாப்போலே, சிம்மத்துடனே யானை சண்டைபோடப் புறப்பட்டாப்போலே அவருடனே சண்டை போடுகிறதுக்கு எத்தனமாய் வந்தான். அதற்கு ஸ்ரீசுந்தரேஸ்வர சுவாமி ஜெனங்களுக்கு, மனசிலே வேடிக்கை காண்பிக்க வேணும் என்றும், தனக்கு பக்தவத்சலன் என்று பெயர் வந்ததைச் சகல ஜெனங்களுக்கும் தெரியப்படுத்த வேணும் என்றும், ஒரு திரம் சரணம் என்று சொன்னவர்களை ரக்ஷிக்கிறோம் என்கிற பிருது, அந்த சுவிரதத்தைப் பரிபாலனம் பண்ணுகிற நிமித்தியமாய் ஜெனங்களுக்கு வேடிக்கை காண்பிச்சார் !

35. அது எப்படி என்றால், தன்னுடைய கத்தியைப் பளபள என்று பிரகாசிக்க ஒண்ணுக்கு ஒண்ணு காந்திமேல் காந்திவிழ இந்தப் பிரகாரமாக அந்த ஆய்தவித்தைகளை எல்லாம் யுத்தம் பண்ணிக் காட்டினார் ! என்னமாய் என்றால், ஆய்த சம்பிரதாயப்பிரகாரமாகக் கத்தி கேடயத்துடனே சண்டையும் பட்டாக்கத்தியினுடைய சண்டையும், சமுதாடு சண்டையும், பாங்குச் சண்டையும், பாணாச் சண்டையும், இப்படி ஒருத்தருக்கு ஒருவர் பொகு நேரம் சர்வ ஜனங்களும் பார்க்கும்படியாய் சித்திர விசித்திரமாய், விதவிதமாய் யுத்தம் செய்தார்கள் ! அப்புறம் அந்த சந்திரேஸ்வர சுவாமி, மல்லக செட்டி வேஷதாரியாக இருக்கிற சந்திரேஸ்வசாமி, அந்த மஹாபதிவிரதையாய் இருக்கிற, அந்த மல்லக செட்டியினுடைய பாரியையை சிந்தாஸ்கிரியன் பிடிச்சு இழுத்ததனால் அவனுடைய மணிக்கட்டிலே வெட்டிப் போட்டார் ! அந்த மஹாபதி விரதையைக் கையைக் பிடிச்சிழுத்த கையை வெட்டிப் போட்டார் ! அந்த மஹா பதிவிரதையான நங்கவஸ்தரத் தினுடைய

பாரியையை பரியாச வாக்கியங்களாய்ச் சொன்ன சிந்தாஸ்கிரியனுடைய னாக்கைக் கத்தரிச்சுப் போட்டார் ! அந்தக் குரு பத்னியை இச்சிச்ச இருதயத்தைப் புளந்து போட்டார் ! அந்தக் குருவைக் கும்பிடாதிருந்த தலையை வெட்டிப் போட்டார் !

இப்படி, துஷ்ட நிக்கிரகம் செய்து ஸ்ரீ சுந்திரேஸ்வரசுவாமி சிட்டையான மஹாபதிவிரதை யினுடைய பாதிவிரத்திய விரதத்தையும் பங்கமில் லாமல், அந்த நங்கன் என்கிற வஸ்தாது வேஷதாரியாய் இருக்கிற ஸ்ரீ சுந்தரேஸ்வர சுவாமி மறைஞ்சுவிட்டார் ! அப்புறம் சகல ஜனங்களும் ஆச்சரியப்பட்டுக் கொண்டு இருந்தார்கள். அதன் பிறகு, ஆலாசியநாதருக்குத் தரிசனத்துக்குப் போயிருந்த வஸ்தாது கோவிலிலே ஸ்ரீ சுந்தரேஸ்வர சுவாமி தரிசனம் வாங்கிக் கொண்டு தன்னுடைய வீட்டுக்கு வந்தான்; வந்தவுடனே வீட்டிலிருக்கிற ஜெனங்கள் எல்லாம் வீட்டிலே நடந்த சமாசார

---

35. பாரியை - மனைவி; பரியாச - பரிகாச; பாதிவிரத்திய - பதிவிரதா தர்மம்.

மெல்லாம் அவனுக்கு விஸ்தாரமாய்ச் சொன்னார்கள். அது கேட்டு, அவன் பக்தி பரவசனாய் பக்தவத் சலத்தைப் பார்த்து, ஆச்சரியப்பட்டு, கண்ணிலே ஆனந்தபாஷ்பம் பெருகி, ஸ்ரீ சுந்தரேஸ்வர சுவாமிக்கு சாஷ்டாங்க தண்டம் பிரணாமங்கள் செய்து, கைகூப்பிக் கொண்டு, ஸ்தோத்திரம் செய்தான்.

36. அது எப்படி என்றால், சிவ சங்கரா ! மகாதேவா ! கெங்காதரா ! சூலபாணி, சுந்தரேஸ்வரா! கதம்பவன விகாரா! மீனாக்ஷி னாயகா ! சரணாகத சம்ரக்ஷகா ! நான் மகாபதின் ! என்னுடைய இடத்தில் தயவுசெய்து, என்னுடைய மான சம்ரக்ஷணம் பண்ணீரே, சுவாமீ !'' என்று பொகுவிதமாய் ஸ்தோத்திரம் செய்தான் !

இந்தச் சமாசாரமெல்லாம் குலோத்துங்க பாண்டிய மஹாராஜாவுக்கு தெரிஞ்சுது !

பிற்பாடு, அந்தக் குலோத்துங்க பாண்டிய மஹாராஜாவானவன், நங்கன் என்னும் வஸ்தாத் தினுடைய சிவபக்தியை அறிந்து அவனை யழைப்

பிச்சு, இந்தச் சரித்திரங்கள் எல்லாம் கேட்டு, ரொம்பப் பத்தி பரவசனாய், அந்த நங்கனென்கிற மஹா பக்தனுக்கு, தன, கனக, வஸ்து, வாகனாதி ஆபரணங் கள் எல்லாம் குடுத்து, அவனுக்குப் பகுமானங்கள் பண்ணி, ஆனைமேல் வைத்து, பட்டணப் பிரவேசம் பண்ணிவைச்சுவிட்ட பிறகு அனுப்பிவிட்டார். !

அந்த நங்கன் என்கிற மாஷ்டிகன் மீனாக்ஷி சுந்தரேஸ்வர சுவாமியைப் பக்தி பண்ணிக் கொண்டு சுகமாயிருந்தான். அந்த தேகாந்தத்தில் கைலாசத்தை யடைஞ்சான் ! அப்புறம், குலோத்துங்க பாண்டிய மஹாராஜாவுக்கு அந்த குணபாண்டியன் என்கிற குமாரன் பிறந்தான் !

இது குலோத்துங்க பாண்டிய மகாராஜா கதை

முகிஞ்சது.

பாண்டிய தேச வரலாறும் பாண்டிய ராஜாக்கள் சரித்திரமும்

1. யிந்த பொஸ்தகம் பாண்டிய மண்டலத்தை ஆளப்பட்ட பாண்டிய மகாராசாக்களுடைய சரித்திரக் கதை. அந்த பாண்டிய மகாராசா கதையில் மூணாவது புஸ்தகம் - ஆக 3.

யிந்த புஸ்தகத்தில், பாண்டிய மகாராசாக்கள் கதை அஞ்சு கதைகள்.

அதன் பிறகு, முன்னாலே ஆலாசிய னாயகர் ஸ்ரீகயிலாசத்திலே வட ஆலாவினுடைய சத்தியின் கீழே தெட்சிணாமுகுர்த்தத்தைத் தரித்துக் கொண்டுயிருந்து, அரிபிரமாதி தேவர்கள், யோகிகளுடனே கூடிக் கொண்டு யிருக்கப்பட்ட பிற மதகணங்களுக்கும் தேவதைகளுக்கும் அஷ்டமா சித்தி வித்தைகளை உபதேசிக்குற சமயத்தில் யெட்சாளுடைய சிறீகள் ஆறு பெயர்கள் அஷ்டமகாசித்தி அயிசுவரிய சம்பன்னனாயிருக்குற ஜீவனிடத்தில் வந்து சாஸ்டாங்கமாகுற தண்டப்

பிரணாமம் செய்து, எழுந்திருச்சி, சன்னிதானத்தில் நின்றுகொண்டு, வினயபக்தியுடனே பரமசிவனைப் பார்த்து, ஸ்தோத்திரம் செய்தார்கள். அது யென்னாவென்றால், "சுவாமி ! சர்வ சென னாதா ! சர்வக்ஞா ! சம்போ தயாநிதே ! யெங்களுக்கு அஷ்டமகா சித்தி வித்தைகளை எங்களுக்கு உபதேசிக்க வேண்டுமென்று இந்த யட்ச சிறீகளாகிய ஆறு பெண்களும் பரமேசுவரனை விண்ணப்பம் செய்தார்கள். அந்த அஷ்டமகா சித்திகளென்று சொல்லப்பட்ட யெட்டுச் சித்திக்கும் பெயர் யென்னவென்றால், அணிமா சித்தி யென்றும் 1, மகிமா சித்தி யென்றும் 1, கெரிமா சித்தி யென்றும் 1, லகிமா சித்தி யென்றும், பிராப்தி சித்தி யென்றும் 1, பிராகாமி சித்தி யென்றும், வகித்வ சித்தி யென்றும் 1, வகிதா சித்தி யென்றும் 1, யிப்படிப்பட்ட யெட்டுச் சக்திகளையும் முதலாவது அணிமா சித்தி வித்தைக்கு விதுரம் யெப்படியென்றால், யிந்த சரீரத்தை அனுப்பிரமாணமாய் சூட்சுமமாயி நினைச்சு உடனேப் பண்ணுகிற சித்தி எதுவோ அதற்கு அணிமா சித்தி

யென்றும்; ரெண்டாவது, மகிமா சித்தி வித்தையாவது யெப்படியென்றால், இந்த சரீரத்தை யெவ்வளவு பெரிதாகிய ஸ்தூலமும், பெருமமும், உசரமும் யெவ்வளவு செய்யவேண்டுமென்று நினைகுறானோ அவ்வளவு ஸ்தூலமும் பெருமனும் உசரமும் செய்குற வித்தைக்கு மகிஷா சித்தி வித்தை யென்றும் பெயர் 2, மூன்றாவது கெரிமா சித்தி வித்தையாவது யெப்படி யென்றால், யிந்தச் சரீரத்தை எவ்வளவு பாரமாய்க் கனமாய்ச் செய்யவேண்ணுமின்னு நினைக்கிறானோ அவ்வளவு பிறத்தியாராலே யெடுக்கத் தூக்கவும் வசப்படாமல் பாரமாய்க் கனமாய்ச் செய்கிற வித்தை யெதுவோ அந்த வித்தைக்குக் கெரிமா சித்தி யென்றும் பெயர் 3; னாலாவது லகிமா சித்தி யாவது யென்னாவென்றால் யிந்த சரீரம் யெவ்வளவு ஸ்தூலமாய் யிருந்தாலும் பிறத்தியாராலே யெடுக்கிறதுக்கு நெட்டிபோலே லெகுவாயி யிருக்கிறதும், யிந்த சரீரத்தைப் பரமா அணுத்தன மாத்திரமாயி செய்து, ஆகாயத்திலே கேசர கெமனமாய் யெவ்வளவுக்குப் பறக்க வேண்டும் என்று

தோணுகிறதோ தோணுகுறதும் யிதற்கு லகிமா சித்தி வித்தை யென்றும் பெயர் 4; அயிஞ்சாவது பிராபத்தி சித்தியாவது யென்னவென்றால் தன் மனசுக்கு யெது பிராப்தி வேணும் யென்று தோணுகிறதோ, அந்த நிமிஷத்திலே பிராப்தியை அடையுறது யெதுவோ, யிந்திரனுடைய போகத்தை யிந்தக்ஷணம் அநுபவிக்க வேண்டுமென்று தோணுகிறதோ அந்தப்படியே அந்த போக பிராப்தியை அடையுறது யெதுவோ அந்த வித்தைக்குப் பிராப்தி சித்தி வித்தை யென்று பெயர் 5; ஆறாவது பிராகாமிய சித்தியாவது யெப்படி யென்றால் தனக்கு அநேகக் கோடி சிறீகளுக்கும் தான் ஒருவனாயி யிருந்துக் கொண்டு, அநேகப் புருஷ ரூபங்களைத் தரித்துக் கொண்டு, அவளோடே கூடிப் போகங்களை அநுபவிச்சு, ஒருவனுக்குத் தானே தோணும்படியாகவும் யிந்த உலகத்திலே நடக்குற காரிய கருமங்களெல்லாம் தானே தன் கண்ணாலே பார்க்குற சித்தியும், அப்பாலும் எறும்பு முதலாக விருமாதேவர் வரைக்கும் பேசுகிற சமாசாரங் களெல்லாம் பாஷா ஞானமும், தான் ஒருவன்

கேட்குறதும், செத்த (உடலைப்) போட்டுகிறதும், பிரேதத்தினிடத்திலே தன் கண் பட்ட உடனே பிரேதத்தை எழுந்திருக்கிறதும், சசீவனாய்ப் பிழைச்சுப் போகிறது யிந்தப் பிரகாரமாய்ச் சித்தி யென்றும் பெயர் 6;

2. ஏழாவது, யீசத்துவ சித்தியாவது யென்னவென்றால், யீசுவரன் போலே பஞ்ச கிருத்தியம் பண்ணுகிறது. பஞ்சகிருத்தியமாவது, யென்னவென்றால், சிருட்டி, திதி, திரோதானம், சங்காரம், அனுக்கிரகம் யிப்படி சொல்லப்பட்ட சிருட்டியாவது உலகத்தை உண்டாக்கிறது ! ரெண்டாவது, ஸ்தியாவது உலகத்தை யிருக்கும்படியா யிரெட்சிக்குறது 2; மூன்றாவது சங்காரமாவது உலகத்தைத் தன்னுக்குள்ளே அயிக்கியம் பண்ணிக் கொள்கிறது. யிதுக்குச் சம்பாரம் யென்றும் பெயர் 3;

---

1. தெட்சிணாமுகுர்த்தத்தை - தட்சிணாமூர்த்தியை; தரித்துக்கொண்டு - சிந்தித்துக் கொண்டு; பிறமதகணங்கள் - தேவகணங்கள்; சிறீகள் - ஸ்திரீகள்; கேசர கைமணம் - வண்டு செல்வது போல; விருமா - பிரம்மா; செத்த உடலைப் போட்டுகிறது - செத்த உடலைப் போற்றுகிறது.

னாலாவது திரோதாமாவது யெப்படியென்றால், யெந்தப் பதார்த்தங்களையும் மறைச்சுப் யாடுகிறது, சகலசீவ பிராணிகளாயின உயிர்களுக்கும் தன்னுடைய சொரூபஞான மில்லாமல் பாசத்துடனே கூடிக் கொண்டு யிருக்கத்தக்கதாக சகலச் சீவன்களைச் செய்குறது எதுவோ அதுக்கு திரோதானம் யென்று பெயர் 4.

2. அஞ்சாவது, அனுக்கிரகம் ஆவது யென்னாவென்றால், சகல பிராணிகளுக்கும் அஞ்ஞானத்தையும் அஞ்சுவிதப் பாசத்தையும் தன்னுடைய தயவினாலே நிவர்த்தி பண்ணிவைத்து அனுக்கிரகம் பண்ணுகிறது எதுவோ அதற்கு, அனுக்கிரக சத்தி யென்றும் பெயர் 5. இதற்குப் பஞ்ச கிருத்தியமென்றும் பெயர். பஞ்சமலமாவது யெப்படியென்றால், முதலாவது கர்மம் மலம் - 1; ரெண்டாவது மாயாமலம் -2; மூன்றாவது ஆணவமலம் 3; னாலாவது திரோதான மலம் - 4; அஞ்சாவது... யிந்த மலம் யிப்படிச் சொல்லப்பட்டது, யிருவத் தெட்டினுடைய சைவ ஆகமத்தில் சொல்லப்பட்ட

பஞ்சமலம் யென்று பெயர். சித்தாந்த சாஸ்திர ரீதியாய் சொல்லப்பட்டது. வேதாந்த சாஸ்திரமாவது முப்பத்திரண்டு உபநிஷத்தில் சொல்லப்பட்ட அத்துவித சாஸ்திரம், அதிலே சொல்லப்பட்ட பந்தங்கள் அஞ்சு; அது யென்னாவென்றால், கர்மபந்தம் முதலாவது; ரெண்டாவது குணபந்தம்; மூன்றாவது விட்சப மந்திரம்; னாலாவது ஆபரண சத்தி பெந்தம்; அஞ்சாவது அஞ்ஞானபந்தம் அஞ்சு பந்தங்களும் நிவர்த்தி பண்ணிவைத்து, சீவன் முக்தி, விதேகமுக்தியும் குடுக்கிறது எதுவோ அதற்கு அனுக்கிரக கிருத்தி மென்றும் பெயர்.

3. யிப்படிச் சொல்லப்பட்ட பஞ்ச கிருத்தியங்களும் யீசுவரன் போலே தனக்கு அந்த சக்தி யுண்டாக்குற தெதுவோ அதற்கு யீசத்துவசித்தி யென்றும் பெயர். எட்டாவது வகிதாசித்தியாவது என்னவென்றால், யீசுவரனிடத்திலே யிருக்கப்பட்ட குணங்களெல்லாம் தன்னிடத்திலே வசிக்கும்படியாய் சுவாதீனமாகத்தக்கதாய் வசியம் பண்ணிக் கொள்ளுகிறது எதுவோ அதற்கு விகதா சித்தி

யென்றும் பெயர். யிந்தப் பிரகாரமாக யிந்த அஷ்டமகா சித்தி வித்தைகளை தக்ஷிணாமூர்த்தியாய் யிருக்குற சுவாமியைப் பார்த்து அந்த யக்ஷ ஸ்திரீகள் ஆறு பேரும், தங்களுக்கு யிந்த வித்தையை உபதேசிக்கச் சொல்லி, விண்ணப்பம் செய்தார்கள். அதற்குத் தக்ஷிணாமூர்த்தி சுவாமி சொன்னது யென்னவென்றால், "நீங்கள் சர்வாபரண சுத்த பிரம்ம சொரூபிணியான தேவியை மனசிலே தியானம் பண்ணி, அந்தத் தேவியினுடைய மந்திரத்தை நீங்கள் செபிச்சீர்களானால், உங்களுக்கு அணிமா சித்தி வித்தையானது சித்திக்கும்; ஞாதுரு ஞான நேய வற்சிதமான திருபு ஷரகிதமான நிருவிஷேஷவிரும் வித்தையானது உங்களுக்குப் பிராப்தியாகும்; யிதுனாலே உங்களுக்குச் சீவன் முத்தி, விவேக முத்தி பலன் உண்டாகும் !'' யென்றும், தட்சிணா மூர்த்தியானவர் அவர்களுக்கு உபதேசம் பண்ணச்சே அந்த யட்சஸ்திரீகள் ஆறுபேரும் அசாக்கிரதையாய், பராக்காயி அதிலே ஏகாசிருதி யில்லாமல் யிருந்தபடியினாலே, அப்போ அந்த தக்ஷிணாமூர்த்தி

சுவாமிக்குக் கோபம் வந்து, அவர் அவர்களைப் பார்த்துச் சொன்னது யென்னவென்றால், "நீங்கள் உபதேசம் பண்ணுகிற சிறீ குருசாமி வாக்கியத்தை, வினய பயபக்தி விசுவாச யுக்தாளாய் கிடக்கவேண்டு மென்று, வேத சாஸ்திர புராணேதிகா சாகமங்கள் சொல்லுகிற படியினாலே, அந்தப் பிரகாரம் செய்யாமல், உங்களுக்கு யிதமாயி யிருக்கப்பட்ட ஆத்மரான உபதேசத்தில் அனுதிறுணை பண்ணின படியினாலே, நீங்கள் பாண்டிய மண்டலத்தில் பட்ட மங்கலம் யெங்கிற கிராமத்தில் சிலைகளாயிப் போங்களென்று சபிச்ச உடனே, பயபீதாளாயி, சுவாமியை வணங்கித் தெண்டம் பண்ணி," நாங்கள் செய்த அபராதத்தைச் சகிச்சுப் பொறுத்துக் கொண்டு, யெங்களுக்கு உச்சார்பம் குடுத்து யெங்களைக் காப்பாத்தி இரட்சிக்க வேண்மென்று பிராத்திச்ச உடனே,

4. சிறீ தெட்சிணாமூர்த்திக்குத் தயவு வந்து, "அந்தப் பாண்டிய மண்டலத்துக்கு ராசதானியான

புராணேதிகாசாகமங்கள் = புராண+இதிகாச+ஆகமங்கள்; அனுதிறுணை - அனுசரணை; உச்சார்பம் - உற்சாகம்.

மதுராபுரிப் பட்டணத்தின் சமீபத்திலே யிருக்கப்பட்ட, பட்டமங்கை யெங்கிற கிராமத்தில் நீங்கள் ஆயிரம் வருஷம் ஒரு ஆலா விருட்சத்தின் கீழே கல்லுகளாயி யிருந்த பிற்பாடு ஆலாசிய னாதரான சொக்கலிங்க மான னான், குரு ரூபத்தைத் தரிச்சு, உங்களுடைய சாபத்தை விமோசனம் பண்ணிவிச்சு, உங்களுக்கு, அஷ்டமகாசித்தி வித்தையை உபதேசிக்கிறே"னென்று சொன்னபிற்பாடு, அந்த யெட்சப் பெண்கள் ஆறு பேரும் பட்ட மங்கலத்தில் ஆலாவிருட்ச நிழலுக்குக் கீழே கல்லுச் சிலைகளாயி யிருந்தார்கள்.

பிற்பாடு, ஸ்ரீ ஆலாசிய நாயகரான சுந்தரேசுவரராயி யெழுந்தருளி, அந்த யெட்சச் சிறீகள் ஆறுபேருடைய சாபத்தை விமோசனம் பண்ணி வச்சு, அவாளுக்கு அஷ்ட்ட மகாசித்தி வித்தையை உபதேசம் செய்து, அவாளை சித்த சிறீகளாயிச் செய்து விட்டார் !

அந்த யெட்சப் பெண்களான ஆறு பேரும், ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி கிருபையினால், அவரிடத்தில்

ச்ரவண பத்தி - 1, கீர்த்தின பத்தி - 2, சுமறண பத்தி - 3, பாதசேவண பத்தி - 4, அர்சன பத்தி - 5, வந்தன பத்தி - 6, தாசியபத்தி - 7, சத்திய பத்தி - 8, ஆத்மநிவேதன பத்தி -9, ஆக யிப்படிச் சொல்லப்பட்ட ஒன்பது பத்தியும் செய்து, சிறீசுந்தரேசுபர சுவாமியைச் சரண் அடைந்து, அவரே ரெட்சகரென்று சீவன் முத்தி சுகத்தை அடைந்து சித்த ஸ்ரீகளாய், ஆறு பேரும் இருந்தார்கள்.

இது கதை 1.

4. அதற்குப் பிற்பாடு, காட்சிபுற மகா பட்டணத்திலே, காந்தாரச்சேத சோழனென்று ஒரு சோழ மகாராசா; அவர் நித்தியம் சிவசரண கமலத்தில் பத்தியுத்தனாயி, சிவபூசை செயிகிறதும், சிவபுராண கதைகளைச் ச்ரவணம் பண்ணுகிறதும், யிந்தப் பிரகாரமாயி, சிவபத்தனாயி அனற்க்கியமாயி யிருக்கப்பட்ட நவரத்தினங்களைத் தரிக்காமல்,

---

ச்ரவணபத்தி - கேட்கும்பக்தி; சுமரணை - நினைத்தல்; அர்சன - அர்ச்சனை; தாசிய - சேவை; ஆத்மநிவேதனம் - தன்னை அர்ப்பணித்தல்.

ருத்திராட்சத்தைத் தரிச்சுக் கொள்ளுகிறதும், ராசாவாயி யிருக்குறவன் கெந்த கஸ்தூரியாதி பரிமளத் திரவியங்களைத் தரிக்காமல், வீபூதி பஸ்மோதூளண தாரணங்கள் செயிதுக் கொண்டு யிருப்பான். அவனுக்குக் காந்தாரச்சோழனென்று பெயர் வருவானேனென்றால், மின்னாலே காஞ்சீபுரம் சிறிது காலம் காடாய் யிருந்துது. அதைச் சேதனம் பண்ணிக், காட்டை வெட்டிப் போட்டு சிறீ காமாட்சி யேகாம்பரேசுவர சுவாமிக்கு விமான கோபுர, பிரகார மண்டபங்களைக் கட்டி வச்சான். ஆனபடியினாலே அவனுக்கு காந்தரச்சேத சோழ மகாராசா வென்று பெயர் வந்துது !

அவன் சிறீ காமாட்சி யேகாம்பர யீசுவர சுவாமி சரணவிந்தப் பத்தி பரவசனாயி, சிவபக்தாளுக்குள்ளே, உத்தமனாயி, மதுராபுரிபட்டண வாசாளாயி யிருக்கப்பட்ட சிறீ சுந்தரேசுரசுவாமி சரித்திரக்

காட்சிபுர - காஞ்சிபுர; சிரவணம் - கேட்டல்; செந்த - கந்த - மணமுள்ள; மின்னாலே - முன்பு; வாசாளாய் - இருப்பவராய்; யெண்ணைக்கு - என்றைக்கு; தாஸனம் - ஸ்நானம்.

கதைகளைக் கேட்டுச் சரணார விந்த சேவாசித்தனாயி, "யெண்ணைக்கு மதுராபுரிப் பட்டணத்தை னான் பார்ப்பேன்? யெண்ணைக்கு னான் பொற்த்தாமரைத் தீர்த்தத்திலே யெண்ணைக்குத் தாஸனம் பண்ணுவேன்? யெண்ணைக்கு நான் ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவர சுவாமியினுடைய தெரிசனம் செயிவேனெ"ன்று, பிறிதினமும், சறுவதாயி, தாஸன பான, போசனாதிசயன ஆசீனமான சமையங்களிலே தன்மயமா யிருப்பன்.

5. யிப்படி யிருக்கச்சே, ஒருநாள் ராத்திரை நித்திரை பண்ணிக் கொண்டிருக்கச்சே சொற்பனம் கண்டான் ! அது யென்ன மென்றால், சிவன் பிறத்தியட்சமாயி கனாவிலே சொன்னது யென்னமென்றால், "ஓ ராசாவே ! நீ யிந்த ராத்திரியிலே வேஷாந்திரத்தைத் தரிச்சுக் கொண்டு, மதுராபுரிப் பட்டணத்துக்கு வந்து நம்மையும், உன்னுட அம்மையையும் தரிசனம் பண்ணி, சூரிய உதயம் ஆகியதுக்கு முன் காஞ்சிபுரப்பட்டணத்தில் உன்னுடைய மனைக்கு வந்து சேரும்படியாயி

சீக்கிறமே மனவேக சித்தியை உனக்குக் குடுத்திருக்கிறேன்; நீ சீக்கிரமாய் எழுந்திரு" என்று சொன்ன உடனே, காந்தாரச் சோழ மகாராசாவானவன் நித்திரை முழிச்சுக் கொண்டான். உடனே சிவயோக மார்க்கமாயி, வாயு வேகமாயி, மதுராபுரிப்பட்டணச் சமீபத்தில் யிருக்குற வேகவதி யென்கிற ஆறின் கரையைவந்து பார்த்தான்; அந்த வேகவதி நதியானது பூறணப் பிரவாகமாயி கரைகங்கு காணாமல் வருகிற ஆறின் பெருக்கத்தைப் பார்த்து, சிறீ சுந்தரேசுவர சாமி தெரிசனத்துக்கு தடங்கலாச்சுதே ! சூரிய உதயமானால் யிந்தப் பாண்டிய ராசாவானவன் நம்மைப் பிடிச்சுக் கொண்டு கப்பணம் வாங்கிப் போடுவானே ! நம்முடைய மானம் போகுதே ! யென்ன செய்வோமென்று மிகவும் விசனப்பட்டுக் கொண்டு யிருக்கச்சே, அப்போது ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரசுவாமியைச் சரண் அடைஞ்சு, சிவ சங்கர மகாதேவா ! சம்போ ! சுந்தரேசுவரா வென்று மிகவும் பிராத்திச்சான்.

கப்பணம் வாங்குதல் - ஒரு பழங்காலத் தண்டனைமுறை; இரும்பினாற் செய்த நெருஞ்சிமுள் கொண்டு தண்டித்தல்.

6. அதற்க்கு சிறீ சுந்தரேசுவர சுவாமி சந்துஷ்டராயி, சித்த ரூபத்தராய் வந்து, தன்னுடைய கோவில் கதவைத் திறந்துகொண்டு, முன்னே வந்து, யிப்படிப் பிராத்தித்த காந்தாரச்சேத சோழன் முன்னே வந்து, வைய்கை யாத்தை மணல் தெரியத்தக்கதாயிப் பண்ணி, காந்தாரச்சேத சோழ மகாராசாவைத் தன்னுடைய கூட அழச்சுக்கொண்டு, மதுராபுரிப் பட்டணத்துக்குள்ளே சுந்தரேசுவரசுவாமி கோவிலுக் குள்ளே வந்தார். அதற்குப் பிற்பாடு, யெம பஸ்மாகர தீர்த்தத்திலே காந்தாரச் சேதச் சோழ மகாராசாவைத் தாஸணம் பண்ணிவைய்த்து, ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவர சுவாமியையும் தெரிசனம் பண்ணிவைய்த்து, திரும்பவும் பாண்டிய ராச்சியம் விட்டு, அவனுடைய காஞ்சிபுரப் பட்டணத்தில், தன்னுடைய அரைமனை யிலே, சயனத்தானத்திலே வந்து சயனிச்சுக் கொண்டிருந்தான். யிப்படி யிரக்கச்சே, சூரிய உதையம் ஆச்சுது. மதுராபுரிப் பட்டணத்தில், ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி கோவில் கதவு திறக்க பூசகாள் வந்தார்கள். அப்போது, நித்தியமம் கோவில் கதவு மூடி, பூட்டுப்

போட்டு பூட்டிக்கொண்டு, அதின்மேலே பாண்டிய மகாராசாவினுடைய மச்சிய முத்திரை போட்டுப் போட்டு வீட்டுக்குப் போகுறது வாடிக்கை, அப்படிப்போலே அன்னைக்கு யிராமல், அதை அழிச்சுப்போட்டு, சோழதேசாதிபதியாகிய சோளமகா ராசாவினுடைய ரிஷப முத்திரை போட்டு யிருந்தது. கோட்டை வாசலிலேயும் யிப்படியேதானே ரிஷப முத்திரை போட்டிருந்தது. அத்தைத் துவாரபாலகர் களான வாசல்க்காவல்காறர் வந்து குலபூஷண பாண்டிய மகாராசாவினுடனே சொன்னார்கள். அப்படிப்பட்ட சேதி கேட்ட உடனே, குலபூஷண பாண்டிய மகாராசாவானவர், அந்தக் கோட்டை வாசலிலே யிருக்குற துவார பாலகர்கள் பேரில் மிகவும் கடினமாயிக் கோபம் பண்ணி, "யென்ன நிமித்தியமாக யிப்படிப்பட்ட அன்னிய தேசாதிபதியாகிய சோழ மகாராஜாவினுடைய முத்திரை வரவேண்டிய காரணமென்ன வென்று, விசாரணை பண்ணி, யிந்தட்செணம் சமாச்சாரம் வந்தாலாச்சுது, வரா

---

6. பூசகாள் - அர்ச்சகர்கள்; மச்சிய முத்திரை - மீன் முத்திரை; ரிஷப முத்திரை - காளை முத்திரை.

விட்டால் உங்களை கடிமான உக்கிர தெண்டினை பண்ணிப்போடுனெ"ன குல பூஷண பாண்டிய மகாராசாவானவர் சொன்னார்.

7. அப்படி இருக்கச்சே, அண்ணைத் தினம் ராத்திரி, குலபூஷண பாண்டிய மகாராசாவானவர் அங்கிசதூளிகா தலபத்திலே நித்திரை பண்ணிக் கொண்டிருக்கச்சே, சிவன் வந்து கனவிலே சொன்னார்; இந்தப்படி நடந்த சமாசாரத்தை அப்பரம் மகாராசா முழிச்சுக் கொண்டு சந்தோஷத்தை அடைந்தார்.

கதை முற்றும் 2.

அதற்குப் பிற்ப்பாடு, குலபூஷண பாண்டிய மகாராசாவுக்கு ராசேந்திர பாண்டிய மகாராசா வென்றும், ராசசிம்மபாண்டிய மகாராசா வென்றும், ரெண்டு புத்திராள் பிறந்தார்கள். அதிலே சேஷ்ட புத்திரனான ராசேந்திர பாண்டிய மகாராசாவுக்கு பட்டா அபிழேகம் பண்ணிவச்சு, சிறுது நாளைக்குப் பிறகு, குலபூஷண பாண்டிய மகாராசாவானவர், ஸ்ரீ கயிலாசத்தை அடைந்தார். அதற்குப் பிற்பாடு,

ராசேந்திரபாண்டிய மகாராசாவானவர் நீதியாயி ராச்சித்தை ராச்சிய பரிபாலினம் பண்ணிக் கொண்டு வந்தார். அப்போது, அந்த ராசேந்திர பாண்டிய மகாராசாவினுடைய சேதி யென்னமென்றால், ஸ்ரீகளுக்கு மன்மதாகாரனா யிருக்குறது; பராக்கிரமத் திலே, ஸ்ரீ சுப்பிறமணியர் ரூபனாகவும், அசுவகளா விஷ்ஷேஷணத்திலே ரேவதனாகவும், தேசசிலே சூரிய சமானனாகவும், பொறுமையில் பூமதேவிக்குச் சமானமாகவும், அயிசுவரியத்தில், தேவேந்திரனுக்குச் சமானமாகவும், தேசதேசங்களிலே யிருந்து வரப்பட்ட மகாவித்துவாங்கிஷாளுக்கு, அனேக தன கன வஸ்திராதிகளை குடுத்துக் கொண்டு, யிந்தப் பிறகாரமாக நீதியாயி, ராச்சியத்தை ராச்சிய பரிபாலினம் பண்ணிக்கொண்டு வந்தார்; யிப்படிப்பட்ட ராசேந்திர பாண்டிய மகாராசாவினுடைய குணா அதிசயத்தைக் காஞ்சிபுரதேச பட்டினம் ராசா காந்தாரச்சேதச் சோழ மகாராசாவானவர் கேட்டு, தனக்கு யிவருடைய சினேகத்தைச் சம்பாரிக்க வேணுமென்று மனசிலே யோசனை பண்ணிக்

கொண்டு, தன்னுடைய மகளான பறுவேந்விம்பானனா ளானவளை யிவருக்கு கலியாணம் பண்ணி கொடுக்க வேணும் யென்று மனசிலே யோசனை பண்ணிக் கொண்டு தன்னுடைய மந்திரியில் சமர்த்தனான மந்திரியை பாண்டியராசாவான ராசேந்திர பாண்டிய மகாராசாவினிடத்துக்கு அனுப்பிவிச்சார். அந்த மந்திரியானவர் மதுராபுரிப் பட்டணத்துக்குப் போயி, ராசேந்திர பாண்டிய மகாராசாவினுடைய பேட்டி வாங்கிக் கொண்டு, அந்த காந்தாரச்சேதச் சோழ மகாராசா குடுத்த வெகுமானங்க ளெல்லாம் குடுத்து, அந்தக் காந்தாரச்சேதச் சோழ மகாராசா சொன்ன சமாசாரங்களெல்லாம், ராசேந்திர பாண்டிய மகாராசா வினுடனே சொன்னான். அதற்கு, ராசேந்திர சோழ மகாராசாவானவர் கேட்ட உடனே மிகுந்த சந்தோஷத்தை அடைஞ்சு, தன்னுடைய புரோகிதனை அழைப்பிவிச்ச, தனக்குக் கலியாணத்துக்கு ஒரு முகுற்த்தத்தை நிட்சயம் பண்ணச் சொல்லிச் சொன்னார்.

---

7. அசுவகளா விஷ்வேஷணத்திலே ரேவதனாகவும் - அசுகலா, பிக்கேனத்திலே ரேவதனாகவும் - உயிரை எடுப்பதில் எமனாகவும்

8. அந்தப் புரோகிதனானவன் அவருக்கு பொருந்திய ஒரு சுபமுகுற்தத்தை வைச்சு மகாராசா வுடன் சொன்னான். அதற்குப் பிற்பாடு ராசேந்திர பாண்டிய மகாராசாவானவர், அந்த காந்தாரச் சேத சோழ மகாராசாவினுடைய மந்திரியைப் பாத்து சொன்னாது யென்னவென்றால், நமக்குக் கலியாண முகுற்த்தம் நிலவரம் பண்ணியிருக்கிறது, அந்த முகுற்த்தத்துக்கு னாம் சகல சன்னாகத்துடனே கூட காஞ்சிபுரத்துக்குப் (போங்கள்) யென்று சொல்லி, அந்த மந்திரிக்கி தன, கனக வஸ்து வாகனாதி முதலானது சகல உபசாரம் சொல்லி, குடுத்து அந்த மந்திரியை காஞ்சிபுரத்துக்கு அனுப்பிவிட்டான். யிந்தச் சமாசாரம் ராசசிம்ம பாண்டிய மகாராசா வெங்கிறவன் கேட்டு, காஞ்சிபுரத்துக்குப் பழணமாயிப் பிறப்பட்டு காஞ்சிபுரத்துக்குப் போய்ச்சேந்து, காந்தாரச் சேத சோழ மகாராசாவைக் கண்டு "ஓயி காந்தாரச் சேதச் சோழ மகாராசாவே உம்முடைய கன்னியான சந்திர வதனையான பறுவேந்து பிம்பானனையான கன்னிகையை யெனக்குக் கலியாணம் பண்ணிக்

குடுமென்று கேட்டான். தன்னுடைய அண்ணனான ராசேந்திர பாண்டிய மகாராசாவுக்குக் கலியாணம் பண்ண நிலவரம் பண்ணின பெண்ணை, தான் கலியாணம் பண்ணுகுறது அதற்மமென்று தான் அறியாமல் அந்தப் பாவத்துக்குத் தான் சம்மதிச்சுக் கேட்டான். அதற்குக் காந்தாரச் சேதச் சோழ மகாராசாவானவராகிலும் அண்ணனுக்கு நேமித்த பெண்ணை தம்பிக்கிக் குடுக்கிறது தற்மம் அல்லவென்று யெண்ணாமல், அந்தக் காந்தாரச் சேதச் சோழ மகாராசாவானவர் தன்னுடைய பெண்ணாகிய பறுவேந்து பிம்பானனை யெங்கிறவளை பாண்டிய தேசாதிபதியாகிய ராசசிம்ம பாண்டியனுக்கு கலியானம் பண்ணிக் குடுத்தான்.

அதற்குப் பிறபாடு, தானும் தன்னுடைய மருமகனான ராசசிம்ம பாண்டிய மகாராசாவும் யிந்த யிருவரும் கூடி யோசனை பண்ணினது யென்ன மென்றால், ராசேந்திர பாண்டிய மகாராசாவினுடைய ராச்சியத்தை அபகரிச்சுக்கொள்ள வேணுமென்று யோசனைபண்ணி, அந்த ராசசிம்ம பாண்டிய

மகாராசாவான தன்னுடைய மருகன் உடனே தன்னுடைய அனேக ரதகெச துரக பதாதிகளான சேனைகளைக் கூட்டி யுத்தம் செய்வதற்கு பாண்டிய தேசத்துக்கு அனுப்பிவிட்டான் அந்த ராசசிம்ம பாண்டிய மகாராசாவும், அனேக தளத்துடனே வந்து கோட்டை சமீபத்திலே தண்டோட கூடப்போயி யிறங்கினான்.

9. யிந்த சமாசாரம், ராசேந்திரபாண்டிய மகாராசா வானவர் அறிஞ்சு, மனசிலே வெகு சிந்தாக்கிறுந்த னாயி, நமக்காட்டிலும் சத்துரு பெலம் அதிகமாயி யிருக்குதே ! அதற்கு நாம் யென்ன செய்வமென்று, யிதற்கு மனுழயெத்தினத்தினாலே யொண்ணும் ஆகுறதில்லை யென்று, ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவர சுவாமி கோவிலிலே வந்து, சுந்தரேசுவரர் முன் நின்றுக் கொண்டு தோஸ்த்திரம் பண்ணினது யென்ன மென்றால், "சுவாமி ! சங்கரா! மகாதேவா ! சம்போ ! யென்னுடைய தம்பியான ராசாசிம்ம பாண்டியனெங்கிறவன், யெனக்கு நிலவரம் பண்ணி

---

8. சன்னாகம் - கவசம்; இங்கே பாதுபாப்பு; பழணமாயி - பயணமாகி; தளம் - படை.

யிருந்த பெண்ணைத் தான் கலியாணம் பண்ணுகுறது அதற்மமென்றும் யெண்ணாமல், அந்த பறுவதவிம் பானனை யெங்கிற பெண்ணையும் கலியாணம் பண்ணிக்கொண்டு அவனுடைய மாமனார் ஆன காந்தாரச்சேதச் சோழ மகாராசா வினுடைய அனேக சேனைகளையும் வாங்கிக் கொண்டு, யிந்தப் பாண்டிய ராச்சியத்தையும் ஆக்கிறுமிக்க வேணுமென்று அனேக சேனையுடனே கோட்டை வாசல் சமீபமான கிராமத்திலே வந்து யெறங்கியிருக்குறான். ஆகையி னாலே யிதற்க்கு வேறே யொரு உபாயமும் காணேன்; யெனக்கானால்ச் சேனைகள் கொஞ்சமாயி யிருக்குது. அவனானால் அனேக சேனையுடனே வந்து யிருக்குறான். ஆனபடியினாலே நீர் அவனையும் அவனுக்குப் பெலமாக வந்து யிருக்குற சேனையையும் ஆக்கிறிமிச்சு நிக்கிறீச்சு, யென்னை ரெட்சிக்க வேணுமென்று ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவர சுவாமி சன்னிதானத்திலே நின்று பிறாத்திச்சான். அப்போது, அதற்க்கு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவர சுவாமியானவர் அசிரீற வாக்காயிச் சொன்னது

யென்னமென்றால், "ஓ ராசேந்திர பாண்டிய ராசாவே! நீ யொண்ணுத்துக்கும் பயப்பட வேண்டியதில்லை ! நாளைத் தினம் உன்னுடைய சதுரங்க பலத்துடனே கூடிக்கொண்டு உயித்தியத்துப் போம் பிள்ளாயி ! உனக்கு செயம் வரும் !" மென்று ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவர் சுவாமி, ஆகாச வாக்காகச் சொன்னார்.

10. அப்போது, ராசேந்திர பாண்டிய மகாராசாவானவர், வெகு சந்தோஷத்தை அடைந்த மறுனாள் ரதத்தின் பேரிலே யேறிக்கொண்டு ரத கெச துரக பதாதிகளுடனே கூடக்கொண்டு ரெண்டு பேரிகை முதலான வார்த்தியங்கள் முழங்கத்தக்கதாயி, சூரிய உதையகாலத்தில் யுத்தத்துக்குப் போனான். அப்போது, தன்னடைய சதுரங்கமேல் சேனையை மண்டல யூகமாயி நிறுத்தி, யுத்தம் செய்யத் தொடங்கினான். அப்போது. ராசசிம்ம பாண்டிய னெங்கிறவன் ஒரு பக்கமும், காந்தாரச்சேதச் சோழ

'சிந்தாக்கிறுந்தனாயி' - கவலையுற்றவனாகி; சத்துரு - பகைவர்; 'மனுழ' - மனித; நிலவரம் பண்ணியிரந்த - நிச்சயித்திருந்த; 'ஆக்கிறுமிக்க' - ஆக்கிரமிக்க; 'நிக்கறீச்சு' - அழித்து.

மகாராசாவானவர் ஒரு பக்கமுமாயி நின்றுக்கொண்டு, தங்களுடைய ரத கெச துரக பதாதிகளான சேனை களைப் படலம் படலமாயிப் பிறிச்சு, அற்த்த சந்திராகார வியூகமாயி நிறுத்தி யுத்தம் பண்ணி னார்கள். அப்போது வீர சூராளான ராவுத்தமார் சிம்மனாதம் போலே ஊங்கார சத்தம் செய்தார்கள். அவாளுடைய தனுசுகளிலேநின்றும் வாணம் பெய்யச்சே டங்காரச்சத்தங்க ளுண்டாச்சுது ! ஆனைகள் விறுமித கோஷங்கள் பண்ணிச்சுது ! குதிரைகள் யெழா ரவங்கங் பண்ணிச்சுது; பேரி வாங்காரத் தொனிகளி னாலே திக்குகளெல்லாம் முழங்கிச்சுது ! யிந்தப்பிற காரம் கெசரூடாளுக்கும் ரதாரூடாளுக்கும், பதாதி களுக்கும் படர்களுக்கும், அய்யாரூடாளான ரவுது களுக்கும் துரகாரூடாளான சிப்பாயிகளுக்கும் அனேக யுத்தம் நடந்தது ! அந்த யுத்தமானது, பார்த்தால் ராம ராவண யுத்தம் போலவும் சூரபற்மாவுக்கும் சுப்பிரமணிய சுவாமிக்கும் நடந்த யுத்தம் போலவும் யிப்படி யிருவருக்கும் யுத்தம் நடந்தது. அப்போது ராசேந்திர பாண்டிய மகாராசாவினுடைய சயினியங்கள்

வெத்தியமாயி கெலிச்சார்கள். அப்போ காந்தாரச் சேதச் சோழ மகாராசாவினுடைய சயினியமானது யிரு பக்கத்திலேயும் வந்து யுத்தம் பண்ணத் தொடக்கினார்கள். அப்போ, அந்த ராச சிம்ம பாண்டியன் யுத்தம் பண்ணினவிடத்தில், அவனுடைய சயினியமானது தளம் வெச்சாயி அடிப்பட்டுப்போயி, கொஞ்ச பெலத்துடனே தோயமாயி நின்றான் ! அதை ராசேந்திர பாண்டிய மகாராசாவானவர் பார்த்து, அந்த ராசசிம்ம பாண்டிய ராசாவைக் கைப்படியாயிப் பிடிச்சுக்கொண்டு வரச்சொல்லி, தன்னுடைய சேனைகளை அனுப்பிவிச்சான். அந்தச் சேனைகளெல் லாம் திரண்டு வருகிறதைப் பார்த்த காந்தாரச்சேத சோழ மகாராசாவானவர், வெகு சேனைகளுடனே

---

10. கெச - யானை; துரக - குதிரை; பதாதி - காலாள்; இப்பகுதியில், பழந்தமிழ்ப் போர் முறைகள் நுவலல் காணலாம். பேரி - தோற்கருவி; கெசாருடாள் - யானை மீதுள்ள வீரன்; ரதாருடாள் - இரதத்தில் உள்ள வீரன்; படர்கள் - படைவீரர்கள்; அய்யா ருடாள் - அயம் ருடாள் - குதிரை மீதுள்ளவர்; ரவுது - குதிரைப் போர் வீரர்; சூரபற்மா - சூரபத்மன்; சயினியம் - படை; வெத்தி - வெற்றி; கெலித்தல் வெற்றி பெறுதல்; வெச்சாயி - மிகுதியாய்; தோயமாய் - தோல்வியாய்; தண்டில் - படையில்.

ராசசிம்ம பாண்டிய மகாராசாவினுடைய தண்டிலே வந்து கூடிக்கொண்டு ராசசேகர பாண்டிய மகாராசாவி னுடைய சேனையின் பேரில் யுத்தம் பண்ணினான்.

11. அப்போது, ரத, கெச, துரக பதாதிகளுடைய கால்த்தூளிகளினாலே ஆகாச மார்க்க யெல்லாம் நிறைஞ்சு யிருட்டாயி அதினாலே 'தன்னவன் யிவனெ'ன்றும், 'பிறத்தியான் இவனெ'ன்றும் ஒருவருக்கு ஒருவர் அடையாளம் தெரியாமல் ஒருத்தனை யொருத்தன் வெட்டுகிறதும், ஒருத்தனை யொருவன் பிடிச்சுக்கொண்டு மல்ல யுத்தம் பண்ணுகிறதும் யிந்தப் பிரகாரமாக அனேக விதமாய் யுத்தம் நடந்துது. அப்போ, உபய சேனைகளிலே யிருக்குற வீராள் ஒருவருக்கு ஒருவர் யுத்தம் பண்ணுகிற சமயத்தில், ரெத்தமானது ஒரு ஆறாகப் பிறவேகித்துது ! அதிலே ஆனைகளுடைய தலை களும், அதினுடைய முண்டங்களும், குதிரைகளுடைய தலைகளும், மாடுகளுடைய தலைகளும், மனுஷா ளுடைய தலைகள் உடல்களும் யிந்தப் பிறகாரமாயி மிதந்து போனது யெப்படி யிருந்துது யென்றால்,

ஆத்துகளிலே மீனங்களும், முதளைகளும் போறதுபோலே தோணப்பட்டு, யிப்படி யுத்தமானது சூரிய உதயமுதல்க் கொண்டு பகலிலே பதினஞ்சு னாழிகை வரைக்கும் யுத்தம் நடந்துது. அதற்கு மேல் சூரியனுடைய கிரணங்களுடைய உஷ்ணத்தின் படுவேகத்தைச் சகிக்கமாட்டாமல் யிருவருடைய சேனைகளும் ஒருவர்க்கொருவர் பின்வாங்கிப் பாண்டிய சோழனுடைய ரத, கெச, துரக, பாதிகளான சதுரங்க பெலங்களும் பசிதாகத்தினாலே, நாக்கு வாய்களெல்லாம் காஞ்சுபோயி, மூர்ச்சித்தாளாயி வெகு சீர்மைப்பட்டுப் போனார்கள் !

12. அதினாலே, யிருவருக்கும் யுத்தம் நடக்கிறது நின்னுபோச்சுது ! அந்த சமையத்திலே, ராசேந்திர பாண்டிய மகாராசாவினுடைய சேனைகள் நடுவே பக்த ரெட்சகரான, சறுவயெஞ்ஞரான, செகக்காரண

---

11. உபய சேனை - இரு சேனைகள்; சறுவயெஞ்ஞர் - சர்வக்ஞர்; செக - உலக; ருத்திராட்ச கண்டமாலிகா பூஷிதன் - உருத்திராக்க மாலையைக் கழுத்தில் அணிந்தவன்; பஸ்மோதூளித் திருபுண்டாங்கிதன் - விபூதியை மூன்று பட்டையாய் நெற்றியில் அணிந்தவன்.

ரான ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் சுவாமி, ருத்திராட்ச கண்டமாலிகா பூஷிதனாயி, பஸ்மோதூளித் திருபுண்டராங்கிதனாயி, ஒரு சிவபக்த வேஷத்தைத் தரிச்சுக்கொண்டு, தண்ணீர்ப் பந்தல் போட்டு, அந்தத் தண்ணீர்ப் பந்தலிலே, நீர் மோர்ப்பானைகள் வத்தாமலிருக்குறதும், வத்தாமலிருக்கப்பட்ட குளிர்ந்த செலப்பானைகளும், வத்தாமலிருக்கப்பட்ட கொள்ளுக் கஞ்சிப் பானைகளும் யிப்படிப்பட்ட சகலசாமான் தண்ணீர்ப் பந்தலுக்கு வேண்டிய வெகு விதமான விசிறிகளும் வச்சுக்கொண்டு, ராசேந்திர பாண்டிய னுடைய சேனைகளெல்லாருக்கும் தண்ணீர்கள் வார்த்தார் அனேக ருத்திராட்சத்தைத் தரிச்சுக் கொண்டு. அப்போது, அந்த ராசேந்திர பாண்டிய மகாராசாமினுடைய சதுரங்க சேனைகளும் செகதீசுவரரான ஸ்ரீமீனாட்சிசுந்தரேசுவர சுவாமியி னுடைய கையினாலே செல்பானம் பண்ணினதினாலே சகல சிரமமும் அந்த சேனைகளுக்குத் தீர்ந்து, தயிர்யமும் மிகவும் சவுரியமும், வீரியமும் வெகு பெலமும் மிகுந்த பராக்கிரமும் மிகவும் உண்டாச்சுது!

ஸ்ரீசுந்தரேசுவர சுவாமி பிரசாதத்தினாலே அப்போ அவாள் அந்தக் காந்தாரச்சேத சோழ மகாராசாவி னுடைய சேனைகளுக்கும், ராசசிம்ம பாண்டியனுடைய சேனைகளுக்கும் மிகுந்த பயமுண்டாகத் தக்கதாக ஒரு ஒரு கிறுச்சனைகளைப் பண்ணிக்கொண்டு யுத்தம் பண்ணினார்கள் ! அப்போது, அந்தக் காந்தாரச்சேதச் சோழ மகாராசாவினுடைய சேனைகளும், ராச பாண்டிய மகாரராசாவினுடைய சேனைகள் சிறிது பேர்கள் யுத்தத்திலே செத்துப் போனார்கள் ! சிறிது பேர்கள் காயம்பட்டு. கீழே விழுந்து போனார்கள் ! சிறிது ரத, கெச, துரக பதாதியான சதுரங்க சேனைகள்ளோடிப்போனார்கள் ! காந்தாரசேதச் சோழ மகாராசாவும் ராசசிம்ம பாண்டிய மகாராசாவும் சேனா பெலயீனாளா யிருந்தார்கள் !

13. அப்போ, அத்தைப் பார்த்து ராசசிம்ம பாண்டிய மகாராசனுடைய பதாதிகளும் ரவுதுகளும் போயி அந்த காந்தாரச் சேதச் சோழ மகாராசா

---

12. கிறுச்சனை - கர்ச்சனை; பெலயீனாள் - பலஹீன ஆட்களாக; சமீதனாயி - சமேதனாக.

வையும் கையிப்பிடியாயிப் பிடிச்சுக்கொண்டு வந்து ராசேந்திர பாண்டிய மகாராசாவினிடத்திலே கொண்டு வந்து விட்டார்கள் ! அவாளுக்கு அனேக தன, கனக, வஸ்த்து வாகனாதி, பூஷண, ஆபரண வஸ்திராதிகளும் குடுத்து, செயலட்சுமி சமீதனாய் ராசேந்திர பாண்டிய மகாராசாவானவன் விறுத்திரா அசுராதி அசுரர்களை கெலிச்ச தேவேந்திரனைப் போலவும் தன்னுடைய மதுராபுரிப்பட்டணத்துக் கொள்ளே பிரவேசிச்சான், அப்போ அந்த மதுராபுரிப்பட்டணத்து வீதிகளிலே யிருக்கிற ஸ்ரீகள் ராசாவின் மேலே யிருந்து முத்துக்கள் மாணிக்கம் யெங்குற அட்சதைகளினாலே சுத்திப் போட்டார்கள் ! பின்னையும் சிறிது ஸ்ரீகள் மகாராசாவுக்கு ஆலாத்தி யெடுத்தார்கள் ! அப்போது அவாளுக்கு வெகுமானம் கொடுத்து அஷ்ட்டாதிச வார்த்தியங்களுடனே தன்னுடைய அரமணைக்குப் போயிச் சேர்ந்தார்.

அப்புறம், அந்தக் காஞ்சிபுர பட்டணத்துக்கு ராசாவான காந்தாரச் சோழ மகாராசாவையும்

13. *அஷ்டாதிச - பதினெட்டு வகை; வார்த்தியம் - வாத்தியம்.*

தன்னுடைய தம்பியான ராசசிம்ம பாண்டிய மகாராசாவையும் காவல்க் கூடத்திலே வச்சார். அதற்கு பிறபாடு, தன் தம்பிக்கு மாமனாரான காந்தாரச்சேதச் சோழ மகாராசாவை காவல் கூடத்திலே நின்னும் அழப்பிவிச்சு, அவருக்குச் சகல வெகுமதிகளும் பண்ணி, புத்திமதிகளும் சொல்லி, யினிமேல் யிப்படிப்பட்ட காரியங்கள் செய்யவேண்டாமென்று சொல்லி அவருக்கு சிறிது சேனைகளும் கூடக் கூட்டி, அவரை காஞ்சிபுரப் பட்டணத்துக்கு அனுப்பிவிட்டார். அப்புறம் தன்னுடைய தம்பியான ராசசிம்ம பாண்டியனை, காவல் கூடத்திலே நின்றும் அழப்பிவிச்சு அவனுக்கும் அனேக வெகுமானங் களைக் குடுத்து, அவனுக்கு அனேக புத்திமதிகளைச் சொல்லியினிமேல் யிப்படிப்பட்ட துற்ப்புத்திகளை நினைக்காதே யென்று சொல்லி அவனுக்கு சிறிது பாக்கிய அய்சுவரியங்களைக் குடுத்து, அவன் தன்னுடைய ஆக்கினைக்குள்ளே அடங்கியிருக்கும் படியாயி தன்னுக்குள்ளே வச்சுக்கொண்டு யிருந்தார்.

14. அப்புறம் ராசேந்திர பாண்டிய மகாராசா வானவர் அந்தப் பாண்டிய மண்டலத்தை வெகு

நீதியாயி ஞாயமாயி ராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டு யிருந்தார். அப்புறம் ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவர சுவாமியினிடத்திலே அதிக பத்தி பண்ணிக்கொண்டு யிருந்தான். அந்தச் சிவப்பிறகாசத்தி னாலே ராசேந்திரனெங்கிற பாண்டிய மகாராசாவுக்கு ராசேசுர பாண்டிய மகாராசாவென்று மொரு பிள்ளை பிறந்தான், அவனும் செறிது நாள் பாண்டிய மண்டலத்தை ஞாயமாயி ராச்சியாதி யுத்தம் பண்ணினான். அவனுக்கு ராசகம்பீர பாண்டிய னெங்கிற குமாரன் பிறந்தான். அவன் பாண்டிய தேசத்தில் பிறிதிக் கிராமமும் அனேக சிவலிங்கப் பிறதிட்டைகளும் செயிதான். அவனுக்கு ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரருடைய கிருபா கடாட்சத்தினாலே பாண்டிய வம்மிச பறதிபக பாண்டிய மகாராசாவென்று ஒரு புத்திரன் பிறந்தான். அவன் வெகுகாலம் பாண்டியமண்டில பட்டணத்தை ராச்சியபரிபாலினம் செய்து ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரருடைய கடாட்சத்தி னாலே அந்நியத்திலே சிவசாயுச்சிய முத்தியை அடைந்தான். அவனுக்கு புருஊதசித்து பாண்டிய

மகாராசாவெங்கிற புத்திரன் புறந்தான். அவனுக்கு பாண்டிய வங்கிஷபதாக பாண்டிய மகாராசா வென்று ஒரு புத்திரன் புறந்தான். அவன் தன் பாண்டிய மண்டலத்திலே யிருக்கப்பட்ட செனங்களை சரியை, கிரியை, யோக, ஞானம் யெங்கிற சிவ தற்மபராளாயி செயிவித்தான். அவனுக்கு சுந்தரேசுவர பாதசேவக பாண்டிய மகாராசாவென்று ஒரு புண்ணிய குமாரன் பிறந்து அனேக சிவதற்மங்களைப் பண்ணினான்.

யிப்படிச் சொல்லப்பட்ட பாண்டிய மகாராசாக்கள் யிது யெப்போ வென்றால் கலியுகத்திலே ஆயிரம் வருஷம் செண்ணத்துக்குப் பிற்பாடு யிவாள் ராச்சிய பரிபாலினம் பண்ணினது.

கதை முற்றும் - 3

15. அந்த மதுராபுரி பட்டணத்திலே ராசதானி பண்ணிக்கொண்டு பாண்டியராசாவானவர் ராச்சிய பரிபாலினம் பண்ணிக்கொண்டு யிருக்கச்சே அந்தப் பாண்டிய மண்டலத்தில் புஷ்ப்பவனமென்று வொரு

14. *பிறிதிக்கிராமம் - பிரதிகிராமம் - ஒவ்வொரு கிராமம்.*

புரம், அந்தப் புரத்திலே சூரியனுக்குப் பிரசன்னமான சகல கர்மங்களைக் குடுக்கப்பட்ட சொயம்பு லிங்கமான சிவலிங்கம் யொண்ணு உண்டு. அந்த சிவாலயத்தில் ஒரு தாசியான யேமனாயகி யென்று பெயரை யுடைத்தான தேவடியாள் யொருத்தி அவளுக்கு பரத சாஸ்த்திரம் சங்கீத சாஸ்திரம் யிந்த வித்தைகள், நிற்த கீத வித்தைகளிலே மிகவும் கெட்டிக்காரிகளாயி யிருப்பாள். மேலும் அதிசயமான சவுந்தர குணசாலியானவள்; சிவனிடத்திலேயும் மிகவும் பத்தியுள்ளவள். அவள் நித்தியமும் பாதக்காலத்திலே ஸ்தானாதி நித்திய கிறித்தியங்களை முடிச்சுக்கொண்டு, மெவுதுவாயி அமொல்லியமாயி சுசியாயி யிருக்கப்பட்ட வெள்ளை வஸ்த்திரங்களைத் தரிச்சுக் கொண்டு, நெத்தியில் வீபூதி தாரணம் பண்ணிக் கொண்டு, கண்டத்திலே ருத்திராட்ச மணிகளைத் தரிச்சுக்கொண்டு, தன் வீட்டிலே சுசியான யிடத்திலே யிருந்து, சிவபூசை பண்ணிக்கொண்டு, கோவிலுக்கு வந்து தன்னுடைய கையிகாட்டு முறை வேலைகளை நிறைவேத்துகிறதும், சிவ

சன்னிதானத்திலே மிகுந்த பத்தி சிரத்தையுடனே கூடக்கொண்டு, பரத சாஸ்திரத்திலே சொல்லப்பட்ட பாவமும், ராகமும், தாளமும் தப்பாமல் யிந்த மூன்று விதமும் யதா சாஸ்திரயுக்தமாயி, சங்கீத சாஸ்திரத்திலே சொல்லப் பட்ட ராகாலாபம், கண, நய, தேசியம் யெங்கிற மூன்று விதமும், லயம் தப்பாமல் படிக்கி தச, ரசங்களுடைய பாவங்களை யெந்த யெந்த வேளையில், யெந்த யெந்த ரசத்தினுடைய யெந்த யெந்த பாவங்கள், யெப்படி யெப்படி காண்பிக்க வேணுமோ அப்படி அப்படி விபாவமும் அனுபாவமும், சாத்துவிக பாவமும், சஞ்சாரி பாவமும் ஸ்தாயி பாவ மெங்கிற அஞ்சு பாவகமும் யொரு ரசத்துக்கு தோணும்படியாயி காண்பிச்சு நடனம் ஆடுகுறதும், தச ரசங்களைாவது - முதலாவது, சிங்கார ரசம் - 1; ரெண்டாவது, வீர ரசம் - 2; மூன்றாவது, கருணாரசம் - 3; னாலாவது ஆசிய ரசம் - 4; அஞ்சாவது கற்புர ரசம் - 5; ஆறாவது, ரவுத்திர ரசம் - 6; ஏழாவது, பயானக ரசம் - 7; எட்டாவது, விவச்சு ரசம் - 8; ஒன்பதாவது, சாந்தி ரசம் - 9; பத்தாவது,

பத்திரசம் - 10, யிப்படிப்பட்ட தெச, ரச பாவங்களையும்.. னாட்டியம் பண்ணுகுறதும், இந்தப் பிறகாரமாயி மூணுகாலமும் சிவபத்தி பண்ணுகுறதும் ராத்திரி தன்னிடத்திலே வருகுற விடபுருஷாளுக்கு, யெந்தப் புருஷனிடத்திலே போகார்த்த மாயித் திரவியம் வாங்கினாளோ அந்தப் புருஷனிடத்திலே வினைய பயபத்தி விசுவாசத் துடனே அவாளிடத்தில் தேவதா பத்தி பண்ணி அவாளிடத்தில் திரவியம் கிறவிச்சு அந்தத் திரவி யத்தை சிவபத்தாளுக்கும் அன்னதானம் குடுக்கிறது! வஸ்திரம் முதலானது குடுக்கிறதும், சின்ன பெண்களாயி வேலைகளுக்கு வாங்கி, அவாளுக்கு நிற்த்த கீத வித்தைகளை கற்ப்பித்து, கோவிலிலே நிற்த்தம் பண்ணிக்கொண்டு யிருக்க விடுகுறதும். முடவர்கள், குருடர்கள், கூனர்கள், வியாதியானவர்கள் யிப்படிப் பட்டவர்களுக்கு அன்னம் போட்டு, துணிகள் வாங்கிக் குடுக்கிறதும்,

---

15. நிற்த - நிருத்த - நடன; மெறது - மிருது; சுசி - தூய்மை; சொயம்பு - சுயம்பு - அதுவாக உண்டானது; தாரணம் - தரித்தல்; யதாசாஸ்திர யுக்தம் - சாஸ்திரப்படி. தசம் - பத்து; விவச்சு - பீபத்சம்; தெச - தச - பத்து; போகார்த்தமாய் - அதிகமாய்; கிறிவிச்சு - கிரகித்து.

யிந்தப் பிறகாரமாயி அனேகம் சிவபத்தியான தற்மங்களைப் பண்ணுகுறதும் யிப்படியே வெகுனாளாயி தற்மம் பண்ணிக்கொண்டு யிருந்தாள்.

16. யிப்படி யிருக்கச்சே, அந்த புஷ்பவன புரத்திலே யிருக்குற கோவிலுக்குப் பொன்னுனாலே உச்சப விக்கிறகம் பண்ணி வைக்க வேணுமென்று நிலவரம் பண்ணிக்கொண்டு சிப்பசாஸ்திரம் உள்ளபடி அறிஞ்சிருக்கிற சிப்பாசாரிகளை அழப்பிச்சு, தான் நினைத்தபடிக்கி மொழுகுனாலே உச்சபவிக்கிறகம் போலே பண்ணி, நித்திய நித்தியமும் சராமார்க்கத்தி னாலே சம்பாரிக்கிற திரவியத்தை சிவ பத்தாளுக்குக் குடுக்கிறதும், மத்து முண்டாகிய தற்மம் பண்ணுகுறத் துக்கே தான் சம்பாரிக்கிற திரவியம் காணுகுறதே யல்லாமல், யிவள் யெத்தினம் பண்ணின உச்சப விக்கிறகம் பண்ண பணம் மீராமல், மிகுந்த விசனத்தினாலே சிந்தாக்கிறாந்தியாகி யிருந்தான்.

17. அப்போது, ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவர சுவாமி, சித்த வேஷத்தைத் தரிச்சுக் கொண்டு சிவ

---

16. உச்சப - உற்சவ, சிப்பாசாரி - சிற்பாச்சாரி.

பக்தாளுடனே கூடிக்கொண்டு தானும் ஒரு சிவ பக்தாளைப் போலே யேமனாயகி தாசி வீட்டுக்கு வந்தார் ! அவள் வீட்டிலே போசனம் பண்ணி, சகல சிவபக்தாக்களுடனே தானும் அரகரா என்று சொல்லிக் கொண்டு, சிவனாம கீர்த்தனம் பண்ணிக் கொண்டுயிருந்தார் !

குறைச் சிவபக்தாள் யெல்லோரும், அவாள் அவாள் வீட்டுக்குப் போயிட்டார்கள். அப்புறம் யிவர் மாத்திரம் தான் போகாமல் அங்கேதானே யிருந்தார்! அப்போ சித்த ரூபராயிருக்கிற ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவர சுவாமியானவர் மனபாகமானது அந்த யேமனாயகி யிடத்திலே போக யிச்சையுள்ள புருஷன் போலே தன்னுடைய ஆவபாவத்தை அந்த யேமனாயகிக்கித் தோணும்படியாயி காண்பிச்சார் ! யிந்த அபிரயத்தை யேமனாயகியானவள் அறிஞ்சு, "உம்முடைய மன அவிட்டப்பிரகாரம் னான் நடந்து கொள்ளு கிறே"னின்று, சித்த ரூபமாயி யிருக்கின்ற ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவர சுவாமிக்குச் சொல்லிபோட்டு, தான் உடனே போய், ஸ்தானம்

பண்ணிக் கொண்டு, நூதன வஸ்திரங்களைத் தரிச்சுக் கொண்டு சறுவா ஆபரண பூஷிதையாயி, அந்த சித்த பேராயிருக்கிற ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவர சுவாமி சமீபத்திலே போயி, அவரைப் படுக்கை வீட்டுக்கு வரச்சொல்லி அழைப்பிச்சாள் ! அவரும் சம்மதிச்சு அவளுடைய கையைப் பிடித்துக்கொண்டு அவளுடைய படுக்கை வீட்டிலே போயி, அந்த மெத்தையில் உட்கார்ந்தார் ! அதற்க்கப்பறம், அவள், அவருக்கு னானாவிதமான உபசாரங்களைச் செய்தாள்; அவளுடைய பத்திக்கும் யுத்திக்கும் சித்தரூபதாரரான ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரரானவர் மெச்சுக்கொண்டு மிகுந்த சந்தோஷத்துடனே சொன்னது யென்ன மென்றால். "யேமனாயகியே !" யென்று பெயரைச் சொல்லி அவளைக் கூப்பிட்டு, "உன்னுடைய புத்தியும் உனக்கு சிவபத்தானிடத்தி லேயும் விறும ஞானிகளிடத் திலேயும் யிருக்குற பத்தி விசுவாசமும், உன்னுடைய சிவபத்தியும், உன்னுடைய மனசத்தியும், உன்னுடைய சுசி லீலையும் பரிட்சிக்கிற நிமித்தியமாயி, னாம், உன்னிடத்திலே வந்தேன் ! அதிலே பார்க்க,

எண்ணைக் காட்டிலும் ஒண்ணு அதிகமான சற்குணங்கள் அதிகமாயிருக்குது ! நீ தன்னியாகிறு தாத்தை ! உன்னுடைய சென்மமே நல்ல சென்மம் ! யென்னுடைய சென்ம கற்மங்களைச் சொல்லுகுறேன், நீ கேளெ"ன்று அவர் சொன்னது யென்னவென்றால்,

18. "ணாமானால், ஆலாச சேஷ்த்திரத்திலே வாசம் பண்ணப்பட்ட சித்த புருஷனான யெனக்கு ஆனால் ரசவாத வித்தை வரும் ! ஆகையினாலே, உன்னுடைய மனோ அவிஷ்ட்டம் யிந்த புஷ்பவனமான சிவனுடைய கோவிலுக்கு உச்சவ விக்கிரகம் பொன்னுனாலே பண்ணி வக்க வேணுமென்று உனக்கு மனசிச்சையிருக்குதே, அது நிறவேறும்படியாயி, ரசவாத வித்தையினாலே பொன் பண்ணிக் குடுக்கிறேன் ! உன் வீட்டிலே யிருக்கப்பட்ட இரும்புகள் தாம்பரங்கள் , வெங்கலங்கள், பாத்திரங்களைக் கொண்டுவாயென்று சொல்வி, அவள் வீட்டுலே

---

17. குறைச் சிவபக்தாள் - மற்ற சிவபக்தர்கள்; மனஅவிட்டம் - மன விருப்பம்; சித்தருபம் - மனித உருவம்; படுக்கை வீடு - தூங்கும் அறை (Bed Room)*; விறும - பிரம்; சற்குணம் - நல்லகுணம்.*

யிருக்கப்பட்ட பாத்திரங்களெல்லாம் அழப்பிவிச்சு, அதுகளெல்லாம் உருக்கி, அதில் தன்னிடத்திலே யிருக்கப்பட்ட துருவை பசுமத்தை அந்த உருக்கினத்தில் போட்டு, பொடம் போட்ட, நெருப்பிலே வச்சுப்போட்டு, னாளைக்கி யித்தை யெடுத்துப் பாத்தியானால் பொன்னாயிருக்கும் ! அந்த பொன்னுனாலே யிந்த புஷ்பவனத்தில் யிருக்கிற சிவாலயத்துக்கு உச்சவ விக்கிறகம் வார்ப்பிச்சு, அத்தை பிறதிஷ்டை பண்ணி, அதுக்கு உச்சவாதிகளும் பண்ணி வை யிந்தப் புருஷனாலே !" யென்று சொல்லி, அவள் நெற்றியில் விபூதியைப் பூசி "உன்னுடைய மனோரதம் சித்திக்கும்" என்று சொல்லி, ஆசீர்வாதம் செய்து, சரீரமாயிருக்கிற சித்த ரூபதாரராயிருக்கின்ற ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவர சுவாமீ ஆகாச மாற்க்கத்திலே யெழும்பி, அந்தறுத்தானமாயி மறைஞ்சு போயிவிட்டார் !

---

18. மனசிச்சை = மனசு+இச்சை; பசுமத்தை - மஸமத்தை; உச்சவாதிகள் - உற்சவாதிகள் - உற்சவம் முதலானவைகள்; அந்தறுத்தானம் - அந்தர ஸ்தானம்.

19. அப்பறம், அந்த யேமனாயகி யெங்கிற தேவடியாள் மிகவும் சந்தோஷத்தை அடைந்தாள் ! அதுனால் சரீரத்தில் அவளுக்கு மயிர்க்கூச்சல் உண்டாச்சுது ! அவளுடைய கண்ணில், ஆனந்த பாழ்ப்பச் செலம் பெரிகி, வஸ்திரங்களெல்லாம் நனைஞ்சு போச்சுது ! செறுது காலம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவர சுவாமி பாதார விந்தத்தில் பத்தீ பரவசத்துனாலே சரீர பாவத்தை மறந்து யிருந்தாள்.

20. யிப்படி யிருக்கச்சே, சூரிய உதயமாச்சுது ! அப்பறம் யெந்திரிச்சு சவுச்ச, தந்த, தாபன அனுஷ்டான பூசாதி நித்திய கருமங்களை முடிச்சுக் கொண்டு, தன் வீட்டுலே பொடம்போட்டு யிருக்கிற விடத்திலே போயி பாத்து, அந்தப் பொடத்தை யெடுத்துப் பார்த்தாள் ! அப்போ, அந்த தாம்பிற லோகம், வெங்கலம் யிதுகள் யெல்லா பாத்திரங்களும் பொன்னாயி யிருந்துது ! யித்தைப் பாத்து, அந்தப் பொன்னை யெல்லாம் யெடுத்து, வீட்டிலே வச்சுப்போட்டாள் !

---

19. ஆனந்த பாழ்ப்பம் - ஆனந்த பாஸ்பம் - ஆனந்தக் கண்ணீர்.

20. தந்தம் - பல்; வடுவு - வடிவு.

அப்பறம், உச்சவ விக்கிரகம் வார்ப்பிக்கிற நிலவரமாய், சிப்பாசாரியை அழப்பிவிச்சு, சயிவாகம பிறகாரமாயி உச்சவ விக்கிறகம் பொன்னுனாலே வார்ப்பிச்சாள் ! அந்த மூர்த்தியினுடைய அழகையும் வடுவு யிருக்கிற சவுந்தரியத்தைப் பாத்து, பத்தியினாலே பரவசையாயி அந்த ஸ்ரீ மூறத்திக்கி சுந்தர னாயகர் யென்று பேர் வச்சு, அந்த ஸ்ரீ மூறத்தியிடத்திலே மோகாவேசத்துனால் அந்த ஸ்ரீ மூர்த்தி சுந்தரனாயகருடைய கன்னத்தில் தன்னுடைய கையினால் சந்தோஷத்துனாலே கிள்ளுனாள் !

21. அப்போ, அவளுடைய நெகங்கள் அந்த ஸ்ரீ மூர்த்தி சுந்தரனாயகருடைய ரெண்டு கன்னத்திலும் நெகங்கள் அழுந்தி, கொஞ்சம் யிரு பக்கத்திலும் கன்னத்தில் அடையாளம் ஆச்சுது! அத்தை சகல செனங்களும் பாத்து, அந்த யேமனாயகி யென்கிற தேவடியாளுடைய பக்தியை மெச்சுக் கொண்டு, “யிப்படி சிவபக்தி துருலபம்” யென்று சந்தோஷப் பட்டார்கள் ! யிப்பவும் புஷ்ப்ப வனத்திலே யிருக்கின்ற சிவாலயத்தில் யிருக்கின்ற உச்சவ விக்கிரகத்தில் யிந்த

அடையாளம் யிருக்கின்றது ! அப்புறம், அந்த யேமனாயகி யெங்கிற வேசியை, அந்த சுந்தரனாயகருக்கு ரத உச்சவம் பண்ணுகிற நிமித்தியமாயி, மகாரதம் ஒண்ணு மரத்தினாலே பண்ணி வச்சாள் ! அந்தக் கோவிலுக்கு நித்தியோச்சபம், வார உச்சவம், பஷ்சோ உச்சவம், மாச உச்சவம், வருஷ உச்சவம் பண்ணினாள்.

22. அந்த ஸ்ரீ சுந்தரனாயகருக்கு யிந்த யேமனாயகியினாலே பெறதிஷ்டை ஆனத்துனாலே அவருக்கு யேமனாயகர் யென்று பேர் பிரசித்தி ஆச்சுது ! அந்த யேமனாயகி யெங்கிற தேவடியாள் யேமனாயகர் யிடத்திலே பத்தி பண்ணினத்தினால், அந்த யேமனாயகர் ஆன ஸ்ரீசுந்தரனாயகருடைய பிரசாதத்துனாலே, அந்த யேமனாயகி யெங்கிற தேவடியாளுக்கு சகல போக பாக்கியங்களும் உண்டாயி, சொகத்தை அடைஞ்சு, தேகாந்தத்தில் கையிலாசத்தை அடைஞ்சாள் !

---

21. துருலபம் - கிடைக்காதது; சந்தோழம் - சந்தோஷம் - மகிழ்ச்சி; நித்தியோச்சபம் - நித்திய + உற்சவம்; பஷ்சோ - பட்ச.

யிந்தக் கதை, கலியொகத்தில் ஆயிரம் வருஷத்துக்கு மேல் நடந்த கதை !

4-வது கதை

23. அப்பறம், சுந்தரேசுவரநாத சேவக பாண்டிய மகாராசா, பாண்டிய மண்டல தேசத்தை நலமாயி, சாம, தான, பேத, தண்டமெங்கிற சதுர்வித உபாயத்துனாலே பிறபூ மந்திர உச்சாகமெங்கின்ற பிறபூ சத்தியினாலே, ராச்சிய பரிபாலினம் செய்துக் கொண்டு வந்தான். மதுரையில் யிருக்கிற சொயம்பு லிங்கமான ஸ்ரீ சுந்தரேசுவர லிங்கத்தினிடத்திலும் ஸ்ரீ மீனாட்சி அம்மன் யிடத்திலும் பத்தி செய்துகொண்டு இருந்தார். அப்போ, சோழராசாவானவர் பாண்டியதேசத்துக்கு அதிபதியான சோழ தேசத்துக்கு ராசாவான சோழனுக்கு தெழீயான (?) சுந்தரேசுவரபாத சேவக பாண்டிய ராசாவை அடிச்சுப்போட்டு, பாண்டிய தேசத்தை தான் ராசாவாயி ஆளவேணுமென்று, சோழராசாவானவர், ரத, கெச, துரக, பதாதிகள் எங்கிற னாலு பலத்துடனே கூடின சேனைகள் தண்டு

முஷ்த்தீது பண்ணி, சகல சண்ணாகத்துடனேகூட பாளையத்துடனே கூட, சீக்கிரமாயி சோழராசா பயணம் பொறப்பட்டு, மதுராபுரி பட்டணத்துக்கு சமீபத்திலே வந்து, தண்டோடு வந்து யெறங்கினார்.

24. அந்த சமாசாரத்தைச் சுந்தரேசுவர பாத சேவக பாண்டிய மகாராசா கேட்டு, ஸ்ரீ சுந்தரேசுவர நாதர் சேவையில் பரமதியாயி யிருந்தான் ! அப்போ அவருடைய மந்திரிகள் பாண்டிய மகாராசா கிட்டே வந்து சொன்னது யென்னவென்றால், "சுவாமி, மகாராசாவே ! சோழராசாவானால், னாம் சொஞ்ச பிலத்துடன் யிருக்கிறோம் என்று அறிஞ்சு, நம்மை நிக்கிறகிச்சு, பாண்டிய மண்டல தேசத்தை தான் கட்டிக் கொண்டு, ராச்சியம் ஆளலாம் யென்று யோசனை செய்து, நம்மிட பேரில் யுத்தம் பண்ணுகிறத்துக்கு வெகு சேனைகளுடனே கூடிக் கொண்டு, யுத்தத்துக்கு வந்து, நம்மிட மதுராபுரிப்பட்டணத்துக்கு சமீபத்திலே தண்டு யெறங்கி யிருக்கிறார்கள்; யிதுக்கு உபாயம்

---

23. மதிரை - மதுரை; தெழியான-எதிரியான; முஷ்தீது-முஸ்தீபு-ஏற்பாடு.

சோழ ராசாவை நிக்கிறகத்துக்கு யென்னா செய்வோம்" யென்று பாண்டிய ராசா யிடத்தில் அவருடைய மந்திரிகள் வெண்ணப்பம் செயிதார்கள் ! அதுக்கு, சுந்தரேசுவர பாத சேவக பாண்டிய மகாராசா சொன்னது யென்னவென்றால், "நமக்கு ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமியினுடைய, ஸ்ரீ மீனாட்சி அம்மனுடைய கிருபை பெற சாதம் யிருக்கச்சே ஒண்ணுதுக்கும் பயப்படவேண்டியதில்லை ! நம்முடைய சத்துருவெ சிஷ்சிச்சு நம்மை ரெஷ்சிப்பார் ! யிதுக்கு சந்தேகப்பட வேண்டிய தில்லை!" யின்று சொல்லி பின்னையும் யென்னமென்று சொன்னார் யென்றால்,

25. மந்திரிகளைப் பார்த்து, "நமக்க யுத்தம் பண்ணுகுறதுக்கு சோழராசாவுடனே சேனைகள் சதுரங்க பிலம், நீங்கள் சேகரம் பண்ண வேண்டியது யென்னமென்றால், பத்து ரதங்களும், ஆனைகள் நூறும், குதிரைகள் ஆயிரம், பதாதிகள் ஆனகாலு பலம்

24. *பரமதி - வேறுசிந்தை; வெண்ணப்பம் - விண்ணப்பம்; சிஷ்சிச்சு - தண்டித்து.*

பதினாயிரம் செனம் போதும் ! யிவ்வளவு தண்டுக்கும் பாகுது முஸ்தீது பண்ணங்கோள் !'' யென்று மந்திரிகளுக்கு சொல்லி அனுப்பிவிட்டார்.

26. அப்புறம், பாண்டிய ராசா, "சகலத் திரவியமும் தன்னுடைய சிவபுண்ணியம் செய்து சிவனுக்கு அற்ப்பதம் பண்ணிப்போடுகிறேன்'' யென்று நிச்சையிச்சு அன்னதானமும் வஸ்திர தானமும் வெகுசாயி அனேக தானங்கள் செய்தார். ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி கோவிலில் மணிமயமான மண்டப கோபுர பிறகாரங்கள் நிறுமாணம் செயிதார் ! யிப்படி சிவ தறும்ம பரனாக யிருக்கச்சே, சோழராசா யுத்தத்துக்கு வந்த சமாசாரத்தை கேட்டு, பாண்டியராசா மிகவும் பயப்பட்டு, ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி கோவிலுக்கு போய் தன்னுடைய சங்கடத்தை சாமிக்கி வெண்ணப்பம் செயிதார். அது யென்னமென்றால், "சுவாமி ! சோழராசாவானவன் ஒருவன் ஆயிரம் குதிரைகள் பேரில் யிருக்கிற

25. ஆனகாலுபலம்-படைவீரர், யானைக்கால் போன்று உறுதியானவராக இருக்க வேண்டும்.

ராவுத்தாக்களையும், குதிரைகளையும் அடிச்சுவோடி போடுகுறதுக்கு சாமர்த்தியம் முள்ளவன், அப்படிப் பட்ட சோழ ராசாவானவன் வெகு சேனைகளுடனே கூடிக்கொண்டு யென் பேரில் சண்டைக்கி வந்து யிருக்குறான் ! யினக்கு சேனை சதுரங்க பலம் கொஞ்சமாயிருக்கிறது. னான் அவனுடனே யுத்தம் பண்ணிக் கெலிக்கமாட்டேன் ! நீர் தயவு செய்து யென்னுடைய சந்துருவான சோழ ராசாவை சிஷ்சிச்சு, யென்னை ரெஷ்ஷிக்க வேணுமென்று" சுவாமியை மிகவும் தோத்திரம் செயிது பிறாத்தனை விண்ணப்பம் செயிதார். அப்போ, ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி, அந்த பாண்டியராசா பேரில் கிருபை செய்து, ஆகாசவாணி ரூபமாயி சொன்னது யென்னமென்றால், "ஓ பாண்டிய ராசாவே ! உன்னுடைய சேனைகளுடனே கூடி யுத்தத்துக்கு போ ! உன்னை கெலிக்க பண்ணிக் கிறேன் ! சோழ ராசாவையும் அவன் சேனைகளையும் பலயீனமாயி தோத்து ஓடிப்போகும்படியாயி பண்ணுகிறேன் ! பயப்படாதே !" யென்று ஆகாசவாணி ரூபமாயி சுவாமி சொன்னார்.

---

26. கெலிக்க - வெற்றிபெற.

27. அப்புறம், அந்த சுந்தரேசுவர பாத சேவக பாண்டிய ராசாவானவர் தன்னுடைய சேனைகளை கூட்டிக் கொண்டு யுத்தத்துக்கு பொறப்பட்டார் ! அப்போ, அந்த சோழராசா தன்னுடைய அபரிமித சேனைகளை சேகரம் பண்ணி கொண்டு, யெதுத்து யுத்தம் செயிதார். அந்த சமயத்தில், ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி கஸ்தூரி வறுணமான சரீரத்தை தரிச்சுக் கொண்டு றாவுத்த வெழத்தை கிறாதன் போலே ரூபத்தை யெடுத்துக் கொண்டு, கேடயம், கத்தி, சமுதாடு முதலான ஆயுதத்தை தரிச்சுக் கொண்டு, தன்னுடைய பாகையில் தலையில் கலிக்கித் துறாயி தரிச்சுக் கொண்டு, அபேத்திய கவச தாரியாயி, பிலித் தோலினாலே அங்கி சொகாயி போட்டுக் கொண்டு வேதமாகிய குதிரைமேல் யேறிக்கொண்டு, சோழ ராசாவுடனே யுத்தம் செய்தார்! தன் கையிலே யிருக்கிற கெதையினால் சோழராசாவினுடைய குதிரையை அடிச்சார் ! அப்போ அந்த அடி, குரிரைக்கிப் பட்டு குதிரை செத்துப் போச்சுது !

---

27. பிலி - புலி.

அப்போ, அந்த கெதையுடை அடி, சோழராசாவுக்குப் பட்டு மூர்ச்சை அடைந்தார் ;

28. பிற்பாடு, அந்த கிராதராவுத்த ரூபதாரியா யிருக்கின்ற ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி மறைஞ்சு போய் விட்டார் ! ஒருவருக்கும் தெரியாமல் பொறகு ஒரு சாமத்துக்கு மேல் மூற்ச்சை தெளிந்து பார்க்கும் இடத்தில் தன்னுடைய சேனைகள் ஓடிப்போனதைப் பார்த்து, யிருக்கிற சேனைகளை சேகரிச்சுக் கொண்டு, பாணய ராசா பேரில் யெதுத்து சண்டைக்கி ஆரம்பிச்ச உடனே, பாண்டிய ராசா மதுராபுரி பட்டணத்துக்கு போகவேணுமென்று ஓடினார் ! அப்போ, சோழராசா அவரைத் துரத்தினார் ! பாண்டிய ராசா ஓடச்சே வழியில் ஒரு மடுவில் வெகு செலம் யிருந்தது; மெத்தவும் ஆழமாயி யிருந்தது. அதில் பாண்டிய மகாராசா குதிரை சிவகடாஷ்சத்துனால் தாண்டிப் போச்சுது ! சோழ ராசாவினுடைய குதிரைக்கு கால் சறுக்கி மடுவிலே விழுந்துது ! அப்போது, அந்த குதிரையும் சோழராசாவும் செத்துப் போய்விட்டனர் ! அப்புறம் சோழராசாவினுடைய சேனைகள்

ஓடிப்போயி விட்டார்கள் ! அவர்களை பாண்டிய ராசாவினுடைய சேனைகள் தொரத்தினார்கள்! அப்போ, அந்த சோழதண்டுலே யிருக்கப்பட்ட ஆனைகள், குதிரைகள், மாடுகள், ஆடுகள், ஒட்டைகள், ஸ்ரீகளான யுவதிகள் யிவர்களை கைப்பிடியாய் புடிச்சுக் கொண்டு, அந்த தண்டிலே யிருக்கப்பட்ட தன, கனக, வஸ்து, வாகனாதி சகல பதாற்த்தங்களையும் கொள்ளை அடிச்சுக் கொண்டு, சுந்தரேசுவர பாத சேவக பாண்டிய மகாராசா தன்னுடைய சேனைகளுடனே கூடிக்கொண்டு, செய லெட்சுமியை அடைஞ்சு, அஷ்டா தச வாத்திய கோழங்கள் செயிதுக் கொண்டு, தன்னுடைய மதுராபுரிப் பட்டணத்துக்கு வந்து சேர்ந்து, தன்னுட அறமனைக்கி போயி சேந்து சொகமாயிருந்தார்.

தான் சோழராசாவினுடைய பாளையத்தில் கொள்ளை அடிச்சுக் கொண்டு வந்த சகல பதாற்த்தங் களையும், ஆனை, குதிரைகளையும் ஸ்ரீ சுந்தரேசுவர

28. செலம் - நீர்; தண்டு - படை; ஒட்டை - ஒட்டகம்; கோழம் - கோஷம்.

சுவாமிக்கி குடுத்து விட்டார் ! ஸ்ரீ சுந்தரே சுவர சுவாமி கடாஷ்சத்தினால் சொகமான நீதியாயி ராச்சிய பரிபாலினம் பண்ணிக் கொண்டு, சிவபத்தி பண்ணிக் கொண்டு யிருந்தார் !

யிந்த கதை - ஆயிரத்து அஞ்ஞூறு வருஷத்துக்கு மேல் நடந்த கதை !

5-வது கதை

2. பசுமலை வரலாறு

(டி.3866)

Legend of Pasumalai or the Cow Mountain

திண்டுக்கல் வகையறாவுக்கு சேர்ந்த யெரசக்க னாயக்கனூர் பாளையப்பட்டு, பசுமலையினுடைய வரலாறு.

1. முன்னொரு காலத்திலே, வடக்கே உத்திராதியில், அமறாபதிப் பட்டணத்தில் ஒரு இடையன் அனேகம் பசுக்கைள சேர்த்துத் தொழுப் போட்டுக் கொண்டு, மேற்படி பசுக்களை.

மேய்த்துவருகிற நாளையிலே, மளை தண்ணீ'ர் அருந்தலாய், அவடத்தில் பசுக்களுக்கு மேய்ச்சல் இரை அருந்தலா யிருந்தது. அதைப்பற்றி அந்த

---

1. பசுமலை-மதுரை நகருக்குத் தெற்கே இரண்டுகல் தொலைவில் உள்ள ஊர்; யெரெசக்க நாயக்கனூர்-மதுரை மாவட்டத்து உத்தமபாளையம் எனும் ஊருக்குக் கிழக்கே நான்குகல் தொலைவில் உள்ளது; அருந்தலாய்-பற்றாக் குறையாய்.

இடையன், "மேய்ச்சல் யெவடத்திலிருக்குதோ" வென்று, ஆளனுப்பி, விசாரித்து வரச் சொன்னதில், ஒருவன் தெட்சண பூமியாகிய இந்தக் கம்பகிரியுடைய சார்பில் வந்து, இவடத்தில் அற்புதமாயிருக்கிற மலையும், கானலுஞ், சுனையும், புல்லும் பின்னும் அதனமாகிய விசேட தீர்த்தங்களுமிருக்கிறதக் கண்டு, வெகு சந்தோஷத்துடனே மறுபடியும் வெகு சாக்கிறதை யாய்ப் போய் மேற்படி இடக்கோனானையுங் கண்டு சொல்லுகிறான்: "அய்யா, நான் தெற்கே வெகுதூரம் போனதில் கம்பகிரி யென்றொரு மலையும், அதின் சார்பில் மனோக்கியமான தீர்த்தங்களும், நதிகளும், கானல்களும், நல்ல மேய்ச்சலுக்கிதவான தாவுகளு மிருப்பதினாலே, அவடத்தில் பசுக்களை ஓட்டிக் கொண்டு போய்த் தொளுப் போட்டுக் கொண்டு யிருக்காலமெ"ன்றதில், இடையனுக்கு மகா சந்தோஷம் வந்து, உடனே அகத்துக்குப் போய் தன் மனைவினிடத்தில் அனுப்பிவித்துக் கொண்டு தொளுவுக்கு வந்து, பசுக்களை யெல்லாம் ஒரே திரளாய்த் திரட்டிக் கொண்டு, தெட்சணத்தை நோக்கி வந்து, காவேரிக்

கரையில் ஒரு னாள், தருகியிருந்து, அப்பால் மதுரைக்கி வந்து, சுவாமிக்கிப் பாலாபிஷேகமும் செய்துவிச்சு, அதுவிட்டுச் சம்புலுபுத்தூருக்கு வந்து, கதிரி நரசிம்மப் பெருமாளுக்குப் பாலாபிஷேகமுஞ் செய்விச்சு, அப்பால், இந்தக் கம்பகிரி மலைச் சார்பில் வந்து, கம்பத்துக்கு மேற்கு மந்தையிலே ஒரு தொளுப் போட்டுக் கொண்டு, பசுக்களை மேற்படி மலைச் சார்பில் மேய்த்துக் வருகிற னாளையில், ஒரு னாள் தினத்தில் பசுக்களையெல்லாம் மலைமேல் ஓட்டிக் கொண்டு போறபோது, மாற்கமத்தியிலே மகா குளிர்ச்சி பொருந்திய கானலும், ஒரு வட்டப் பாறையும் ஒரு சுனையுமிருந்துது.

2. அதைக் கண்டு இடையன் மகா ஆச்சரியத்துடனே பசுக்களை யெல்லாம் அவடத்தில் மேயவிட்டுக்கொண்டு, தானுமந்தச் சுனையில் நீரருந்தி. மேற்படி பாறையில் படுத்து நித்திரித்தான்.

3. அப்பாலிந்தப் பசுக்களெல்லாம் அநேக தூரந் துலைவில் போய் மேய்ந்துது. அதில் ஒரு கபிலைப் பசுவானது வெகு தூரம் போய் மேய்ந்து

திரும்புகையில் மத்தியிலே வருகிற காளை ஆத்தில் நீரருந்திக் கரையேறுகிறபோது, ஒரு வேங்கைப் புலியானது எட்டு னாள் யிரையில்லாமலிருந்து, அந்த நதியில் செல அருந்த வந்துது. இந்தப் பசுவைக் கண்ட மாத்திரத்திலே தண்டவால் முறுக்கி, மகா ஆங்காரத்துடனே பிடிக்க வருகிற புலியைக் கண்டு, மகா விசனத்துடனே பசுவானது, சிவசிவா வென்னப்பட்ட சப்பத்தினாலே, புலியானது அஞ்சி இந்த பசுவைப் பார்த்து சொல்லுது: "நான் யெட்டு னாள் இரையில்லாமலிருக்கிறதும் சிவனுக்கு நன்றாய்த் தெரியும்; உன்னை இப்போது பட்சணம் பண்ணப்போகிறதும் சிவனுக்கு நன்றாய்த் தெரியும்; ஆகையால், உன்னை நான் விடுவதில்லை!" யென்று சொல்ல,

4. புலியைப் பார்த்துப் பசுவானது மகா வணக்கத்துடனே ஒரு மனுக் கேட்டுக் கொள்ளுகிறதே தெனில், "நானானால் அநேக நாள் தவசிருந்து ஈஸ்வரன் கிருபையினாலே ஒரு சேங்கண்டுண்டா யிருக்குது; அதுவானால் பில்லுப் பிடிக்க அறியாது;

அதற்கு அமுர்தம் ஊட்டக்குடுத்து விட்டு மறுபடியும் உமக்கு இரையாக வருகிறேன்" னென்று சொல்லப், புலியானது சொல்லுவது: "நீ சொல்லுகிறது யெனக்கு நம்பிக்கை யில்லை; ஆகையால். பலமான சத்தியஞ் செய்து குடுத்தால் விடுகிறே"னென்று சொல்ல,

5. பசுவும் மகா சந்தோஷத்துடனே ஈஸ்வரனைக் குறித்துச் சத்தியஞ் செய்து குடுத்தது. அதை நம்புவதாக யெண்ணி வேங்கையானது, பசுவை அனுப்ப, பசுவும் உத்திரவு வாங்கிக் கொண்டு, சத்திய வாக்குத் தவறாமல் கண்ணுக்குப் பால் குடுத்துப் போட்டு, வெகு சாக்கிருதைக்கி வந்து சேரவேணு மென்று வேகமாய் வரும்போது, பாதை தெரியாமல் ஒரு கானலிலே புகுந்து வரும்போது, மத்தியில் மிகவும் ஸ்தூல காயத்தை உடைத்தான ஒரு சற்பமானது மூன்று னாலு னாளிரையில்லாமலிருந்து, பசுவைக் கண்டமாத்திரத்திலே பட்சணம் பண்ண வேணுமென் பதாய் நினைத்தது. அது கண்டு பசுவானது நாகத்துக்கு

4. *சேங்கன்று - காளைக்கன்று.*

மகா வந்தனஞ் செய்து, முன்னாலே நடந்த வற்த மானங்களைச் சொல்லுகிறபோது,

6. நாகமானது, மகா ஆச்சரியத்துடனே சொல்லுறது, “நீ சாக்கிருதைக்கிப் போய், கன்றுக்குப் பாலூட்டக் கொடுத்துவிட்டுப் போய், அப்பேடுர்ப்பட்ட மிருகேந்திரனைக் கண்டுகொள்ள வேணுமென்று பசுவை அனுப்பிவித்துது. அப்பால், பசுவானது நாகேந்திரனை அனுப்பி வித்துக் கொண்டு மகா வேகத்தோடுங் கூடித் தொழுவுக்கு வரும்போது, கன்றானது, அலறிக் கொண்டு தாயினிடத்துக்கு வந்தது. அப்போது, தாயான கபிலை சந்தோஷத்துடனே உச்சி முகறாமலும் நாவால் தழுவாமலும் விசனத்துடனே யிருக்கும் விதமறிந்து, சேங்கன்றானது தாயைப் பார்த்து கேழ்க்குது: ‘‘அம்மா நீ யேன் ஒரு வகையாயிருக்கிறாய்? அது முகாந்திர மெனக்குத் தெரியப்படுத்த வேணும்; இல்லாதவரையில் நான் பாலருந்துகிறதில்லை ?” யென்று சொல்லிற்று.

---

5. நடந்த வர்த்தமானம்-நடந்த செயல்.

7. அப்பால், கபிலையானது பட்ட அவஸ்தையளை யெல்லாந் தெரியப்படச் சொல்லி "சாக்கிருதைக்கிப் பாலருந்திக்கோ; நான் போய் வேங்கையினுடைய பசியை அமத்த வேணுமெ"ன்று சொன்னதில், கன்றானது சொல்லுது, "நானும் கூடவே வந்து யிரையாகிறது உத்தமமே தவிர நானிவடத்திலிருந்தால் எனக்கு ஆதரவில்லை" யென்று சொல்ல, மறுபடியுங் கபிலையானது கன்றுக்கு அனேக விதங்களாகிய புத்தியினைச் சொல்லி முற்கதையளையுஞ் சொல்லி, நயத்திலே பாலூட்டிக் கொடுத்து, கன்றை யினத்தோடிருந்து வாழ்கச் சொன்னதிலுங் கேழாததைப் பற்றிக் கன்றையும் அனைத்துக் கொண்டு, நாகத்தினிடத்துக்கு வந்து, நாகத்தையும் அனுப்பி வித்துக் கொண்டு. கானையாத்துக் கரைக்கி வந்து, மகாபசியோடுங் கூடி யிருக்கப்படாநின்ற வேங்கையைப் பார்த்துப் பசுவானது சொல்லுது, "ஓய் ! மிருகேந்திரனே ! நீர் பசித்திருக்கவேண்டிய காரணமென்ன? இனிமேல் பசி அமத்திக் கொள்ளுமெ"ன்று சொன்ன கபிலையையுங்

கன்றையும் பார்த்து, வேங்கை சொல்லுது," நீயானால் சத்தியந் தவறாமல் நடக்கப்பட்டவளாய்த் தோணுது; அதிலும் உன்னுடைய சேங்கன்றைப் பார்த்தால், எனக்கு மகா துயரமாயிருக்குது ! ஆகையினாலே, நானுன்னைப் பொசித்தால் எனக்குக் கெதி மோட்சம் தக்கதில்லையே ! நானுன்னை ஒருக்காலும் பொசிக்கிறதில்லை ! உன்னைக் கண்ட மாத்திரத்திலே யெனக்குப் பசியும் அமந்துப் போய்விட்டுது ! நீ இனிமேல் எனக்கொரு தாயும் ஒன் கன்றுக்கு நான் ஒரு தமயனுமாக யெண்ணிக் கொண்டு, என்னாலே நீபட்ட அவஸ்தையளைப் பற்றி யாதொரு ஆயாசங்களும் மனதில் வைக்காமலும் எப்போதும் போலே உன்னுடைய இனத்துடனே கூடி வாழ்ந்து கொண்டிரு !" வென்றதில்,

8. கபிலையானது மிகவும் விசனித்துச் சொல்லுது: "ஓய் ! மிருகேந்திரனே ! நீ இப்படி யென்னைப் பொசிக்கிறதில்லை யென்று சொல்லுகிறது யுக்தமல்ல! உன் பசியை அமத்தாமல் போனால், எனக்கும் மகத்தாகிய தோஷம் வரும் ! மேலும், நான்

என்னுடைய யெஜமானரிடத்துக்குப் போனால், நான் சொல்லப்பட்ட வசனம் மஞ்சூறாகாது ! சாகப் பயந்து திரும்பிவந்துவிட்டே னென்று பேச்சுக்கிடமாகும் ! நீ பொசித்தாலாச்சுது, இல்லாத வரையில் நான் யெரை யெடாமல் இவடத்திலே நின்று ஈஸ்பரருக்குப் பிரீதியாக யென் சடலத்தை மாய்த்துக் கொள்ளுகிறேனெ"ன்று சொல்லியும், வேங்கைப், "பொசிக்கமாட்டாம" ன்று சொல்லிவிட்டுது; அதுவும் இரையில்லாமல் அவடத்திலே தானே நின்று விட்டது!

9. இப்படி மூன்று சீவாத்துமாக்களும் சபதத்தால் யெரை யெடாமல் யிருக்குற சங்கதி காளகண்ட வியாக்கிற சற்வாம்பற விபூதி ருத்திராட்ச மாலிகாபஷணறாகிய ஈஸ்பரருடைய இருதயத்தில் தோணப்பட்டு, மகா சந்தோஷத்துடனே பக்தி சோதிக்க வேணுமென்று, ஒரு பிறாமண வேஷங்கொண்டு, பாதை மாற்கமாகப் போகிறவர் போல், இந்தக் கபிலையின் அருகே வந்து, கபிலையைப் பார்த்துக் கேழ்க்கிறார்: "நீயேன் அந்தப்

8. மஞ்சூறாகாது-ஒப்புக்கொள்ளப்படாது; உருதுச்சொல்.

புலியைத் தப்பவித்துக் கொண்டு ஓடிப் போகாமல் வேங்கைக்கிப் பயந்துகொண்டு யென் நிற்குறாய் யென்றுக் கேட்டதில், கபிலையானது சொல்லுது, "நானானால் சத்தியந் தப்பாமலிந்தப் புலிக்கி இரையாகுறோமென்று சொன்னவாக்குத் தவறாமல் வந்ததிலிருந்த மிருகேந்திரன் யென்னைப் பொசிக்கமாட்டமென்று சொல்லுகிறதினாலே, பாவம் வந்து லபித்ததென்று விசனித்து நிற்குறேனெ"ன்று சொல்லித்துது.

10. அப்பால் பிறாமணன் வடிவாய் வந்த சுவாமி சொல்லுகுறார்: "இந்தக் கலியுகத்தில் சத்தியமாவது, நீயாவது ! ஓடிப் பிளைக்கிறதே உத்தமமெ"ன்று சொல்ல, கபிலை நெடுமூச்செறிந்து சீறிப் பிறாமணனை விரட்டினதில், பிறாமண வடிவாய் வந்த சுவாமியும் மறைந்து வெள்ளிப் பொருப்புக்கு வந்து, நடந்த வற்தமானமெல்லாம் உமையிடத்தில் சொல்லிப் பாற்பதி சமேதறாய், ரிஷபவாகனரூடராய், மகா விட்டுணு முதலாகிய முப்பத்தி முக்கோடி

---

9. லபித்தது - கிட்டியது.

தேவாதியளுடனே இந்தக் கம்பம் பதிரிமலைக்கி வந்து, பசுவுக்குங், கன்றுக்கும், புலிக்கும் மோட்சங் குடுத்து, இதில் பேர் விளங்கும்படியாய்க் கல்லாய்ச் சமைத்து, இதின் கீழுக்குப் பசு மடுப் போல்ச் சமைத்து, அதில் தீற்தமுண்டாகும்படிச் செய்து, ஈஸ்பரர் முதலாகிய ரிஷியீஷ்பறாளும் ஸ்தானஞ்செய்து மாத்தியான கற்மத்தையும் முடித்துக் கொண்டு, வெள்ளிப் பொறுப்புக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

11. அது முதலிந்த மலைக்கிப் பேர் பசுமலை யென்றும், பசுமலைத் தீர்த்தாமென்றும் நாமகரண முண்டாச்சுது; இப்படி அனேக நாளாய் நடந்துவரப்பட்டப் பசுமலை வரலாறு !

---

10. வெள்ளிப் பொருப்பு - வெள்ளி மலை - கயிலாயம்.

Tambaravanny Magattuvam

3. தாம்பிர வன்னி மகத்துவம்

(டி. 2821)

1. நெமிசாரண்ணியமென மொரு வனமுண்டு. அது வரலாறு யேதென முர்பூற்வத்திலே முனிவர்களெல்லோரும் பிரம்மாவினிடத் திலே சென்று, “எங்களுக்கு எக்காலமும் விருப்பமுண்டாக, தவசு வீத்திருப்பதற்கு அழிவில்லாத வனமாக கட்டளையிடவேணுமெ”ன்று வணங்கினார்கள். அப்போது, பிரமா, ஒரு சக்கரத்தைப் படைத்துப் பூமியிலே உறுட்டிவிட்டு, “யிதன் பிறகே நீங்கள் போய் யிந்த சக்கரந் தரித்த யிடத்திலே உங்களுக்கு வேண்டிய அபிஷ்டமெல்லாந் தருமென்கிற வனமாக யிருக்குமதிலே யிருப்பீர்களெ”ன்று திருவிளம்பத்தி

---

1. *திமிரபரணி-திருநெல்வேலி மாவட்டத்தில் ஓடும் ஆறு; மேற்குத் தொடர்ச்சி மலையில் பெரிய பொதிகை அல்லது அகத்தியமலையில் உற்பத்தியாகிறது; புன்னைக் காயல் எனும் ஊரில், மன்னார் குடாக் கடலில் கடலோடு சேர்கிறது. அம்பா சமுத்திரம், திருநெல்வேலி, திருச்செந்தூர் தாலுகாக்களின் வழியே ஓடுகிறது. பொருநை எனப்படுவது இந்த ஆறே.*

யனுப்பிவிட்டார். அந்த சக்கரந் தரித்துக்கிடந்த படியினாலே, அதுக்கு நெமிசாரன்னியமென்று பேருமிட்டு, அந்த வனத்துக்கு தலைமையுள்ள முனிவரென்றால், சவுனக முனிவரென்று பேராகும். அவரிடத்திலே காசிபர், அத்திரி, பிறகண்ணுவர், கெவுதமன், புலத்தியன், வதிஷ்ட்டர், அங்கிரசர், விசுவாமித்திரன், முற்கலன், அகத்தியன், வியாண்டகன் யிது முதலாகிய முனிவர்களெல்லாருங் கூடியிருந்தார்கள்.

2. யிப்படி யிருந்த தேவரண்டையிலே பன்னிரெண்டு வருஷம் சென்றபோதிலே, ஒரு வேள்வியை செய்தார்கள். அப்போது வேதிரிகா ஆசிரமத்திலே யிருக்கிற வேதவியாசருடைய சீஷருக்குள்ளே மிகவும் பெரியோர்களாக யிருக்கிறவர்கள் அஞ்சு பேருண்டு. அந்த அஞ்சு பேரிலே பயிலமுனிவர் முதல் வேதமாகிய யிருக்கு வேதங் முழுவது கத்தவராக்கும்; சம்பாய முனிவராகிறவர் ரெண்டாம் வேதமாகிய யசுரு வேதங் கத்தவராக்கும். சயில முனிவராகிறவர் மூன்றாம்

வேதமாகிய சாமவேதங் முழுதுங் கத்தவராகும். சுமந்து முனிவரென்கிறவர் நாலாம் வேதமாகிய அதர்வணம் வேதம் முழுதும் கத்தவராகும். யிவர்களள் அஞ்சு பேர்க்குள்ளே சூத முனிவர் பதினெட்டு புராணங்களுங் கத்தவராகும். யிந்த அஞ்சு பேரிலே சூத முனிவர் நெமிசாரண்ணியத்திலே சவுனக முனிவர்கள் செய்கின்ற வேள்வியை காணவேணு மென்கிற படியினாலே, முனிவர்களிடத்திலே சென்றார்களப்போதவர்களும் தாமெதிர்க் கொண்டு வந்துக் கூட்டிப் போய் ஆசனம் குடுத்துச் சிங்காசனத்திலிருத்தி, "யெங்களுக்கு தம்பிரவன்னி மார்பியந் திருவிளம் பத்த வேணுமெ''ன்று கேட்டார்கள்.

3. அப்போது, சூதர் சொல்லுவார்: "பூவனத்திலே எனக்கு குருவாகிய வேதவியாசர் முனிவருடைய குமாரனாகிய சுகமுனிவனுக்குத் தாம்பரபரணி மார்பிய முழுவதும் சொன்னார். அப்போது நாமும் சிறிது கேட்டிருந்தோமந்த கதையை உங்களுக்குச்

---

2. *மாற்பியம்-மகாத்மியம்.*

சொல்லுகிறேன்; நீங்கள் பராமுகமில்லாமல் கேளுங்கோளெ"ன்று சொன்னாறந்த கதை எது யேதென்று கேட்டால்,

4. முன்னொரு காலத்திலே, பரமேஸ்வரிக்கு பிதாவாகிய தக்கன் னொரு வேள்வியை நடத்தினான். அந்த வேள்வியை காணுமாசையாலே, அவனுக்கு மகளாகிய பரமேஸ்பரி, பரமசிவனுக்கு விண்ணப்பஞ் செய்து, அனுப்பிக் கொண்டு வந்தாள். தகப்பனாகிய தக்கன் மகளாகிய பரமேஸ்பரியை உபசாரம் பண்ணாமல், மனசிலே நிந்தினை சொல்லி, பரமேஸ்பரனையும் நிந்தினைப் பண்ணினானது பொறுக்கமாட்டாமல், பரமேஸ்பரனிடத்திலே திரும்பவந்து, அவன் சொன்ன நிந்தினைகளை யெல்லாம் சொன்னார். சொன்னவுடனே பரமேஸ்பரனுக்கு கோபம் பிரவேஷித்து, அந்தக் கோபாக்கினியிலே கண்ணின் பொறியிலே வீரபத்திரன் பிறந்தான். அவனை அனுப்பி, அந்த தக்கன் செய்கின்ற வேள்வியை அழித்து அவன் தலையையும் அறுத்து, அவனோடே கூடியிருந்த தேவர்களையுமாக்கினை செய்தார்கள்.

5. அதன் பிறகு, பரமேஸ்வரியும், கணவனாகிய பரமசிவனை நிந்தினை பண்ணின தக்கனிடத்திலே பிறந்த நம்முடைய திருமேனியை அக்கினித் தகனம் பண்ணுவேனென்று பரமசிவனுக்கு விண்ணப்பஞ் செய்தாள். அப்போது யீஸ்பரனும் மனமகிழ்ந்து, "நீ போய் மலையரசனுக்குக் குமாரத்தியாகப் பிறந்து, பரமசிவனை நோக்கி அஞ்சு வயசுலே தொகுத்து கன்னிகார் மடத்திலே, அடகை தோழிப் பெண்களோடு தவசு பண்ணிக் கொண்டு யிருந்தாள். அது கண்டு, பரமசிவனுமவனை கலியாணம் பண்ண போகிறபடியினாலே, யீமவான் பட்டணத்திலே எழுந்தரளினார். அப்போது, விஷ்டுணு பகவானும் பிரம்மாவும், தேய்வேந்திரன், தேவர்கள், சித்தர்கள், வித்தியாதரர், கெறுடாதியர், கிண்ணராதியார். கெந்தனுவர், யியங்காட்டிதர், அசுரர், முனிவர்கள், சந்திரர், சூரியர், நஷ்செத்திர ருத்திர கணங்களிதுவன்றி மேலோகத்திலுள்ளோரும் கீழ்லோகத் திலுள்ளோரும் கூடி மலையரசன் பட்டணமாகிய ஓடாதிபிரத்த மென்கிற பட்டணத்திலே வந்து, நெருங்கின

படியினாலே வடபூமி தாழ்ந்து, தென்பூமி ஒசந்து ஆகாச மளாவிக் கொண்டுது.

6. அதன் பிறகு, தெஷ்சண பூமி ஒசந்து உலகமெல்லாம் காணப்படுகிறது பரமசிவனறிந்து, அகத்தியரை யழைத்து, அவருக்குத் தமிழ் சாஸ்திரமெல்லாம் அறியும்படிக்கு யுபதேசித்து'', தெட்சண பூமி தாளும்படிக்கு நீ போய் வனமும் பர்வதமுமாக யிருப்பீர்களெ"ன்று அனேகந் துதிகளும் சொல்லி யனுப்பினாரப்போது அகத்தியர் சொல்லு வார் : "தேவரீர் திருமணக் கோல காணுகிறதற்கு அடியேன் மிகவும் பிரியமாக யிருக்கிறேனென்றாரப் போது, பரமசிவனும் திவிளம் மகிழ்ந்து, "நல்லது ! தானே நம்மிட திருமணக் கோலம் காணும்படிக்கு அந்த மலை பர்வதத்திலே நாமும் நம்முட தேவியும் மத்துமுண்டாகிய தேவர்களும் முனிவருடனே கூடி, நீர் காணும்படிக்கு வந்து காட்சி தருகிறோமெ"ன்று திருவிளம் பத்தித், தாம்பிரவன்னி மாதாவையும் கூட்டி யனுப்பி, ''யிந்த தாம்பிரவன்னி வரலாறு கேளுமெ"ன்று அகஸ்தியருக்கு திருவிளம்பத்துவார்.

7. "முன்னொரு காலத்திலே நம்மிட தேவியான உமையவளுக்கு சரிசமானமான தோழி பெண் வேணுமென்று சொன்னபடியினாலே, பிரமாவைக் கொண்டு படைப்பித்து தாம்பிரவன்னி என்று பேருமிட்டு நம்மிடத்திலே யிருக்கிறவளாகுமென்று தாம்பிரவன்னி மார்பியம் அனேகமாகச் சொல்லி அனுப்பினார். அதின் பிறகு, அகஸ்தியரை நோக்கி அந்த மலையும் பர்வதமும் நமக்கு கைலாசம் போலே விருப்பமாக யிருக்குமென்று அந்த மலையின் மகுத்துவமாக அனேகம் சொல்லி, தம்முட சுருபமும் அகஸ்தியருக்கு உண்டாக பண்ணித் தாம்பிரவன்னி மாதாவுக்கு அனேகம் உபசாரங்கள் சொல்லி அகஸ்தியருக்குக் குமாரத்தியாக முறையுமுண்டு பண்ணி அனுப்பினாரப்போது, அகஸ்தியரும் தாம்பிரபரணி மாதாவும், பரமசிவன் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து தெண்டன் பண்ணி, அனேகத் துதிகளும் செய்து அனுப்பிக் கொண்டு, அந்த யிமயகிரியை விட்டு நீங்கி, கேதாரத்திலே வந்து பரமசிவனை சேவித்து, காசியிலே வந்து

விசுவனாதரை சேவித்து, பிறாகையிலே வந்து விஷ்டுணு பகவானை சேவித்து, யிப்பால் திருக்காளத்தியும் சேவித்து, திருப்பதியும், திருவாலங்காடுங், காஞ்சிபுரந் திருக்கழுகுன்றம், திருவண்ணாமலை. சிதம்பரம், திருவாரூர், திருதுத்தி, கும்பகோணம், திருவாங்காடு, திருவானைக்காவு, மிருதகிரி, சந்தீசுவரம், வேதவன, பரமதேசம், புள்ளிருக்கு வேளூர், திருமயிலாடுதுரை, திருவடைமருதூர், செவ்வந்தீஷ்பரம், சுவாமிமலை திருவையாறு, சீரங்கம், சோலைமலை, மதுரை, ராமேஸ்வரம், தனுக்கோடி, திருவுத்தரகோசமங்கை, சீவிலிபுத்தூர், கருவை, நல்லூரிது முதலாகிய ஸ்தலங்களெல்லாம் சேவித்து, திரிகூடபர்வதமாகிய திருக்குத்தாலத்தில் லெழுந்தருளினார்.

8. அந்தத் திரிகூடமெங்கிற காரணம் மேதென்றால், சிவதுரோகம் பண்ணியிருந்த தக்கனோடே கூடயிருந்த தேவதங்கள், அந்த சிவதுரோகம் தீரவேண்டித் திருக்குத்தாலத்துக்குள்ளே

---

7. *பிறாகை-பிறயாகை; திருதுத்தி-திருத்துருத்தி.*

சித்திர சபைக்குத் தெற்கே ஒரு அம்புபோடுந் தூரத்திலே சென்று பரமசிவனை னோக்கி, மூன்று பலாமரமாக நின்று தவசு பண்ணின படியினாலே, அது கண்டு, பரமசிவனும் உமையவளும் கூடி, ரிஷபவர்களாகி எழுந்தருளி வந்து, உத்திர கணங்கள் எல்லாம் தீத்து, அந்த பலா நிழலிலே விருப்பமாக எக்காலமும் தமக்குக் கூடமாகிய ஆலயமாக்கிக் கொண்டு, எழுந்தருளியிருக்கிற படியினாலே, அது திரிகூடாலெயமென்று பேரானது. அந்த எல்லையிலே அகஸ்தியர் எழுந்தருளினபோது, எனது நினைப்பார்; அது யேதென்றால், தம்மைப் பரமசிவன் பொதிகைக்கு அனுப்பினபோது, ஒரு ரகசியம் சொன்னார்; அது எப்படி என்றால், "பொதிகை மலைக்கு உத்திரசபை என்றிருக்கும்; அவரிடத்திலே விஷ்ணுவாக, நாமிருந்து உலகத்தை இரம்ஷித்துக் கொண்டு யின்னாள் வரைக்கும் மிருக்கிறோம்; யினிமேல் நீரந்தத் தலத்திலே சென்று விஷ்ணுவாக யிருக்கிற நம்மை சிவலிங்கமாகப் பண்ணி, பூசை செய்து, உமக்கு வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொண்டு, பொதிகை

மலையிலே போயிரெ"ன்று திருவிளம் பத்தியருளினார். அந்த எல்லையாகிறது யிந்த எல்லை என்றறிந்து, அங்கே சென்று சித்திரசபையுந் சேஷித்து, துர்கை பரமேஸ்பரியையும் சேசித்து, அதுக்கு தெற்காக வந்து, வடவருவியாகிய சித்திர நதியிலே தீர்த்தமுமாடி, விஷ்டுணுவாக யெழுந்தருளி யிருக்கிற பரமேஸ்பரரையுந் சேவித்து, "தேவரீரித்தனை காலமும் விஷ்டுணு பகவனாய் யிருந்து லோகத்தை ரற்சித்துக் கொண்டிருந்தீரே யினிமேல் சிவலிங்க மூர்த்தியாக எழுந்தருளி யிருக்க வேணுமெ"ன்று அனேகம் துதிகளை செய்து வேண்டிக் கொண்டு, தம்முடைய கைகளாலே சங்கு சக்கரந் தரித்த கைகளைப் பிடித்துத் தளுவிக் கட்டிக் கொண்டு, மந்திரங்களிலே சேவித்து, அப்போது குறுகிய சிவலிங்க மூற்றியாக எழுந்தருளி யிருந்தார்.

9. அதின் பிறகு, அகத்தியரு முருகிய நெஞ்சத்தோடு கூடி, அனேகத் தோத்திரஞ் செய்து, பூசைக்கு வேண்டிய பொருளெல்லாம் முண்டாக்கிக் கொண்டு, உபசாரமாக அமத்தினபடியே பூசை

பண்ணினார். அதின் பிறகு ஒன்று நினைப்பார்; அதே தென்றால், முன்னொரு காலத்திலே பரமசிவன் யிந்த தலத்து மகத்துவம் எல்லாம் சொன்னார்; யிந்தத் தலத்திலே சிவப்பிரகாசத் திலுமிருந்து பராசத்தி ஒரு காலத்திலே மகாதேவரையும் சரஸ்வதியையும் பெத்தாள். அதின் பிறகு விஷ்ணு பகவானையும் உமையவளையும் பெத்த பிறகு, பிரமாவையும் மகாலட்சுமியையும் பெத்தாள்; அதன் பிறகு, மகாதேவருக்கு உமையவளையும் விஷ்ட்டு பகவானணுக்கு லட்சுமியையும் பிரம்மாவுக்கு சரஸ்வதியையும் கலியாணம் பண்ணி குடுத்து திஷ்ட்டிக்கத் தோளிற் பிரமாவுக்கு நதியாகித் தோழில் விஷ்ட்டுணு பகவாணனுக்கு சங்கு சக்கரம் தோளில் ருத்திர மூர்த்திக்குக் கற்பித்து நெடுங்காலம் யிருந்தாள்.

அதினாலே, பராசத்திக் காலமும் பரணியாக யிருக்கியபடியினாலே மகாதலமாகும். அப்படி மும்மூர்த்திகளும் கூடி, கோயில் கொண்டிருந்த படியினாலே, திரிகூடாலைய மென்று பேரானது. அதுவுமன்றி, துர்கை பரமேஸ்பரி எக்காலமும்

பரிபூரணியாக யிருப்பாள்; யிவை முதலாகிய மகத்துவமெல்லாம் நமக்கு பரமசிவன் திருவிளம் பத்தியருளினார்; யிந்த தலத்து மகுத்துவம் யின்னும் அனேகமுண்டு !

10. அதே தென்றால், முன்னொரு காலத்திலே, பதஞ்சலி பகவானாகிய தமையன் சிதம்பரத்திலே பரமசிவனுடைய திருனடனங் காணவேண்டி, அனேகம் தவங்கள் பண்ணினபோது, அவனுக்கு பரமசிவன் வெளிப்பட்டு, "நம்முட திரு நடனம் காண ஆசைப்பட்டாயாகில், திருகூடாலையமென்று ஒரு தலமுண்டு; அதிலே சித்திரசபை யென்றொரு சபையுண்டு; அதிலே திருநடனம் புரிவோம் ! காண்பாயாக !'' வென்று திருவிளம்பத்தி யெழுந்தருளினார். அப்போது, நாகணராசனும் பாதாள வாசல் வழியாக சித்திரசபையிலே வந்து ஞானக்கண்ணும் பெத்து, திருநடனங் கண்டு சேவித்தார். அதுவுமன்றிச் சிவதுரோகம் மிகவும் செய்திருந்த தக்கனோடே தேவர்கள் கூடியிருந்த படியினாலே, அந்த தேவர்களெல்லாம் கற்பக

மரங்களெல்லாம் சிவாக்கினிக்குப் பயந்து அவர்கள் கேட்டது வொன்றுங்குடாதே போச்சுது. அதினாலே, தேவர்களெல்லா முண்ண உணவு களுமில்லாமல் மிகவும் வறுமைபட்டு ஒண்ணாலுந் தீராமல், திருக்குத்தாலத்திலே சென்றாலொழிய யிந்த வறுமை தீராதென்று எல்லோருமொருமிக்க வந்து, சிவனை னோக்கி பதினாயிரம் வருஷம் தவசு பண்ணினபோது, பரமசிவன் மனமிரங்கி ரிஷபவாகனத்திலே எழுந்தருளி காஷ்சி குடுத்து தேவர்களுட சிவத் துரோகங்களு தீர்ந்து, கற்பக மரங்கள் கேட்ட வரன்களைக் குடுக்கும்படிக்கு அனுகிரகம் பண்ணி, அந்த தலத்திலே எழுந்தருளியிருந்தார்.

11. அதவன்றி, யிந்த தலத்துக்கு செண்பகவனம் என்று ஒருவனமுண்டு, அதினாலே பரமசிவனுக்குச் செண்பகவனிப் பெருமாள் ளென்றும், பரமேஸ்பரிக்கு, செண்பகவல்லியா ரென்றுஞ் திருநாமங்களுண்டு. யிந்த ஸ்தலத்திலே யெழுந்த செண்பகடவிக் காத்து ஒருவன் மேலே பட்டால், அவன் முன்சென்மங்களிலே

---

10. வருமை-வறுமை.

செய்த பாவங்களுந் தீர்ந்து, பரமகதியை அடைவான்; அந்த காரணமே தென்றால், தூரதேசத்திலே யிருந்து மகாபாவங்களை செய்தவனாகிய ஒருவன் நத்த தேசத்தை விட்டு வருகிறபோது, அவனுக்கு மரணகாலம் வந்துது. அந்த மரணகாலத்திலே திருகுத்தாலத்திலெழுந்த செண்பகடாவிக் காத்துப் பட்டபடியினாலே, அவன் முத்தியை யடைந்தான். அதினாலே அனேகந் தவம் பண்ணினவனுக்குக் கிடைக்குமல்லாது, மத்த பேருக்கு கிட்டாது ! அதுமல்லாமல் ஒரு வேடுவனந்தத் தலத்திலே வேட்டையாடி ஒரு முசலைக் கொன்னு அப்பாலே வய்த்துக் கொல்லுகிறபோது, அந்த முசலை நதி கண்டெடுத்துக் கொண்டு போகையிலே, வேடுவனந்துடந்து போனான்; அந்த நதியானது பரமசிவனைப் பிரதெஷ்சணமாக ஓடினபடியினாலே. வேடுவனும் பிரதெஷ்சணமாக ஓடினான்; அதனாலே யிந்த வேடுவனுக்கும் நரிக்கும் முசலுக்கும் பூர்வத்திலே செய்த பாவம் முன்பட தீர்ந்து, முத்தியை யடைந்தார்கள். அதுவுமன்றி, யொரு பிராமணன்

வெகு பாவங்களை செய்து, ஒரு வேசையோடே வாழுங்காலத்திலே, ஒருவன் நித்திரை பண்ணுகிறபோது அந்த வேசையை எழுப்பி, தண்ணீர்த் தவனமாக யிருக்குதென்றான்; அவளுந் தான் குடிக்க வைத்திருந்த கள்ளை மோந்து நித்திரை மயக்கத்திலேக் கொடுத்தாள். அந்த கள்ளை பிராமணன் அறியாமற் குடித்தான். அந்த சேதி எல்லாருமறிந்து சொல்லுவார் மனுநூல் பார்த்து: "யிந்த பிராமணனுக்கு நெய்யை நெருப்பென காட்சி, அவன் வாயிலே விட்டாலொழிய தீராதெ''ன்று சொன்னபடியினாலே, நாரதர் வந்து, "யிந்த பிராமணன் இறந்துபோவானென்று அந்த கள்ளுக் குடித்த பிராமணனை யழைத்து. திரிகூடாலைய மென்றொரு புண்ணியதலமுண்டு; அதிலே சித்திராந்தி என்றொரு மகுத்துவமான தீர்த்தமுண்டு; அதிலே முழ்கி அந்த தீர்த்தத்திலே உழுந்து பிராமணம் உள்கொண்டா விந்த கள்ளுக்குடித்த பாவம் தீர்ந்து சர்வ பாவங்களுந்

---

11. செண்பகாடவி=செண்பக+அடவி; முசலை-முயலை; தவனமாக-தாகமாக; காட்சி-காச்சி; உழுந்துபிறமாணம்-உளுந்து பிரமாணம்-உளுந்து அளவு.

தீருமென்டாறப்போது, அந்த பிராமணன் திருகுத்தாலத்திலே தீர்தமாடி, அந்த தீர்த்தமும் உள்க் கொண்டு பரமசிவனையும் சேவித்தவுடனே, முன்னந்தக் கள்ளுக் குடித்த பாவமும் தீர்ந்து, சறுவ பாவங்களுந் தீர்ந்து, சிறிதுகாலம் பெரியவராக யிருந்து, அந்நிய காலத்திலே முத்தியை யடைந்தார்.

12. அதினாலே அந்த சித்திராநதி தீர்த்தஞ் சகல பாவங்களும் தீற்கும்; அதுவன்றி, மகாபாவங்களை பண்ணினவன் திருக்குத்தாலத்துத் தீர்த்தமுமாடாமல் சுவாமியையும் சேவியாமல் மூன்று நாளிருந்து செட்டுப் பண்ணிக் கொண்டு போனானவனும் அந்திய காலத்திலே முத்தியை அடைந்தான்; அதினாலே அந்த தலத்திலே மூன்று நாள் வசாமாக யிருக்கிற பேர்கள் முத்தியை யடைவார்களிது நிஷ்செயம் ! அதுவுமன்றி யொரு பிராமணன் ராசதானியாக யிருந்து நாட்டிலே யிருந்த பேருக்கெல்லாம் கேடுகள் செயிது, யிறையில்லாத யிறை எல்லாம் வாங்கி, வாழை மரங்களை வெட்டி வாழுங் குடிகளைக் கெடுத்து, வெகு பாவங்களையுஞ் செயிது, அந்திய காலத்திலே

நரகத்திலே விழுந்தான் ! அவனுக்கு ஒரு பிள்ளையுண்டு, அந்த பிள்ளை திருகுத்தாலத்திலே வந்து தீர்த்தமாடி தன்னுடைய பிதாவை நோக்கிப் பிண்டப் பிரிதானம் தானம் பண்ணினான். அந்த வேளையில் நரிகத்திலே கிடந்த பிராமணன் விமானவனாக வந்து நல்ல சொறகம் சொல்லி சொற்கத்தை அடைந்தான். அதினாலே யிந்த தலத்திலே பிண்ட பிரதானம் பண்ணினால் யிருவத்தோரு தலைமுறையிலுள்ள மாதாகளும் சொற்கத்தை யடைவார்கள்.

13. அதுவன்றி, ஒருவன் மகா பாவங்களை செய்தான்; அவனுக்கு அந்திய காலம் வந்தபோது, யெமதூதர் கட்டியடிக்கிற போது, அவனும் மடையதனமாய் "குத்தாலமெ"ன்றான். அப்போது, சிவகணங்கள் வந்து, யிமதூதரை துரத்திவிட்டு, அவனை விமானத்திலே'த்திக் கொண்டு கயிலாச பதவியிலே வைத்தார்கள். யிதுவுமன்றி ஒரு வேடன் ஒரு பன்றியை துரத்திக் கொண்டு வருகிறபோது, அந்த

---

12. இறை-வரி.

பண்ணி பயந்து சித்திர நதிக்குள்ளே விழுந்தது ! அப்போது, அந்த வேடனும் அந்த நதிக்குள்ளே விழுந்து அந்த பண்ணியை குத்தினான் ! அந்த நதியில் முழுகினபடியினாலே வேடுவனும் பண்ணியும் முத்தியை யடைந்தார்கள். அதுவுமன்றி ஒரு யானையானது யிந்த சித்திர நதிக்குள்ளே வந்து தன் தும்பிக்கையாலே வாரி தன் மேனி எல்லாம் தண்ணீரை வாரி யிறைத்து விளையாடியது. அதினாலே அந்தியத்திலே கயிலாய பதவியை யடைந்து பரமசிவனுக்கு கயிலாகு கொடுக்கின்ற கனநாதனாக எந்தக் காலமுமிருக்குது.

14. அதுவுமின்றி, காசியிலே மிதித்தால் முத்தி, சிதம்பரத்தை தரிசித்தால் முத்தி; திருவாதபூரிலே பிறக்க முத்தி; யிந்த மூன்று முத்தியுந் திருக்குத்தாலத்திலே தீர்தமாடித் தலவாசம் செய்ய முத்தியுண்டாம் ! யிது முதலாகிய மகுத்துவமனேக முண்டு; அவரிடத்தைச் சொல்லுகிறபோது நம்முடை செனமுள்ள காலமெல்லாம் தலையாதென்றெண்ணி, அகஸ்தியரும் தாம்பிரவன்னி மாதாவோடுங்கூடி,

குத்தாலத்தையும் சேவித்து,தோத்திரஞ் செய்து "யிந்த தலத்திலே யாராகிலும் சேவிக்க வந்தால் முன்னாளிலே ஒவ்வாசமிருந்து, மறுநாட் சவரம் பண்ணிக் கொண்டு, சித்திர நதியிலே தீர்த்தமாடி பரமசிவனையும் சேவித்து, பிதிர்களுக்குப் பிண்ட பிரதானமுங் குடுத்து வந்தால், பிறப்பு நீங்கி முத்தியை அடைவார்கள்; யிது உண்மை" என்று அகஸ்தியரும் திருவிளம் செய்து, யிப்படி மகத்துவமாகிய திரிகூடாலையத்தை விட்டு நீங்கி, அகஸ்தியரும் தாமிரவன்னி மாதாவும் பொதிகைக்கெழுந்தருளினார்கள் !

15. யிப்படி எழுந்தருளுகிறபோது, அந்த பொதிகைமலை நிழலானது, சாயங்கலம் கிழக்கே யஞ்சுயோசினை தூரத்திலே நிற்கும்; அந்த எல்லையிலே அகஸ்தியரும் எழுந்தருளினபோது ஒன்று நினைப்பாரதேதென்றால், முன்னொரு காலத்திலே கயிலாசத்திலே பரமசிவனை சேவிக்கப் போன யிடத்தில், சுவாமி நம்மைப் பார்த்து, யினிமேலொரு நாள் தெட்சணா தேசத்திலே பொதிமை

---

14. ஒவ்வாசம் - உபவாசம்.

என்றொரு மலையுண்டு; அந்த மலையிலே யுன்னை யனுப்புவோம்; அப்போது யந்த மலைக்குக் கீளக்காக அந்து யோசனை எல்லையிலே அந்த மலை நிழல் படர்ந்து நிற்கும்; அந்த யிடமானது நமக்கு மிகவும் காசிக் கேதாரத்துக்கு விருப்பமாய் பிரியமாயிருக்கும்; நம்முடைய சத்தி எந்தகாலமும் மவடத்திலே நிற்குமதினாலங்கே சிவலிங்கம் பிறதிஷ்ட்டை பண்ணிப் பூசை செய்து, பிறகு தாம்பிரவன்னியும் நீயுமாய்ப் பொதிகைக்கு போவாயெ"ன்று திருவிளம் பத்தியருளினார்.

16. அந்த யெல்லை யிவடமாக்குமென்று எண்ணிக் கொண்டு, ஞானக் கண்ணினால்ப் பார்த்து, மணலை சிவலிங்கமாகக் குவித்து, வெகு பத்தியோடேப் பூசை செய்து கோட்டீஸ்பரரென்று திருணாமஞ் சாத்தி மிகுதியும் வரங்களும் பெத்று, பொதிகைமலையிலே எழுந்தருளினார். அப்போது, ஆகாயத்தை யளாவியிருந்த தெஷ்சணா தேசமெல் லாம் மொன்றாய்த் தாழ்ந்து, தெஷ்சணா பூமியும் வடபூமியும் சரிசமமானமாகி நின்றுது. அப்படி

நின்றவுடனே தெஷ்சணாதேச முதலாகிய பெரியோரெல்லாம் வந்து அகஸ்தியரை கண்டு வணங்கி, அதின் பிறகு அகஸ்தியருக்கு பரமசிவனுடைய திருமணக் கோலங் காணுமாசையாலே நல்ல தவத்தை பண்ணியிருந்தார். அது கண்டு, பரமசிவனும் மனமகிழ்ச்சியாய் பார்வதியாரையும் கூட்டிக் கொண்டு பொதிகையிலே எழுந்தருளியிருந்த திருமணக் கோலத்தாடுங் கூடி, ரிஷப வாகனக் காட்சியாகிகெந்த கஸ்த்தூரி பரிமள வாசனைகள் சகல ஆபரணத் தோடும், பிரமா விஷ்ட்டுணு முதலாகிய தேவர்கள், முனிவர்கள், தெய்வ பெண்ங்களோடுங்கூடி, அகஸ்தியரும் தாம்பிரவன்னி மாதாவும் கண்குளிரக் காணும்படி காட்சி குடுத்தார் ! அப்படிக் காட்சி குடுத்தபோது அகஸ்தியருந் தாம்பிரவன்னி மாதாவுமாக ஆனந்தக் கண்ணீர் சொரிய, வாய் கொளர, ரோமங்கள் வொடிபட தன்வசங்கெட்டு, பரவசமாய் நெடும்பொழுது நின்று சேவித்து சரணமெனவே துதிகளுஞ் செய்து, கய் கட்டி நின்றார்கள் ளதின்பிறகு பரமேஸ்வரரும் மவடத்திலே திருக்கோவில்க் கொண்டிருந்தார் ! அந்தப் பொதிகை

அகஸ்தியர் கண்டு, அதிலே உள்ள கற்பக விருஷங்களையுஞ் சந்தன விருஷங்களையுங் குங்கும விருஷங்களையும், தக்கோலம், ஏலம், சாதிக்காய் லவங்க முதலாகிய விருஷங்களினாலே நிறைந்து தெய்வ வுணர்வுக்கு நிகராகிய காய்கனிகள் ளுடைய விருஷங்களாலே மிகுந்த வனங்களையும் கண்டு, யிந்த மலைக்கு நிகராக ஒரு மலையுமில்லை என்று கொண்டாடி *விசுவகர்மனைப்* பார்த்து, "தமக்கு எக்காலமும் இருப்பதற்கு ஒரு ஆசிரபமுண்டாக்கித் தருவாயெ"ன்று சொல்லவும், அவராலே செய்யப்பட்ட ஆசிரமமுண்டாக்கிக் கொண்டு, தம்முடைய தேவியாராகிய உலேவமுந்திர மாதாவையும் யழைப்பித்து, அந்த ஆசிரமத்திலே யிருக்கப் பண்ணி, தாம்பிரவன்னி மாதாவையும் பார்த்து, மூன்று லோகத்திலுள்ள ஆரப்பினார்கள் பாவங்களெல்லாம் நாசம் மாகும்படிக்கு நெல் முதலாகிய உணவுகளை விளையும்படிக்கு தீர்த்தவடிவாகும்படி அகஸ்தியரும் வேண்டிக் கொண்டாரப்படிதானே தாம்பிரவன்னி மாதாவும் தீர்தவடிவாக பிரவேசித்துவர

---

16. கொளரி - குழறி; கய் - கை.

அகஸ்தியருமந்த பொதிகை மலையை விட்டு, அந்த தீர்த்ததோடுங் கூடி. சமுத்திரமளவு மெழுந்தருளி, மீண்டும் பொதிகை மலையிலே வந்தார்.

17. அதின் பிறகு, அகஸ்தியர் தம்முட மனதிலே நமக்கு யீஸ்வரன் சொன்ன செய்திகள் நல்ல பலனும் வாசமானயிடமும் முண்டாச்சுது" என்று அகஸ்தியர் சந்தோஷமாகி யிருந்தார்.

யிந்த கதையெல்லாம் வேதவியாசர் தம்முட குமாரனாகிய சுகப்பிரம முனிவருக்குச் சொல்லி, ஆதியிலே யுள்ள சீதர தீற்தமாகிய முதல்ச் சமுத்திரமளவுள்ள மகத்துவமாகிய தீர்த்தத் துறைகளையும், அந்தத் துறைகளிலே உள்ள ஆலையங்களுஞ் சொன்னாரப்போது, சுகப்பிரம முனிவரும், பிதாவாகிய வேதவியாசரை போத்தி செய்து, "அடியேனுக்கு யிப்படி மகத்தவமான தீர்தத்தைத் தேடித் தலங்களையும் தொகுத்துச் சொன்னால் தெரியவருமோ; யினி விரித்து சொல்ல வேணுமெ"ன்று விண்ணப்பம் செய்தாரப்போது,

---

17. போத்தி - போற்றி.

18. வேதவியாசர் விரித்துச் சொல்லுவார்: "வாரும் பிள்ளாய், சுகப்பிரம முனியே ! யினித்தீர்த்தலங்களின் மகத்துவம் மெல்லாம் சொல்லுகிறோம்; கேழ்ப்பாயாக!" மென்று சொல்லுவார்: "பொதிகை மலையிலே யெழுந்த தாம்பிரவன்னியிலே முதல் சீதரதீர்தமாகும்; சிவலிங்கம் சீதரேஷ்பரராகும். அதின்பிறகு, அகஸ்தியர் தீர்த்தம், சுகத்தீஸ்வரர் சங்கர தீர்த்தம் முதல், விக்னேஸ்வரர் தீர்த்தமுமாக நாலு தீர்த்தமுண்டு. அவிடத்திலே சிவகூடமென்றொரு மலையுண்டு. அவடத்திலே வாமன யீஸ்வரரென்றுங் கேசவ யீஸ்வரரென்றும் மிரண்டு சிவலிங்க முண்டு, அவரிடத்திலே சிவகூடமென்றொரு மலையுண்டு" அதின் பிறகு நரசிங்க தீர்த்தமும், நரசிங்க யீஸ்வரமுண்டு" அதன்பிறகு அனந்த தீர்த்தமும் மனந்தீஸ்பரரென்றுஞ் சிவலிங்கமுண்டு, அதன்பிறகு, வானத்தீர்த்தமும் வானயீஸ்பரமுண்டு, அதற்கப்பால் சங்கர தீர்தமுண்டு; அதற்கப்பால் சுந்தரிசன் தீர்த்தம், அதன்பிறகு வராக தீர்த்தம், வராகமீஸ்பரருண்டு, அதன் பிறகு தாம்பிர வன்னி தீர்த்தமும் தாம்பிர

யீஸ்வரருண்டு, அதன் பிறகு முனி தீர்த்தமுண்டு, அதின் பிறகு கன்னிதீர்தமுண்டு, இப்பால் பாவனாச தீர்த்தமுண்டு, யிப்பால் துர்கை தீர்த்தமுண்டு, ஆகத் தீர்த்தம் 18, சிவாலையம் 9ம், இவை எல்லாம் மலைக்குள்ளே யிருக்கும்.

19. அதுக்கிப்பால், முக்கூடலென்றொரு தீர்த்தமுண்டு, அவகத்திலே பாவனாசலிங்கமுண்டு, அதின் பிறகு, காலதீர்த்தமுந் திருமலிங்கமுண்டு. அதுக்கிப்பால் காசிபத் தீர்த்தமுண்டு காசிபலிங்க முண்டு, அதுக்கு யிப்பால் தீபதீர்த்தமும் கோரித்தாடை யாரென்று சிவலிங்கமுண்டு, அதின் பிறகு, திருவலஞ் சுழி என்றொரு தீர்த்தமுண்டு, அங்கே திருக்கோட்டி யீஸ்பரரென்றொரு லிங்கமுண்டு. யிப்படி சொல்லப் பட்ட திருமுக்கூடல் முதலாகிய திருவலஞ்சுழி முதலாக, அஞ்சு தீர்த்தம் பஞ்ச குறோதமென்று பேராகும் ! யிப்படிச் சொல்லப்பட்ட மகத்துவ தீர்த்தங்களுடனே, தாம்பிரவன்னிக்கு தெற்கே யிருந்து வந்து, தாம்பிரவன்னியோடுங் கூடி வருகிற தீர்த்தங்களிலேதென்றால், வெள்ளையாறு,

சிந்தையாறு, கலியாறு, கோரையாறு, மணிமுத்தாறு யிதுக்கிப்பால், கண்ணுவ தீர்த்தமதிலே கண்ணுமயீஸ் பரரென்று சிவலிங்கமுண்டு, அதுக்கிப்பால் அசுவ தீர்த்தம், அதுக்கிப்பால் வராகி தீர்த்தம், அதுக்கிப்பால்ச் சறுவதீர்த்தம், தெஷ்சிணா தீர்த்தம் யிவை யாறு.

20. காசிப தீற்தத்துக்கு தெற்கே திருவலஞ்சுழிக்கு மேற்கு, இதுக்கிப்பால் கெசந்திர மோஷ்சமென்றொரு தீர்த்தமுண்டு, அவடத்திலே ஆனைகாத்த பெருமாளென்றொரு விஷ்ட்டுணு பகவானெழுந்தருளி யிருப்பார். அதுக்குக் கிழக்கே சித்திர தீர்த்த மென்றொரு தீர்த்தமுண்டு, அதிலே கறணையாறு வந்து கூடுகிற துறையாயிருக்கும். அதின் கரையிலே நாதம்பு லிங்கமுண்டு. அந்த லிங்க மகத்துவமாவது, அதுக்கிப்பால் துற்கே தீர்த்தம், அதுக்கிப்பால் லிரஷ தீர்தம வடத்திலே, யிருஷியா என்றொரு லிங்கமுண்டு. அதுக்கிப்பால் எதிற்தீர்த்தம், அதுக்கிப்பால் சோமதீர்த்தம், அதுக்கிப்பால் மார்கண்ட தீற்தம், அங்கே யிராமேஸ்பரரென்றொரு லிங்கமுண்டு, அங்கே கேட்ட வர மீயவல்லது, அதுக்கப்பால்

தூறுவாச தீற்தமும், காளத்தீஸ்பரரென்றொரு லிங்கமுண்டு, அதுக்கிப்பால் கந்திருவ கந்திருவ தீற்தமமும், கந்தீஸ்பர லிங்கமுண்டு.

21. அவடத்திலே, பட்சையாறு வந்து கூடுகிற துறையா யிருக்கும். அவடத்திலே, மந்தேஸ்பரென்றோரு லிங்கமுண்டு. அதுக்கப்பால் தேவதீற்த மங்கே துற்கேஸ்பரபரென்றோரு லிங்கமுண்டு, அதுக்கிப்பால் பூந்துரை சத்திரிஷி தீற்தமங்கே திருமூலிலிங்க முண்டு, அனவரத லிங்கமுண்டு. அவடத்திலே பாடலங் கம்பையாறு பாதாள கெங்கயையாக ஏமபுட்கரணியாக பொஸ்தாமரையிலே கூடி, பாதாள கெங்கையாக சிந்துபுந்துரை யிலே கூடும், அதுக்கிப்பால் சடாய்வு தீற்த, மங்கே ராமலிங்க முண்டு, அதுக்கிப்பால் மங்கல தீற்த மங்கேஷ்பரலிங்கமுண்டு, அதுக்கு கிழக்கே சித்திர நதி வந்து கூடுகிற யிடமானதாற் பிதிர்தீற்தமாகும். அதுக்கு.. கே முக்கூட லதுலே அளகமுண்டு, அதுக்கிப்பால் தெஷ்சணாதீற்த மதிலே

20. கெசந்திறமோஷ்ச-கஜேந்திர மோட்ச; துற்கே-துர்க்கை; தூறுவாச-துர்வாச.

உக்கிற யீஸ்வரலிங்க முண்டு. அதுக்கப்பால், ஸ்ரீவைகுண்ட தீற்த மதிலே கள்ளபிறா னென்றொரு விஷ்டுணு பகவான் எழுந்தருளி யிருப்பான். அதுக்கப்பால் திருச்சங்கு தீற்த மவடத்திலே ஆளவர்ரெண் றொரு விஷ்டுணு பகவானெ ழுந்தருளி யிருப்பார், அதுக்கிப்பால் திருச்சங்கணித் துறை தீர்த்தம்; அதுக்கிப்பால் ரசசெந்த தீர்த்தம்; அவடத்திலே ஆதிநாத ரெழுந்தருளி யிருப்பார். அதுக்குக் கிழக்கே நவலிங்க தீற்தமுண்டு. அவடத்தில், நவலிங்க முண்டு. அதுக்கு வடமேற்காக காந்தீஸ்வர தீற்த முண்டு. அங்கே காந்திஷ் பரலிங்க முண்டு; அதுக்கப்பால் வட்த்தமான தீற்த மதுக்கப்பால் வடக்கரையிலே ஏழுதிருப்பதி சங்கணி தீற்த, மதுக்கப்பால் பிறம்ம தீற்த மதுக்கப்பால் லக்கினி தீற்த மவடத்திலே அக்கினியீஸ்வர ருண்டு. அதுக்கப்பால் அதே தேவஷ்பரலிங்க முண்டு. அதுக்கப்பால்ச் சங்கு தீற்த மப்பால் தாரா தீற்தம்; அதுக்கப்பால்ப் பசிமி தீற்தம்; அப்பால் தேவதீற்தம், அப்பாற் சூரிய தீற்தம் அப்பால், வாய்வு தீற்தம், அங்கே சோமலிங்க முண்டு. அப்பால்ச்

சங்கு தீற்தம், அவடத்திலே அகஷ்தீஸ்பர லிங்க முண்டு. அப்பாற் சமுத்திரம்; அங்கே குமாரனாயகர் யெழுந்தருளி யிருப்பார்.

22. ஆக யிந்தபடிக்கு வருகிற தீற்தங்களிலே யிந்த தாம்பிரவன்னியுங் கூட தெற்கு வடக்கு பக்கத்திலே யிரந்து கூடி வருகிற நதிகள். கூடினயிடத்திலே ஒன்றுக்கொன்று மகுத்துவங்களாகிய தீற்தங்களாகும். யிந்த தாம்பிரவன்னி தெற்கு வடக்கு கிழக்கு மேற்கு முகமாகத் திரும்புகிற துறையிலே தீற்த மாடினால் ஒன்றுக்கொன்று அதிக தீற்தங்களாயிருக்கும், யிப்படி மகுத்துவஞ் சொல்லப்பட்ட தாம்பிரவன்னியிலே அடிக்கடி தீற்தங்களாயிருக்கும் யிந்த தாம்பிரவன்னிப் போக்கிலே சில தலம், விஷ்ணு தலம் எழுந்தருளி யிருக்கிற யிடங்களெல்லாம் தீற்தமாடிச் சேவித்தால், நினைத்த காரியங்கைகூடும். இவையின்றி முன்னொரு காலத்திலே வருணபகவான் உலகத்திலுள்ள நதிகளுக்கெல்லாம் அதிக தீற்தம் ஏதென்று

21. சத்தரிஷி-சப்தரிஷி-ஏழு இருடிகள்; பொஸ்தாமரை-பொற்றாமரை ; பொன்+தாமரை.

விசாரித்தபோது தீர்த்தங்க ளுண்டாகிய மூனரைக் கோடி தீர்த்தங்களினாலேயும் யிந்த தாம்பிர வன்னி மிக்கத் தீர்த்தமென் றறிந்து, தாம் தாம்பிரவன்னியிலே வந்து யாகத்தைப் பண்ணி மகாதேவரைப் பிரியம் பண்ணினான். யாதாமொருவன் னானாலும், எந்த தீர்த்தமானாலும் யெந்த குள மருவி யானாலும், தாம்பிர வன்னியை நினைத்துத் தீர்த்த மாடினால் மிகவும் பலனை அடைவார்கள்.

23. தாம்பிரவன்னித் தானங்கிடையாத பேருக்கு ஒருக்காலும் பாவம் நாசப்படாது ! தாம்பிரவன்னியாலே சகல பாவங்களும் நாசப்படும் அதினாலே பாவநாச மென்று பேரானது ! யிந்த தாம்பிரவன்னி தீர்த்தத்தினாலே, பத்துப் பணவிடை தீர்த்தம் உள்க்கொண்டால் சகல பாவமும் நாசப்படும், யிந்தத் தீர்த்தங் கிடையாத அன்னியத் தேசத்திலே தாம்பிரவன்னியில் விளைந்த நெல்லு முதலாகிய வுணவுகள் கிடைத்தாலும் அவர்களுடைய பாவங்கள் நாசப்படுங் காவேரி விஷ்டுணு பகவான் சத்தியிலே பிறந்து தாம், தாம்பிரவன்னி பரமேஸ்பரி சத்தியிலே

பிறந்தது ! இப்படி பிறந்த படியினாலே மிக்க தீற்தமாகும், யிதுவுமன்றி கெங்கை சரஸ்பதி சத்தியிலே பிறந்துது. யெமுனை சறுவ தேசங்களிலேயும் பிறந்துது, கோதாவரி பிறமா சத்தியிலே பிறந்துது. கெவிதமி துற்கை சத்தியிலே பிறந்தது. தாம்பிரவன்னி பராசத்தியிலே பிறந்த படியினாலே அதிக தீற்தமா யிருக்கும். தெஷ்ணா தீற்த மேதென்றால் காவேரியும், தாம்பிரவன்னியுமாகும்.

உத்திரகங்கை யேதென்றால் யெமுனையும், பாகிரதியுமாகும், மகா பாவங்களை செய்தவ னானாலும் அவன் யெலும்பைத் தாம்பிரவன்னியிலே புதைத்தாலும் அவனுக்கு மொட்ச முண்டாம் !

24. யிதன்றி, தாம்பிரவன்னியிடத்திலே கிரகலக்கிற தோஷமில்லை, அதன்றி யுலகத்திலே மிகவும் பாஞ்செய்த பேருக்கு அந்த பாவங்கள் தீர்ந்து, யிச்சை பெறவேண்டி பரமெஸ்வரன் பூறுவத்திலே தாம்பிரவன்னியை படைத்த காரணமாகும். யிப்படி மருத்துவமாகிய தாம்பிரவன்னியை யவமதித்து

தூரங்களிலே யுள்ள தீற்தங்களாகுகிறப் போது காக்காய்கள் தானிருக்கிற யெல்கைலே எத்தனை யிரை கிடைத்தாலும் தூரங்களிலே போனாலொழிய ஆசை தீராது, அதுக்குச் சரியாய் சில தீற்தங்களெல்லாம் திறேயுதா துவாபரத்திலே பலனைக் குடுப்பதன்றி, உலகத்திலே பலனைக் குடுக்க மாட்டாது, தாம்பிரவன்னி அந்த மூன்று யுகத்திலேயும் பலனைக் குடுக்குமென்று பெரியோர்களாலே சொல்லப்பட்ட தாகும். அதுவுமின்றி தாம்பிரவன்னித் தலத்திலே யிருந்து யாதா மொருவனானாலும் நீதியோடே நடக்கிறவன், போன சென்மங்களிலே தெய்வ சென்மங்களாயிருந்து மறுசென் மத்திலே முத்திரையை யடைவதற்கு வேண்டிவந்து யிருக்கிறவனே யல்லாது, அவளை மனுதனென்று சொல்லவேண்டாம், சேவபுத்திரனென்றெண்ணிக் கொள்ள வெணும். யிப்படி மருத்துவமான தாம்பிரவன்னியிலே வந்து கிரணகாலங்களிலே சோம வாரங்களிலே உத்துராயணத்திலே, தெஷ்சனாயத்திலே பூசத்திலே, விதிப்பாதங்களிலே, ஆதித்தவாரங்களிலே, ஆட்டை

பிறந்த நாளையிலேப் பக்கனாள் பொல்லாத சொப்பனங் கண்டத்தினாலே நல்ல புண்ணிய காலங்களினாலே ஒரு பாவங்களை அறிந்தறியாமல் செய்தகாலங்களிலே தீர்த்தமாடினால். சகலதோஷமும் தீரும். அந்த தீர்தக் கரையிலே நின்று, பூதானங், கோதாானம், வஸ்திரதானம், அன்ன தானம், சொற்ணதானம், எள்ளுத்தானம், உப்புதானம், யிருப்புதானஞ், சக்கரை தானம், யிப்படிக் கொத்த தசதானங்களிலே ஒரு தானங்கள் பண்ணினாலும் பிறம்மலோகத்தை யடைவார்கள்.

25. அதுவுமின்றி, நல்ல புண்ணிய காலங்களிலே யிந்த தாம்பிரவன்னிக் கரையிலே யிருந்து சிவங்கள், ஓமங்கள், பிண்ட பிறதானங்கள் சிவபூசை பண்ணினால் ஒன்றுக்கொன்று பலன் அதிகதாகத் தரும். யிப்படி வேதவியாச முனிவர் சொன்னபோது, சுகப்பிரம முனிவர் மிகவும் பிரியமாக கேட்டு, "யின்னம் யிந்த தாம்பிரவன்னி மாதா கதையை

---

24. பூதானம்-நிலத்தானம்; கோதானம்-பசுவைத்தானம் தருவது; வஸ்திர தானம்-ஆடையை அளிப்பது; சொர்ணதானம்-தங்கத்தைத் தருவது.

விரித்து சொல்லவேணு" மென்று கேட்டபோது பின்னும் விரித்துச் சொல்லுவார்.

26. "வாரும் பிள்ளாய், சுகப்பிரமா முனிவனே ! அந்த மலை பறுவதத்திலே அகஸ்தியர் நித்திலும் சேவிக்கும் பொருட்டாக அகஷ்த்தீஷ்பரரென்றும், பரமேஸ்வரியென்று யிருபேரையும் பிறதிஷ்ட்டை பண்ணி, நித்தியம் பூசை பண்ணுவார். அங்கே அகஸ்தியர் தீற்தமென்றுப் பேராகும். அதுக்கிப்பால் மகாலஷ்சுமி யாரோடுங் கூடி, சீதரரேஷ்பரரென்று ஒரு சிவலிங்கப் பிரதிஷ்ட்டை பண்ணி, மகாவிஷ்டுணு பூசை பண்ணினா ரங்கே சீதரதீற்தமாயிருக்கம்; அதுக்கிப்பால், விக்கினேஷ்பர கேசவதீஷ்ரரென்று ஒரு லிங்க பிரதிஷ்ட்டை பண்ணினார். அவடம் சிவகூட மென்றொரு பறுவத முண்டு. அங்கே சிவகூட தீற்த முண்டு. அங்கே முனிவர்கள் மிகுதியாகக் கூடியிருப்பார்கள், அதுக்கிப்பால், விஷ்டுணுபகவான் மனு அவதாரமெடுத்த காலத்திலே, வாமன தீற்த முண்டாக்கி, பிறதிஷ்ட்டை பண்ணினார். அதுக்கு கிழக்கே விஷ்டுணு பகவான் நரசிங்க அவதார

மெடுத்தபோது, நரசிங்க தீர்த்தமும் நரசிங்க லிங்கமு முண்டாக்கிப் பூசை பண்ணினார். அதுக்கப்பால், தெஷ்சணா தீர்தமென்றும் அனந்தீஷ்பர லிங்கமு முண்டாக்கிப் பூசை பண்ணினார். அதுக்கு கிழக்கே வானசூரன் வானதீர்தம், வானாசூர லிங்கமென்றும் பிரதிஷ்டை பண்ணி, பூசையும் பண்ணி அனேகம் வரங்களும் பெத்தார். அதுக்கு கிழக்கே, விஷ்டுணு பகவான் வராக அவதார மெடுத்தபோது, ஒருகாலம் பொதிகை மலையிலே வந்து தாம்பிறவன்னியிலே தீர்த்தமாடி, வராகயீஸ்பர ரென்றொரு சிவலிங்க பிரதிஷ்ட்டை பண்ணி பூசையுஞ் செய்து அனேகம் வரங்களும் பெத்தார். அதுக்கு கிழக்கே தாம்பிரவன்னி மாதா எழுந்தருளி வந்து, அந்த தாம்பிரவன்னியிலே தீர்தமாடி, தாம்பிரவன்னி யீஸ்வரரென்று லிங்க பிறதிஷ்ட்டையி பண்ணி, பூசை செயிது, வேண்டிய வரங்களும் பெற்றான். அதின் கிழக்கே, பாவனாச லிங்கமென்று மனதினாலே உள்ள லிங்க மூற்தியாய் முக்கூடலென்ற தீர்தத்துக்கு உடையவராகி, தம்மை சேவித்த பேருக்கு ஒரு காலங்களும் போகாத

பாவங்களெல்லாம் போக்கி, ரெட்சிக்கிறபடியினாலே, பாவனாச லிங்கமென்று பேர் பெத்திருக்கு மந்த தலந் தேவர்களாலும் மனிதராலும் பூசை பண்ணப்பட்டச் சுயம்புலிங்கமாயிருக்கு மந்தக் கூடலிலே தீர்த்தமாடி, அந்த லிங்கத்தையுஞ் சேவித்தால் மகாபாதகம் முதலாகிய பாவங்கள் நாசப்படும். அதன் கிழக்கேச் சாலா தீர்த்தமென்றொரு தீர்த்தமுண்டு; அதிலே திருமூலனாத னென்றொரு லிங்கமும் அந்த தீர்த்தத்துக்குடைய மகாலிங்க முண்டு. அந்த தலத்திலே ஒரு காலத்திலே அகஷ்த்தியர் வந்து திருமூலனாதரே சாயுங்காலஞ் சேவித்து பூசை பண்ணி அன்றிரவு முத்தும் நித்திரை யன்றி சேவித்திருந்து விடியகாலத்திலே சுவாமியையுஞ் சேவித்துக் கொண்டு அவர் கோவிலுக்குத் தெற்கே சென்று தாம்பிறவன்னியிலே தீர்த்தமாடி யெழுந்திருந்து திருமூல னாதருடைய திருமேனியைக் கண்களாலே புலப்படக் கண்டார்கள். கண்டவுடனே மேனி எங்கும் புளகித்து பரவசத்தை அடைந்து நின்று சேவித்ததின் பிறகு, அகஸ்தியரும் யிந்த தீர்த்த மிகவும்

26. நித்திலும்-தினமும்.

மருத்துவமான தீர்தமென்றுக் கொண்டாடி அவடத்திலே அனேக முனிவர்கள் கூடிக்கொண்டு, யாகசாலையும் கட்டி வித்து, ஒரு வேள்வியையும் நடத்தி திருமூலனாத சுவாமியையும் பிறியப்படுத்தி, யிந்தத் தீர்தத்திலே யாதா மொருவனானாலும் தீர்தமாடி, திருமூலனா தனையுஞ் சேவித்த பேருக்கு மகாபாவங்கள் தீரும்படிக்கு வரங்களும் பெத்து, மலை பறுவதத்திலே போனார்

27. அதனாலே சாலாதீர்தமானது மகாபுண்ணியஞ்செய்த பேருக்கு கிடைக்குமொழிய மத்தபேருக்கு கிடையாது; அதின் பிறகு, "கோடிஸ்பரரென்று மருத்துவத்தைச் சொல்லுமென்று" சுகமுனிவர் கேட்டபோது, வேதவியாசர் சொல்லுவார்: "அகஸ்தியர் பொதிகை மலையில் வருவதற்கு முன்னொரு காலத்திலே பொதிகைமலை சரிகின்ற நிழலில் தெற்கெல்லையிலே வந்து பரமேஸ்வரன் தமக்கு முன்னொரு காலத்திலே சொன்ன சொறபம் நினைத்துக்கொண்டு, மணலை சிவலிங்கமாகக் கூட்டிப்பிடிக்கையிலே, பரமசிவனும் அகஸ்தியர்

பேரிலே மிகவும் பிரியத்தை யுடையவராய், அவர் கூட்டிப்பிடிக்கின்ற சிவலிங்கம் நாலாறு திறமாகச் சரிந்துச் சரிந்து விழப்பண்ணிப் பார்த்துக் கொண்டு விளையாடின காரணமாக யிருந்தார். அப்போது அகஸ்தியர், சலித்துக்கொண்டு, "யினி சரிந்து விழுந்தா லென்பிராண சேதம் பண்ணுவேனென்று நேமித்துக்கொண்டு, சரிந்து விழாதபடிக்கு பதலமாக சிவலிங்கம் கூட்டி பிடிக்கையிலே, சத்தே சரிவது கண்டு, கைகளாலே கட்டிக்கொண்டு, "இதென்ன கோட்டியா யிருக்குதென்று தம்மிலே சொன்னபோது, அந்த லிங்கஞ் சரியாமல் செம்மையா யிருந்தது. அகஸ்தியர் கைகள் பட்டதெல்லாம் தம்மிட மேனியிலே பட்டு பதியக் கட்டிக்கொண்டு, அதின்பிறகு அகஸ்தியர் சஞ்சல மெல்லாம் தீர்ந்து மிகவும் பிறியத்தை யுடையவராயிருந்து, பண்ண வேண்டியதெல்லாம் சோடச உபசாரத்தோடும் பூசை பண்ணி மிகவும் திருமேனியெல்லாம் புளகித்து, சந்தோஷத்தை அடைந்து, ஆனந்த களிப்பு மேலிட்டு என் கோட்டி நாதரென்று மிகவும் தோஸ்திரங்கள் பண்ணி புகழ்ந்தார்.

27. சொறபம்-சுலோகம்; சோடச-பதினாறு.

28. அதின்பிறகு, பரமசினும் அவருடைய பூசையுங் கைகொண்டு நம்முடைய பத்தர்களுக்கு மிகவும் பயப்படுவோமென்று திருமேனியுங் குலைத்து கட்டிக்கொண்டு, கோட்டீஸ்வரரென்று திருணாமங் கொண்டு, தம்மை யாதாமொருவனாகிலும் உண்டென்று சேவித்து உபசாரங்கள் பண்ணின பேருக்கு யிம்மையும் மறுமையும் மாறிப் போகுமென்று யிருக்கிறார். அவர் சன்னதி திருவலஞ்சுழி என்று பேராம். அந்த நதியிலே தீற்தமாடித் திருக்கோடீஸ்பரரையும் சேவித்தால் மிகவும் முத்தி மோஷ்ச முண்டென்று வேதவியாசர் திருவிளம் பத்தினபோது, சுகமுனிவரும் அவரைப் பார்த்து, "யினி யெரித்தாவுடையார் மருத்துவஞ் சொல்லு "மென்று கேழ்க்க, அப்போது சொல்லுவார்'. "பூறுவத்திலே காசியிலே இருந்து ஒரு சிவ பிறாமணன் வந்தான். அவன் பெயர் சிவசன் மென்று பேராகும். அவன் வெகு திரவியங்களுங் கொண்டு மிகுத்த விறுத்தனாக பிறப்பட்டு, தாம்பிறவன்னியிலே தீற்தமாடி, அகஷ்தியரைக் கண்டு வரவேணுமென்று பிறப்பட்டு,

அந்தந்த ஆலையங்களுஞ் சேவித்து, அவரைப் பூசைபண்ணுகிற பிறாமணன் வீட்டிலே வந்து விடிதியாக பண்ணிக்கொண்டு, யிந்த திரவியமெல்லா மந்தச் சிவபிறாமணன் வீட்டிலே "அகஸ்தியரைக் கண்டு வருமளவும் பதனமாக வைத்து தாரு"மென்று அனுப்பிக்கொண்டு ஒரு வாற்றையுடையவனாகி பொதிகை மலையை நோக்கி, அகஸ்தியரைக் கண்டாலொழிய மீளேனென்று போனான். அப்படி விரதம் பண்ணிக்கொண்டு வருகிறத்தை அகஸ்தியரும் அறிந்து, "யிவன் சாகிறதற்கு பயப்படானென்று எண்ணி, ஒரு விரித்தராக வேஷங் கொண்டு வந்து, எதிரே நின்று நீ யெங்கே போறா யென்றார். அப்போது, சீவசன்மாவும் பாத்துத் தான் அகஸ்தியரைக் காணபோறே னென்றபோது, "நீ யிந்த காடும் மலையுங் கடந்து அவரை நீ எங்கே காண்பாய்? மீண்டு போவதே காரியமென்"றார். அப்போது "அவரை நான் காணாவிட்டால், என் பிராணனைப் போக்குவதே காரியம், யிதன்றி இன்று மீண்டு போவதில்லை" என்றான். அப்போது, அகஸ்தியரும்

பயந்து தம்முட விசுவ சுரூபத்தை அமிழ்திவிட்டார். அந்த தீர்த்தத்துக் குள்ளாக அஞ்சு யோசனை தூரத்துக்குக் கிழக்கே சாலதீற்தத்துக்கு மேற்கே ஒரு அம்போடு திறத்துக்குள்ளாக அந்த விளக்குங் கையிமாக, எழுந்திருந்தான்; எழுந்தவுடனே பதினாறு வயதாக பிராமணன் ரூபமாய் நின்றான். அப்போது. அகஸ்தியரும் காட்சி குடுத்தார். அப்போது சீவசன்மனும் அகஸ்தியர் பாதங்களிலே விழுந்து தெண்டம் பண்ணி அடியேனுக்கு மோட்சம் தரவேணுமென்று கற்பித்து அனுப்பினாரப்போது, சீசன்மாவும் அகஸ்தியரை தொழுது அனுப்பிக்கொண்டு இந்த காசியீஸ்பர் பூசித் தீற்த சிவபிறாமணன் சாந்தினிடத்திலே வந்து கண்டு, தான் குடுத்த திரவியமெல்லாம் கேட்டான். அப்போது, சாந்தனுமிவனைப் பாத்து, "நீ சிறு பிள்ளையாகும் ! என் கையிலே தந்தவன் மிகவும் விறுத்தனாகும், மதனா லுன்கையிலே தருகிறதில்லை ! "என்றான் அப்போது சிவசன்மாவுமவனைப் பார்த்து, தான் பொதிகை மலையிலே சென்றதும், அகஸ்தியர் காட்சி

குடுத்ததும் அந்த செய்திகளெல்லாம் விளங்கச் சொன்னான். அப்போது, பிறமாணத்துக்கு எத்தனம் பண்ணிக் கொண்டு பொருளாசையாலே, "என் கையிலே தரவில்லை" என்று சொன்னவுடனே, அப்போது, சீவசன்மனும் பிறமாணத்துக் கிசைந்தான்.

29. அதின்பிறகு, மறுனாள் விடியுமுன்னே சாந்துவ னென்கிறவன் சென்று காசியீஸ்பர லிங்கத்திலே யுள்ள சத்தி எல்லாம் ஒரு கும்பத்திலே தாபித்து, அருகே நிற்கிற புளியின் மேலே வைத்துவந்தான் ! அந்த செய்தி பரமசிவன் அறிந்து சிவசன்மாவுக்குக் கினாவிலே வந்து திருவிளம் பத்தினார். அது நிற்க, யிப்பால் இரண்டு பேரும் பொருந்திச் சத்தியம் பண்ணுவதற்கு காசியீஷ்பரன் சன்னதியிலே வந்தார்கள். அப்போது, சாந்தனை பார்த்து, சிவசன்மனு"மிந்தப் புளியைப் பார்த்து சத்தியஞ் செய்து தந்தால் போதுமெ"ன்றான் ! அப்படி பொருந்தி புளியை னோக்கி யாறடி நடந்தவுடனே எரிந்து விழுந்தான் ! அதின் பிறகு, அந்த புளியின்

---

28. விரித்தற்-விருத்தர்-முதியவர்; சுருபத்தை-உருவத்தை; பிரமாணம்-சான்று.

கீழே காசியீஸ்வர லிங்கமென்று ஒரு லிங்கம் முளைத்தெழுந்துது. அதை எல்லாருங் கண்டு, எரித்தவுடையநயினார் ரென்று பேரிட்டு, சாந்தன் வீட்டிலே வைத்த பொருளெல்லாம் வாங்கி, சன்மாவுக்கு கொடுத்தார்கள் ! அதின்பிறகு, சிவசன்மனுமந்த சுவாமிக்குப் பெரிய கோவிலுங் கட்டி, நவுபுர மென்று ஒரு ஊரு உண்டாக்கி, அந்தியத்திலே முத்தியை அடைந்தான் ! அந்தக் கோவிலிலே மருத்துவமான இரண்டு லிங்க மிருந்தபடியினாலே, தேவர்கள் முனிவர்க ளெல்லாங்கூடி சேவிக்கிற தவமாயிருக்கு மவட மகாதலம் முத்தி வீடென்று சொல்லப்படும். யிந்த காரணங்கேட்டு சுகமுனிவரும் வேதவியாசரைப் பார்த்துக் கேழ்க்கிறார், "இனி, மோஷ மென்று சொன்னீரே, அந்த கதையை விரித்துச் சொல்லும் அய்யா !" வென்று கேட்க, அப்போது, சொல்லுவார்:

30. "பூறுவத்திலே, மணலூரென்று ஒரு ஷருண்டு; அதுக்கு ஒரு ராசாவுண்டு. அந்த ராசாவைக் காணவேண்டி, அகஸ்திய ரெழுந்தருளினார் அந்த

ராசாவின் காவலரை அழைத்து, "நான் வந்த சேதி உங்கள் ராசாவுக்குச் சொல்லும் பிள்ளாய்" என்றார். அந்த வாசல் காவலரு, ''மிப்போது காண வேளையல்ல" வென்றார்கள். அப்போது, அகஸ்தியரும் அந்த ராசாவைக் கோவித்து, ஆனையாகப் போவா யென்று சபித்தார் ! அது கேட்டு ராசாவும் பயந்து, "அடியேன் செய்த குத்தம் பொறுத்தருள வெண்டும்" என்று தெண்டம் பண்ணி, "அடியேன் ஆனையாகப் போனாலும் விஷ்டுணு பகவான் பாதங்களிலே புத்தியுண்டாய் நல்ல புஷ்பங்களினாலே அற்சித்து கிறுபையோடும் பூசைபண்ணி விஷ்டுணு லோகத்தை யடையும் படிக்கு அனுக்கிரகம் பண்ணுமெ"ன்றான். அப்போது, அகஸ்தியரும் அந்தப் பேச்சை உண்மை என்றும், நீ யானையாகப் போனாலும் உனக்கு நல்ல அறிவு மண்டாக்கி விஷ்டுணு பகவான் மேலே நல்ல அன்புடைய பத்தனாகி அன்றாடகம் நல்ல புஷ்பங்களினாலே அற்சித்து பூசைப் பண்ணி வருகிற காலத்திலே ஒரு தாமரை பூவை எடுக்கும் பொருட்டால் ஒரு மடுவிலே போய் யிறங்கி,

அப்போது முதளை வந்து பிடிக்கும்; அதினாலே னொந்து, ''ஆதிமூலயென்''று, ''மாதிகேசவா'' என்றுங் கூச்செப்பிடுவாய், அப்போது, விஷ்டுணு பகவானும் கெருட வாகரூடராகி எழுந்தருளிச் சக்கரத்தினாலே அந்த முதலையைச் சங்கரித்து, உனக்கும் அந்த முதலைக்கும் முத்தி மோட்ச முண்டாகுமென்று அனுக்கிரகம் பண்ணிப் போனார். அதின் பிறகு, அந்த ராசாவும் அங்கே ஆனை ரூபங்கொண்டு, காடுகள், மலைகள் நதிகளிவ்விடங்களிலே பறிவோடுங்கூடித் திரிந்து, நல்ல புஷ்பங்களெடுத்து விஷ்டுணு பகவான் பாதத்திலே அற்சினைப் பண்ணி நெடுனாள் திரியும்போது, பனிரெண்டு வருஷமாக மழையில்லாமல் காட்டுக்குள்ளே புஷ்பங்களில்லாமல், தாமரை பூவுமில்லாமல், தாம்பிறவன்னியிலே வந்தப்போது, ஒரு வாவிலே அனேகம் தாமரை புஷ்பங்களிலிருந்து, அதைக் கண்டு, அதுக்குள்ளே யிறங்கி புஷ்பங்களை எடுக்கும் போது, ஒரு முதளை வந்து முன்னங்காலை பிடித்து, அப்போதந்த யானை நடுநடுங்கிக் கொண்டு, ''ஆதிமூலமெ''ன்றும்,

ஆதிகேசவா" என்றும் கூப்பிட்ட சத்தம் விஷ்டுணு பகவான் திருவிளத்திலே அறியப்பட்டு, கெருடவாகன ரூடராகி எழுந்தருளி வந்து, "பயப்படாதே" என்று சக்கரத்தாலே இந்த முதளையைச் சங்கரித்து ஆனைக்கும் உடனே தேவரூபத்தைக் குடுத்துத் தம்முட லோகத்திலே விமான வாகனமாகப் போகும்படிக்கு அந்த முதளைக்கும் பதவியைக் குடுத்தார்.

31. அந்த முதளையும் முற்காலத்திலே தேவனாக யிருக்கிறபோது, ஒருமுனி சாபத்தாலே முதளையாக பிறந்து, சாபத்தின் விமோசனத்தினாலே அழியா பதவியிலே போனான். அந்த தலத்திலே விஷ்டுணு பகவான் மிகவும் விருப்பமாகி பூசை கொண்டருளி, தம்மை சேவித்த பேருக்கெல்லாம் பாவமோசனம் பண்ணிக்கொண்டு கெசேந்திர மோட்சத்தீற்த முண்டாக்கி, ஆனைக்காத்த பெருமாளென்று திருனாம முண்டாக்கி யெழுந்தருளியிருக்கிறார். அவடத்திலே தீற்தமாடி ஆனைக்காத்த பெருமாளைச் செவித்து ஒரு

---

30. சங்கரித்து-கொன்று.

உபகாரங்களைப் பண்ணின பேருக்கு யின்மையும் மறுமையும் ரெட்சிப்பார். அதின்பிறகு, சுகப்பிற முனிவரும் பிதாவைப் பார்த்து, "யினி சுகேந்திர மென்றும் சொன்னீரே, அது நன்றாய் விரித்து சொல்லுமெ"ன்று கேட்க, வேதவியாசர் சொல்லுவார்:

32. பூறுவத்திலே விருதா அசுரனென்று ஒரு அசுரன், வெகு வரங்களைப் பெற்று, தேவேந்திரனைப் பொருதவென்று குதிரை தேர் முதலாகக் காலாள் படையோடுங் கூடி, தெய்வலோகத்திலே அமரர்பதி என்கிற தாயிருந்து, தேவர்களை எல்லா மூளியங்கொண்டு, பிறதாபித்திருந்தான். அப்போது, தேவேந்திரனும் அந்த அசுரனுக்கு பயந்து, சில தேவர்களைக் கூட்டிக் கொண்டு மகாமேருவுக்கு மேல் பாரிசமாயிருந்து, நாட்டிலே சென்று விஷ்டுணு பகவானைகண்டு, நமஷ்கரித்து. விறுதா அசுரன் செய்கிற உபத்திரமெல்லாம் சொன்ன போது, அவரும் மன உளப் பட்டுக்கொண்டு, இனி இந்த அசுரனைக் கொல்வதற்கு ஒரு ஆயுதங்களாலுங் கூடாதென்று,

---

31. இன்மை-இம்மை-இப்பிறப்பு; கேழ்க்க-கேட்க.

சிவமுனிவனை னோக்கித் தவசு பண்ணி, அவன் கைலே இருந்த வச்சிராயுதம் வாங்கிக்கொண்டு, அந்த விற்தா அசுரனைக் கொல்லுவா யென்றனுப்பினார். தேவேந்திரனும் அப்படியே பொருந்தி அந்த முனிவனை னோக்கி தவசுபண்ணினான். அந்த சிவமுனிவன் வந்து, சந்தோஷப்பட்டு, "உனக்கு கென்னா வரம் வேணுமெ"ன்று, கேட்டான். "எனக்கு விரிதாசுரனை னோக்கிக் கொல்வதற்கு வச்சராயுதம் வேணும்மெ"ன்று கேழ்க்க, சிவமுனிவனுந், தன் முதுகெலும்பைப் பிடிங்கிக் குடுத்தனுப்பினார். அந்த வச்சராயுதங் கொண்டு விறுதா அசுரனையும் பின்னும சுரரர்களைக் கொன்று ஆனைந்தமாய் எப்போதும் போலே தேவேந்திரன் யிருந்தான்.

33. அப்போது, விறுதா அசுரன் பிறமாவின் விந்தான படியினர்லே பிறமத்தி தோஷந் தெய்வேந்திரனுக்குப் பிடித்துது. அதின்பிறகு, பரமசிவனை னோக்கி தவசுபண்ணினால்லொழிய இந்த தோஷந் தீராதென்று தேவர்கள் சொன்னார்கள்.

---

32. விருதா அசுரன்-விருத்தாசுரன்.

அதின்பிறகு தேவேந்திரன் தாம்பிறவன்னியிலே வந்து தீற்தமாடி, அந்த கரையிலேயொரு மருத மரமாக நின்று நெடுனாளாகத் தவசு பண்ணினார். யிப்படி தவசுபண்ணுகிறபோது, தெய்வலோகத்துத்தேவர்க ளெல்லாங்கூடி, கயிலாசத்திலே சென்று பரமசிவனுக்கு முறையிட்டார்கள். அப்போது, மகாதேவருந் தேவர்களுக்கு அனுக்கிறகம் பண்ணி, தேய்வலோகத்துக்குப் போகச் சொல்லி யனுப்பி, தாம்பிறவன்னிக் கரையிலே யெழுந்தருளி வந்து தெய்வேந்திரனுக்கு முன்னே நின்று, அந்த மருதமரத்துப் புடையில் சிவலிங்க முற்தியாக எழுந்தருளி தெய்வேந்திரனுக்குக் காட்சிக் கொடுத்து, "உனக்கு வேண்டிய தென்ன ?" வென்று கேட்டபோது, "அடியேன் விறுத்தாசூரனை கொண்ணபடியினாலே பிறமத்தி பிடித்துது ! தீற்பதற்கு ரஷ்ஷிக்க வேணுமென்று சொன்னான். அப்போது மகாதேவரும் பாத்து, "யிந்தக் கரையிலே தீற்தமாடி யெமைச் சேவித்தால் பிறமத்தி தோஷமுந் தீருமெ"ன்று திருவிளம் பத்தி, அந்த மருதம்புடையிலே

யெழுந்தருளி யிருந்தார். தேவேந்திரனு மந்த மகாதேவரைப் பூசை பண்ணி பிறமத்தீத்தோஷமுந் தீர்ந்து, பின்னும் "அடியேனுக்கு ஒரு வரந்தர வேணுமெ"ன்று கேட்டான். அதுவும் பரமசிவனுங் குடுக்க வாங்கிக்கொண்டு, தெய்வலோகத்துக்குப் போனான். அந்தத் தேவர்களும் வந்து பரமசிவனை பூசை பண்ணி, வேண்டிய வரமும் பெத்துத் தெய்வலோகத்துக்குப் போனார்கள்.

34. அதனாலே, அந்த ஸ்தல மகுத்துவமான தலமாயிருக்கும். அது சுகேந்தி மோஷ்ச மென்று பேராகும், அதுவுமன்றி ஒரு காலத்தில் பிறமா வந்து, தீற்தமாடி பரமசிவனையுஞ் சேவித்து, அங்கே பிறமதெண்டு வய்த்துப் போனார். இந்தக் கதையை விளங்கக் கேட்டு, மிகவும் பிரியப்பட்டு "யினி சோமதீற்த மகுத்துவம் சொல்ல வேணுமெ"ன்றார். அப்போது, சொல்லுவார். "பிரமாவின் மகனாகிய அத்திரி பகவானுடைய தேவியார் அனக்கி மாதரவென்றுஞ் சொல்லப்பட்டவள் தனக்கு பிள்ளை

---

33. பிறமத்தி-பிரம்மஹத்தி.

வேணுமென்று மும்முர்த்திகளை நோக்கித் தவசு பண்ணினான். அப்போது, பிறமா வந்து, சந்திரனைப் பெறும்படிக்கு வரம்குடுத்துப் போனார். அதன்பிறகு, விஷ்ணுடு பகவான் வந்து யெழுந்தருளித் தீறநத்து முனிவனைப் பெறும்படிக்கு வரங்கொடுத்துப் போனாரிப்படி சொல்லப்பட்ட பிள்ளைகளுக்குள்ளே சந்திரனானவர், தக்கனுடைய மகளாகிய அசுபதி என்கிற பெண்கள் ரேவதி வரைக்கும் யிருபத்தேழு பெண்களை கலியாணம் பண்ணினானந்த பெண்களுக்குள்ளே ரோகணியோடே கூடி வாழ்வதே யன்றி, மற்ற யிருவத்தாறு பெண்களோடும் ஒருனாளும் வாழாமலிருந்தான். அந்த சேதியை தக்கனாகிய பிதாவுங் கேட்டு, மருமகனாகிய சந்திரனை பார்த்து, மத்தப் பெண்களோடுங் கூடிவாழும்படிக்கு அனேகம் பிறியஞ்சொல்லி வேண்டிக்கொண்டார்.

அது கேளாதபடியினாலே சந்திரனுக்கு யிளனோவுண்டாகச் சபித்தான். அப்போது, சந்திரனுக்கு

---

34. *பிரமதெண்டு-பிரம்மதண்டம்.*

யிளனோவு பிடித்தது. அந்தச் சாபந்தீர வேண்டி, தாம்பிறவன்னியிலே வந்து தீர்த்தமாடி, அந்தக் கரையிலே விஷ்டுணு பகவானை னோக்கி தவசு பண்ணினான். அதுகண்டு, விஷ்டுணு பகவானும் எழுந்தருளி சாபம் விமோஷணம் பண்ணினார். அப்படி சந்திரனாலே சோமதீர்த்த மென்று பேர் பெற்று மிகவும் புண்ணிய தலமாயிருக்குமென்று வேதவியாசர் சொன்னார். அப்போது, சுகமுனிவன் கேட்டு, "யினி ரோமதீர்த்த மென்று சொன்னீரே, அந்தக் கதையை சொல்லுமையா !" வென்று கேழ்க்க, வேதவியாசர் சொல்லுவார்:

35. "பூறுவத்திலே ரோமாசுரனென்றொரு முனிவனுண்டு. அவர் கைலாசத்திலே சென்று மகாதேவர் பாதங்களிலே விழுந்து தெண்டம் பண்ணி, அனேகந் தோத்திரந் துதி செய்து அடியேனக்கு நித்திய தத்துவந் தரவெணுமென்று கேட்டார். அப்போது. பரமசிவனும் ரோம முனிவனைப் பார்த்து, "தெஷ்ணா தேசத்திலே தாம்பிரவன்னிக் கரையிலே வந்து சென்று நம்மையும் மகாதேவியையும் பூசை

செய்து பிறதிஷ்ட்டை பண்ணினால், நாம் அங்கே வந்து உனக்கு நித்தியத் தத்துவந் தருவோம்மெ"ன்று திருவிளம் பத்தின படியினாலே வந்து அப்படிக்கு பூசை பண்ணினான். உடனே பரமசிவனும் பார்பதியும் வந்து அவருக்குக் காட்சியும் நித்திய தத்துவமுங் குடுத்தருளினார். அந்தியத்திலே மோட்சந் தருகிறோமென்று அனுக்கிறகம் பண்ணினார். அந்த லிங்கத்தை தேவர்கள் விஷ்டுணு பகவான், அகஸ்தியர், காத்தவீர அற்சுணன் இவர்கள் எல்லோரும் பூசை பண்ணி, மிகவும் மகுத்துவத்தை அடைந்தார்கள். அவடஞ் சகல கொடி பாவங்களையும் தீற்கும், யிப்பால் சுகமுனிவரும் பிதாவை பார்த்து, "யினி தூறுவாச தீற்தஞ் சொல்ல வேணு மெ"ன்றபோது, வேதவியாசர் சொல்லுவார். "ஒரு காலத்திலே தூறுவாச முனிவன் கைலாசத்திலே சென்று, மகாதேவரை நம்ஷ்க்கரித்து தேவரை பூசை பண்ண மிகவும் ஆசையா யிருக்கிறதேன்றார். அப்போது பரமசிவனும், தெஷ்சனா தேசத்திலே, திருகாளத்திலே வந்து காளத்தினாதரை சேவித்து, பொன்முகலி என்கிற

தீற்தமுமாடி யனேகம் சீவிளோடுங் கூடி, பதினாயிரம் வருஷம் அங்கே யிருந்து பூசைபண்ணினார்.

அதின்பிறகு. காளத்தியீஸ்பரருங் காட்சிக் குடுத்து, நமக்கு தாம்பிறவன்னிக் கரையிலேயிருந்து பூசைகொள்ள விருப்பமாக இருக்குது, னாமங்கே வருவோமென்று திறுவிளம் பத்தினார். அப்போது, துறுவாச முனிவனுந் தாம்பிறவன்னிக் கரையிலே வந்து அதுக்கு வடகரையும் தென்கரையுமாகக் காளத்தி யீஸ்பரரை ஒரு மகாலிங்கத்திலே தாபித்து எட்டு லிங்கம் தாபித்து, அந்த லிங்கத்துக்கு கைலாசனாதரென்று திருனாமம் சாத்தி, வேண்டிய வரங்களும் பெத்ததினாலே எட்டு கைலாசனாதரிருக்கிற படியினாலே கைலாசமலைக் குண்டான மகுத்துவ முண்டாயிருக்கும்; பின்னும் மகுத்துவமான தலமாயிருக்கும், “யினி சிந்து பூந்துரை மகுத்துவஞ் சொல்லுமையா !” வென்று சுகமுனிவர் கேட்க வேதவியாசர் சொல்லுவார் .

36. “வாரும் பிள்ளாய் சுகமுனிவனே ! முந்தி சொன்னஷ்த் தலங்களிலே மிக்க மகுத்துவமா

யிருக்கும் பரமசிவனும் நித்திய மெழுந்தருளி யிருப்பார். யிந்தக் கதையை மிகவும் மகுத்துவமான பேர்கள் கேழ்ப்பதேயன்றி, சிறியராகிற பேர் கேழ்க்வொண்ணாது. அந்தத் தலம் தெஷ்ணாகாசிபுர மாகும்; நெல்வேலி என்றும், பிறமபுரி யென்னும், பெயரதாகும், தேவர்கள், முனிவர்கள் சித்திய வித்தியாதரர் யிவர்கள் சேவிக்கப்பட்ட தலமாயிருக்கும், அதுவுமன்றி பரமசிவன் முன்னொரு காலத்திலே திருநெல்வேலி மகுத்துவஞ் சொன்னார். அப்படி சொல்லுகிறபோது பரமேஸ்ப்பரியார் கேட்ட மருந்து மகுத்துவமான தலத்திலே அடியேனுக்கு முப்பத்திரண்டறம் வளத்துக்கொண்டு பாடலங்கம்பை யாத்திலே தவம்பண்ணி யிருக்கும்படிக்கு அனுக்கிறகம் பண்ணுமென்று சொன்னாள். அப்படியே பரமேஸ்பரரும் விருப்பத்தை யுடையராய் பரமேஸ்பரியை அனுப்பிவிட்டார். பரமேஸ்பரியும் அனேகந் தோழி பெண்களோடுங் கூடி, திருநெல்வேலிக்கு வந்து, பரமசிவனையும் சேவித்து, பாதாளத்திலே யோடுகிற பாடலங்கம்பை யாத்திலே

போய் அங்கே கோவிலும் கொண்டு பரமசிவனைச் சேவித்து, பாவஙகளை போக்கிக்கொண்டு எழுந்தருளியிருக்கிறான். அவரை மனுவெங்கிற ராசா, மந்திரி முககுந்தன், நளன், ராமர், பூருவர், தருமபுத்திரற் யிவர்கள் முதலாக அனேகம் ராசாக்கள் சேவித்த தலமாயிருக்கும், அவர்களன்றி பிறமா, விஷ்டுனு, தேவேந்திரன், திக்கு பாலகர், சந்திர சூரியர், அத்திரி, மகாமுனி, பிற்கு, பரத்துவாசர், கெவுதமர், பாலகர், கிறிது, புலஷ்த்தியர், சமதக்கினி, தீஷதற், தேஷ்ஸரர், அங்கிரர், காசிபர், யிவர்கள் முதலாகிய முனிவர்களெல்லாமந்த திருநெல்வேலியிலே வந்து, தீற்தபலத்திலே தீற்தமாடி, திருமூலனாதரை சோடுபசாரத்துடனே பூசைபண்ணி, நெடுனாளங்கே வாசமாக யிருந்து தவசுபண்ணியிருந்தார்கள்.

37. அந்த காலத்திலே அகஷ்த்தியர் பரமேஸ்வரி திருமேனி கோவிலுங் காணும் பொருட்டால் திருநெல்வேலியிலே வந்தார். அப்போது, அந்த தலத்திலே யிருந்த முனிவர்களும் யெதிர்க்கொண்டு வந்து, வணங்கிக் கூட்டிப்போய்ப் பரமேஸ்பரனைச்

சேவித்தார்கள். அப்போது பரமேஸ்பரரும் அகஷ்த்தியர் தெட்சண தேசத்திலே யனுப்புகிறபோது நம்முட திருமணக்கோலம் காண்பிக்கிறோமென்று சொன்னபடியினாலே, அகஷ்த்தியர்கள், முனிவர்கள் காணும்படிக்கு தம்முட லிங்கத்திலே பரமசிவன் பார்வதி திருமணக்கோலங் காண்பித்துக் காஷ்சிக் கொடுத்தார். அதுவுமின்றி, முன்னொரு காலத்திலே மகாலஷ்சுமி விஷ்டுணு பகவானுக்கு வாழ்க்கப்பட்டு எக்காலமு மிருக்கிறாள். அதுவுமன்றி சகலகோடி தேவர்களும் அந்த தலம் மகாதலமென்று யிருப்பார்கள். சகலகோடி தீற்தங்களு மிருப்படமாயிருக்கும்; அதுவுமின்றி, சிவன் கயிலமலையிலே நின்று பாடலங்கம்பை யாறென்றொரு நதி யுற்பனமாகிப், பாதாள கெங்கையாக வந்து திருநெல்வேலியிலே பொஸ்த்தாமரையிலே வந்து, குமுழியாய் பிறப்பட்டு, சிந்துபூந்துரையிலே சென்று சேருமந்தப் பொஸ்த்தாமரையும் சிந்து பூந்துரையும் மகாபாவங்களை எல்லாம் தீற்கும்.

பரமசிவனும் பார்வதியும் அந்தத் தலத்திலே மூங்கில்க் காடாக யிருந்தபடியினாலே வேறு

வனமென்று பெயரானது. அதுவுமன்றி பதினாலு லோகத்திலேயுள்ள தேவர்கள், முனிவர்கள் தினம் வந்து உத்திரகெங்கையாகப் போகின்ற தாம்பிறவன்னியிலே நல்ல புஷ்பங்களை கொண்டு அற்சினைப் பண்ணி பூசை செய்கிறபடியினாலே யந்த தலஞ் சிந்துபூந்துரை என்று பெயராயிருக்கும். அந்த திருநெல்வேலியானது தெஷ்சண கைலாயமாயிருக்கும். விஷ்டுணுவுக்குந் தெஷ்ணா வைகுண்டமாயிருக்கும். யிப்போது அரிகோத்திர மென்று பேராயிருக்கும்; அதுவுமின்றி ஒரு காலத்திலே தாருகாவனமாகிய பரமசிவன் ரிசிபத்தினிக ளிடத்திலே கங்காள மூற்தியாய் எழுந்தருளி மகாதேவியுடைய தலமாயிருக்கும், அதுவுமின்றி யொரு சிவத்தியன் ஒருகாலத்திலே பூசை பண்ணி வந்திருக்கிறபோது, ஒருனாள் அமுதபடிக்கு கோவிலுக்குள்ளே நெல்லையும் உலரப்போட்டு, திருமஞ்சத்துக்குள்ளே போனபோது, மிகவும் மழையானது பொழிந்துது. அதுகண்டு, சிவத்தியானனும் துக்கப்பட்டு, "நாம உலறப்போட்ட நெல்லுக்களெல்லாம் நனைந்த போமே" யென்று, "மினி

நாம் சமைக்கக் கூடாதெ"ன்று கண்ணீர் சோர, "ஆனால் நான் அவருக்கு அடிமையே யானால் ரெட்சிக்கக் கடவது" என்று திருமஞ்சனங் கொண்டு விரைந்து வந்தான்.

38. அதுக்கு முன்னே பரமசிவன் அந்த நம்பியான் அன்புக்கு பயந்து, அந்த நெல்லை நனையாதபடிக்கு வேலியிட்டுக் காத்துக் கொண்டார். அது சிவத்தியன் கண்டு மகிழ்ச்சியாய் நெல்வேலி நாதரென்று பேரிட்டு, பூசைபண்ணினான். அதுவுமன்றி ஒரு காலத்திலே பாண்டியன் வந்து சேவித்து பரமசிவனைப் பார்த்து, "தேவரீர் யிப்படி குறுமையாயிருந்தால், அடியார்களெல்லாம் எப்படி சேவிப்பார்களெ"ன்று உருகிய நெஞ்சராய் சுவாமியை வேண்டிக் கொள்ளப் பரமசிவனிறங்கிவந்து காட்சி குடுத்தார். அதினாலே வென்றுவளந்தலிங்கனன்று திருனாமம் பெத்துது. அதுவுமன்றி யொரு காலத்திலே பரமசிவன் ராசாவாக இருந்து ஆயிரம் ராட்சிய

---

37. திருநெல்வேலியிலே - திருநெல்வேலிக்கு; உருபு மயக்கம். உற்பனமாகி - உற்பத்தியாகி; வேநு - வேணு - மூங்கில்.

பரிபாலனம் பண்ணி யுலகத்தை ரெட்சித்தார், இவை முதலாகப் பரமசிவனனேகத் திருவிளையாட்டுண்டு. அந்தத் தலத்திலே நித்திய மூற்த்தியாய் சிந்துபூந்துரையை நோக்கிக் கொண்டு, அதை மிகவும் விருப்பத்தை உடையவராயடியார்கள் பாவங்களை எல்லாந் தீர்த்துக் கொண்டு யிருக்கிறார். அந்தத் தல முத்திக்குடைய தலமாயிருக்கு மென்று சுக முனிவருக்கு வேதவியாசர் திருவிளம் பத்தினார்.

யிந்தக் கதையைக் கேட்டபோது, பின்னு வேதவியாசர் சொல்லுவார், "சீதையம்மனை ராவணன் எடுத்துக் கொண்டு போறபோது, சடாய்வு என்று கழுகரசன் எதிர்ந்து பொருதிறபோது ராவணன் வாளிக்குப் பட்டிறந்தான் ! அந்த சாடாயுவை ராமர் கண்டு, சடாயுவைத் தகனம் பண்ணி தாம்பிரவன்னியிலே வந்து, தீற்த்தமாடி சிவலிங்க பிரதிஷ்டைப் பண்ணிப் பூசையுந் செய்து, சடாய்வுக்கு பிண்ட பிறதானம் பண்ணி மோட்சத்தை யடைவித்து, அந்த லிங்கத்துக்கு ராமனாதரென்று திருனாமம் சாத்தி, தீற்தத்திலே எவனாகிலும் பிதிர்களை னோக்கி

பிண்டபிறதானம் பண்ணினபேருக்கு யிருவத்தோரு தலைமுறையிலுள்ள பேருக்கெல்லாம் மோட்சங் குடுத்தருள வேணுமென்று பரமசிவனை வேண்டிக் கொண்டு, யின்னம் வேண்டுதலே தென்றால், "ராவணனையும் சங்காரம் பண்ணி தம்முடைய தேவியாரையுஞ் சிறைமீளும்படிக்கு அனுக்கிரகம் பண்ணும் அய்யா !" வென்று மிகவும் வேண்டிக் கொண்டாரப்போது, பரமசிவனும் அவருக்குக் காட்சிக் குடுத்து கேட்ட வரமும் குடுத்தனுப்பினார்.

39. ஆனால் அவிடத்திலே தீர்த்தமாடிப் பிண்டப் பிறதானம் பண்ணி, ராமலிங்கத்தைச் சேவித்தால் யிருபத்தொரு தலமுறையிலுள்ள பிதிர்க்களெல்லாம் முத்தியை யடைவார்கள்; யிணி மணலூர் மகுத்துவஞ் சொல்லுகிறேன் கேழ்பாய் யென்று வேதவியாசர் சொல்லுவார்: "பூறுவத்திலே தற்ம புத்திரென்றும் வீமனென்று மருச்சுணனென்றும் நகுலரென்றுஞ் சகாதேவரென்று அஞ்சுபே ருண்டு. அவர்களுக்குத் துரோபதை என்கிற பெண்ணை கலியாணம் பண்ணினார். அப்போது யிவளை யொவ்வொருத்தர்

ரொவ்வொரு வருஷமாக அனுபவிப்பார்க ளென்று நாரதர் சொன்னார். பின்னுஞ் சொல்லுவார், "நீங்கள் ஒவ்வொருத்தர் கூடியிருக்கிறபோது, அவனிருக்கிற அரண்மனையை வேறொருவர் பாத்தால் ஒரு வருஷம் தீர்த்தயாத்திரை போவீரெ"ன்று சொன்னார். அப்படி விரதம் பிடித்துக் கொண்டிருக்கையிலே அஞ்சு பேருக்குள்ளே அற்சுணன் ஒரு பிராமணன் மாட்டை கள்ளன் கொண்டு போறபோது வில்லைத் தேடித் தர்ம புத்திரர் மனையிலே வில் இருக்கிறது கண்டு, விரைந்து வந்து வில்லை எடுக்கிறபோது, ருட்டியிலே தற்ம புத்திரர் மனையிலே அறியாமல் வந்தோமென்று ''நம்முட விரதமழிந்தது'' என்று வில்லையும் போட்டுவிட்டு விஷ்டுணு உருவாகி வேஷங் கொண்டு தீற்தயாத்திரைக்கு போய், எல்லா தீர்த்தங்களுமாடி, தாம்பரவன்னிக்கு வந்து தீர்த்தமுமாடி, மணலூருக்கு வந்து ராசாவையுங் கண்டு, அவன் மகளாகிய அல்லியரசாணியுங் கலியாணம் பண்ணினான்; அதின் பிறகு சில நாளந்த ஊரிலே வாசமாக யிருந்து, தாம்பிறவன்னியிலே ஒரு நாள் தீற்தமாடுகையில் ஒரு

முதளை வந்து அற்சுணன் காலைப் பிடித்துது. அதுவும் முத்தியை அடைந்துது ! அந்த முதளை ஏதென்றால், ஒரு கெந்துருவன், ஒரு முனிவனுக்கு பிழைசெய்தான், அதினாலே "நீ முதளையாகப் போவாயெ"ன்று சாபித்தான், அப்போது, அவனும் வணங்கினான், அது கண்டு முனிவனும் பார்த்து, "முதளையாகத் தாம்பிறவன்னியிலே கிடந்து அற்சுணன் தீர்தமாடுகிறபோது அவன் காலைத் தொட்டால் அன்னைக்கு சாப விமோசனமெ"ன்று சொன்னார். அப்படியே முத்தியை அடைந்து, அந்தத் தீர்தத்துக்கு மங்கள தீர்தமென்றுங் கெந்துருவ தீர்தமென்று பேருமிட்டு அந்த லிங்கத்தை நெடுனாளாக பூசை பண்ணி கந்தருவ யீஸ்பரரென்று பேருமிட்டான்", அதுவும் மகுத்துவமான தலமாகும்; அதுக்குக் கிழக்கே ஸ்ரீவைகுண்டமென்று ஒரு தலமுமுண்டு; அது விஷ்ணு பகவானுக்கு வைகுண்டம் போலே விருப்பமாக யிருக்கும்; அந்த தலத்திலே தேவர்கள் முனிவர்கள் பெரியோர்களெல்லாம் தவத்தைப் பண்ணிரு, அதுக்கு தென்கரையிலே லட்சுமிபுர

மென்றொரு ஊருண்டு; அதிலே ஆதியிலே ஆதினாதர் எழுந்தருளியிருப்பார்; அவரை பூசித்த பேராரென்றால், அத்திரி, பிருகு, பிறமா, மார்க்கண்டன், மகாலட்சுமி, தேவர்களிவர்களன்றி, யொரு காலத்திலே அகஸ்தியரும் பூசித்து, மலைப்பறுபதத்துக்குப் போனார்.

40. அதுக்கப்பால், பஞ்சகேந்திரமென்று தீற்தமுண்டு; அது முத்திருடையதாயிருக்கும். அப்பால் சங்கர தீற்த்தம், அதுக்கப்பால்ச் சங்கணிதுரை; அதுக்கப்பால் நவலிங்கமுண்டு; அங்கே நவலிங்க தீற்தமாகும். அங்கே கெங்கை முதலாகிய முக்கோடி தீற்தங்களு மார்கழி மாதப் பிறப்பிலே வந்து தீத்தமாடி, அந்த நவலிங்கத்தையும் சேவித்தால் அசவமேதி யாகம் பண்ணின பலத்தை அடைவார்கள். அதுக்கு கிழக்கே தென்கரையும் வடகரையுமாக எழு திருப்பதி உண்டு, யிதனுடனே கூடினது ஸ்ரீ வைகுண்டம் கள்ளபிரானாதருடேனே கூடினது ஒன்பது திருப்பதி

---

39. சாபித்தான்-சபித்தான்; முதளை-முதலை.

யுண்டு; அதுக்கு திருச்சங்கணித் துரைத் தீர்த்தமாடிப் பிராமண போசனம் பண்ணி, அந்த ஒன்பது திருப்பதியுஞ் சேவித்தபேருக்கு முத்தி மோஷச முண்டு," யினிச் சோமநாதர் மகுத்துவஞ் சொல்லு கிறோமுமென்று வேதவியாசர் சொல்லுவார் :

"முன்னொரு காலத்திலே, சிவத்துரோகியாகிய தக்கனுடைய வேள்வியிலே கூடியிருந்த பாவம் போவதற்குப் பிறம்மாவானவர் கயிலாசத்திலே சென்று, மகாதேவரை வணங்கித் 'தேவரைப் பூசைப் பண்ண எந்த ஸ்த்தலம்?' என்று கேட்டபோது, பரமசிவன் சொல்லுவார், "தாம்பிறவன்னிச் சென்று நம்மைப் பூசை பண்ணுவாய் !" என்று அனுப்பினார். அப்படியே பிரம்மா வந்து தாம்பிரவன்னியிலே தீர்த்தமாடி அதின் தென்கரையிலே பிரமயீஸ்பரன் என்று மகாலிங்கம் தாபித்து, ஆகம விதிப்படியே சோடுபசாரத்துடனே பூசை பண்ணி தக்கனுடனே கூடியிருந்த பாவங்களெல்லாம் தீர்ந்து நல்ல வரங்களும் பெத்து தம்முட பிறமலோகத்துக்கு போனான்.

---

40. சோடுபசாரம்-சோடச உபசாரம்.

41. அதினாலே, அந்தஸ்தலம் பிறமேஸ்பரரென்று பெயர் பெத்துது. அதுமன்றி முன்னொரு காலத்திலே தேவர்களுக் கெல்லாம் குருவாகிய வியாள பகவானிடத்திலே சதுர்வேத மாகிய சாஸ்திரங்களை கற்கிறபோது, வியாள பகவானாகிய குருவினுடைய தேவிமார் சந்திரனாகிய சீஷனுக்கு ஆசைப் பட்டாள். அதுக்கு சந்திர னொப்பாமலிருந்தினதினாலே, அவனும் சபிப்பேனென்றாளவனும் அவள் பேரிலே யாசை வைத்து திரிந்தான்; அவளும் கெற்பமாகி போதனென் கிற பிள்ளையைப் பெத்தாள். அந்த சேதி பிறமா முதலாகிய தேவர்களெல்லாம் கேட்டு, சந்திரனை ஆக்கினை பண்ண நினைத்தார்கள்; அதின்பிறகு சந்திரன், மகாதேவர் பாதங்களிலே விழுந்து தெண்டன் பண்ணினபடியினாலே, குருபத்தினியை தீண்டின படியினாலே யிந்தப் பாவந் தீறவேணுமென்று கேட்டபடியினாலே பரமசிவன் சொல்லுவார்: "தாம்பிறவன்னியிலே சென்று தீர்த்தமாடி நம்மை நான்முகன் பூசித்த லிங்கத்தை பூசை பண்ணி, அந்த பாவந் தீர்ந்து போனான் !

42. அதின் பிறகு, அந்த மகாலிங்கத்துக்குச் சோமதாரென்று திருணாமமும் சாத்தி, சோம தீற்தமென்று பெயர் பெத்து, அதிலே சோமவாரங் களிலே தீற்தமாடி, அந்த லிங்கத்தை பூசை செய்து சேவித்தால், குருதுரோகமாகிய பாவங்களெல்லாம் தீரும்; இந்தக் கதைகளெல்லாம் சுக முனிவருக்கு வேதவியாசர் சொல்லித் தாமும் சிறுது தாம்பிரவன்னிமார்ப்பியமாகச் சொல்லுவார்: "வாரீர் முனிவர்களே ! அந்த மலை பற்வத முத்து, வயிரம், வயிடூரியம், மரகதம், நீலம், பவழம், கோமேதகம், புஷ்ப்பராகம் யிப்படி சொல்லப்பட்ட நவமணிகளெல்லாம் யிளைத்திட்டமாகிக் கற்பக மரங்களாலும், சந்தன மரங்களாலும் முனிவர்கள் ஆட்சிரமங்களால் நிறைந்து, ஆதி பிறமாதி முதலாகிய தேவர்களெல்லாம் யிருப்பிடமாகி, தேவ வுணவுகள் முதலாகிய உடையதாய் மகாதேவருக்குத் தெஷ்ணா கைலாசமாகி, தலங்கள் செய்வார்க்கு நல்ல தபோனங்களுடையதாய், மிகவும் பாவிகள் கண்ணுக்குப் புலப்படாதாய் அரக்கு நிகரான

மலைகளாய் சூழ்ந்திருக்கப்பட்டதுப் பொதிகை மலையான மகுத்துவ மலையிலே அகஸ்த்தியர் அனுக்கிறகத்தினாலே, தாம்பிறவன்னி மாதாவும் நல்ல வடிவெடுத்து, சகல லோகத்து உயிர் பிராணிகள் பாவனாசம் பண்ணுகையிலே புவகாரணி என்றும் பேராகி, பொதிகை மலையில் பிறந்து, சமுத்திரம் வரைக்கும் தெஷ்சணா கெங்கையாக யிருப்பாளிப்படி சொல்லப்பட்ட தாம்பிறவன்னி மலைக்குள்ளே கூடி வருகிற புண்ணிய நதிகளுமுண்டு.

43. அதேதென்றால், வெள்ளையாறென்றும், பாலாரென்றும் மிகவும் மகுத்துவமான நதிகளாகி, தாம்பிறவன்னியோடு வந்து கூடும், அந்தபடி கூடுகிற துறையிலே மூன்று னாள் மகாஸ்தான மாடினால், நித்தியதத்துவத்தை யடைவார்கள். அதுவுமன்றி யெந்த துறைகளிலும் வந்து தீர்த்தமாடினாலும் சகலபாவமும் போவது நிற்செயமாகும். அதுவுமன்றி, தம்பிறவன்னி முத்தும் அடிக்கடி தீற்தமாகும். பங்குனி

---

42. சோமவாரம்-திங்கட்கிழமை; ஆட்சிரமம்-ஆசிரமம்; தபோனங்கள்-தபோவனங்கள்=தப+வனங்கள்; இருப்பாளிப்படி-இருப்பாலிப்படி=இருப்பால்+இப்படி.

மாதம் முப்பதும் சித்திரை மாதமு, மார்கழி மாசமுந் கெங்கை தாம்பிறவன்னியில் வந்துப் பிரவேசித் திருப்பாள். அதுவுமன்னிச், சிவாலையங்களும் விஷ்டுணு ஆலையங்களும் தாம்பிறவன்னி தென்கறையும் வடகரையுமுள்ள ஊருகள் தோறும் நிறைந்திருக்கு மந்த வூர்களெல்லாம் கைலாசம், வைகுண்டம் போலவும் மகுத்துவத்தை யுடையதா யிருக்கும். தூர தேசங்களிலே யிருந்து வந்தவ னானாலும், ஒருவன் தாம்பிறவன்னியிலே தீர்த்தமாடி போனானாகில், அவன் பாவங்க ளெல்லாம் தேய்ந்துபோய் முத்தியை அடைவான். அப்படி தீர்த மாடாம லிருந்த பேருக்கு பாவங்கள் வளர்ந்து, நரகமடைந்து, கரையேற மாட்டார்கள். அதுக்கு கீழ்புறமாகந் கலியாறென்றொரு தீற்த முண்டு; அது மகா பாவங்களைத் தீற வல்லதென்று தேவர், முனிவர் அந்தக் கறை விட்டு நீங்காமல் காத்திருப்பார்கள். அதின் கிழக்கே சரவையாறென்றொரு தீற்த முண்டு; அதின் கரை எங்கும் நல்ல விருஷ்சங்களாலே அதிலே நாற்பதெண்ணாயிர முனிவர்களுக்கு மிருப்பிடமாகும்.

அந்த ஆறு வந்து கூடகிற தீற்தமாடினால் இருபத்தோரு தலைமுறைகளிலே செயித பாவங்களெல்லாம் தீர்ந்து, முத்தியை அடைவார்கள்.

44. அதின் கிழக்கு மணிமுத்தாறு வந்து கூடும்; அதுக்கு வடக்கு முக்கூடலாகும். அதை தெரிசித்தவுடனே மோட்சிய முண்டு. காசியிலே கன்னிகையிலே தீற்த மாடின பலன் குடுக்கும். அதின் கிழக்கு சிவசயில மலையிருந்து கரணை யென்று ஒரு புண்ணிய தீற்த்தம் பிறப்பிது புஷ்க்கரஷ்தள எல்லையிலே வந்து கூடும். அவடமானது கெங்கையிலே யெமுனையில் வந்துக் கூடுகிறத்துக்கு நிகராய், சகல பேரும் அவத்திலே தீற்தமாடிப் புச்கரணை யெல்லையிலே சென்று நாளும்பூனாதரைச் சேவித்தால், முத்தியை யடைவார்கள். அதுவுமன்றி யதிலே தீற்த்தமாடி, பஞ்சமகா லிங்கமாகிய நாரம்பு லிங்கத்தை கோடிஸ்பரர், யெரிதரவுடையார், திருமூலனாதர், பாவனாசற் யிந்த பஞ்ச லிங்கத்தை சேவித்தால் சாலப் புவங்கம் தீர்ந்து, முத்தி வீட்டுக்குடையவ னாவான். யீன சாதிகளுடனே

பேசாமல் முக்கூடலிலே தீர்த்தமாடினால் பாவனாச முதலாகிய பஞ்ச லிங்கத்தையும் பஞ்ச தீர்த்தமு மாடினால் புண்ணியக் காலங்களிலே சிவலோகத்தை யடைவார்கள்; யிது நிற்செயமாகும். பயிர்மலை யென்றொரு மலையுண்டு. அந்த மலையிலே உற்பத்தியாய் பட்சையாறென்றொரு தீர்த்தமுண்டு. அது வந்து கூடுகிற துறையிலே திற்தமாடி மந்தியீஸ்பரனையுஞ் சேவித்தால் சறுவ பாவங்களும் போய்விடும். அதுக்குக் கிழக்கே அத்தி சயிலத்திலு மிருந்து பாடகம்பையா றென்றொரு நதியுற்பவித்து அமரட்சனியாகிய பொய்த்தாமரையிலே வந்து கூடும். அதிலே தீற்தமாடி வேணுவனாதரையுஞ் சேவித்தால் மகா பாவங்களெல்லாம் போய்விடும். சிந்துபூந்துரை தீற்தமாடாத சென்மமெல்லாம் புணர்செனமமாகும்; அதிலே தீற்தமாடின சென்மமே சென்மமாகுமென்று மொழியலாகும்.

45. அதுவுமின்றி, அதிலே தீற்தமாடி வேணுவ னாதரையும் பள்ளிக் கொண்ட பெருமாளையு சேவித்தவுடனே மோட்சமுண்டு; பொய்த்தாமரையிலே

---

44. *புவங்கம் - பாவம்; நிற்செயம் - நிச்சயம்; புணர்செனமம் -புனர்சென்மம் - மறுபிறப்பு.*

தீற்தமாடித் துக்காதேவியை சேவித்தால் மகாபாவங்களெல்லாம் போய்விடும். அதுக்கப்பால் சித்திர நதி என்றொரு நதியுண்டு. திரிகூடாலையத்திலே யிருந்து பிறப்பட்டு தாம்பிறவன்னியிலே கூடுகிற துறையிலே தேவர்கள், முனிவர்கள், சித்தி வித்தியாதரர், கின்னரர், கிம்புருடர்களும், கெந்துருவர் முதலாகிய பெயர்களெல்லாம் வந்து தீற்தமாடிச் சறுவ பாவங்களெல்லாம் தீர்ந்துவிடும். அந்த தலம் காசி, யமுனை, சேது யிந்தத் துறைக்குச் சரியாகும். அதிலே தீர்த்தமாடி முக்கூடல் அளகரை சேவித்தால் மகாபாவங்களெல்லாம் தீரும், யிப்படி மகுத்துவமாகிய ஆறுகள் வந்து கூடுகிற தலங்களைச் சொன்னோம். யிவையன்றி காட்டாறு, கானாறு வந்து கூடும். அந்த னதி யிடங்களெல்லா மகா தீற்தமாகும். யாதாமொருவனானாலும், தாம்பிறவன்னியிலே நாற்பது னாள் சங்க்கிப்பித்துக் கொண்டு தீற்தமாடினால் சத்தியுண்டாம். அதுவன்றி முத்திக்கு வித்தாகிய குமாரநாயகர் தாம்பிரவன்னி கூடுகிற சங்குமுகத்திலே செந்திலாதியாகிய ஆலயத்திலே யெழுந்தருளி

யிருக்கிற அந்த தலத்திலே சமுத்திர ராசன் வந்து. குமார னாயகரை சேவித்து அகஸ்தியர் மகளாகிய தாம்பிரவன்னியை கலியாணம் செய்வேன் என்று, மகாதேவரை னோக்கி நெடுனாள் தவத்தை பண்ணினான். அது கண்டு மகாதேவருமெழுந்தருளி வந்து, அவருக்கு காட்சி அளித்து, நம்முட குமாரத்தி தாம்பிரவன்னியைச் சமுத்திர ராசனுக்குக் கலியாணம் பண்ணி குடுக்க வேணுமென்று அனுக்கிறகம் பண்ணிக் கலியாணம் பண்ணிக் கொடுத்தார். அதின் பிறகு அகஸ்தியர், குமார னாயகரை சேவித்து, நெடு நாளாக வளிபாடுகள் செய்து சகுதை, கிரிகை, யோகமெல்லாங் கேட்டுப் பிண்ட மந்திரத்தையும் கேட்டார்.

46. குமாரனாயகருக்கு, அகஸ்தியர் சீஷரான போது, அகஸ்தியரங்கே ஒரு சிவலிங்கமுண்டாக்கி, பூசை பண்ணி யுருகிய சிந்தையாகி யனுப்பிக்கொண்டு

---

45. அளகரை-அழகரை; வளிபாடுகள்-வழிபாடுகள்; சருதை-சரியை; தாமிரபரணி-கடலோடு சேர்ந்தது என்பதை. தாமிரபரணியாகிய மகளைச் சமுந்திர ராசனுக்கு மணமுடித்துத் தந்தார் தந்தையாகிய அகத்தியர் என்று உருவமர்வாக (Symbolic) நவிலப் பெற்றுள்ளது நோக்கத் தக்கது.

பொதிகைக்குப் போனார். சங்குமுகத்திலே வந்து தீர்த்தமாடி வைகாசி விசாகத்திலேயாவது, காற்த்திகைக்கு காற்திகையிலே வந்து சேவித்தால் மறு சென்மமும், தெய்வ தத்துவத்தை யடைவார்கள்; இது நிஷ்ச் செயமாகும். யிந்த காறணமெல்லாம் நேமிசாரண்ணிய முனிவருக்குச் சூத முனிவர் சொல்லிப் பின்னுமொன்று சொல்லுவார்களிதுவும் நிற் செயமாகும். யிந்த காரணமெல்லாங் கண்டு, உங்கள் வேள்வி காணுதற்கு ஆசையாய் வந்தபடியினாலே யிதனால் தாம்பிரவன்னிய மார்ப்பியத்தைச் சொல்லி நல்ல பேறு பெத்தேன். என்னை போலே பாக்கியஞ் செய்தவரில்லை என்று சொல்லி, யின்னுஞ் சொல்லுவார்: ''சுக முனிவனே எனக்கு மகனாகையினாலே யிந்த தாம்பிரபன்னி மகுத்துவஞ் சொன்னோமிப்போதைக்கு சொன்னதெல்லாஞ் சுருக்கமாயிருக்கும்; விரித்துச் சொல்ல வேணுமானாலு மொருவராகிலும் சொல்லமாட்டார்கள். மிகவு மாச்சியமானதிலே யொன்று சொன்னபோது சுகமுனிவனும் பரவசத்தை யடைந்தவுடனே,

தாம்பிரவன்னித் தீர்த்த மகுத்தவம் கேட்டு, உருகிய சிந்தையோடுங் கூடி, யிதைச் சொன்ன பிதாவாகிய வேதவியாசரை தெண்டன் பண்ணி பரமசிவனைப் பரவித்த நெஞ்சனாகி எழுந்தானதுக் கண்டு, மகனை விட்டு ஒரு னாளும் பிரிந்து யிருக்கமாட்டார். உடனே தானே பிறப்பட்டு மலைபறுபதத்திலே வந்து சீதரதீற்தஞ், சங்கு தீற்தம், சமுத்திர வரைக்குள்ள தீற்தமெல்லா மாகம விதிப்படியே தீற்தமாடி, சிவாலையங்களும் விஷ்டுணாலயங்களும் தெரிசித்தார். அப்போது, யீஸ்பரனும் யீஸ்பரியுங் கூடி, விஷ்டுணு, பிரமா, தேவர்கள், முனிவர்களுங் கூடிவந்து, வேண்டிய வரங்களும் நித்திய தத்துவமு குடுத்தருளினார்.

47. அதின் பிறகு, வேதவியாசர் பரமேஸ்பரனும் பரமேஸ்பரியுஞ் சேவித்து வேண்டிய வரமும் பெத்து, சுக முனிவனோடு கூடி வேதவியாசர் ஆசிரமத்தக்குப் போனார்கள். யிப்படி சூதமுனிவர் நேமிசாரண்ணிய முனிவருக்கு, தாம்பிரவன்னி மகுத்துவஞ் சொல்லி, பின்னுமொன்று சொல்லுவர் யிந்த தாம்பிரவன்னி

மார்ப்பியமெல்லாம் வேதவியாசருக்கு ஆர் சொன்னதென்றால், முன்னொரு காலத்திலே பரமசிவனை வேதவியாசர் சேவிக்க கைலாசத்துகு போனார். அப்போது பரமேஸ்பரியும் சொன்னாள் உலகமெல்லாம் அறியும்படி சொல்லுவார். ஆனதாலே உலகத்திலே யுள்ள தேவர்கள், முனிவர்கள், பிறமா முதலாகிய பூசை செய்தவர்களுக் கெல்லாம் சகல பாவங்களுந் தீர்ந்து, ஆதி முதலாக சமுத்திர வரைக்குமுள்ள தீற்த்மெல்லாம் தீற்தமாடின பலனை பெற்று, அந்தியத்திலே மோட்சத்தை யடைவார்கள்.

48. யிந்த தாம்பிறவன்னி மகுத்துவம் எழுதின பேருக்கும், படித்தபேருக்கும், கேழ்ப்பவருக்குங் கேட்டு நடந்தவருக்கும் முக்காலமுந் துற்புத்தி வராது ! நல்ல பெரிய வசனம் பெத்து கைலாசமே காணியாட்சியா வாழ்ந்திருப்பார்களென்ற வரலாறு.

சிவகாட்சிமுன் னிக் கட்டளைக் கலிப்பா வரையானி முதலாகிய தாம்பிறவன்னி மகுத்துவமுந் தீர்த்த தலங்கடோ நிறையாக நதியாடித்

தெரிசித்தோர்கள் நித்திய தத்துவமும் நிதியும் பெத்து குறையாத வாழ்வுடனே யந்தியத்தில் குவலையம் விட்டா லோகங் கொள்ளும்போது வரை யுமையாள் யீஷ்பரனார் காட்சிப் பெத்துப் பங்கையமால் வைகுண்டப் பதவியாமே ! யிந்த தாம்பிரவன்னி மார்பியம் முகிந்துது.

முற்றும்

வேலுண்டு வெனையில்லை
மயிலுண்டு பகையில்லை
குமாரருண்டு குறைவில்லை !

4. கம்பம் யென்கிற கிறாமம் உண்டான வரலாறு

(டி. 3864)

1. முன் புறாதனம் இந்த கம்பம் யென்கிற கிறாம பாண்டிய தேசம்; அப்போது, பறாக்கிறம பாண்டியன் நாளையில், சின்னக்கம்பமென்பதாய் ஒரு பட்டணம், அந்தப் பட்டணத்துக்குத் தென்பாரிசத்தில், பாதை மார்க்கத்தில் ஒரு அதிசெய உண்டானது. அந்த அதிசெய மென்னவென்றால், ஒரு விருட்சத்தடியில் ஒரு புத்துயிருந்தது. அந்தப்·புத்தின் கண்ணிலே ஒரு குழந்தைப் பெண்ணிருந்தது. பாதை மாற்கமாய்ப் போற வழகிச் செட்டியைக் கூப்பிட்டு, "யெனக்கு வழகிதொடு" வென்று கேட்டதாகவும், மேல்படி வழகிச்செட்டிப் புத்தின்கிட்ட வருகிறபோது, ஒருகையை நீட்டினதாகவும், அதற்கும் வழகி தொட்டதின் பிறகும் அப்படியே நாலு கையையும் நீட்டினதாகவும், அதற்கும் வழகி தொட்டதாகவும், அப்பால் அந்தச் செட்டியைப் பார்த்து அம்மன் சொன்னது: "உனக்கு வழகிக்குக் கிரையும் பறாக்கிறம

பாண்டியனிடத்தில்ப் போய் சாமுண்டி சொன்னாளென்று கேட்டால். குடுப்பார்'' என்று திருவுளம் பற்றினதாகவும், அந்த வழகிச் செட்டியானவன் பறாக்கிறம பாண்டியனிடத்தில் வந்து, இந்த அதிசெயங்களைச் சொல்லி, வழகிக்கி கிரையும் கேழ்கும் போது,

2. வழகிக்கிரையுங் குடுத்துவிட்டு, மேற்படி புத்தினிடத்க்துகு வந்து வெளிசெய்து. அவடத்தில் ஒரு கோவிலுங் கட்டி, சாமுண்டி அம்மனையும் பிறதிஷ்டை செய்து வைத்தார் ! அப்பால், கொஞ்ச னாளைக்குப் பிறகு, அந்தப் பட்டணத்தைக் கல்லையத் தாச னாயக்கன் பரிபாலனம் பண்ணிக் கொண்டிருக்கிற னாளையில், அந்தப் பட்டணமும் சீரணமாய்ப் போய்விட்டுது. !

---

1. கம்பம் - வீரன் அழகுமுத்து மாவட்டத்தில் உத்தமபாளையம் அருகே உள்ள பள்ளத்தாக்கு ஊர்; நாளையில்-ஆட்சிக்காலத்தில்; வழகி-வளையல்; தொடு-அணிவி; தென்பாரிசம்-தென்பக்கம்; கிரையும்-கிரையம்-விலை.

2. வெளிசெய்து - மேடுபள்ளங்களைச் சமனாக்கி; சீரணம் - அழிவு.

3. அதின் பிறகு, அந்த சின்னக் கம்பத்துக்கு தெற்கு தொண்டமானென்று ஒருவன் கோட்டையும் போட்டுக் கொண்டு சிறிது னாள் ளிருந்தான். அவனுங் கோட்டையுஞ் சீரணமாய்ப் போனப் பிறகு, கோதைவற்மறாசாவானவன் சின்னக் கம்பத்துக்கு வடக்கு, கம்பமென்று ஒரு பட்டணமுண்டு பண்ணி, கோட்டையும் போட்டு, அதின் மத்தியில் காசி விசுவனாத சுவாமிக்கி கோவிலுங் கட்டிப் பிறதிஷ்டையுஞ் செய்து, கம்பறாயப் பெருமாளுக்கு கோவிலுங் கட்டிப் பிரதிஷ்டையுஞ் செய்து, ரத உச்சவமுஞ் செய்து, திருவிளா உண்டு பண்ணி நடந்து வருகிற நாளையில்,

4. பின்னும் முத்திவினாயகன், செல்வ வினாயகன், திம்மறாயப் பெருமாள், வீரபத்திர சுவாமி, அங்காளம்மன், மாரியம்மன், நந்தகோபால் சுவாமி, கஞ்சிவறதறாயப் பெருமாள், கறுப்பணசாமி, உத்தம் அங்காளம்மன், செல்லாண்டியம்மன், இயவளவு தேவதைளுக்கு கோவிலுங் கட்டிப் பிறதிஷ்டைஞ் செய்து, பின்னும் வாவெரு பள்ளிவாசல் மய்யதுதீன்

பள்ளிவாசல், ஊக்குருவி சாயபு கோரி, ராமாட்சிக் கவுண்டர் மடம், அன்னக்காவடிமடம், இவ்வளவும் உண்டுபண்ணி மானிபங்களும் விட்டுக் குடுத்து, நடப்பிவிச்சார்கள்.

அதே மேரைக்கி இதுவரைக்கும் நடந்து வருகிறது !

---

4. *மய்யதுதீன்-முகையதீன்* (Muhi-Ud-den)*; இவர் பாக்தாத் (ஈராக்) நகரில் வாழ்ந்தவர்; முகமது நபியின் பேரனுக்குப் பேரன். இவரது இயற்பெயர் அப்துல்காதிர் ஜீலானி; முகையதீன்-இஸ்லாத்தைப் புதுப்பித்தவர்.*

மானிபம்-மானியம், அதேமேரைக்கி-அந்தப்படியே.

5. கம்பத்துக்கு தென்கிழக்கு சுரபிநதிக்குக் கிழக்கு கூத்தநாச்சித் தோப்பில் சந்தைக் கூடிய விபரம்

(டி. 3865)

1. முன் ஆதியில் பாண்டியப் பட்டத்தும் போது, மேற்படி தானத்தில் மனோக்கியமான இடத்தில் சந்தை கூடும்படி செய்து, அந்தச் சந்தை வேடிக்கை பார்க்கவேண்டியதைப் பத்தி, மேற்படி தோப்புக்குச் சமீபத்திலிருக்கிற கறட்டின் பேரில், ஒரு அரண்மனையும் உண்டாக்கி, அப்பாலச் சந்தையைப் பிறபலப்படுத்துகிறபோது, மேற்படி சந்தையில் அனேக யாபாரங்கள் நடந்து வரும்.

2. அப்படி யிருக்கும் நாளையில், சிவகிரியிலிருந்து ஒரு யிடையப் பெண், மலை வழியாய் மேற்படி சந்தையில் மோற் கொண்டு வந்து விற்துக் கொண்டே வருவாள், அவள் பேற் கூத்தநாட்சி; இப்படிக் கொஞ்சனாள் சந்தை சந்தைக்கி மோற் வித்துக் கொண்டு வரும் நாளையில், ஒரு சந்தைக்கி வந்த முன்னுக்கு, அவள் பேரில் மேற்படி

தேசத்து ராஜாவானவன் இச்சித்ததாகவும், அதைபபற்றி அவள் துற்மறணமடைந்து போய்விட்டாள் !

3. அப்போது, அவள் சாபஞ் செய்து போனபடியினாலே மேற்படி சந்தையும் சீரணித்துப் போச்சுது. மேற்படியாள் வருகிற மலைவழியும் தூற்ந்து போச்சுது. இப்போது, அதினுடைய அடையாளமாவது மேற்படி காட்டிலே முன்கட்டின மேடை யிருக்கிறது. அதின் பேர் கூத்தனாச்சி மேடை யென்று வசந்தையாகச் சொல்லிக் கொள்ளுகிறது; இப்படியான வற்தமானம் !

---

1. *கம்பம்-வீரன் அழகுமுத்து மாவட்டத்து உத்தம பாளையம் எனும் ஊருக்கு ஆறுகல் தொலையில் உள்ள ஊர். கரடு-கடினமான, மேடுபள்ளமுள்ள நிலம்.*

2. *சிவகிரி - நெல்லை மாவாட்டத்து ஊர்.*

6. திண்டிக்கல் வகையறாவுக்குச் சேர்ந்த உத்தமபாளையத் துக்குடிச் சேகரம் கம்பங் கிறாமத்துக்குத் தென்கிழக்கே யிருக்குற சுரபி நதி வரலாறு

1. கோதைவற்ம ராசாவின் பட்டணமான கம்பமென்கிற கிறாமத்துக்குத் தென் கிழக்கு அந்து னாளிகை வளி தூரத்தில் யிருக்கிற சுரபிநதி வரலாறு யென்னவென்றால், முன்னொரு காலத்தில் மேற்படி நதியிருக்கிற தலத்தில் சுந்தறானந்த மூற்த்தியானவர் ஈஸ்பரனை நோக்கி அநேகனாள் தவசு செய்தார். அந்தத் தவசுடைய ஆரம்பத்தினாலே ஈஸ்பரர் மகா சந்தோஷம் அடைந்து, சுந்தறானந்த மூற்த்திக்கிக் காட்சிக் கொடும் பொருட்டாக ஈஸ்பரன் முதலாகிய முப்பத்தி முக்கோடி தேவர்களும், காமதேன், கற்பகவிருட்சம், சுரபி, சிந்தாமணி முதலாகியதுகளுடனே வந்து, சுந்தறானந்த மூற்த்திக்கிக் காட்சி கொடுக்கும்போது, சுந்தறானந்த

1. ஒரு நாழிகை வழி தூரம்-ஒரு நாழிகை நேரத்தில் ஒருவனால் எவ்வளவு தூரம் இயல்பாக நடக்கமுடியுமோ அந்தத் தொலைவு; சுரபி நதி-சுருளி ஆறு.

மூர்த்தியானவர், ஈஸ்பரனை அனேக வித்துகளாகிய தோத்திரங்கள் செய்து சொல்லிக் கொள்ளுகிறார் :

2. "இந்தத் தலமானது மகாபுண்ணிய ஸ்தலமாக யிருப்பதினாலே கிறுபை கூர்ந்து இதில் புண்ணிய நதியான தீர்த்த முண்டாகும்படிக் கட்டளையிட வேணுமெ"ன்று பிறாத்திச்சுக் கொண்டார். அப்போது, சுவாமிக்கி மகா ஆனந்தமான சந்தோஷம் வந்து, சுரபியைப் பார்த்து, அனுக்கிரகம் பண்ணுகிறார்:

3. "நீ நதி ரூபமாய் இந்தப் புண்ணிய ஸ்தலத்தில் உற்பத்தியாகி சகலமான சீவ சந்துக்களுக்கும் முத்தி மோட்சத்தைக் குடுத்துக் கொண்டிரு" என்று அனுக்கிரகஞ் செய்தார் ! அந்த உத்திரவுப்படிக்கி சுரபி யென்குற பசுவானது அன்று முதல் நதி ரூபமாய் உற்பத்தி யாச்சுது !

4. ஆனால், அந்த நதியினுடைய விசேஷடம் யென்னவென்றால், அவாளவாள் இஷ்டகாமியப் படிக்கி முத்தி மோட்சங்களைக் கொடுக்கும். அந்தத்

---

3. சீவசந்து-உயிரினம்.

தீர்த்தம் சயில தீர்த்தமானதால், அந்தச் செலத்தில் வீழ்கப்பட்ட வஸ்துக்களெல்லாம் கல்லாய்ச் சமைகுது; ஆனதால், சுரபி நதி யென்று நாமகறணமுண்டாச்சுது.

5. அந்தத் தலத்தில், சுந்தறானந்த மூற்தியானவர் பூசை செய்த சுப்பிறமண்ணிய சுவாமியானவர், கம்பம் பட்டணத்துக்கு அதிபதியாகிய கோதைவற்ம றாசாவினுடைய சொற்பனத்திலே, "நாம் நடுவூரிலே வந்திருக்க வேணும் ! நமக்கு ஆலயமுண்டு பண்ணிவிக்க வேணுமெ''ன்று சொல்லிச் சொற்பனமானதால், அதே மேரைக்கிந்த றாசாவும் ஆலையம் உண்டு பண்ணிக் குழந்தை வேலப்ப சுவாமியையும் பிறதிஷ்டை செய்து வைத்தார் ! அவருக்கு வருடாந்திரம், சித்திரை மாதப் புறப்பில்

---

4. இஷ்டகாமியப்படிக்கு - விருப்பப்படி; செலம் - சலம் - நீர், 'சலத்தால் பொருள் செய்து' என்றார் வள்ளுவர். சலம் என்பது தூய தமிழ்ச் சொல்லே; ஜலம் என்ற வடசொல்லிலிருந்து வந்தது அல்ல ! சயில தீர்த்தம் - மலைத் தீர்த்தம்.

5. சொற்பனம் - கனவு; மாதப்புரப்பு - மாதப்பிறப்பு; சுருளி - வீரன் அழகுமுத்து மாவட்டத்தில், கீழ்க் கூடலூர், கம்பம், அனுமந்தன்பட்டி, உத்தமபாளையம் ஆகிய ஊர்களை ஒட்டிச் செல்லும் ஆறு.

சுருளி நதிக்கி யெழுந்தருளப் பண்ணிக் கொண்டு போய்த் தீர்த்தங் குடுக்குறது.

6. அப்போது, சகலதேசத்து சனங்களும் வந்து, மேல்ப்படி தீர்த்தத்தில் ஸ்தானமுஞ் செய்துக் கொண்டு, அவடத்தில் சில னாள் பெரியவாளாயிருக்கப் பட்டவர்கள் வாசஞ் செய்தால், அதில் சிறுது அதிசயங்கள் கேழ்விப்படுகிறது; அற்த சாமத்தில் பலபல வாத்தியங்களுங் கேழ்விப்படுகிறது.

இப்படியான மகுத்துவம் !

7. சின்னமனூர் அக்கிறாறம் புறாதனத்தில் உண்டான வரலாறு

(டி. 3862 (பி))

Memorandum of a gift of an Agraharam by one named Narasapaiyer

1. யென்னவென்றால், முன் கற்தாக்கள் னாளையில், மேற்படி தளவாய் நரசப்பையயர் பிற தேசங்களிலிருந்து பிறாமணாளைத் தருவிச்சு

---

6. அர்த்தசாமம் - நடுஇரவு; மகுத்துவம் - மகத்துவம்.

ஒழுங்காய் அக்கிறகாறம், ரெண்டு சிரகுங் கட்டிவிச்சு, பிறாமணாளைக் குடியேத்தி விச்சு, மேற்படி கிறாமத்தின் நிலங்களை 120 பங்கு உண்டாக்கி, 4 பங்குக்கு ஒரு கரையாக முப்பதுகரை யேற்படுத்தி, கரைமாலை முதலானது யேற்படுத்தி, கரை 1க்கு, சுவாதினம் ஒரு செய் நிலமாக, முப்பது செய் நிலமாக மானியம் விட்டுத், தாரைவாற்துக் குடுத்து, சின்னமனூருக்குப் பிறிதி நாமமான தளவாய் நரசப்ப பூபால சமுத்திரமென்று நாமகறணமும் வைத்து யிருந்தார்.

2. அந்த வகை கரை மாலை சாதனங்கள் அக்கினி வாதையாய்ப் போய்விட்டது !

---

1. சின்னமனூர் - வீரன் அழகு முத்து மாவட்டத்தில் பெரிய குளத்திலிருந்து உத்தமபாளையம் செல்லும் வழியில் 22கல் தொலைவில் தென்மேற்கில் அமைந்துள்ள ஊர்; இரண்டுசிறகு - இருபக்கம், கரைமாலை-வரப்பு;

2. அக்கினி வாதையாய்ப்போய்விட்டது-எரிந்துவிட்டது.

8. திண்டிக்கல் வகையறாவுக்குச் சேர்ந்த, உத்தமபாளையந் துக்குடிச் சேகறம், சின்னமனூர்க் கிறாமமான, அரிகேச புரத்துக்குப் பிரதிநாமமான தளவாய் நரசப்ப பூபால சமுத்திரத்தில், பூலாவினேஷ்பர சுவாமி சிவகாமி அம்மன் தலப்புறாண வரலாறு.

1. யென்னவென்றால், முன்னொரு காலத்திலே, மதுரை மண்டல அதிகாரியான வீறபாண்டி, விக்கிறம பாண்டி ராசாக்கள் இரு பேருக்கும் நேத்திறப் பழுதாய் மல்லினம் வந்துது. கண் தெரியாத நிமித்தியமாக மீனாட்சி சுந்தரேஷ்பரர் சன்னிதானத்தில் பஜினம் யிருந்து நேத்திறப் பிறகாசமாக வேணுமென்று வரங் கேழ்க்கிற போது, உத்திரவானது, "பாண்டிதேசத்தில் பூமி பிற தெட்சிணஞ் செய்துக்கொண்டு, நித்தியம் சிவப்பிறதிஷ்டையும் சிவப்பிறதெட்சணஞ் செய்து, தினந்தோறும் ஈஸ்பரனை தியானஞ் செய்துக் கொண்டு பூமிப் பிறத்தெட்சணம் வந்தால், புண்ணிய

நாமச் சேத்திரத்தில் உனக்கு நேத்திரப் பிரகாசமுண்டாகும்; அந்தத் தலத்திலே, நீ யீஸ்பரனை பஜினம் பண்ணிக்கொண் டிருந்தேயானால், உனக்கு இகலோக பரலோகமான புத்தியு, முத்தியும், வேண்டிய பாக்கியங்களுமுண்டாகுமெ"ன்று உத்திரவாச்சுது !

2. அதே மேரைக்கி சிவப்பிறதிஷ்டையும், பூமிப் பிரதட்சணமுஞ் செய்து வருகிற போது, வீரபாண்டியிலே, அறம் வளர்த்தாள் நாயகியும், கண்ணில்ச் சுற்றமுடையாரையும் பிரதிஷ்டைச் பண்ணின நாளிகைக்கி, கண் தெரிஞ்சு, கொஞ்சந் துலக்கமாகி, மாக்கியங்கோட்டையில் வந்து, விக்கிறபாண்டி யீஸ்பரரை பிறதிஷ்டைப் பண்ணி நாளிகைக்கி, கண் வந்துது ! இருபேரும் அந்தத் தலத்திலேதானே ஈஸ்பரனை பஜினம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அப்போது, அந்த ராசாவுக்குக் குடியானபேர்களில் சிறுது இடையர் பால்கொடம்

1. *நேத்திரம்-கண்; மல்லினம்-மலினம்-தீங்கு; பஜினம்-பக்திப்பாடல் பாடி இருப்பது; வீரபாண்டி-வீரன் அழகு முத்து மாவட்டத்தில், பெரியகுளத்திலிருந்து 13 மைல் தொலைவில் உள்ள ஊர்.*

கொண்டு, பூலாவனத்தின் மாற்கமாகப் போறபோது, அந்தப் பூலாவனத்தின் மத்தியிலே தினந்தோறும் அந்தப் பூலாவேர் தடுக்கி, சிறுது பால்குடங்கள் தவறிக் கொட்டுண்டு வரும் ! மிச்சப் பாலும் ராசா அரமனைக்கிப் போய்ச் சேரும்.

3. இப்படி இருக்குறபோது, பால்க் கொஞ்சமாய் வருகிறது யேதென்று ராசதெண்டினை ஆச்சுது. அப்போது, அந்த றாமச்சிங்க யெடையன் றாமக் கோனான் யெடையனோடே சொல்லிக் கொண்டார்கள். மற்றானாள், அவனும் அவன் பிள்ளையளும் பால்க் குடம் யெடுப்பிவிச்சுக் கொண்டு, "யென்ன நிமித்தியமாய்ச் சேதம் வருகுறது?" யென்று வெகு சாக்கிருதையாய் வந்தான். அப்படி அந்தப் பூலாவனத்தின் மத்தியிலே வருகிறபோது, மேற்படி பூலாவேர் தடிக்கிப் பால்க் குடமெல்லாம் தடுமாறிச் சேதமாச்சது. பூலாவேர் நாள்தோறும் தடுக்கிப் பால்குடமெல்லாம் கொட்டிப் போனதுயேதென்று

---

2. மார்க்கயன்கோட்டை-வீரன் அழகு முத்து மாவட்டத்தில், பெரியகுளத்திலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ள ஊர்.

வெகு ஆங்காரத்துடனே கோடாலியைக் கொண்டு, அந்த வேரை வெட்டினான் ! மேற்படி பூலாவேரின் அடியிலே சுயம்பாய் ஒரு லிங்கம் உற்பத்தியாகி, ஆகாச பரியந்திரம் ஓயர்ந்து வளர்ந்தும் உண்டாச்சுது!

4. அப்போது, இந்த யெடையன், ராசாயிடத்துக்குப் போய், இது செய்தியைச் சொன்னான், உடனே, அந்த ராசா வந்து, சுவாமியைப் பிறதெட்சணஞ் செய்து, ஆலிங்கணம் பண்ணினார். அப்போது, ராசா சொன்ன வசனம்: "பூலாவினேசுரரே ! பால்வண்ண நாதரே ! அளவுக்கு அளவானவரே ! தளுவக் குளஞ்சவரே ! ராச்சியம்மேசுரரே!" இப்படி அஞ்ச நாம கறணமும் சொல்லி, சுவாமியை ஆலிங்கனம் பண்ணினார்.

5. அப்போது, ராசாவினுடைய ஆபறணமெல்லாம் சுவாமி திரேகத்தில்ப் பதிஞ்சுது. அந்த அடையாளமிப்போது இருக்குது. அப்பால், லிங்காகாறமாய் அளவுக்களவானவறாய் நின்றார், ராசாவானவர், சுவாமிக்கி சேத்திரப் பிறதிஷ்டையும்

---

4. தளுவக்குளஞ்சவர்-தழுவக் குழைந்தவர்.

பண்ணி, சுவாமி உத்திரவு மேரைக்கி ஆலயங் கட்டி, சுவாமிக்குங் கும்பாவிஷேகஞ் செய்து வைத்தார். அப்பால், அம்மன் பிறதிஷ்டைச் பண்ணவேணுமென்று சொல்லி, விக்கிரகம் தீர்மானம் பண்ணுகிறபோது, சிலை வின்னமாகிறதும், விக்கிரகஞ் சேதமாகிறதுமாயிருந்துது.

6. அப்போது, சுவாமியானவர் றாசாவினுடைய சொற்பனத்தில் உத்திரவானது, "இந்த சுரபி நதியில் நாளைச் சோமவாறத்துக்குப் பிறவாகம் வருகுது, அதில் ஒரு பொட்டி யிருக்குது ! அந்தப் பொட்டியை யெடுத்து வந்துப் பார்த்தால், அதிலே யெலுமிச்ச பளமும், மஞ்சளும், அம்மனும் யிருக்கும் ! அதை எடுத்துப் பிறதிஷ்டை செய்" யென்று உத்திரவாச்சுது. அதே மேறைக்கி, மறறா னாள் பிறவாகத்தில் பொட்டியில் வந்த சிவகாமி அம்மனையும் பிறதிஷ்டை செய்து, கும்பாபிஷேகமுஞ் செய்து வைத்தார்.

---

5. திரேகம்-உடல்; வின்னம்-ஊனம்

6. சுரபிநதி-சுருளியாறு.

7. அம்மனுக்கு உத்திரபாகத்தில் கூபதாடனமாக பாதாள கெங்கையும் உற்பனமாச்சுது ! அதில், அநேகந் தேவதையள் யிருந்து யெடுத்துப் பிறதிஷ்டை செய்து வைத்தார், அதுகளும் இப்போது யிருக்கிறது; சுவாமியும் அளவுக்கு அளவாய்த்தானே யிருக்கிறார்.

9. உத்தமபாளையம் உண்டான வரலாறு

(டி. 3859)

சுவஷ்த்த ஸ்ரீ சாலிவாகன சாகற்தம்...

கலியுக சகாற்தம்... இதன்மேல் செல்லாநின்ற,

திண்டிக்கல் வகையறாவுக்குச் சேர்ந்த உத்தமபாளையம் துக்குடிக் கசுப்பா உத்தமபாளையம், பூருவீகத்திலுண்டான முகாந்திரம்

1 விசாரணையினாலுங், கேழ்வியினாலுங், கேட்டு யெழுதப்பட்ட விவரம் யென்னாவென்றால், முன் பூருவீகத்தில் இவடம் மகா ஆரண்ணியமான பிரப்பங்காடும், தேக்கங் காடுமாக யிருந்ததாம் !

---

7. கூபதாடனமாக-பாராட்டும் வகையில் ஒரு கேணியாக.

அப்போது, பஞ்சபாண்டவர்களிடத்துக்கு வந்தார்களாம், இந்தப் பூமியைப் பார்த்து, "இது மகா உத்தமம்! என்று சிறிது னாள் இந்த வனத்தில் சஞ்சாரஞ் செய்துக் கொண்டிருந்ததாகவும், அந்த னாள் தொடுத்து, இந்த வனாந்திரத்துக்கு சுருளி முதல் வாய்க்கால் புரவுகுச்சனூர் வரைக்கும், இந்தப் பூமிக்கு உத்தமமென்றுப் பேறானதாகவும், அப்பால் மதுரைக் கற்தாக்கள் னாளையில், யிது உத்தமப்பாளையம் வனாந்திரமான பிறப்பங்காடாயிருந்த தாகவும், இதின் தெற்கு இரண்டு னாளிகைவழி தூரத்திலிருக்கிற உத்தமனாச்சியம்மன் கோவில் தொடுத்து, கம்பத்துக்குத் தெற்கே யிருக்கிற சாமாண்டியம்மன் கோவில் வரைக்கும் உத்தமத்துப் பட்டணமென்று ஒரு பட்டணமும் அதில் கல்லையதாச னாயக்கனென்று ஒரு பாளையக் காரன் துரைத்தனம் பண்ணிக் கொண்டிருக்கும் னாளையில்,

2. வடக்கே யிருந்து கன்னாற் கலாறங் கொண்டு வந்தார்கள், அவர்கள் இந்தப் பட்டணத்தில்

1. உத்தமபாளையம்-வீரன் அழகுமுத்து மாவட்டத்தில், பெரியகுளத்திலிருந்து 28 மைல் தொலைவில் உள்ள ஊர், ஆரணியம்-காடு.

விற்கலாமென்று வந்த பேர்கள். ஒடி கலயதாச னாயக்கன் அரமனைக்குப் போய் கலாரம் யாபாரஞ் செய்யலாமென்றுப் போனதில் கன்னார் குதிரையில், ஒரு நீலக்குதிரையானது, அரமனை லாயத்தில் புல்லை மேய்ந்து அப்பால் யாபாரம் பண்ணிக் கொண்டு குதிரைகளையும் ஓட்டிக் கோட்டைக்கி வெளியில் வந்திறங்கி யிருந்தார்கள். அந்த ராத்திர் மேற்படி கருநீலக் குதிரையானது, கட்டியிருந்த கயத்தை அறுத்துக் கொண்டு, கோட்டையைத் தாண்டி அரமனை லாயத்தில் பில்களையெல்லாம் மேய்ந்து போட்டு, அருண் உதையத்துக்கு முன்பாக கோட்டைக்கி வெளியில் இறங்கியிருக்கிற குதிரைக் கூட்டங்களில் வந்து சேர்ந்து போச்சுது !

3. இப்படி நாலஞ்சு னாளாகையில், கல்லையதாச னாயக்கர் நித்திய காலம் உதையத்தில் லாயம் வந்து பார்க்கும்போது, லாயத்தில் கட்டியிருக்கிற குதிரைகளுக்கு முன்பாக பில்லுயில்லாத படியினாலே. மேற்படி குதிரைக்காரரை கண்டித்தார் ! அதைப் பற்றி

---

2. அருண உதயம்-சூரிய உதயம்.

மேற்படி குதிரைக் காரர்கள் றாத்திரி காலத்தில் காத்திருக்கும்போது, மேகுய கன்னாற் கருநீலக் குதிரையானது, மாமூல்ப் படிக்கி கோட்டையைத் தாண்டி, அரமனை லாயத்தில் வந்து, பில்லை மேய்ந்ததைக் கண்டு, . குதிரையை மறித்துப் பிடிக்கும்போது அவர்களிடத்தில் அகப்படாமல், கோட்டையைத் தாண்டிப் போய்விட்டது !

4. உடனே, யிது செய்தியைக் கல்லையதாச னாயக்கரிடத்தில் அறியப்பண்ணினதில் மேற்படி குதிரைக் காரர்களை இது செய்தியை ஒருத்தரிடத்திலுஞ் சொல்லவேண்டாமென்று சொல்லி, மற்றானாள் உதையத்தில், மேற்படி கலாறாக்காறர்களை அளைத்துவரச் சொல்லிப் போசனம் மற்றதும் பண்ணி வைத்து, "உங்கள் குதிரையில் எனக்கு ஒரு குதிரை குடுக்கவேண்டுமெ"ன்று கேட்டுக் கொண்டார் ! அவர்களும் கல்லையதாச னாயக்கர் மனதுக்கு றாசியான குதிரையைப் பிடித்துக் கொள்ளச் சொல்லி சொன்னார்கள் ! அப்போது, அந்தக் கருநீலக் குதிரையைப் பிடித்துக் கொண்டார்! அந்தக்

குதிரையானது மகாவேகமாவும், சூரதத்துவமாவும், அதின் மேல்க் கொண்டு போற காரியஞ் செயமாகிறதாகவும் இருந்துது !

5. இப்படி யிருக்கையில், ஒரு சன்னாசியார், உத்தம நாச்சியம்மன் கோவிலில் வந்து யிறங்கியிருந்தார், அது கேழ்வியாகி கல்லையதாச னாயக்கரும், மேற்படி குதிரையின் பேரில் சுவ்வாரியாகிப் போய், அவரைக் கண்டுகொண்ட படியினாலே, அவரும் வசியமானார் ! அப்பாலந்த சன்னாசியாரை அளைத்துக்கொண்டுவந்து, தன்னுடைய அரமனையில் வைத்துக்கொண்டு யிருந்தார். அவர் அனேகம் ரசவாதஞ் செய்துக் குடுத்தார் ! அதை ஒரு அரைவீட்டில் ஸ்தாபிதஞ் செய்து வைத்துக்கொண்டு யிருக்கும் னாளையில் இப்படி வசியமான குதிரையினுடைய பிறபலத்தைக் கற்தாக்கள் கேழ்வியாகி, அந்தக் குதிரை நமக்கு வேணுமென்று, அதை அனுப்பிவிக்கச் சொல்லியும் ஒரு சறுதாரை அனுப்பி விச்சதில், அந்தச் சறுதார் வந்து, கல்லையதாச னாயக்கனண்டையில் குதிரை,

கேட்டதில், ''குடுக்கிறதில்லை''யென்று சொல்லி விட்டான் ! அந்தச் செய்தியை அந்தச் சறுதாறாகுறவன் கற்தாக்களிடத்தில் வந்து அறியப்பண்ணினதில், கருத்தாக்களுக்கு ரொம்பவுங் கோபம் வந்து, தளக்கருத்தங் கங்கையை னாயக்கனையும், சிறிது றாணுக்களையும், கல்லையதாச னாயக்கனிட பேரில் உயித்தத்துக்கு அனுப்பிவிச்சார்கள்.

6. கங்கைய னாயக்கனும் பாளையமும் இந்த வனாந்திரத்தில் வந்து தானையமாய் இறங்கியிருந்துக் கொண்டு, மூணு வருஷம் கல்லையதாச னாயக்கனை செயம்பண்ண மாட்டாமல்ப் போனதால், இவடத்தில் ஊருங்குடியுமா யிருந்தப்படியினாலே, யிதுக்குப்பேர் உத்தமஞ் சூழ்ந்த கங்கைய னாயக்கர் பாளையமென்று பேராச்சுது !

7. இப்படி யிருக்கையில், கல்லையதாச னாயக்கனும், மேல்ச் சொல்லிய சன்னாசியாரும்

---

5. தளகருத்தம் - தளகர்த்தம் - சேனாபதி; உயித்தத்துக்கு- போருக்கு.

6. சரு-செருவு-மடு.

கோட்டையைச் சுத்திப்பார்த்து வரும் போது, ஒரு சருவில் வந்து கல்லைய தாசனாயக் கனாகுறவன், மேல்ப்படி சன்னாசியாரைப் பார்த்துச் சொன்னது," ரசவாதத் தொளிலை யெனக்குக் கொடுக்கச் சொல்லி வெகுனாளாய்க் கேட்டும் நீர் சொல்லாதபடியினாலே இப்போது சொன்னாலாச்சுது, சொல்லாதவரையில் உம்மைக் குத்தித் தள்ளுகிறேனெ !"ன்று சொன்னான்.

7. அப்போது, அந்தத் தொளிலைச் சொல்லாததினாலே, சமுதாட்டலே குத்திக் கீழே தள்ளினான் ! அப்போது, அவர் சாபஞ் சொன்னது, ''நீயுங் கெட்டு. உன்னுடையப் பட்டணமும் அளிந்துப்போகுமெ"ன்று சாபங் குடுத்துவிட்டு யிறந்து போனார் ! அவருடைய சமாதுக் கோயிலும் இது புதுப்பட்டி மத்தியிலிருக்குது. அது செய்தியை இந்தக் கருத்தாக்கள் வகை கங்கயனாயக்கராகுறவர் கேட்டு. செனசேகரத்துடனே இந்தக் கோட்டையை அடுத்து உயித்தியஞ் செய்கிற போது, கல்லையதாசனாயக்கனா குறவன், நிருவாகம் பண்ணமாட்டாமல், மேற்படி

---

7. *சமுதாடு-குத்துக்கத்தி.*

கருநீலாக் குதிரையின் பேரில் யேறிக் கொண்டு, கோட்டையைத் தாண்டி மேற்கே போகுகிறபோது கொசங்கிலுடையில் பிறவாகம் அதனமாய் வந்துது. அதில்க் குதிரையை அடித்துக் கொண்டு அக்கரையேறினார். அப்போது, சமுசாரத்தை மானத்தளவாய் விட்டுவந்துவிட்டோ மென்று விசாரப்பட்டு, கையிலிருந்த ஆயித்ததால் குதிரையையுங் குத்தி தானுங் குத்திக்கொண்டு யிறந்து போனார் !

8. அதுமுதல், அவடத்திலிருந்த கறட்டுக்குப் பேர் குதிரைக் குத்திக் கறடென்றும் பேராச்சுது. அப்பால், கற்தாக்கள் வகை கங்கையனாயக்கர் பாளையத்தால் கொள்ளையிட்டு, அந்தப் பட்டணமும் அளிந்து பேராச்சுது. அந்தக் கல்லையதாச னாயக்கன் னாளையிலுண்டான நீலகண்டி யீஸ்வரர் கோவில் மகுத்துவம்யேதெனில், மளைத்தண்ணீர் அருந்தலாய்ப் போனால், அதற்குச் சிதள கும்பம் வைக்கிறது, அப்போது, மளைபேயும் ! அதின் சமீபத்தில் இது,

---

7. *அதனமாய்-மிகுதியாய்.*

புதுப்பட்டிக்கி மேற்குமுன் நத்தத்தில் ஒரு கல் செக்கு யிருக்கிறதாகவும், யாதாமொருவர் அதைப் பார்க்க வேணுமென்று மனதில் நித்துக்கொண்டு போனால், அவர்கள் கண்ணுக்குத் தோற்றப்படுகிற தில்லை ! அந்த மார்க்கத்தில் யாதாமொருவர் சுவாகமாய் வந்தால், அவாள் கண்ணுக்குத் தோற்றப்படுகிறதுண்டு!' அதை மறுபடியும் பாற்கவேணுமென்று நாலடி அப்பறப்பட்டுத் திரும்பிப் பார்த்தால், அவன் கண்ணுக்குத் தோற்றப்படுகிறதில்லையாம்!

இப்படிப் பூறுவச் சங்கதி வற்தமானம்.

10. காளத்தீஸ்வரசுவாமி தலபுராண வரலாறு

(டி. 3858)

Local legend of the fare of Kalateswara in Uttam Palliyam of the Dindigal District.

சுவஸ்தஸ்ரீ சாலிவாகன சகாற்தம் ...... கலியுக சகாற்தம் .... இதன்மேல் செல்லாநின்ற.......... வருடம் சுக்கிற வார தினத்தில்

திண்டிக்கல் வகையறாவிக்குச் சேர்ந்த உத்தமபாளை யத்துக்கடிக் கசுப்பாவிலிருகிற காளாத்தீஸ்பர சவாமி தலப்புறாண வாரலாறு யென்னமென்றால்,

1. உத்தமஞ் சூழ்ந்த கங்கையனாயக் கற் பாளையத்தில் பக்தப் பிரியனாகிய காள்த்தீஸ்பர சவாமி, பிச்சக் கணக்கனுக்காக திருக்காளத்தியிலிருந்து யெழுத்தருளிய திருகாளாத்தீஸ்பரர், ஞானாம்பிகை அம்மன் திருவிளை யாட்டான வரலாறு யேதெனில்,

2. முன் பூருவீக காலத்திலே இவடத்தில் பிச்சைக்கணக்கன் யென்றொறு வெள்ளாளன்,

கணக்கெழுதிக் கொண்டு வருவான் ! அவன் வருஷத்துக்கு ஒருதரம் திருக்காளத்திக்கிப் போய், சுவாமி தெரிசினம் பண்ணிக்கொண்டு வருகிறதுண்டு. அவருக்கு விருத்தாப்பியக் காலமாகி, நடக்கிறத்துக்கு சக்தியில்லாதே போய்விட்டுது. அப்போது, அவர் சானித்தியமும், ''யென் காளாத்தியப்பனைக் காணோமெ"ன்று, மொத்தவுந் துயரப்பட்டுக்கொண்டு, உபவாசமாய் அன்ன அன்ன ஆகாரம் பொசியாமல், மகா விசனத்துடனே படுத்துக்கொண்டார் ! அப்போது, அவருடைய சொற்பனத்திலே சிறு பிறாமணப் பிள்ளை போலே வந்து "ஏன் பிள்ளாய் கிலேசப்படுகிறாய் ? நாம் உனக்காகத் திருக்காளத்தியிலிருந்து வந்து, நத்தத்தின் மேட்டில் வில்வ வனத்தின் கீளே யிருக்கிறோம்! அந்த மரத்தில் வெள்ளை அரளி புஷ்பமாலைத் தூக்கியிருக்குது ! அதுதான் அடையாளம், அந்த மரத்தடியில் நாம் வந்திருக்கிறோம் பிளாய் ! நம்மைக் கொண்டு வந்து உனக்கு யெவடத்தில் வைத்துக்கொள்ள

மனதிருக்குதோ அவடத்தில் வைத்துக்கொள்ளலா மென்று" உத்திரவாச்சுது.

3. அப்போது, பிச்சக்கணக்கருக்கு மகாசந்தோஷம் வந்து, முளித்துப் பார்த்ததில், ஒரு தரையுங் காணாமல்ப் போச்சுது ! அப்பால், இவர் ரொம்பவும் ஆச்சரியத்துடனே யெழுந்து, பொழுது விடிந்த மாத்திரத்தில் இது செய்தியை பலர் பட்டணசாமி குடிகளிடத்திலேயுஞ் சொல்லி, ஆச்சரியமாக யிருக்குதென்று, ஒரு ஒட்டன் வண்டிலுஞ் சேகரஞ் செய்துக்கொண்டு, அனேகங் கூட்டத்துடனே நத்தத்து மேட்டுக்குப் போய், அவருக்கு சுவாமி சொன்ன அடையாளமும், லக்கும் பார்த்து வரும்போது, ஒரு வில்வ மரத்தடியிலே சுவாமி, லிங்காகாரமாய் யெழுந்தருளி யிருந்தார் ! வெள்ளாளிப் புஷ்ப மாலையுங் கண்டார்கள் ! அப்போதுப் பிச்சக்கணக்கும், அவர் பின்னுடமே போன செனங்களும் மிகவுஞ் சந்தோஷிக்க, பிச்சக்

---

2. திருக்காளத்தி-காளஹஸ்தி எனப்படும் இவ்வூர் ஆந்திர மாநிலத்தில் உள்ளது; கண்ணப்பர் கோயிலும் இத்தலத்திலேயே உள்ளது. சானித்தியமும்-எப்போதும்.

கணக்கராகுறவர், மெத்தவும் புளகிதமாகி, ஆனந்தக் கூத்தாடிச் சுவாமியை பிறதெட்சண நமஸ்காரஞ் செய்து, அனேக விதமாகிய தோத்திரங்கள் செய்து, சுவாமியை வண்டியின் பேரில் யெழுந்தருளிச் செய்துக் கொண்டு வரும்போது, கோவிலிருக்கிற யிடம் மகாஆரண்ணியமான பிரப்பங்காடாய், அந்தக் காட்டுடே வண்டில் வருகுறபோது, அச்சு முறிந்து போச்சுது ! அதற்குப் பதிலச்சுப் போட்டு, வண்டில் நடத்தும் வரையில், வண்டில் நடக்கவில்லை !

4. அப்போது, பொழுதும் வெகுதே சக்காலமாச்சுது ! பிச்சக்கணக்க ராகுறவர் மிகவும் விசனித்துக்கொண்டு, "காளாத்தி அப்பா ! காளாத்தி யப்பா !" வென்று பிறலாபிக்கிற போது ஒரு ஆகாச வாக்குப் பிறந்துது, அது யேதெனில் "இவடத்தில் நம்முடையது குமாராகிய சுப்பிறமண்ணிய ரிருக்குறார்! ஆனபடியினாலே நாமும் இவடத்தி லிருக்கிவேணுமென்று மனதாச்சுது ! இந்த

3. லக்கு-இடம்; லிங்காகாரமாய்=லிங்க+ஆகாரமாய்; இலிங்க உருவமாக; ஆகாரம்-உருவம்.

வனாந்திரமான பிரப்பங்காட்டை வெளிபண்ணி, குமரற் பக்கலிலேதானே திருப்பணி முகிக்கச்" சொல்லி, ஆகாச வாக்குப் பிறந்துது ! அப்போது, பிரப்பங் காட்டை வெட்டி. வெளிப்பண்ணுகிற போது, அவடத்தில், சுப்பிரமணிணியர் மயில்வாகன ரூடராய் யெழுந்தருளி யிருந்தார்! அவரைப் பிச்சக்கணக்கர் முதலான சனங்கள் கண்டு, சந்தோஷத்துடனே தேகம் புளகிதமாகி, ஆனந்தக் கூத்தாடி, சுவாமி திருக்காளத்தி ஈஸ்பரரையும் குமரர் பக்கத்தில் பிறதிஷ்டை செய்து, அம்மன் வெணுமென்று திருவுருச் செய்ய லயத்தினப்பட்டு, திருவுருச் செய்தார்கள் !

5. அந்தத் திருவுரு வின்னமாய்ப் போச்சுது ! இப்படி மூன்று திருவுருவும் வின்னமானதைப் பற்றி, பிச்சைக் கணக்கருக்கு ரெம்பவும் விசனம் வந்து, காளாத்தீஸ்பரரை பிறாத்தினை செய்துக் கொண்டு, அன்னம் ஆகார மில்லைமல் எட்டுனாள் படுத்துக் கொண்டிருந்தார் ! அப்போது, சுவாமிக்கு மிகவுஞ் சந்தோஷம் வந்து, ஒரு னாள் சுக்கிறவாயு தினத்தில், மேற்படி கணக்கருடைய சொற்பனத்தில் போய்ச்

சொல்லுகிறார் "வருகிற சுக்கிறவாறத்துக்கு ஆத்திலே பிரவாகம் வருகுது ! அந்தப் பிறவாகத்துடனே அம்மாள் வருகிறாள் ! அப்போது யெடுத்துப் பிறதிஷ்டைச் செய் !" யென்று சொறப்பன மாச்சுது ! அதே மேரைக்கி சுக்கிறவாரத்தி னன்றைக்கி, ஆத்திலே பிறவாகமானது ! மகா யெறச்சலுடனே சீறிக்கொண்டு வந்துது ! அந்தப் பிறவாகத்தில் ஒரு மூங்கில் பண்ணையில், அம்மனுஞ்செல்வ வினாயகனுமாக யெழுந்தருளி வருகிறதைக் கண்டு, சிறிது நீச்சுக்காறரை விட்டு யெடுத்து வந்து, பிறதிஷ்டையுஞ் செய்து, அப்பால் கெற்ப கறம், அஷ்த்த மண்டபம், முன் மண்டபம், மகாமண்டபமுஞ் செய்து வைத்து, "பூசை செய்குறதுக்கு குருக்கள் வயனஷ்த்தனாக வெணுமென்றும், யெவடத்திலிருந்து தருவிக்கலாம் ? அது யெனக்குத் தெரியும்படி உத்திரவு கட்டளை யிடவேணுமென்று" சுவாமியை ரெம்பவும் பிறாத்திச்சுக்கொண்டு நின்றார் !

5. கெற்பகரம்-கர்ப்பகிருகம்; அஷ்த்த மண்டபம்-அர்த்த மண்டபம்; வயனஸ்தன்-வயணஸ்தன்-விவரம் அறிந்தவன்.

6. அப்போது, ஆகாச வாக்காய் சுவாமி உத்திரவானது! "இதற்கு யெட்டானாள், ஒரு பிறாமணன், சோளதேசத்திலிருந்து குழந்தை யில்லாதபடிக்கி பூலோகத்தில் அனேகந் தலங்களை வலஞ்சுற்றி வருகிறான். அவனிந்த ஆத்தில் வந்து பூசை போசனஞ் செய்வான், அவனுக்கு நாம் குழந்தை குடுக்கிறோம்! அவனை யிவிடத்திலிருந்து பூசைக் செய்யச் சொல் !"லென்று உத்திரவாச்சுது ! அதே மேரைக்கி எட்டானாள், மேற்படி பிறாமணன் ஆத்திலே வந்து யிறங்கினார் ! அவர்பேர் தியாகராச குருக்கள். அது செய்தியை இந்தப் பிச்சைக்கணக்கரும் குடியளும் அறிந்து., அவரிடத்துக்குப் போய், பொற்பூவும் வெள்ளிப்பூவுங் கொண்டுபோய், மேற்படி குருக்கள் பாதத்தில் அற்சித்து நமஸ்காரஞ் செய்தார்கள். அப்போது. இவா ளவாளைப் பார்த்து, "நீங்கள் யார் யெவர் ? யென்ன காரணத்தினாலே நம்மிடத்துக்கு வந்தீர்கள் ? சொல்லவேணுமெ"ன்று கேழ்க்க, பிச்சுக்கணக்கர் சொல்லுகிறார். "சுவாமி காளாத்தீஸ்பரர், தாங்கள் வருகிற வற்தமானமுஞ் சொல்லி, தங்களுக்குக் குழந்தை குடுக்கிறோமென்றும்,

தங்சளைக் கோவிலுக்குக் குருக்களாக யிருந்து, அர்சித்து வரச்சொல்லியும் எனக்கு உத்தரவு செய்திருச்கிறார் ! ஆனதினாலே அடியேன் வந்தேனெ"ன்று சொன்னார் !

7. அப்போது மேற்படி குருச்களுக்கு திரேகமெல்லாம் பூரித்து, "யெனக்கு ஒரு குழந்தை ! ஒரு குழந்தை ! யென்று சொல்லிக்கொண்டு கோவிலுக்கு வந்தார் ! சுவாமியைத் தெரிசினைச் செய்து, பிறாத்திக்கிறபோது, "நீ கேட்டுக்கொண்டு வந்தபடிக்கி, உனக்கு ஒரு குழந்தைக் கொடுத்தோமெ!" ன்று உத்திரவாச்சுது ! அதே மேரைக்கி மேற்படி கோவில் குருக்களுக்கு யெல்லாம் ஒரு குழந்தைதான் உண்டாகிறது, அவருமப்படிக் கொஞ்சனாள் பூசைச் செய்துக்கொண்டு வந்தார் !

8. இப்படி யிருக்கும்போது, கொஞ்சனாளைக்கிப் பிற்பாடு, ஒரு வற்தகன் வடக்கே வெகு தூரத்திலேயிருந்து வந்து, இந்தத் தலத்தைக் கண்ட மாத்திரத்திலே அவனுக்கு மகா சந்தோஷம் வந்து,

அவன் கொண்டு வந்த திரவியங்களை யெல்லாம் பாயிலே கோயிலுக்கு முன்னாலே காயப்போட்டுக் கொண்டு, சுவாமியைப் பார்த்து, இரண்டு கைகளிலேயும் பணத்தை வாரிக்கொண்டு சொல்லுகிறான், "செல்லனென்கிறதும் நீதானா ? செல்லப் பெருமாள் செட்டியார் யென்குறவனும் நீதானா ?" வென்று சொல்லிக்கொண்டு, மேற்படி வற்தகனாகிய செல்லப்பெருமாள் செட்டி பணத்தை அள்ளித் திருப்பணி முகிக்கிறதற்கு கல்தச்சர், கொத்தமாருக்குங் கொடுத்து முகித்தது சுவாமி சன்னதி, அம்மன் சன்னதி, சுப்பிறமணியர் சன்னதி இந்த மூன்று சன்னதிக்கும் முன்பாகத் தட்டி மண்டபம், சுற்றித் திருமதிள் கோபுரங் சட்டி, காலாகாலங்களில் பூசை, நெய்வேத்தியமும் நடக்கும்படி செய்தார் !

இதுவரைக்கும் நடந்து வருகுது !

9. சுவாமி சன்னதிக்கு முன்பாக ஒரு நதி ! அதின்பேர், சுரபிநதி ! முக்காதவழி உத்திரவாகினி ஆனதால் காசி நதிக்கிச் சமானம் ! இந்த நதியில் தகனம் பண்ணின பிறேதத்தின் சிரசு

வெடிக்கிறதில்லை ! அங்கம் கல்லாம் ! இது அன்னியில் ஊரைச் சுற்றி ரதமோடுகிற, வீதுக்குள்ளிட்டு விசந்திண்டில் மரணமில்லை[1]

இப்படிக்கி உத்தமத்தின் மகுத்துவம் !

வேங்கடராயர்.

11. தேவாரம் பாளையப்பட்டு, சோலைமலை, அழகர் தலபுராண வரலாறு

(டி 3851)

An account of Cholemali alagar fare in the Devaram feudal estate.

1. சுவஸ்த்த வருடம் சாலிவாகன சகாற்தம்...... கலியுக சகாற்தம்..... இதின் மேல் செல்லாநின்ற.... வருடம் சுக்கிறவார னாளில்,

---

9. விசந்திண்டில்-விடம் தீண்டினால்; மகுத்துவம்-மகத்துவம்.

திண்டிக்கல் வகையறாவுக்குச் சேர்ந்த, தேவாறம் பாளையப்பட்டு சோலைமலை அளகர் தலப்புறாண வரலாறு கேழ்வியான விபர மென்னவென்றால்.

2. முன்னொரு காலத்திலே, இந்தத் தேவாறம் யென்னப்பட்ட றாசதானிக்கி தென்மேற்கே 25 நாளிகைவழி தூரத்திலே வறாககிரி மலை அடிவாரத்தில் மகா ஆரண்ணியமான வனமாகவும், கானலாகவும் யிருந்தது. அந்தக் கானலிலே மேற்படி தேவாரத்திலே யிருக்கப்பட்ட ராமனென்னப்பட்ட வேடுவனும், அவன் மருமகன் 7 பிறாயமுள்ள கருப்பனென்னப் பட்டவனும், வேட்டையாடப் போய் அனேகம் வெட்டியானதில், ஆயாசம் பிறந்து, ஒரு மரத்தடியில் 'மகா களையுடனே யிருக்கிறபோது, மேற்படி கருப்பன் யென்குற வேடன் பேரில் ஆபீசம் வந்தது போலே சொல்லுகிறான், "நாமிருக்கிற மரத்துக்கு சமீபத்திலே மதுரை அளகர்

1. புள்ளியிட்ட இடங்கள், மூலத்திலும் புள்ளியிடப்பட்டே உள; தேவாரம்-வீரன் அழகு முத்து மாவட்டத்து உத்தம பாளையத்திலிருந்து ஏழு மைல் தொலைவில் உள்ள ஊர்; திண்டுக்கல்லின் 26 ஜமீன்களில் தேவாரம் ஜமீனும் ஒன்றாக இருந்தது.

கோவிலிலிருந்து, சோலைமலை அளகர் யெழுந்தருளியிருக்கிறார் ! இதோ னான் காண்பிவிக்கிறே னென்று ஓடுகிறபோது, மேற்படி ராம னென்குற வேடன் மிகவும் ஆச்சரியத்துடனே துடந்துபோய்ப் பார்க்கும் போது, அப்படியே சுவாமி திருவுருவங் கண்டான் ! அப்பால் மேற்படி யானுக்கு ஆபீசம் நின்றது ! உடனே இருபேருஞ் சுவாமி தெரிசனைச் செய்துக் கொண்டு ஊருக்கு வந்து, ஜமீன்தார் மற்றப் பேர்களுக்கும் அறியப் பண்ணினதில், சகலரும் போய்க் கண்டு, மகா ஆனந்தமான தெரிசினையுஞ் செய்துக் கொண்டு, அபிஷேகம் நெய்வேத்தியமுஞ் செய்துவிச்சுப் போட்டு, ஊருக்கு வந்தார்கள்.

3. அப்பால், கொஞ்சநேரத்தில், மேற்படி சுவாமிக்கி கல் திருப்பணியும் முகித்து வைத்தார்கள் ! கோதையம்மன் திருவுருவுஞ் செய்து, கும்பா அபிஷேகமுஞ் செய்து, மாத விஷேடம் அட்டவிஷேடங்களும் நடக்கும்படி செய்து, மேற்படி சுவாமி காரியங்களில் தாள்வில்லாமல் நடந்துது.

2. *ஆபீசம்-ஆவேசம்.*

அதுமுதல், மேற்படி மேஸ்டர் ஆற்டீசு துரையவர்கள் தீர்ப்பு செய்து, பேரீசு பட்டையங் குடுத்த 13ம் பசலி வரைக்கும் மேற்படி சுவாமிக்கிப் படித்தர முதலாகிய விசேட தினங்களும் நடந்து வந்துது.

4. அப்பால், பட்டையங் குடுத்தது முதல் இதுவரைக்கும், வருஷம் 1க்கு தேவதாயம் மானியம் புஞ்சைக்குளி 3 1/2க்கு, தீர்வை கலி பொன் 1 பணம் 5, கும்பினியார் திட்டம் பண்ணினபடிக்கு, நடத்திவிச்சுக் கொண்டும், யாசக பறப்பத்தி செய்து விசேட தினங்களையும் நடப்பிவிச்சு வருகிறோம் !

---

4. பறப்பத்தி-பரபத்தி-கொடுக்கல் வாங்கல்.

12. தேவாரம் பாளையப்பட்டு ரெங்கநாயகர் தலபுராண வரலாறு

(டி. 3856)

The local legend of the fare of Ranga Nayakar in the Devaram feudal Estate.

1. சுவஸ்த ஸ்ரீ சாலிவாகன சகாற்தம் 1455, கலியுக சகாற்தம் 4396 இதன்மேல் செல்லாநின்ற.... வருடம் சுக்கிரவாரமும், அமுற்தயோகமுங் கூடிய சுபதினத்தில்,

திண்டிக்கல் வகையறாவுக்குச் சேர்ந்த தேவாரம் பாளையப்பட்டு ரெங்க ணாயக்கர் தலப்புராண வரலாறு உண்டான விபரம் யென்னவென்றால்,

2. தேவாரமென்கிற நாம கறணத்தை உடைத்தாகிய றாசதானிக்கு மேற்கே, 2 நாளிகை வழியில் மலைச்சார்பாகிய மலை அடிவாரத்தில், முன் ஆதியில் குளிர்ந்த பூஞ் சோலையாக யிருந்தது; அந்தச் சோலையில், மேற்படி தேவாறத்திலிருக்கின்ற

---

1. *சாலிவாகன ஆண்டு 1455க்கு நிகரான கிறித்தவ ஆண்டு, கி.பி. 1533 ஆகும்.*

இடைச்சாதியாகிய அண்ணாக்கோ னென்கிறவன் புனைக்காடு வெட்டி, பயிரிடுகிறதற்காக கொஞ்சம் பூமியை வெளிபண்ணினான். அந்தக் காடுவெட்டுகிற வேலைக்கி ஆக ஒரு கலசத்தில் மோரும், சாதமுமாக விட்டுக்கொண்டு போனான். மேல்ப்படியான் வெட்டினக் காட்டில், ஒரு கல்ப் போலே காலைத் தடிக்கினதில், மேற்படி கலசம் தவறிக் கீழே கல்லின் பேரில், கலசம் வுடைந்து விழுந்து போச்சுது ! இப்படி மூணுனாள் அந்தக் கல்விடறி, அவன் கொண்டு வருகிறதை மோருஞ்சாதமும் அந்தக் கல்லில் தடுக்கிறதும், கீளே விழுந்து உடைந்து போகிறதுமா யிருக்குது ! அதினாலே மேற்படி யிடையனுக்குக் கோபம் வந்து, "இந்தக் கல் யிப்படி நித்தியம் தடுக்குது ! இதை வெட்டி யெடுத்து, அப்புறம் யெறிந்து போட வேணுமென்று" கொத்துனாலே வெட்டினான் ! அந்த வெட்டு மேற்படி கல்லின் பேரில் விழுந்தவுடனே ரெத்தம் குபீரேன்று கண்டுது !

2. *வராகிரி-மேல் மூலத்திலேயே இதன் இடம் கூறப்பட்டுளது; புனைக்காடு-புன்னைக்காடு.*

3. அப்போது, ''யிது யென்ன காரணமா யிருக்குதென்று'' பயந்து , பதறிக்கொண்டு நிற்கின்ற சமயத்தில் அடுத்த மேற்படி சோலையில் புனைக்காடு வெட்டிக்கொண்டிருந்த குடியானவனில் எழு வயசுள்ள குழந்தையின் பேரில் ஆபீசம் வந்து, ''நாம் ரெங்கனாயகர்! நம்முடைய ஸ்தலம் ஸ்ரீரங்கம் ! அவடத்திலிருந்து இந்தப் பூஞ்சோலைக்கி வில்லும் அம்பும் யெடுத்துக் கொண்டு, வேட்டை மாற்கமாய் யெழுந்தருளினோம் ! இவடம் மனோக்கியமான பூஞ்சோலையும் சுனையளும் நம்முடைய கருத்துக்கு மகா புனிதமாகியும் வெகு யோக்கியமாகவும் யிருந்தபடியினாலே, இவடத்தில்தானே நாம் சயனஸ்தானமாய் யெழுந்தருளி இருக்கிறோம் ! அதற்குச் சோதினை யென்னவென்றால், நம்முடைய வலதுபாதம், நாம் யெழுந்தருளினதற்குச் சமீபம் உத்தரபாரிசமாக ஒரு பாரையில் வலதுபாதம் வைத்து வந்திருக்கிறோமேன்று'' உத்திர வாச்சுது!

4. அப்பால் ''யிதென்ன மகிமையா இருகுதென்று'', உடனே, ஊருக்கு வந்து இந்தக் காரணங்களை மேற்படி

3. *சயனஸ்தானமாய்-படுத்த நிலையில்.*

யூருக்கு பிறதானமா யிருக்கப்பட்ட பேருக்கும், மற்றச் சகல செட்டி வற்தகர்களுக்கும், குடியளுக்குந் தெரியப்படுத்தினதில், சகலரும் பிறப்பட்டுப் போய், ரெங்கனாயகர் யெழுந்தருயிருக்கிற யிடத்தில் போய்ச் சுவாமியை அனேகவிதங்களினாலே தோத்திரம் பண்ணினார்கள் !

5. அப்போதும் ஒரு குழந்தையின் பேரில் சுவாமி வந்து, இடையனாகிய அண்ணாவிக்கோனிடத்தில் சொன்னப் பிறகாரமாய் உத்திரவாச்சுது ! அப்படியே மேற்படி சுவாமியினுடைய பாத மிருக்கிற அடையாளத்தையும் அந்தப் பாரையில்ப் போய்ப் பாற்கும்போது, திருப்பாத தெரிசினையுங் கண்டார்கள்! கண்டவுடனே, சுவாமியினிடமாக வந்து, மேற்படி சுவாமியுன் பேரிலே பொதிந்திருக்கிற மண்ணுகளை துலாம்பறமாய் வெட்டி யெடுத்து, அபிஷேகம், மற்றப் பூசையும் நடப்பிவைச்சு, அப்பால், அதுமுதல் மூன்று மாத்தைக்குள்ளே விலாசமாய்க், கல் திருப்பணியாகிய கெற்ப்பகறம், அஸ்தமண்டபமும் உண்டுபண்ணி, சுவாமிக்கி னாச்சியார் அம்மன் திருவுரு உண்டு செய்து,

கும்பாபிஷேகமுஞ் செய்து, சுவாமிக்கி நித்தியப்படி ஆருதேசக் காலங்களும் பூசை நெய்வேத்தியமுஞ் செய்விச்சுக் கொண்டு வரும்படியாய் நிதம் 1க்கு, கலி பணம் மூன்று வீசம் வீதம் படித்தரமும், நவறாத்திரி கிருஷ்ணன் பிறப்பு உறிக்கட்டித் திருவிளா, திருக்காற்திகை, ஏகாதசி யிதுமுதலாகிய விசேட தினங்களுக்கு வருஷம் 1க்கு, கலி பொன் 25 1/2 ஆகச் செய்து, சுவாமி காரியங்களில், யாதொரு தாழ்வுகளும் வராமல், அதுமுதல் மகாராசராச ஸ்ரீ மேஷ்டர் ஆற்டீசு துரையவர்கள் தீர்ப்பு செய்து, பேரீசுப்பட்டையம் பிறந்த 13 பசலி ருத்திறோக்காரி வருஷம் வரைக்கும் மேலெழுதிய சுவாமிக்குப் படித்தர முதலாகிய விசேஷ தினம். திருவிளாவுக்களும் தாள்வில்லாமல் நடந்துது !

6. அப்பால், பட்டையம் போட்ட வருடம் முதல் நாளது வருடம் வரைக்கும், வருஷம் 1க்கு, மேற்படி கோவில் தேவதாயம் மானிபம் புஞ்சைக்குழி 3க்கு, தீர்வை கலி பொன் 1 பணம் 5 கும்பினி சறுக்காறில் திட்டமாயிருக்குது !

---

5. துலாம்பரம் - தெளிவு; படித்தரம்-அன்றாடச் செலவு.

ஆனதால், மேற்படி படித்தரங்களும், திருவிளாக்களும் நடக்கவில்லை ! இப்போது, எட்டு னாளைக்கு ஒரு திரம் ஊரிலே யாசகஞ் செய்து, ஒரு நேரப்பூசை நடந்து வருகுது. அது நிமித்தியம், இந்தப் பூமியில் மளை காலாகாலங்களிலே வருஷியாமல் வெள்ளாண்மையும் குடியளுக்குத் தாள்வாகுது! மளையும் வெள்ளாண்மையும் இப்படிப் போகவேண்டிய தென்னவென்று, மேற்படி தெய்வத்தைப் பிறாத்திச்சு, ஆபீசம் வருத்திக் கேழ்கும்போதெல்லாம், ''முன் னடந்துவந்த படித்தறமும், அபிஷேக முதலான திருவிளாவும் நடத்திவிச்சா யிப்போது வெள்ளாண்மையும், மளையும் தாள்வில்லாமல் வருஷித்து சுபட்சியாகச் செய்கிறோமென்று'' உத்திரவாகுது !

இப்படியான தலப்புறான வரலாறு !

---

6. தேவதாயம்-கோயிற் செலவுகளுக்காக விடப்படும் மானியம்; சுபட்சி-சுபிட்சம்-செழிப்பு.

13. கோம்பைப் பாளையப்பட்டு திருமலைராயப் பெருமாள் தலபுராண வரலாறு

(டி.3855)

The local legend of the fare of Combapalliyapattu

1. சுவஷ்த ஸ்ரீ சாலிவாகன சகாற்தம் 1440, கலியுக சகாற்தம் 4381... அதன் மேல் செல்லாநின்ற ருத்திறேக்காரி வருடம், வைகாசி மாதம், பஞ்சமி, உத்திர நட்சேத்திரமும், அமுர்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில்,

திண்டிக்கல் வகையறாவுக்குச் சேர்ந்த கோம்பைப் பாளையப்பட்டு திருமலைறாயப் பெருமாள் தலப்புறாண வரலாறு உண்டான விபரம் யென்னவென்றால்,

---

1. கோம்பை-வீரன் அழகு முத்து மாவட்டத்து உத்தமபாளையத்திற்கு வடமேற்கு நான்டு மைல் தொலைவில் உள்ள ஊர். திண்டுக்கலைச் சேர்ந்த 26 பாளையங்களில் இதுவும் ஒன்றாக இருந்தது, சாலிவாகனசகம் 1440க்கு நிகரான கிறித்தவ ஆண்டு கி.பி. 1518 ஆகும்.

2. ஆதியில், பரமேஸ்வரன் யெமயகிரியில், யெமையபருவத றாசன் மகளாகிய உமாதேவியைக் கலியாணஞ் செய்ய வந்த போது, ரிஷியீஷ்பறாதியளுந் தேவாதியளுங் கலியாணத்துக்கு வந்து, சுவாமிக்கும் உமாதேவியாகிய அம்மனுக்கும் திருக்கலியாணம் நிறவேறினதின் பிற்பாடு, மகாரிஷியாகிய நாரத மகாரிஷி, தெட்சிண பூமியில், கன்னியாகுமாறி தீர்த்தத்தில், ஸ்தானம் பண்ணி வருகிறதற்காக தெட்சண பூமிக்கு வருகிறபோது, கோம்பைக்கி மேற்கு நாமக்கல் மலைச்சார்பில், வில்வ வனத்தையும், தீற்த விஷேடத்தையுங் கண்டு, "இந்த யிடம் மகா புண்ணிய ஸ்தலாமா யிருக்குதென்று", மகா சந்துஷ்டியாய், அந்த யிடத்துக்கு வந்து அந்தந்த் தீர்த்தத்தில் ஸ்தானம் பண்ணி, இந்த ஸ்தலம் மகா விஷேடமானதால், இந்த ஸ்தலத்தில் மூறத்தி நாம் ஒன்று உண்டாக்க வேணுமென்று, விஷ்ட்ணுதேவரை மனோகாரணமாக தியானஞ் செய்து, சிறிது காலம் தவசு செய்தார் !

2. *கெருடாருடர்-கருடவாகனத்தில் அமர்ந்த வடிவு; உபய-இரு; பாரிசம்-பக்கம்.*

2. அப்போது, விஷ்ட்ணுதேவர் சங்கு சக்கிறாயுத பாணியாய் கெருடாரூடராய், மகா ரிஷியாகிய நாறத மகாரிஷிக்கி காட்சி கொடுத்து, "உம்முடைய உள்ளத்தின் படிக்கி இந்த வில்வ வனத்தில் அவதரிக்கறோமென்று", திருவுள்ளம் பற்றி, அந்த வில்வ வனத்தில் சுயம்பாய் பள்ளிக்கொண்ட அவதாரம் போல், உபய நாச்சியார், இரு பாரிசமும் யிருக்கும் பாவினையாய் அவதரித்தார். அப்போது, மகா ரிஷியாகிய நாரத மகாமுனி கண்டு, ஆனந்தமாய்ச் சுவாமிக்கி அபிஷேகஞ் செய்து, தாமரைப் புஷ்பங்களினாலே அற்சினை செய்து, அந்தத் தீர்த்துக்கு கோனேரி தீர்த்தமென்று நாமகறணமும் வைத்து, அப்பால் கன்னியாகுமரிக்கி, மகாரிஷியாகிய நாரதமகாரிஷி யெழுந்தருளிப் போனார் !

3. அப்பால், அகஸ்திய மகாரிஷியிடத்தில், இந்தத் தலவிஷேடத்தையும் மூறத்தி விஷேடத்தையும், தீர்த்த விஷேடத்தையும் அறியப் பண்ணினதில், அகஸ்திய மகாரிஷியும் பின்னுஞ் சிறிது ரிஷியீஸ்பறாதிகளும்,

மேற்படி ஸ்தலத்துக்கு வந்து, தீர்த்தமாடி, ஸ்தலவிஷேடத்தையும் கண்டு, சுவாமியை அற்சினைப்பண்ணி கயிலாசத்துக்குப் போனார்கள் !

4. அப்படிக்கிச் சிறுது காலம் அந்த வில்வவனத்தில் மனுடர் சஞ்சாரமில்லாமல் தேவரிஷியீஸ்பறாதியள் கண்டு, பூசை செய்துக்கொண்டு வருவார்கள். அப்பால், முதல்ப் பட்டக்காரனாகிய அப்பாட்சியாகிய சீத்தைய கவுண்டர், மேற்படி நாமக்கல் மலைக்கி கீள் பாரிசம், நாலுனாளிகை வழிதூரம் சாலமலை அருகாண்மையில், ஊருண்டு பண்ணின புலிகுத்தி கிறாமத்திலிருந்து, இடையர், மாடு, மேய்ச்சலுக்குக் கொண்டுபோய், தொழுப் போட்டு, மாடுமேய்த்துக் கொண்டிருக்கிறபோது, மேற்படி யிடையர் வகையில் அமச்சிக்கோனானாகுரவன் நிதம் மாட்டுத் தொழுவிலிருந்து பால்கலையங் கொண்டு, அந்த வில்வ வனத்தூடே வரும்போது, மேல் சொல்லிய ஸ்தலத்தில் பால்கலையம் யிடறிவிழுந்து உடைந்து கொண்டே வந்துது ! ஒரு னாள், தினம் மேற்படி

அம்மச்சிக்கோனான். ஊருக்கு வந்து கோடாலி, வெட்டருவாள் யெடுத்துக்கொண்டு சிறுது சனத்தையும் அளைத்துக்கொண்டு, அந்த வில்வவனத்துக்கு வந்து, பாதையை தூஷித்துச் செய்துக்கொண்டு வரும்போது, யான் இடறிவிழுந்து பால்கலயம் ஒடைந்த யிடத்தில் ஒரு மேடுபோலே யிருந்தது ! இந்த மேடுதான் நிதம் யிடருதென்று கோடாலியைக் கொண்டு அம்மச்சிக்கோனான் வெட்டினான் !

5. அப்போது, அகோரமான யிரத்தம் பிறப்பட்டது! இது யென்ன அதிசயமென்று யோசிக்கிறபோது, அவனுக்கு யிரண்டு கண்ணுந் தெரியாமல் போச்சுது ! அப்பால் கூடவந்தபேரில் ஒருவன் ஊருக்கு வந்து, இது செய்தியை அப்பாட்சி சீத்தைய கவுண்டரிடத்தில்ச் சொன்னான். அந்தட் சணமே அப்பாட்சி சீத்தையக் கவுண்டரும் சிறிது சனங்களும் அந்த வில்வ வனத்துக்கு வந்துப் பாற்கும்போது, ஒருவன் பேரில் ஆயீசம் வந்து உத்திரவானது, "நாம் திருப்பதியிலிருந்து இந்த யிடத்துக்கு வரவேணு

மென்று நாறத மகாரிஷி தவசுப்பண்ணினதினாலே, இந்த யிடத்தில்ச் சுயம்பாய் அவதரித்திருக்கிறோம் ! நம்முடைய காரணந் தெரியாமல், இந்த யிடையன் கோடாலியைக் கொண்டு வெட்டினதினாலே, அவனுக்கு கண் தெரியவில்லையென்று, சுவாமி உத்திரவாகும்போது, அப்பாட்சி சித்தையக் கவுண்டர் ரெம்பவும் பயந்து, வந்தனஞ் செய்து இடையனுக்கு கண் தெரியும்படி உத்திரவாக வேணுமென்று கேட்டக்கொண்டதில், சுவாமி இடையனுக்கு கண் தெரியும்படி உத்திரவு குடுத்துப் பின்னும் உத்திரவானது, "நாம் மலைச்சார்பில் அவதரித்திருக்கிற தினாலேயும் (ஆயனாகிய இடையன் மூலமாய் நாம்) வெளிப்பட்டதினாலேயும், திருமலை றாயப்பெரு மாளென்று நாமகரணமுஞ் சொல்லி திருப்பணி முகித்து வைய்க்கச் சொல்லியும் அப்பால் மேற்படி சன்னதிக்கு கிழக்கே, மூனு னாளிகை வழி தூரத்தில் றாசதானி உண்டுபண்ணி அதிலிருக்கச் சொல்லியும் உத்தரவாச்சுது.

6. அதே மேரைக்கி அப்பாட்சி சீத்தைய கவுண்டர் சுவாமிக்கு திருப்பணியுங் கூட்டி வைத்து. சுவாமியைப் பூசிக்கிறதற்க்கு மனுஷாள் வேணுமென்று யாரைத் திட்டஞ் செய்யலாமென்று யோசினையின் பேரில்ப் படுத்துக்கொண்டிருக் கிறபோது சுவாமி திருமலை றாயப் பெருமாள் அப்பாட்சியாகிய சீத்தையகவுண்டர் கனவிலே தாதவடிவாய் வந்து சொல்லுகிறார், "நீ ஆதியிலிருந்த பெனுகொண்ட சீர்மையில் உன் முன்னோர்களுக்கு நெஷுத்தமா யிருந்தவன், நமக்கும் பத்தனவன், பூவலையத்தாதனென் ஒருவன் உன்னூரில் வந்திருக்கிறான் ! அவனைத் தருவிச்சு யெனக்குப் பூசிக்கும்படியாய் திட்டஞ்செய்" யென்று உத்திரவாச்சுது !

7. அதே மேரைக்கி மறானாள், பூவலையத்தாதனைத் தருவிச்சு, அற்சக வேலைக்கித் திட்டஞ் செய்து, நிதம் ஒருகாலம் பூசை நடந்துக்கொண்டு வந்துது ! அப்பால், சுவாமி உத்திரவிப் படிக்கி சன்னதிக்கிக் கிழக்கே

றாசதானியாகக் கோம்மை ஊரும் உண்டுபண்ணிச் சிறுது கிறாம பூமியளும் உண்டுபண்ணினதின் பிற்பாடு, புலிருத்தி கிறாமத்தையும் சுவாமி திருமலை றாயப் பெருமாளுக்கு சறுவமானியமாக (தாற) விட்டுக் குடுத்து, திருவிளா உண்டுபண்ணி நடந்து வந்துது ! அப்பால், யெட்டாவது பட்டக்காற அப்பாட்சி கவுண்டர் னாளையில், சிறுது பூமி காடு வெட்டி, தாதன்குளம் உண்டுபண்ணி, அதற்குக் கொஞ்சம் நஞ்சை நிலமும் உண்டுபண்ணி, அந்த நிலத்தைச் சுவாமிக்கி மானியமாகச் செய்துவைத்தார். அப்பால், சுவாமியும் அம்மனும் எழுந்தருளி னாயக்கர் தாம்பூரத்தினாலே வாறகவேணுமென்று யெத்தினஞ் செய்கையில், அப்பாட்சி கவுண்டரிடத்தில் உத்திர வானது "நம்முடைய மலைச் சார்பில் கோனேரிதீர்த்த தொட்டிக்குள்ளே உபயனாச்சியாருடனே விக்கிரக மிருக்குது ! அதை யெடுத்து, நம்முடைய ஆலயத்தில் வைக்கச் சொல்லியும் உத்திரவாச்சுது ! மற்றானாள் காலமே அப்பாட்சி கவுண்டர் சிறுது சனத்துடனே கோனேரி தீர்த்தத்துக்குப் போய், அந்தத் தீர்த்தத்

---

7. கோம்மை-கோம்பை; தாறவிட்டு-தாரைவிட்டு-தாரை வார்த்து; சம்பறட்டிணை-சம்ரக்ஷணை.

தொட்டியை சோதினை பார்க்கும் வரையில், உபையனாச்சியாருடனே விக்கிரகம் யிருந்தது. அதை யெடுத்துக் கொண்டுவந்து கோவிலில்வைத்து சம்பறட்டிணை செய்து, பூசை மற்றதும் நடப்பி வைச்சார் !

8. சோளதேசத்தில் வரதய்யங்காரென்று ஒரு பிராமணனுக்கு ரெண்டு கண்ணுந் தெரியாமலிருந்து, திருப்பதி வெங்கிடாசலபதி சன்னதிக்கிப் போய், வெங்கிடாசலபதியை பிறாத்தினை செய்து "எனக்குக் கண் தெரியவேணுமெ"ன்றுக் கேட்டுக் கொண்டதில், அப்போது சுவாமி மேற்படி பிறாமணனுக்கு ஒருகண் கொடுத்து, யின்னம் ஒருகண் கோம்பையில் மலைச்சார்பில், ஒரு காறணாற்தமாய் அவதரித் திருக்கிறோம் ! அந்தச் சன்னதிக்குப் போனால் இந்த ஒரு கண்ணுந் தெரியுமென்று உத்திரவாகி, அந்த பிராமணனுங் கோம்பைக்கி வந்து, திருமலைராயப் பெருமாளைத் தெரிசினைச் செய்ததில் அந்த ஒரு கண்ணுந் தெரிந்துது ! அந்தப் பிராமணன் சோளதேசத்துக்குப் போய், சீரங்கத்தில் பட்டரய்யங்

காரிடத்தில் இது செய்தியைச் சொன்னதில், அவரும் இந்தத் தலம் மகுத்துவம் பாற்கவேணுமென்று ருத்திராச்சாரியார் சிறிது திருக்கூட்டத்துடனே பிறப்பட்டுக் கோம்பைக்கி, வந்து. சுவாமி தெரிசினைச் செய்துக்கொண்டு அப்பாட்சிக் கவுண்டர் யிடத்தில் சொன்னது'', ''இந்த ஸ்தலம் திருப்பதிக்கி ரெண்டாவதாய் இருப்பதால், இதற்குச் சூத்திறாள் பூசை செய்தால், தீர்த்தம், திருமாலை வாங்கிறது யோக்கியமில்லை'' என்று சொல்லி, அப்போது களையனூரிலே யிருந்த பாப்பையங்காரைத் தருவிச்சு, அற்சக வேலைக்கி நேமுகஞ் சேய்து 50 குழி புஞ்சை நிலம் மானியம் விட்டுக் குடுத்தார். அப்பால், ஆதியில் பூசைச் செய்துவந்த திருமலைத் தாதனுக்கு கோவிலுக்கு ஸ்தானீகமுங் குடுத்து, குழி 100 புஞ்சை நில மானியமும் விட்டுக்கொடுத்து, அப்படிச் சிறிது காலம் நடந்து வந்தது.

9. அப்பால்.... 19வது பட்டத்தில் அப்பாட்சி கவுண்டர் னாளையில், மேற்படி கோவிலுக்குச் சிகரமும், மகாமண்டபமும் அஸ்தமண்டபமும், கெருட

மண்டபமும ஆறு கால் பீடமும், கொடிஸ்தம்பமும் மடப்பள்ளியும், சுத்தாலைத் திருமதிளும், துவாற பாலகரும், திருத்தேரும், திருவுளா மண்டபமும், சுவாமிக்கித் திரு ஆபரணமும் இது முதலானதுகளுஞ் செய்து, கோவிலுக்குப் பரிசாறகம், சுயம்பாயி கணக்கு, திருமாலைகட்டி, பல்லெலை, நாகசனம் மேளம் யிது முதலான வேலைக்காறரையுஞ் திட்டந் செய்து, ஸ்தானீகனுக்கு வருடாவருடம் திருவுளாக் கிறமித்த பதினோருனாள் வல்லக்குக் கொடுத்து, மேளம் கட்டியத்துடனே, வீட்டுக்கு அனுப்பிவைத்து, அது முதலாய் நெடுகலும் நடந்து வருகுது !

இதே மோரைக்கி இதுவரைக்கும் திருவுளாவும் நடத்தி வருகிறோம் !

---

9. பரிசாரகம்-ஏவல்வேலை; சுயம்பாகி-சமையலாள்; மாலைகட்டி-கோயிலுக்கு வேண்டிய மாலைகள் கட்டுபவன்; பல்லியம்-வாத்தியம்; நாகனம்-நாதசுரம்; வல்லக்கு-பல்லக்கு.

14. கிழக்கிந்தியக் கம்பெனிக்கு முதுகுளத்தூர் தொடர்பான விண்ணப்பம்

(டி.3851)

A Petition to the Honarable Company to Repair a certain annicat or water-course

1. மகாராச ராசமானிய ஸ்ரீ கும்பினியாரவர்கள் சமுகத்துக்கு-முதுகுளத்தூர் தாலுக்கா, சிக்களத்தாலூர்கா, ரெண்டு தாலுக்காவில் சேர்ந்த திறப்புச் சீவிதம், தற்மாசனம், சத்திரம், தேவஸ்தானம், மானியம், மடப்புரம் இந்த 21 நஞ்சை, புஞ்சை, 1/2 கிறாமம் கொத்துக்கணக்கன், அம்பலகாறன், காவல்காரன், பெரியகுடியன் அனைவரும் சாஷ்டாங்க விளுந்து, பாதமுத்தி செய்து, வேகாயிரந்தரம் குனிந்து சலாஞ்செய்து, முழங்காலூன்றி, அனந்த ஒடுக்க வணக்கத்தோடும் அங்கீகரிப்போடுஞ் செய்யாநின்ற விண்ணப்பமாக எளுதிக்கொண்ட வாக்கு மூலம் யென்னவென்றால்,

---

1. முதுகுளத்தூர்-இராமநாதபுரம் மாவட்டத்து ஊர்; கமுதி, பரமக்குடி ஆகியன இதன் அருகிலுள்ள ஊர்கள்; பாதமுத்தி செய்து-பாதத்தை முத்தமிட்டு.

2. ரெகுனாதக் காவேரிக்கித் தண்ணீர் வாறத்துக்கு வழி பூதக்கொண்டான் கரிசல்குளம் கண்மாய் வளியாக, சதிரகிரி முதல்க்கால் கண்டு, தண்ணீர் வரத்து வக்கணங்குண்டாறு 1 நாகமலை முதல்க்கால்க் கண்டு வருகிற வழியில், திருமால்கலத்தாறு இந்த ரெண்டு ஆறும் பள்ளிமடஞ் சீமை பெருஞ்சாளிவணிதம் புதுப்பட்டியில வந்து ஒன்றாகக் கூடி வரத்து 1 சொக்கனோடைத் தண்ணீர் மண்டலமாணிக்கம் கால் மாற்கமாக முறித்து, ரெகுனாத காவேரிக்கு வருகிற வழியில் வரத்து 1 முடுக்கங்குளம் மாற்கமாக வருகிற ஓடையும், வீரசோளன் கண்மாய் மறுகால்க் கலுங்கு மாற்கமாக வருகிற ஓடையும் ஒன்றுகூடி காக்குகிற மாற்கமாக, கல்லுப்பட்டிக்கி மேல்புரம் தண்ணீர் வரத்து 1 ஆக கமுதைக்கி மேல்புரம் அஞ்சு வகைக்கி கமுதையிலிருந்து அணை அடைத்துக் கிளக்கே ரெகுநாதக் காவேரியில் போக்கு ஒருவகை தண்ணீர், கிளக்கே கொண்டுபோகும் மாதம் நாலுவகை தண்ணீர் அதியத் தண்ணீராகச்சே கமுதைத்துக் கலுங்கில் இந்த நாலுவகைத் தண்ணீருக்குப் போக்கு வைக்க வேணும்.

3. அதன் கிளக்கு ரெகுனாதக் காவேரிக்கி மேல்வரத்து அணையூருக்கு மேல்பிறத்தில் வருகிற கிறதமாநதி ஆறு 1, இதன் கிளக்கு பறளை ஆறு ஒன்று, பாத்தியனூர் மார்க்கமாக வந்து, ஆனையூர் ஒப்பந்தமாககிறதமானதியில் ஒன்றாய்ச் சேந்து, பேரையூர்கலுங்கு முகத்துவாரத்தில் ஆத்தில் வந்து சேருகுது. மேற்கேயிருந்து கிளக்கே வருகிற தண்ணீருடனே கிறதமானதி பறளை ரெண்டு வகை தண்ணீரும் மேல் உபரியாகச்சே ஆறு தாங்க மாட்டாமல் கள்ளியடி உடைப்பில் உடைக்குது. இந்த ரெண்டு வகைத் தண்ணீருக்கு கள்ளியடி உடைப்பில் தத்துக்கலுங்கு வைத்துப் போக்கு விட்டால், ரெகுநாதக் காவேரிச் சேதமில்லை !

4. இந்த உடைப்பால் ஆத்துத் தண்ணீர் வருகிற சீமையளெல்லாம் வருஷகாலம் ஆனி முதல் புரட்டாசி மாதம் வரைக்கும் அவனவன் குளங்களில் வருகிற தண்ணீருங் காலவாயில் வருகிற தண்ணீரும் அவனவன் குளங்களில் கட்டிக்கொள்ளுகிறது ! அற்பசி மாசம் சீமையில் மிகிதமான வருஷக்காலம்

ஆனதினாலே அவனவன் குளங்களுக்குத் தண்ணீர்க் கட்டிக்கொண்டு அதியத் தண்ணீரை மறுகால் விட்டு, கால்வாயளையுந் திறந்து விடுகிறான் ! இந்த யேளுவகைத் தண்ணீரும் ஒன்றுகூடி, ரெகுனாதக் காவேரியில் வருவதினாலே, தாங்கமாட்டாமலும், வருஷா வருஷம் ஆத்துக்கு மறாமதி செய்யாத்ததினாலேயும், மளை பிரமதூத வருஷம் அதிகமானதினாலே தண்ணீர் பொருமினயிடங்களில், கண்ட கண்டயிடத்தில் ஆத்துக் கரையளை உடைத்து, மூக்கையூர், தறைக்குடி, முத்துரெகுனாத பட்டனம் வாலிநோக்கம்- இந்த நாலு அளத்தையும் அளித்து, சமுத்திரத்தில் தண்ணீர் வீணாகப் போறதுமல்லாமல், முதுகுளர்தூர் தாலுக்காவில் நஞ்சை விளைவு நஷ்டி வருடம் ஒன்றுக்கு 3350 கலம் புஞ்சை முதலானது உத்தேது 33,500 கலம், சிக்களத் தாலுக்காவில் நஞ்சை விளைவு நஷ்டி வருடம் ஒன்றுக்கு 6800 கலம், புஞ்சை முதலானது உத்தேசம் வருடம் ஒன்றுக்கு 68000 கலம் நஞ்சை 1க்கு நஷ்டி 1,01,500 கலம் மேனிக்கி ஆறு உடைத்த பிரமாதூத வருடம் முதல் ஆங்கில வருடம்

வரைக்கும் மூன்று வருஷமாக இராமனாதபுரம் சீர்மை ஸ்ரீ ஜமீன்தாரவர்களுக்கு, அடியேன்களுக்கு நஷ்டியாக யிருப்பதினாலே, குடியள் ரெம்பவும் மெலிந்து போயிருக்கிறோம்!

5. ஆனதினாலே, ஆனரேபில், கும்பினியாரவர் களாகிய யேளைக்குடியளை ரெட்சித்துக் காப்பாடும் படியாகக் கமுகை தத்துக் கலுங்கில் ரெண்டு தூரிக்கல் யிறக்கி, கீள்பிறம் அரைவாசி கூட்டித் தத்துக்கலுங்கு கட்டவேணும் ! கள்ளியடி உடைப்பிலும் யிந்தக் கலுங்கத்தில் அரைவாசி சேத்து, கலுங்குக் கட்டித் தண்ணீருக்குப் போக்கு விட்டு, கமுதை முதல் களசி வரைக்கும் ஆத்து உள்வாயி லிருக்கப்பட்ட மேடுகள் - இடஞ்சல்கள் துரையள் கண்பார்த்து தாராளமாக யெடுத்துக்போட்டால், ரெகுனாதக காவேரி உடைக்கிறதில்லை !

---

4. *வருஷக்காலம்-மழைக்காலம்; மிகிதமான-அதிகமான, மறாமதி-மராமத்து; நஷ்டி-நட்டம்; உத்தேது-உத்தேசம்.*

5. *ஆனரேபில்*-Honourable; *கலுங்கு-கலிங்கு-தண்ணீர்; படிகளில் இறங்கி வழிந்தோடக் கட்டும் படிகள்.*

6. தற்ம துரையவர்கள் யேளைக் குடியளை ரெட்சித்துக் காப்பாடுகிறாய் சித்தத்திலே கொண்டருள கட்டளையிட்ட ருளவும் - இந்தப்படிக்கி நாங்களனை வோரும் எழுதிக் கொடுத்த வாக்கு மூலம்

கையொப்பங்கள்

தற்குறி : முதுகுளத்தூர் மாகாணம்,
கொத்துக்கணக்கு
நம்பவீரப்பபிள்ளை

" மேற்படியூர் அம்பலம் கட்டையளம்பலம்

" இளஞ்செம்பூர் மாகாணம்,
கொத்துக்கணக்கு வேலாயுதப் பிள்ளை

" மேற்படியூர் அம்பலங் குமாரு சேருவை

" ஆப்பனூர் மாகாணம் கொத்துக்கணக்கு
ஆறுமுகப் பிள்ளை

" மேற்படி அம்பலம் வெத்திமாலை

தற்குறி	:	சித்தரங்குடி மாகாணம் கொத்துக்கணக்கு நல்லதம்பியா பிள்ளை
"		மேற்படி அம்பலம் சிவத்தவில்லி
"		பேரையூர் மாகாணம் கொத்துக்கணக்கு சின்னத் தம்பியாப்பிள்ளை
"		மேற்படி அம்பலம் இராமனாதப்பிள்ளை
"		மேற்படி அம்பலம் பொய்யாரு
"		முதுகுளத்தூர் தாலுக்காவில் நபிற்
"		சிக்களக் கொத்துக் கணக்கு சின்னத் தம்பியாப்பிள்ளை
"		மேற்படி அம்பலம் முத்துவீரப்ப பிள்ளை
"		மேற்படி மாதம் கன்னி அம்பலம்
"		மேற்படி பளனி ஆண்டி

தற்குறி	:	காவல் பிளையத் தேவன்
"		மேற்படி சிக்கள மாகாணம் நபிற் 5
"		கிடார மாகாணம் கொத்துக் கணக்கு சொகலிங்கப் பிள்ளை
"		சங்கரநாராயணப் பிள்ளை, செனாதப் பிள்ளை, சிவனாண்டியா பிள்ளை
"		அம்பலம் மெச்சக் கொட்டை
"		முத்திருளாண்டி, உமறுகத்தா
"		காவல் வெண்ணரசுத் தேவன், பளனி கறுப்பணன்
"		மேற்படி கிடறு மாகாணம் நபிர் 9
"		செளுவனூர் மாகாணம் கொத்துக் கணக்கு பெரியணப் பிள்ளை
"		ரெகுனாதப் பிள்ளை

தற்குறி	:	மேற்படி அம்பலம் ரெகுநாதக் கான்
"		மேற்படி ராம நாயக்கான்
"		மேற்படி செகனாதபிள்ளை
"		காவல் காத்தாரு தேவன்
"		திருப்புலி
"		சரிவித தேவன்
"		சித்திரவல்லி
"		மேற்படி செளுநவனூர் மாகாணம் நபர் 9
"		சிறுபோது மாகாணம் கொத்துக்கணக்கு முத்துக் கறுப்பப் பிள்ளை
"		அம்பலம் முத்தாதிக்கான், ராவுத்தக்கான், மீராகன்னி
"		பூசரி அம்பலம், ஆதிநாராயணன்

தற்குறி	:	ஆயக்குடி அம்பலம்... சேருவை
"		கொளிகுளம் கட்டையன் சேருவை
"		வளைக்குளம் அம்பலம் மீராப்பிள்ளை
"		பனிவாசல்க் கொத்துக் கணக்கு அகிலாண்டம் பிள்ளை
"		அம்பலம் சேரு
"		மேற்படி சிறுபோது மாகாணம்
"		மேற்படி சிக்களத் தாலுக்கா நபிர் 34
"		மேற்படி தாலுகா நபிர் 45.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,

சென்னைப் பல்கலைக்கழகம் வளாகம்,
சென்னை – 5.

வெளியீடுகள்

நீதிக் கதைகள்	-	30.00
மடல் திரட்டு	-	43.00
கருப்பர் குளுவ நாடகம்	-	43.00
நலங்கு மெட்டு இராமாயணம்	-	306.00
தமிழக ஊர் வரலாறுகள்	-	40.00
இடங்கைவலங்கையர் வரலாறு	-	40.00
தமிழ் அகராதி	-	50.00
வைத்திய அகராதி	-	34.00
பழனியாண்டவர் சிந்து பாமாலை	-	40.00
சுந்தரமூர்த்தி நாயனார் யட்சகானம்	-	60.00
யயாதி விலாசம்	-	104.00
நாவாய் சாத்திரம்	-	51.00
இராகதாளப் பிரத்தாரம்	-	68.00
பிரத்யும்ன சரிதம்	-	94.00

25% தள்ளுபடி வழங்கப்படும்

Printed by :

Royapettah Stationery and Printing and Allied Products Producers Industrial Co-op. Society Ltd.,
26, Koya Arunagiri First Street, Royapettah, Chennai - 14.